
187

3-27

ஓம்

# பிரம்மஞானபரம ரகசியம்



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
SEP 1927
MADRAS

QM
N27

ACC 21257

# பிரம்மஞான பரம ரகசியம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
2 SEP 1927
MADRAS

தமிழ்ப் பூஷணம்: வாசுதேவ ராவ் கேய்க்வார்,
எழுதியது.

சென்னை,
மாணிக்க விலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1927

**Registered Copy Right.**

விலை ரூபா 1.] [*Price Rs-1.*



76876
392
181·48

OFFICE OF THE REGISTRAR OF B
2 - SEP 1927

Manicka Vilasam Press

ARTISTIC PRINTERS

12, Arunachala Mudaly Street, Madras.

# முன்னுரை.

செந்தமிழ்ச்சேவர்காள் !

ஆழி சூழுலகின்கண் வாழுமொவ்வொருவரும் அறம், பொருள், இன்பம், வீடென்னும் நால்விதத்தும் ஈடுபட்டிருத்தல் வேண்டு மென்பதும், இதுவே இல்லறத்துக் குரியதென்றும். இம் முறையை நம் மூதாதைகள் அநுசரித்து ஒழுகிவந்து உயரிய நிலையினை யடைந்து இன்றும் என்றும் அழியாப்புகழுடன் வாழ்ந்தும். இன்னும் இனியும் என்றும் நிலைத்தபேருடையவராயிருக்கின்றன ரென்பது நாம் கூறாமலே நன்கு விளங்குமாயினும், அவர்களின் வழித்தோன்றல்களாகிய நாமும் அம்முறையை கைப்பற்றி அவர்கள்போலவே ஒழுகிவந்து உவகத்து உயர் நிலையை யெய்தி என்றும் அழியாப்புகழினையடைதல் அவஸ்யமென வெண்ணியும், இந்நூலின் 161 வது பக்கத்தில் 10-வது பாராவில் கண்டுள்ளபடி தனக்குத் தெரிந்ததைப் பிறருக்கு அறிவிக்கவேண்டும். என்று கூறியுள்ளபடியும், நாம் அறிந்த இந்த விஷயமானது பலருக்கும் பயன் தருவதாயிருக்கும் தன்மையதாயும், பலரையும் நன்னெறியிலுய்விக்கும் ஆன்றோர்களின் கருத்துக்களையும் ஒன்று சேர்த்துப் புல்லறிவுக் கெட்டியவரையில் தமிழறியாத குலத்துதித்த நான் செவ்வியதான விஷயத்தை எழுதத்துணிந்தேன்.

இந்நூலினால் நமக்கு முக்கியமாய் தெரியவேண்டிய சகல விஷயங்களுட் விசதமாய் மனதில்பதியும் வண்ணம் ஒருவாறு தொகுத்தற்கு நமது அருந்தமிழாசிரியர்களின் பல பெரு நூல்களும், வடமொழியின் வேத உபநிஷத்துகளும் வேதாந்த சித்தாந்த புராண இதிகாசங்களும் நமக்குப் பெரிதும் துணைபுரிந்தமைக்குப் பெரிதும் நன்றி பாராட்டுதும்.

இப்பெரு நூலினை இவ்வுலகிற்கு உபயோகமாதற்பொருட்டும் பலரும் படித்து பயன் பெறற் பொருட்டும் பிரசுரித்துதவிய ஸ்ரீமான் M. S. நடேசமுதலியார் அவர்களுக்கும் நன்றிபாராட்டுதும்.

இப்பெருநூலினைப்பெற்றுத் தமிழ் நாட்டுப் பெரு வள்ளல்க ளான அருந்தமிழன்பர்கள் ஆதரித்து இன்னும் இதுபோன்ற அருமை யான பலபெரிய நூல்கள் பிரசுரமாகும் வண்ணம் செய்விக்கவேண் டுமாய் மிகவும் அன்புடன் கோருகின்றோம்.

சென்னை,
பிரபவஞு
வைகாசி 25௳

இங்ஙனம்:
தங்கள் அன்பன்,
தமிழ்ப்பூஷணம் வாசுதேவராவ் கேய்க்வார்.
ஆசிரியன்.

# விஷய விளக்க அட்டவணை.


| அத்தியாயம், | | பக்கம். |
|---|---|---|
| 1 | பிரம்மஞான உண்மை | 1 |
| 2 | பரப்பிரம்ம விளக்கம் | 5 |
| 3 | சப்தலோகங்களும் மனிதனும் | 19 |
| 4 | மனிதன்—உற்பத்திக் கிரமம் | 23 |
| 5 | மனிதன்—ஏழு அம்சங்கள் | 26 |
| 6 | ஸ்தூலசரீரம் (1 அம்சம்) | 29 |
| 7 | லிங்கசரீரம் (2 அம்சம்) | 34 |
| 8 | பிராணன் (3 அம்சம்) | 36 |
| 9 | காமம் (4 அம்சம்) | 37 |
| 10 | மனம் (அம்சம் 5)—அதன் தன்மை | 39 |
| 11 | அரூபாமனம் | 41 |
| 12 | அரூபா மனதின் பிரவிர்த்தி | 43 |
| 13 | சுத்தமனம் | 49 |
| 14 | புத்தி—(ஆன்மா) | 51 |
| 15 | மரணம் | 54 |
| 16 | ஸ்தூலத்தின் உண்மை விளக்கம் | 56 |
| 17 | லிங்க சரீரத்தின் கதி | 57 |
| 18 | பிராணன்—காமம்—காமலோகம் | 60 |
| 19 | காமலோக ஸ்திதி | 63 |
| 20 | காமரூபம் | 66 |
| 21 | ஸ்வர்க்கலோகம் | 67 |
| 22 | மானிட பூலோக விஜயம் | 73 |
| 23 | புனர் ஜன்மம் | 76 |
| 24 | புனர் ஜன்மம் கொள்வது எது? | 83 |

| அத்தியாயம். | | பக்கம். |
|---|---|---|
| 25 | புனர் ஜன்மம் கொள்ளாதது எது ? | 85 |
| 26 | மனிதன் தன்னிலைக்கு எப்படி வருகிறான் | 86 |
| 27 | மனிதன் மிருகம் முதலியன ஆகக்கூடுமா ? | 90 |
| 28 | புனர் ஜன்மம் ஏற்படும் விதம் | 93 |
| 29 | புனர்ஜன்மகாரணம் | 99 |
| 30 | புனர் ஜன்மத்தின் அவஸ்யம் | 102 |
| 31 | புனர் ஜன்ம நிரூபணம் | 114 |
| 32 | ஆக்ஷேப சமாதானம் | 116 |
| 33 | பிரம்ம லக்ஷணம் | 118 |
| 34 | பிரம்ம லக்ஷணம் | 121 |
| 35 | மாயை | 127 |
| 36 | ஆத்மா—அதன் தன்மை | 133 |
| 37 | ஆரோபம்—அபவாதம் | 138 |
| 37 A | ஜீவாத்மாவின் அவஸ்தைகள் | 143 |
| 38 | கர்மம் அதன் சவிஸ்தாரம் | 147 |
| 39 | தர்மம் அதன் நிலை | 157 |
| 40 | பிரம்மஞான முடிவுரை | 167 |
| 41 | நிர்வாணம் எய்தும் நிலை (ஆசிரியரின் கருத்து). | 169 |

குறிப்பு:—இந்நூல் அச்சாகும் சமயம் பல ஜோலிகளுக்கிடையில் பார்வையிடவேண்டி வந்தமையினால் சில விடங்களில் பிழைகள் ஏற்பட்டிருக்கலாமாயினும் இரண்டாம்பதிப்பில் அவைகளைச்சரிவரத் திருத்திப் பதிப்பிப்பாம். பிழைகளைக்ஷமிக்கவும்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 - SEP 1927



ஓம்

ஜோதிமயம்.

# பிரம்மஞான விளக்கம்

அல்லது

## வேதங்களின் உண்மை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 - SEP 1927
MADRAS

### அத்தியாயம் 1.

---

### பிரம்மஞான உண்மை.

பிரம்மம் என்பதற்கு அகண்டாகார பரப்பிரம்ம வஸ்துவென்றும், வெளியென்றும் பெயர். பிரம்ம ஞானமென்பதற்கு பரவெளியெனப் படும். உயரிய ஞானம் எனப்படும். ஆனால் அது திவ்யஞானமென் றும் அல்லது கேவலஞானம் என்றும் பொருள்படும். இந்த பிரம்ம ஞானத்திற்கு வேறு பலவிதமான பெயர் கூறுவரேனும், இது பெறக் கூடிய அறிவின் முடிவு எனப்படுவதே சிறப்புடையதாகும். இதற்கு மேல் அறியக்கூடியது வேறெதுவுமேயில்லை. இது அனாதியாயுள்ள மதங்களுக்கும் சாஸ்திரங்களுக்கும் மூலாதாரமானது. சர்வமதங் களின் லக்ஷியங்களையும் ஒத்திட்டுப் பார்க்கின் சர்வததிற்கும் ஆதார மாக விளங்குவதும் இதுவேயாகும். பற்பல யதங்களிலும், அநுஷ் டானங்களிலும், விளக்கமாகப்படும் விஷயங்களெல்லாம் இந்த குப்த

வித்தையின் தத்துவங்களேயாம். சர்வமத சிரேஷ்டர்களும் சர்வ வியாபகமான மூலகாரணத்தினாலேயே ஜகத் விளங்குகின்றதெனக் கூறுகின்றனர் இதனால் அதைப் பிரதிபாதிக்கும் ஞானமும் ஒன்றாகவே யிருக்கலாமென ஊகிக்கப்படுகின்றது. இந்த குப்த வித்தை பெரும் பாலும் பரதகண்டத்து மஹரிஷிகளாலும், சிறுபான்மை இதர தேச மஹான்களாலும் அனுபவிக்கப்பட்ட அனுபவங்களையே ஆதாரமாகக் கொண்டு அறியபபட்ட உண்மையாம். அதாவது ஒருவஸ்துவின் ஞானம் அதைக் கிரஹிக்கும் இந்திரியத்தைப் பொறுத்தன்றோ?

சூக்ஷ்மமான கர்ணேந்திரியம் அதி சூக்ஷ்மமான சங்கீத சாரத்தைக் கிரஹிக்கின்றதுபோல சாதாரண கர்ணேந்திரியம் கிரஹிக்கிறதில்லை யல்லவா? பிறவிக்குருடனுக்கு வர்ண ஞானமே இருக்காது. ஆகையி னால் ஞான சாதனங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு அதிசரித்தும் தீக்ஷண்யப்பட்டு மிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஞானம் அதிகப் படும்.

பூர்வத்திலிருந்த மஹரிஷிகள் பீஜரூபமாயிருந்த அநேக சாத கங்களை ஒருவித சிக்ஷையால் பக்குவப்படுத்தி அவைகளின் மூலம் பிரம்மாண்டத்தின் தத்துவங்களை அதாவது சர்வத்திற்கும் மூல காரணம், ஜகத்து, ஜீவன், ஜனனம், மரணம், மோக்ஷம் ஆதியவைகளின் இரகஸ்யங்களை அறிந்திருந்தனர். மஹரிஷிகளும் நம்மைப்போலவே மாதுர்க் கர்ப்பத்திலிருந்து பிறந்த மனிதர்களேயாயினும் ஸ்வயப் பிர யத்தினத்தால் ஞானிகளானவர்கள் இந்த ஞானமானது கற்பனையாக வாவது அநுமானமாகவாவது இராமல் அதை யடையவேண்டியதான சாதனங்களைச் சாதிக்க விரும்பினவர்களால் பிரத்தியக்ஷமாய் அநுப வித்து அடையப்படுவதென்பது அவர்களின் வாக்காகும்.

"முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்."

என்னும் முதுமொழிக்கேற்ப, முயற்சித்தோரால் அடையப்படும் பயனானது தவம் என்னும் பதமாக மாறி தவமே முயற்சியென நின்ற தென்பதும் பொருத்தமாம்.

இவ்வாறு அறியப்பட்ட தத்துவங்களின் இரகஸ்யங்கள் எக்கா லத்தும் பிரஜைகளுக்கு உபயோகப்படவேண்டும் என்னும் நல்லெண்

ணத்துடன் இவ்விஷயங்களை வேதத்திலும் உபநிஷத்துகளிலும் புகுத்தி விவரித்திருக்கின்றனர்.

இம்மஹரிஷிகளுக்குப் பின்னர் வந்தவர்களான யோகிகளும், மஹான்களும் தங்கள் தங்களுடைய ஸ்வய அநுபவங்களினால் மேற் கூறப்பட்டிரானின்ற இரஹஸ்யங்களின் உண்மையை யுணர்ந்து ஸ்தா பிதஞ் செய்து வந்தார்கள். தற்காலம் இருக்கும் மஹான்களும் அவ் வுண்மைகளை அநுபவத்தினாலும் ஸ்ருதியினாலும் அறிந்து அத்தகைய விஷயங்கள் உண்மையென்றே ஆமோதிக்கின்றார்கள்.

வேதங்களுக்கும் உபநிஷத்துகளுக்கும் இருவித தாத்பரியங்கள் இருக்கின்றன. அவையாவன :—(1) வாச்சியார்த்தம், (அதாவது பதத்தின் அர்த்தத்தினால் தொனிப்பது) (2) லக்ஷியார்த்தம், (அதாவது மறைத்தருந்த இரஹஸ்யமான கருத்து). இவ்விரண்டில் வாச்சியார்த் தம் என்பது எல்லாருக்கும் தெரியக்கூடிய நிலைமையிலிருந்தாலும், லக்ஷ்யார்த்தம் ஒரு சிலருக்குமட்டுமே விளங்குவதினால் பாமர ஜனங் களுக்கும் சாதாரண ஜனங்களுக்கும் இரஹஸ்யமாகவேயிருக்கின்றது. இதற்குக் காரணம் என்னையெனின், விஷயத்தைக்கிரஹிக்கும் சக்தி யில்லாதவனுக்கு அதைச்சொல்வதினாலும்—சொன்னாலும்—சொல்லி விட்டாலும் பிரயோஜனமில்லை. அஸத் ஜனங்களுக்கோவெனின், சில தத்துவங்களின் ஞானம் தெரிந்து விடுமாயின் —போதிக்கப்படுமாயின் அவர்கள் அந்த ஞானத்தை துர்வினியோகப்படுத்திப் பிரபஞ்சத்தில் துக்கத்தையே அபிவிருத்திசெய்வார்கள். எங்ஙனம் எனின், ஓரிடத் துள்ள வஸ்துவை மற்றோரிடத்திற்குக் கொண்டுபோவதற்கு ஆகர்ஷண சக்தியென்று பெயர். இந்த ஆகர்ஷண சக்தியானது பணத்தில் மிகுந்த பிரீதியுள்ளவனுக்கு (அதாவது அயோக்கியனுக்கு) இருக்குமாயின், அவன் பிறரிடம் பணம் இருக்கக் கருதுவானா? எப்படிக்கருதுவான்? எல்லாரிடத்துமிருக்கும் பணங்களையும் ஆகர்ஷிப் பதினால் அவன் லோக ஹிம்சைக்குக் காரணனாகின்றானன்றோ? குழந் தைகளிடம் தீப்பெட்டியைக்கொடுத்தால் தீபம் ஏற்றவும் அல்லது நெருப்புண்டாக்கிக்கொள்ளவும் மட்டுமே அதை யுபயோகிக்கவேண்டு மென்னும் அறிவு அவர்களுக்கில்லாததால் விளையாட்டுத்தனத்தினால் வீட்டையும் எரித்துவிடக்கூடுமன்றோ? இத்தகைய காரணங்களினால் எந்த நல்விஷயத்தையும் ஸத் உபயோகஞ் செய்யக்கூடியவனுக்கே

உரைக்கவேண்டும். அதைத்தவிர்த்து, நன்னெறியிற் பழக்கமற்ற வனுக்கு இத்தகைய விஷயங்களைக்கூறுவதனால் அது தீமையாக முடிவ தோடு லோகத்தும் மோசமாகவே முடியும். இதனாலேயே வேதாந்த விஷயங்களை ஆன்றோர்கள் இரகஸ்யமாக வைக்கவேண்டுமென்று கூறி யிருப்பதோடு நில்லாமல் அவைகளை வெகு இரகஸ்யமாகவும் பத்திர மாகவும் சேமித்து வைத்திருந்தனர்.

முற்காலத்தில் ஒருவன் வேதங்களின் உண்மையை யறியப் பிர யத்தனப்பட்டால், அவன் மஹான்களையடுத்துப் பன்னிரண்டு வருஷங் களுக்கதிகம் சிச்ருஷை புரிந்து அவர்களைப்போல் பக்குவநெறிக்கு வந்த பின்னரே அவர்கள் அவ்வுண்மைகளை யவனுக்கு மனத்தில் அச்சாணி போல் பதியும்படி சிறிது சிறிதாக போதித்து, அவனைப் பக்குவப் படுத்தித் தன்னிலைக்குக்கொண்டுவந்தனர் என்பது சித்தாந்தம். இக் காரணத்தினாலேயே "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்னும் முது மொழியும் நிலவுகின்றது. (இவண் பாத்திரமென்பது மனம். அறிந்து என்பது பக்குவ நிலையைத்தெரிந்து, பிச்சையென்பது போதனை— அதாவது போதிக்கவேண்டுமென்பதாம்.)

உபநிஷத்துக்கள் வேதங்களின் லக்ஷ்யார்த்தங்களையும் இரஹஸ் யங்களையுமே விளம்புகின்றன. இதனால் தான் உபநிஷத்துக்கள் வேதங்களைக்காட்டிலும் பன்மடங்கு அதிசமாயிருக்கின்றன. ஆதி காலத்தில் வேதங்கள் தேவாலயங்களில் வைக்கப்பட்டு பிராமணர் களின் ஸ்வாதீனத்தில் இருந்தது. அதனால்தான் அக்காலத்தில் சகல பிராமணர்களுக்கும் எல்லா உபநிஷத்துகளும் கிடைக்க ஏதுவாயிருந் தது. அதனால் அவர்களுக்குக் கௌரவமும் மிகுந்து இருந்தது. நாளாவிர்த்தியில் பிராம்மணர்களின் யோக்கியதை குறைய ஆரம் பிக்கவே, அவ்விரகஸ்யங்கள் ஒளி குன்றுவதுபோல இவர்களாலேயே அறியமுடியாவகையில் மங்கலடையத் தொடங்கினதோடு, வேதங் களும் உபநிஷத்துக்களும் உருக்குலைய ஆரம்பித்தன வெனினும் அதன் உண்மையை நிர்விகற்ப சமாதியிலீடுபட்டிருந்த ஒவ்வொரு மஹா னும் அறிந்துகொண்டேயிருந்தனர்.

சுமார் 2,500 ஆண்டுகளுக்கு முன்னர் கபிலவஸ்துவின் அரசனாய் விளங்கிய கௌதமர் என்பவர் வேதத்தின் லக்ஷ்யங்களையும் இரஹஸ்

யங்களையும் சமாதியிலிருந்து அனுபவ பூர்வமாய் அறிந்துகொண்டார். அந்த கௌதமர் அறிந்துகொண்டதன் பயனாய் தத்துவங்கள் எல்லாருக்குமே பொதுவானதென்று எண்ணி சிலதத்துவங்களை சகலருக்கும், சிலதத்துவங்களை தகுந்த யோக்கியமான சிஷ்யர்களுக்கும் உபதேசித்தார். அதன்பின்னர்தான் பிராம்மணர் விழித்துக்கொண்டு தங்கள் அருமையான பொக்கிஷம் வெளியாய் விட்டதைக்கண்டு உபநிஷத்துக் கிரந்தங்களைச் சுருக்கி அவைகளின்கண்ணுள்ள முக்கியமானதான பாகங்களை அப்புறப்படுத்திவிட்டார்கள். இக்காலத்தில் விளங்கும் உபநிஷத்துக்கள் அந்த எஞ்சியபாகமே தவிர, பூரணமானதன்று. இம்மட்டோடேயே நின்றார்களோவெனில், இவைகளைத்தவிர, இன்னும் அநேக இரகஸ்ய சாஸ்திரங்களையும் வியாக்கியானங்களையும் கூட அப்புறப்படுத்திவிட்டனர். இது கெட்ட எண்ணத்தினால் செய்யப்பட்டதோவெனின், இல்லை. இதில் அவர்களுக்கு எத்தகைய கெட்ட எண்ணமும் இல்லை. ஆனால் சற்பாத்திரனான சிஷ்யனுக்கு இவ் இரஹஸ்ய சாஸ்திரங்களைச் சொல்லிக்கொடுத்து குருசிஷ்ய பாரம்பர்யமாய் இதைப்பரிபாலித்து வருகின்றனர். இந்த இரஹஸ்யத்தை கிரஹிக்கவும், ஸத் உபயோகம் செய்யவும் ஜனங்களிடம் அறிவு பிரகாசப்படுவதற்குத் தகுந்த வண்ணம் மஹான்கள் தோன்றி (வெளிப்பட்டு) இந்த குப்தவித்யையை அறிவிக்கின்றனர் என்பதும் உண்மையேயாகும். ஆனால் நாம் ஒரு விஷயத்தைப்பற்றிச் சிந்திக்கப் புகுவோமாயின் அதன் பூரணமான விஷயங்களை ஆராய்ந்து அறிய வேண்டியது அவஸ்யத்தினும் அவஸ்யமாகும்.

## அத்தியாயம் 2.

# பரப்பிரம்ம விளக்கம்.

எங்கும் எக்காலத்தும் வியாபித்தும் சேதனு சேதனங்களுக்கு ஆதாரமாயும், ஸ்வயம் ஆதாரமற்றதாயும், நிர்விசேஷணமாயும் ஒரு தத்துவம் உண்டென்பது திண்ணம். இதனையே ஸ்ரீமத் தாயுமான சுவாமிகளும் "அங்கு இங்கு எனுதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி" எனத் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார். இதற்குத் தான் பரப்பிரம்மம் என்னப்படும் பெயர் ஏற்பட்டிருக்கின்றது. இது மனோவாக்குகளுக்கு எட்டாததென மாண்டூக்ய உபநிஷத்தும் கோஷிக்கின்றது. ஆனுல் மனதும், வாக்கும், வியக்த அவஸ்தைகளாம். வியக்தம் என்பதனுல் அவ்வியக்தம் என்பதும் இருக்க வேண்டுமென்பது பெறப்படுகின்றதன்றோ? வியக்தம் அஸ்திரமானதால் ஸ்திரமானது ஒன்றிருக்கவேண்டுமே அது தான் அவ்வியக்தம். நிற்க, இது சமஸ்தத்தையும் அடக்கிக் கொண்டிருக்கவேண்டும். இதன் உண்மை நிலையை தெரிந்துகொள்ள மனதினுல் முடியா விட்டாலும் இதினின்றும் காணப்பட்ட விவர்த்த பதார்த்த குணங்களால் இதன் சொரூபம் இன்னதன்மையதா யிருக்கலாமென ஊகிக்கலாமன்றோ? பிரகிருதி புருஷர்கள் இதின் பலதோற்றங்களேயாவர். சகல வியக்தா அவஸ்தைகளிலும் விளங்கும் சின்மாத்திரமும் இதுவேயாம். விளங்கும் ஸ்தானமான சித்த ஆகாசமும் இதுவேயாகும். ஸ்ரீ சங்கராச்சாரியர் பிரம்ம சூத்திரத்தின் இருபத்து மூன்றும் சூத்திரத்தினுடைய வியாக்கியானத்தின் முடிவில் கூறியபடி வேறு அதிஷ்டாதா இன்மையால் பரப்பிரம்மமே கர்த்தா (அதாவது புருஷன்). மேலும் வேறு உபாதானமில்லாமையினுல் பரப்பிரம்மமே பிரகிருதி. இது சுத்த சத்ரூபம். இது ஞாதா அன்று. ஞானம் அன்று. ஞேயம் அன்று. ஆனுல் சகல ஞாத்ரு ஞான ஞேயங்களுக்கும் மூலகாரணமானது. அசங்கமாயும், அபாரமாயும் இருக்கின்ற இந்த சத்தைத்தவிர, வேறு யாதொன்றும்

சத்தியமன்று. இதின் வியக்தா அவ்வியக்தஸ்வரூபங்கள் பிரம்மம் எனப்படுவதனுல் பிரம்மமானது மூர்த்தம், அமூர்த்தம் என சுபாவத்தில் இரண்டுவகைப்படும். மூர்த்தமென்பது சரீரத்தோடு கூடியது. அதுதான் இரண்யகர்ப்பன் முதலான பக்த ஸ்வரூபம். அமூர்த்தமென்பது சரீரமற்றது; அதுவே முக்த ஸ்வரூபம்; இந்த ஸ்வரூபத்தையே பரமென்றுசொல்லப்படும். முந்தியதை அபரமென்றும் சொல்லப்படும். இவ்வண்ணம் மூர்த்தா மூர்த்தமயமான பிரபஞ்சமெல்லாம், பிரம்ம பாவனே, கர்ம்ம பாவனே, உபயபாவனேயென மூவகைப்பட்ட பாவனேகளா யிருக்கின்றன. (பாவனே பொருள்களிலேயே சதா சிந்தைவைத்தல்.)

பிரம்மபாவனே—பிரம்மத்தைப்பாவித்தல். கர்மபாவனே—கர்மத்தைப்பாவித்தல். உபயபாவனே—இரண்டையும் பாவித்தல். சநந்தனுதியோகிகள் பிரம்ம பாவனேயோடு கூடியவர்கள். தேவர்கள் முதல் தாவரம் முடிவாக நின்றவர்களெல்லோரும் கர்மபாவனேயோடு கூடினவர்கள். இரண்யகர்ப்பன் முதலியவர்கள் போதமும் அதிகாரமும் உடையவர்கள் ஆகையினுல் உபயபாவனேயோடுகூடினவர்கள். விசேஷமான ஞானகர்மங்கள் யாவும் கூடியிருக்காமல் இருக்கும் அளவில் முன் கூறப்பட்ட விஸ்வரூபமான பிரம்மம் இருக்கின்றது. தேவ மனுஷ்யாதிபேத ஞானத்தினுலே ஞானம் வேறுபட்டிருக்கிற முன் சொல்லப்பட்ட ஜீவர்களேக்காட்டிலும் பரம் என்று கூறப்பட்ட ரூபம் வேருகவேயிருக்கின்றது. ஆனுல் அது ஜாதி முதலான பேதங்களற்றதாய், வாக்குக்கு எட்டாததாய், குறைவு முதலிய விகாரங்களற்று ஒருபடித்தாய் சுயம் பிரகாசமாயுள்ள ஞானரூபமான வஸ்து. அது பிரம்மம் என்னும் பேருடையது. அதுவே பரமாத்மாவான விஷ்ணுவினுடைய அமூர்த்தமான ரூபம். முன்னர் கூறிய விஸ்வரூபத்தைக் காட்டிலும் விலக்ஷணமாயும் சர்வோத்தமமாயும் இருப்பதும் இதுவேயாம். இதைச் சிந்திக்க சாத்தியப்படமாட்டாது. ஸ்ரீ வாசுதேவ அம்சமாய் பிரஜாபதியாயிருக்கின்ற இரண்யகர்ப்பன், மருத்துக்கள், வசுக்கள், உருத்திரர், சூரியன், நக்ஷத்திரங்கள், கிரகங்கள், கந்திருவர், யக்ஷர், தைத்தியர் முதலான சகல தேவயோனி விசேஷங்களும் மனுஷ்யர் பசுக்கள் பருவதங்கள், சமுத்திரங்கள், நதிகள், விருக்ஷங்கள் மற்றுமிரானின்ற சகல பூதங்களின் காரணங்களும் பிரதான முதலாக

விசேஷமீருக நிற்பதும், சேதன அசேதனஸ்வரூபமாய் ஏகபாதமுடையதும், இரண்டு பாதமுடையதும், அநேகபாதமுடையதும், பாதமில்லாததுமான ஸகலமும் ஸ்ரீ விஷ்ணுவினுடைய மூர்த்த ஸ்வரூபமாம். இது சிந்திக்கக்கூடியதேயெனினும், மூன்றுபாவனைகளுடைய தாகையால் சுத்தமானதன்று. பிரம்மாதி ஜீவ சாதகங்கள் மூர்த்தமென்று சொல்லப்படும். அது அழிவற்றதாகையினுல் க்ஷரமென்று பெயர் பெறும். முக்தஸ்வரூபமானது அமூர்த்தமென்று சொல்லப்பட்டு அழியாத்தன்மையால் அக்ஷரமென்று பெயர் பெறும். இந்த சத்ரூப பிரமத்தில் ஒரு நியாயப்படி ஒரு காலத்தில் சலனம் ஏற்பட்டு, ஒரு காலத்தில் ஸ்திரத்தன்மையுண்டாகின்றது. சலன முண்டாகும் காலம் பிரவர்த்திக்காலமென்றும், மன்வந்திரம் என்றும், பிரமத்தின் பகல் காலமென்றும், ஸ்திரத்தன்மையுள்ள காலம் நிவர்த்தி சாலமென்றும், பிரளய காலமென்றும் பிரம்மத்தின் இராக்காலமென்றும் சொல்லப்படும். நம்முடைய அனுபவத்தில் பகலும் இரவும், சுறு சுறுப்பும், ஓய்வும், ஜெனனமும், மரணமும் நாம் காண்பதுபோலவே பிரம்மாண்டத்திலும் மன்வந்திரப் பிரளயங்கள் மாறி மாறி வருகின்றன. மன்வந்திரகாலத்தில் அநேக நாமரூபங்களுடன் கூடின வியக்த அவஸ்தையை யடைந்து பிரளயகாலத்தில் மீண்டும் ஏகரசமாதி பிரம்மத்திலேயே லயமடைகின்றது.

பிரளயத்தின் முடிவிலும் மன்வந்திரத்திற்கு முன்னும் பரப்பிரம்மத்தின் ஒரு அம்சத்திற்குச் சலன முண்டாகின்றது. இந்த அம்சத்திற்குதான் நாராயணன் என்று பெயர். இது அமூர்த்தஸ்வரூபமாகும். இது அசங்கமாயிருக்கிறது. அசங்கமாயும் அபரமாயும் இருப்பதற்குச் சிருஷ்டிக்குந்தன்மை சொல்லக்கூடாது ஏனெனில், அகண்டமான வஸ்துவில் கண்டத்துவம் சம்பவிக்கமாட்டாது. சிருஷ்டியால் சங்கம் ஏற்படுகின்றது. சிருஷ்டிசெய்பவர், சிருஷ்டிக்கு முன் ஒரு கல்பனை செய்து பிறகுதான் தனக்கு அந்நியமான ஒன்றைச் சிருஷ்டிக்கக் கூடும். அசங்கமானதற்கு சங்கம் எவ்விதம் ஒவ்வும். ஆகையால் அசங்கமான நாராயணனும் சிருஷ்ட்டிகர்த்தாவன்று.

இந்த அவ்வியக்த நாராயணனிடத்தினின்றும் வியக்த ஸ்திதியை அடையும் பொருளுக்குச் சிலர் ஈஸ்வரன் என்றும், சிலர் பிரத்தி

யக்ஷமா என்றும், சிலர் சதுர்முகப் பிரம்மாவென்றும், சொல்லுகின்றனர்கள். இதுவே பிரகிருதியும் புருஷனும் கூடிய அவஸ்தையாம். பிரம்மாண்டத்தின் உபாதான காரணமான பிரகிருதியும், நிமித்தகாரணமான சைதன்யமுமாகின்ற புருஷனும் ஆக இரண்டும் சேர்ந்திருக்கிற ஸ்திதி இதுவே. சிருஷ்டிக்கு மூலகாரணம் இதுவேயாம். புருஷனும் பிரகிருதியும் புருஷப் பிரகிருதியின் இருவித வியக்தாதோற்றங்களேயாம்.

மன்வந்திர ஆரம்பத்தில் தான் ஈஸ்வரன் தன்னுடைய முந்திய லயஸ்திதியை விடுகிறான். இதனால் ஈஸ்வரன் முதலாவது ஞாதா. மற்ற ஞாதாக்களெல்லாம் ஈஸ்வரனுடைய பிரதி பிம்பங்கள். பரப்பிரம்மத்தைப் போல இவர் அறியக்கூடாதவரன்று. இவரை அறிய வேண்டியதற்காகவே சகல அநுஷ்டானங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இவர் இந்திரியங்களுக்கு விஷயமன்று ; பரப்பிரம்ம ஸத்துவத்துக்கு வேறன்று. ஆயினும் பிரத்தியக் ஸ்வரூபத்தால் பரப்பிரம்மத்துக்கு வேறாகவே யிருக்கின்றார். இவரே சத்து சித்து ஆனந்த ஸ்வரூபம், சகல ஸ்ருஷ்டியும் இவரிடத்தே ஆரம்பித்து லயமடைகின்றது. பிரகிருதிபுருஷர்களில் புருஷரூபமாகச் (சைதன்ய ரூபமாக) சொல்ல வேண்டியது இந்த ஈஸ்வரனையே.

முதல் ஞாதாவான ஈஸ்வரனுடைய ஸ்ருஷ்டிக்குக் கூட பரப்பிரம்மம் ஸ்வயமாக அதாவது தான் உள்ளபடி தெரியாமல் ஒரு பதார்த்தால் மூடப்பட்டதுபோல் காணப்படுகின்றது. இந்த மூட்டத்திற்கு மூலப்பிரகிருதியென்று பெயர். ஒரு பதார்த்தத்தின் குணமே அந்த பதார்த்தம் ஆகாது, அதுபோல மூலப் பிரகிருதியே பரப்பிரம்மம் அன்று. நாம் அறியும் குணங்களைத் தவிர, வேறு குணங்களை நாம் அறிய முடியாதபடியால் மூலப்பிரகிருதியின் ஸ்வரூபத்தை நம்மால உள்ளபடி அறியமுடியாது. அறியவும் அறியோம். சகல பதார்த்தங்களுக்கும் உபாதானகாரணமானது இந்த மூலப்பிரகிருதியே. இதினின்றும் வியக்த ஸ்திதியை அடையும் பிரகிருதி குணங்கள் தான் நமக்குத் தெரியும்.

ஈஸ்வரனிடத்தினின்றும் ஸப்த (ஏழு) தேவதைகள் ஜனிக்கின்றனர். அவர்களுக்கு அநுபாதகர்கள் என்று பெயர். அவர்களுடைய

சமஷ்டிக்கு மஹத்துவம் என்று பெயர். மன்வந்திர ஆரம்பத்தில் பரப்பிரம்மம் ஞாதாவான ஈஸ்வரனும், மூலப்பிரகிருதியாயும் விளங்கிய பிறகு ஈஸ்வரன் மூலமாகத் தன் சக்தியை வெளிப்படுத்துகின்றது. சூரியனது தேஜஸ் சூரியனில்லாதகாலத்தில் இருந்துங்கூட, சூரியோதயமான பிறகு சூரியன் மூலமாக வெளிப்படுவதுபோல பரப்பிரம்மத்தின் சக்தியும் ஈஸ்வரன் மூலம் வெளிப்படுகின்றது. இந்தச் சக்திக்கு தைவீப்பிரகிருதியென்று சொல்லப்பட்டிருக்கிறது. இது சகல சக்திகளுக்கும் மூலகாரணம். பராசக்தி, ஞானசக்தி இச்சா சக்தி, கிரியா சக்தி, குண்டலினி சக்தி, மந்திர சக்தி முதலியன இதில் அடங்கியிருக்கின்றன. இந்தச் சக்தியையே மஹாசைதன்யம் எனப்படும். மூலப்பிரகிருதியில் சகல நாமரூப பேதங்கள் உண்டாவதற்கு இது தான் மூலகாரணம்.

உலகமெல்லாம் பரப்பிரம்ம சொரூபியான விஷ்ணுவின் சக்தியால் வியாபிக்கப் பட்டிருக்கின்றது. முன் சுத்த ஞான சொரூபமென்று கூறப்பட்டது பரமான விஷ்ணு சக்தி. ஹிரண்ய கர்ப்பன் முதலாகச் சொல்லப்பட்டது க்ஷேத்திரக்ஞன் என்னும் பெயருள்ள அபார சக்தியையே. இவ்விரண்டு மல்லாமல் அவித்தை யென்றும் கருமமென்றும் சொல்லப்பட்ட மூன்றாவது சக்தியும் உண்டு. இச் சக்தியினால் சூழப்பட்டுதான் க்ஷேத்திரக்ஞன் என்னும் சக்தி பரவியிருக்கிற சர்வசம்சார தாபங்களையும் பெறுகின்றது.

மேலும் இச்சக்தியினால் மறையப்பட்டே சம்சாரம் தாரதம்யமுள்ளதாய்க் காணப்படுகின்றது. எவ்வண்ணமெனில் அசேதனங்களில் அந்த சக்தி மிகவும் அற்பமாய் இருக்கின்றது. தாவரங்களில் அதற்குக் கொஞ்சம் அதிகமாயும், ஊரும் ஜந்துக்களிடம் அதினும் அதிகப்பட்டதாயும், இவ்விதமே பக்ஷிகள், மிருகங்கள், மனிதர், நாகர், கந்தர்வர், யக்ஷாதிகள், தேவதைகள் முதலிய இவர்களிடம் மேன்மேலும் அந்தச் சக்தி அதிகப்பட்டிருக்கின்றது.

பிரளயகாலத்தில் ஈஸ்வரன், மூலப்பிரகிருதி, தைவீப்பிரகிருதி ஆகிய இம்மூன்று சக்திகளும் ஏகரசமாய்ப் பரப்பிரம்மத்தினிடத்தில் லயப்பட்டிருக்கின்றன. ஸ்ருஷ்டிகாலத்தில் இவைகள் வெளிப்பட்டு இவைகளின் மூலமாக பிரம்மாண்டமும் வெளியாகின்றது. இது எங்ஙனமாகின்றது எனின், ஈஸ்வரனுடைய மனதில் இனி ஏற்படப்

போகிற பிரம்மாண்டத்தின் பாவனை உதிக்கிறது. இந்த பாவனையை தைவீப்பிரகிருதி கிரஹித்து மூலப்பிரகிருதியுடன் சேர்ப்பிக்கின்றது. தைவீரப்பிரகிருதி மூலப்பிரகிருதியுடன் கலந்தே இந்த பிரம்மாண் டத்தை வெளிப்படுத்துகிறது. மண்ணிலிருந்து உண்டாகும் கடவிஷயத்தில் சக்கர தண்டாதிகள் குயவனுக்குச் சாதகமாயிருப்பதுபோல, பிரம்மாண்டத்தைப் பிரகிருதியினின்று உண்டுபண்ணுவதில் தைவீப் பிரகிருதி ஈஸ்வரனுக்குச் சாதகமாயிருக்கின்றது. இஃதன்றி எதுவும் நடக்காது. மேலும் ஈஸ்வரனுடைய மனதிலிருந்த காரணரூபமான பாவனை பிரம்மாண்டமாகிற காரிய ரூபமாக விளங்கினபடியால் பிரம் மாண்டம் மூலப்பிரகிருதியினிடத்தில் ஸ்தூல ரூபமாயும், தைவீப்பிர கிருதியினிடத்தில் சூக்ஷ்ம ரூபமாயும், ஈஸ்வரனிடத்தில் காரண ரூபமாயும் இருப்பதாகச் சொல்லலாம். மூலபாவனையைத் தள்ளிப்பார்க்கும் அளவில் பிரம்மாண்டம் காணப்படாததினால் சமஸ்தமும் பாவனாகாரியமே. பரப்பிரம்மம், ஈஸ்வரன், மூலப்பிரகிருதி, தைவீப்பிரகிருதி இந்நான்கும் இல்லாதவிடம் எதுவுமேயில்லை.

---

## அத்தியாயம் 3.

# ஸப்தலோகங்களும் மனிதனும்.

பிரம்மாண்டம் ஏழுவித விகாரங்களை யடைகிறது. இவைகளே சப்தப்பிரகிருதிகள். இதில் முதல் மூன்று அரூபமாயும், மற்ற நான்கும் ரூபமாயுமிருக்கின்றது. பிரம்மாண்டத்தின் ஏழாவது விகாரம் தான் இப்போது நமக்குக் கோசாரமாயிருப்பது. ஒவ்வொரு விகார அவஸ்தையின் குணமும் வெவ்வேறாகும். முதல் அவஸ்தையிலிருந்து ஏழாவது அவஸ்தைவரையில் ஒவ்வொன்றிலும் அதிக ஸ்தூலம் கொஞ்சங் கொஞ்சமாக விருத்தியாகி ஏழாவது அவஸ்தையில் நமக்குக் கோசாரமான ஸ்தூலம் விளங்குகின்றது. ஒரே பதார்த்தம் ஆவி ரூபமாயும் ஜலரூபமாயும் பனிக்கட்டி ரூபமாயும் இருப்பதுபோல. பிரம் மாண்டத்தின் பற்பல விகாரமான அவஸ்தைகளை அறியவேண்டியது.

இந்த அவஸ்தைகளுக்கு லோகங்கள் என்றும், அல்லது பூமிகைகள் என்றும் பெயர். முதல் பூமிகை சைதன்ய சொரூபம். அதனுடைய உபாதியையான இரண்டாவது பூமிகையாகின்ற புகதியன்றியில் அதை யறிய மஹாத்மாக்களாலும் முடியாது. மூன்றாவது பூமிகை மானஸீகம். இதில் தான் ரூபம் வியக்தமாக முதன்முதல் காணப்படுகின்றது. பிரத்தியக் ஸ்வரூபனான ஞாதாவெளிப்படுகிறான். பிரகிருதி அதிசூக்ஷ்மமாயிருந்தாலும், இந்த பூமிகையில் உருவத்தோடுகூடியிருக்கின்றது. இதில் ஞாதா ஞேயத்தை யபேக்ஷிக்கிறான். நான்காவது பூமிகைதான் சரீர சம்பந்தமான இச்சைகள். இவைகள் இப்பூமிகையில் ரூபங்களோடு கூடியிருக்கின்றன. ஐந்தாவது பூமிகை பிராணன். ஆறாவது பூமிகை நம்முடைய ஸ்தூலத்தைவிட ஸ்வல்பம் சூக்ஷ்மமாயிருக்கிறது. ஒவ்வொரு பூமிகைகளின் விசேஷங்களும் வெவ்வேறு. இந்த பூமிகைகள் ஒரு தோலின்பேரில் ஒரு தோலிருப்பதாக நினைக்கக்கூடாது. இவைகள் பிரக்ஞாபேதங்கள். இந்த பிரக்ஞையும் எழுவிதமாய் விளங்குகின்றது. விஷ்ணுபுராணத்தில் பூலோகாதிகளாக வர்ணிக்கப்பட்டிருப்பது இந்த பூமிகைகளையே. எவ்விதமெனின், காலாலே நடந்து போகத்தக்க பூமி சம்பந்தமான வஸ்து எதுவுண்டோ அதுவெல்லாம் பூலோகமெனப்படும். பூமிக்கும் சூரியனுக்கும் மத்தியில் சித்தாதி முனிவர்கள் வாசம் செய்யக்கூடிய இடம் எவ்வளவு உண்டோ அதுவே புவர்லோகம் எனப்படும். துருவனுக்கும் சூரியனுக்கும் மத்தியமான இடம் சுவர்க்கலோகம் எனப்படும். இம்மூன்றும் கல்பந்தோறும் உண்டாக்கப்படுவதால் இவற்றிற்குகிருதகம் என்று பெயர். ஜனலோகம், தபோலோகம், ஸத்தியலோகம் என்னும் இம்மூன்றும் கல்பந்தோறும் உண்டாக்கப்படாமையினால் அகிருதகம் என்றும் பெயர் பெறும். கிருதகம், அகிருதகம் என்னும் இரண்டின் மத்தியிலே மஹாலோகம் இருக்கின்றது. அது கல்பத்தின் முடிவில் ஜன சூன்யமாகின்றதே தவிர, சொரூபம் மட்டும் நசிப்பதில்லை. ஆகையால் கிருதா கிருதம் என்றும் சொல்லப்படும். ஒவ்வொன்றிற்கும் இரண்டு தோற்றங்களிருப்பதினால் லோகங்கள் மொத்தத்தில் பதினான்கு ஆகின்றன. இந்த மேலேழு லோகங்களையும், பாதாளங்களாகிய கீழ் எழுலோகங்களையுமே பிரம்மாண்டாத்தின் பரப்பு என்னப்படும். இவைகளுக்கு ஞானஞ்ஞான தசைகள் என்று பெயர்.

வேதாந்த சாஸ்திரப்படி எல்லாம் ஞான ஸ்வரூபமாயிருப்பதினால் பல தோற்றங்களும் ஞானத்தையே பொறுத்ததா யிருக்கின்றன.

இந்த பிரம்மாண்டத்தில் அநேக சூரிய மண்டலங்களிருக்கின்றவெனினும், நம்முடைய சூரியமண்டலத்தைப்பற்றி மட்டுமே நாம் கவனிக்க வேண்டுமன்றோ? பிரம்மாண்டத்தில் முக்கியமானதான நான்கு தத்துவங்கள் கூறப்பட்டதுபோலவே சூரியமண்டலத்திலும் முக்கியமான நான்கு தத்துவங்கள் இருக்கின்றன. அவை வருமாறு:—

(1) வைசுவாநரம். இது ஸ்தூலப் பிரபஞ்சம் மட்டும் அன்று. ஆனால் எந்த ஸ்தூல பீஜத்தினின்றும் ஸ்தூலப் பிரபஞ்சம் உண்டாகின்றதோ அதுவே இது.

(2) ஹிரண்ய கர்ப்பம். வைசுவாநரம்போல் இதுவும் சூக்ஷ்மப் பிரபஞ்சத்துக்கு ஆதாரமான சூக்ஷ்ம பீஜம்.

(3) ஸூத்ராத்மா. ஸ்தூல சூக்ஷ்ம பீஜங்களுக்குக் காரணமும் மூலாதாரமுமான காரண பீஜம்.

(4) மூலப் பிரகிருதி ஆக நான்கு

நம்முடைய சூரியமண்டலத்தில் செவ்வாய் புதன் முதலிய கிரகங்கள் அநேகமிருக்கின்றன. ஆனால், ஒவ்வொன்றுக்கும் ஏழு அவஸ்தைகளிருப்பதுபோல நம்முடைய பூலோகத்துக்கும் ஏழு அவஸ்தைகளுண்டு. இந்த அவஸ்தைகளுக்கு விஷ்ணு புராணத்தில் த்வீபங்கள் என்று பெயர் காணப்படுகின்றன. தற்கால ஸ்திதியில் பூமிக்கு ஜம்புத்வீபம் என்று பெயர். மற்றவைகளுக்கு முறையே பிலக்ஷத்துவீபம், சால்வமலத்வீபம், குசத்வீபம், கிரௌஞ்சத்வீபம், சாகத்வீபம், புஷ்கரத்வீபம் எனப் பெயர் பெற்றிருக்கின்றன. இவ்வேழும் சேர்ந்து கிரகமாலிகையெனப்படும். இந்த பூமியின் கிரகமாலிகையில் பூமியின் தற்கால ஸ்திதி நான்காவது. இதற்கு முன்னிருக்கும் மூன்று ஸ்திதிகளையும் பின்வரப்போகும் மூன்று ஸ்திதிகளையும் நாம் அறிய மாட்டோம். ஸ்திதிகள் எல்லாம் பிரக்ஞாபேதங்களே. இந்த ஸ்திதிகளை அறியும்பொருட்டுத் தேவையான இந்திரியங்கள் பக்குவப்படாதவரையில் அவைகள் தெரியமாட்டா. ஸ்வப்பன பிரபஞ்சத்தை விஷயமாக்குவதற்கு நம்முடைய ஜாக்கிரதாவஸ்தையிலுள்ள இந்திரியங்கள் உபயோகப்படாமலே வேறு சூக்ஷ்ம இந்திரி

யங்களால் ஸ்வப்னப் பிரபஞ்சத்தை யறியவேண்டியதா யிருப்பது போல, பூமியின் மற்ற அவஸ்தைகளையும் அவைகளிலுள்ள ஜீவ நிலைமைகளையும் அறிய வேறு சாதனங்கள்தாம் வேண்டியவை. இவைகளைப் பக்குவப் படுத்தினவர்களே இந்த விவரங்களை யறிவார்கள். இந்த ஏழுஸ்திதிகளில் முதல் ஸ்திதி உண்டான கொஞ்சகாலத்திற்குப் பின் இரண்டாவது ஸ்திதி உண்டாகின்றன. இவ்விதமே ஏழு ஸ்திதிகள் உண்டாகின்றன. இவைகளில் சைதன்யம் வரிசையாய் ஒரு முறை சுற்றிவருவதற்கு ஒரு சுற்று என்று பெயர். இவ்விதமே ஏழு முறை சுற்றிய பிறகு இதர, கிரகமாளிகைகளுக்குச் சைதன்யம் செல்கின்றது. அப்போதான் கிரகத்துக்கே பிரளயம் ஏற்படுகின்றது. முதல் மூன்று சுற்றுகளில் இந்த பூமி உண்டாகி ரூபத்தை யடைகின்றது. நான்காவது சுற்றில் இது கெட்டியாகி ஸ்திரப்படுகின்றது. பாக்கியுள்ள மூன்று சுற்றுகளில் மீண்டும் முன்போலவே சூக்ஷ்ம ரூபத்தை யடைகின்றது. மஹா சைதன்யம் நம் பூமியில் முதலில் மூன்று விதமான அவ்வியக்த பௌதிக ரூபங்களிலும், பிறகு பாஷாணங்களிலும், பிறகு கந்த மூலங்களிலும், பிறகு மிருகங்களிலும், முடிவில் மனிதர்களிலும் பிரவேசித்து விளக்கமாகின்றது இது தான் ஜீவ ஸ்ருஷ்டிக் கிரமம். இதனை விஷ்ணு புராணத்தில் கீழ்க்கண்டவண்ணம் கூறப்படுகின்றது. அதாவது: பாஷாண சிருஷ்டியை ஸ்தாவர சிருஷ்டியெனவும்; கந்தமூல சிருஷ்டியை முக்கிய சிருஷ்டியென்றும்; மிருக சிருஷ்டியை திரியக் சிருஷ்டியெனவும், மானிட சிருஷ்டிக்கு முன்னிருக்கும் மானிட ரூப சிருஷ்டியை ஊர்த்வ சுரோதஸ் சிருஷ்டியென்றும், மானிட சிருஷ்டியை அர்வக் சுரோதஸ் சிருஷ்டியெனவும் வழங்கப்பட்டிருப்பதும் முறையாம். உண்மையில் பரப்பிரம்மமாகிய சுத்த சைதன்யத்தைத் தவிர வேறெதுவும் சத்தியமாயில்லையென்பது திண்ணம். இந்த சின்மாத்திரமே சிருஷ்டிகளில் பல பல ரூபங்களை யடைகின்றது இவைகளுக்கு தான் பற்பல பெயர்கள் உண்டாகியிருக்கின்றன. ஸ்தாவர முதலிய சிருஷ்டிகளினிடம் இந்த சின்மாத்திரமானது பிரதக்பாவத்தை யடைகின்றதேயில்லை. திரியக் சிருஷ்டியில் பிரிவு பட்டு பிரக்ஞையை வெளிப்படுத்துகின்றது, மானிட சிருஷ்டியில் தான் இன்னும் செவ்வையான வியக்தத்தையுடைந்து சகல மனோதர்மங்களையும் விளக்குவிக்கின்றது.

## அத்தியாயம் 4.

---

# மனிதன்—உற்பத்திக் கிரமம்.

முந்தின மன்வந்திரங்களில் பக்குவ மெய்திய ஜீவர்களே மேன்மேலும் பக்குவம் எய்தும் பொருட்டு மீண்டும் ஜன்மம் எடுக்கின்றூர்கள். பிரக்ஞாபேதம் என்னும் ஸ்திதியின் ஒவ்வொரு சுற்றும் ஒவ்வொரு கல்பம் எனப்படும். முதல் மூன்று கல்பங்களில் மனிதனது ஆகாரம் ஏற்பட்டுக்கொண்டுவருகின்றது. நான்காவதான இப்பிரகிருதி லயத்தில், இப்போ பிரத்தியக்ஷமாய்த் தெரியக்கூடிய ஆகாரம் அடையப்படுகின்றது. மேல் மூன்று கல்பங்களிலும் முன்போலவே சூக்ஷ்ம ஆகாரத்தை மனிதன் தரித்துக் கொள்வதோடு தெய்வ ஸ்வரூபத்தையும் தரிப்பான்.

பிரதம கல்பத்தில் பாஷாணம், கந்தமூலம், மிருகம் ஆகிய இச் சரீரங்களில் ஜீவன் பிரவேசித்து இரண்டு, மூன்ருவது கல்பங்களில் மானிடரூபங்களில் பிரவேசித்து பிரகிருதமான நான்காம் கல்பத்தில் நம்முடைய பூமியில் பாஷாண கந்தமூலங்களுக்குப் பின், மனிதன் தான் முதலில் தோன்றுகின்றுன். பிறகுதான் மிருகங்கள் தோன்றுகின்றன.

முக்கியமான ஏழு மானிட வர்க்கங்களில் ஜீவன் பிரவேசிக்கின்றுன். இவைகளில் ஒவ்வொரு வர்க்கத்துக்கும ஏழு உட்பிரிவுகள் இருக்கின்றன. இவ்வுட்பிரிவுகளிலும் ஒவ்வொன்றுக்கும் ஏழு உட்பிரிவுகள் இருக்கின்றன. இதிலும் பல உட்பிரிவுகள் உண்டு. முதல் வர்க்கத்தைக்காட்டிலும் இரண்டாவதில் அதிகபக்குவம் உண்டு. இது போலவே மேல் செல்லச் செல்ல விஷயம் விளக்கமாகும். இதை ஆராய்ந்தறிவதுதான் விசேஷம். ஆனல் தற்போது பூலோகத்தில் இருக்கும் வர்க்கமோ வெனின் ஐந்தாவதாகும். நிற்க, ஜீவன் எல்லா உட்பிரிவுகளிலும் பிரவேசித்து அவைகளின் அநுபவங்களைச் சம்பாதித்த பிறகே ஒரு கிரகஸ்திதியைவிட்டு வேறு கிரகஸ்திதிக்குப்

போகின்றான். இருவர்க்கங்களுக்கும் மத்தியில் சொற்ப பிரளயம் ஏற்படுகின்றது.

வெவ்வேறு வர்க்கங்களிலுள்ள சரீரங்கள் எல்லாம் ஜீவனுக்கு வீடுகள்போல் இருக்கின்றன. முக்கியமான ஏழு வர்க்கங்களில் ஒவ்வொன்றிலும் மனிதனது ஒவ்வொரு அம்சம் பக்குவப்படுகின்றது. இப்போ நாம் ஐந்தாவது அம்சத்திலிருப்பதால் ஐந்தாவது அம்சமான மனம் விகசிக்கத் தொடங்கி யிருக்கின்றது. இந்த ஐந்தாவது வகுப்பின் கடைசியில் மனம் பூராவாக விகசித்து ஆறு ஏழாவது வகுப்புகளில், ஆறு ஏழாவது அம்சங்கள் விகசித்து விளங்கும். இரண்டாவதான ஒரு உட்பிரிவுக்கு சுமார் முப்பதினாயிரம் ஆண்டுகள் சொல்லலாம். முதலாவதான ஒரு உட்பிரிவுக்கு (30,000X7)—2,10,000 வருஷம் சொல்ல வேண்டும். முதலாவதான ஒரு முக்கியவர்க்கத்துக்கு (2,10,000X7)–14,70,000 ஆண்டுகள் சொல்லவேண்டும். இதுபோல இவ்விதம் நான்கு முக்கிய வர்க்கங்கள் நான்காவது சுற்றில் சென்றிருக்கின்றன. இப்போ நாமிருக்கும் ஐந்தாவது வர்க்கம் தொடங்கியும் பத்துலக்ஷம் வருஷங்கள் ஆய்விட்டன.

ஏழு அம்சங்களையும் மனிதர்களுக்குக் கொடுப்பது பிதுர்தேவதைகளே. ரூப சம்பந்தப்பட்டவைகளைக் கொடுப்பது பர்ஹிஷத் பிதுர்க்கள். ரூபமில்லாதவைகளைக் கொடுப்பது அக்நிஷத்வ பிதுர்க்கள். மனுஷ்ய சரீரம் பர்ஹிஷத் பிதுர்க்களால் உண்டாயிற்று. இவர்கள் தங்களுடைய சாயையைப் பிரித்துக் கொடுத்தார்கள். இதனாலேயே முதல்வர்க்கத்தினர் சாயாஜர்கள் என்று பெயர் பெற்றனர். விஸ்வகர்மாவின் பெண்ணான சம்ஜா என்பவள் தன் புருஷனை சூரியனிடம் செல்ல முடியாமல் தன்சாயையை யனுப்பினதாக புராணங்களில் கூறியிருப்பது இம்முதல் வர்க்கமான சாயஜ வர்க்கத்தையே குறிப்பிக்கின்றது. அக்நிஷவத் பிதுர்க்கள் இவ்வீடுகளில் பிரவேசிக்கும் வரையில் இவைகள் ஜடங்களாகவே இருந்தன. பர்ஹிஷத் பிதுர்க்களால் கொடுக்கப்பட்ட சரீரம் ஸ்திரீபுருஷ வித்தியாசமற்றதாகவே யிருந்தது. இந்த முதல் வகுப்பினின்றும் குருத்துகள்போல இரண்டாம் வர்க்கம் சம்பவித்து, இதனால் முதல் வர்க்கத்தார் இதில் ஐக்கியப்பட்டார். மூன்றாவது வர்க்கம் சுவேதஜம். பிரமலோசனையினுடைய சுவேதத்திலிருந்து மரீசி என்னும் பெண் பிறந்ததாகப்

புராணங்களில் கூறியிருப்பது இந்த சுவேதஜ வர்க்கத்தைத்தான் நிரூபிக்கின்றது. இம் மூன்றுவதினின்றுமே நான்காவதான வர்க்கம் உற்பத்தியாயிற்று. முதலில் மனிதனது உருவம் அண்டஜமாயிருந்தது. அதன் பிறகே ஜராயுஜமாக மாறிவிட்டது.

முதன் முதல் ஸ்திரீபுருஷ லக்ஷணங்களே இல்லாமலிருந்தன. பின்னர், இவ்விரண்டு லக்ஷணங்களும் ஒரே சரீரத்தில் காணப்பட்டன. இதையே அர்த்தநாரீசுவரர் என்பது குறிப்பிக்கின்றது. அதன் பின்னரே இந்த லக்ஷணங்கள் வெவ்வேறு சரீரங்களில் தோற்றப்பட்டன. இந்த விபாகத்தையே தக்ஷப்பிரஜாபதியின் யக்ஞம் குறிப்பிடுகின்றது என்பதும் மேதாவிகளின் கொள்கையாயினும், சுமார் நூற்று எண்பது லக்ஷம் வருஷங்களுக்கு முன்னர்தான் இந்த விபாகம் நேரிட்டிருக்க வேண்டும். முன் கூறியபடி மானிட சரீரம் பக்குவப்பட்டுக்கொண்டு வந்தது. இதை அக்னிஷ்வத் பிதுர்க்கள் கண்டு தாங்கள் கோரும் அபிவிர்த்திக்கு இச்சரீங்களே சரியான ஸ்தானம் என்று நினைத்து இரண்டரை கல்பத்துக்குப் பின் மூன்றரை கல்பம் வரையில் வந்துக்கொண்டிருந்தார்கள் மூன்றரை (3½) கல்பத்திற்குப் பிறகு இவர்களின் நூதனப் பிரவேசம் நின்று விட்டது. இவர்கள் பிரவேசத்தால்தான் அநேகர்களான மிருகமானிடர்கள் மானிடர்களானுர்கள். அக்னிஷ்வத் பிதுர்க்களே மானஸ புத்திரர்களாவர் இவர்களில் சிலர் சரீரத்தினுட் பூராவாகப் பிரவேசித்தார்கள். சிலர் ஒரு அம்சத்தை மட்டும் பிரவேசிக்கும்படிச் செய்தார்கள். முன் சொன்னவர்களே பின் சொன்னவர்களுக்கு குருக்கள் ஆயினர். நாம் இப்போ நான்காவது கல்பத்தில் ஐந்தாவது வர்க்கத்திலிருக்கின்றோம். ஜீவகோடிகள் ஆறு ஏழாவது வகுப்புகளில் பிரவேசித்துப் பிறகு ஐந்தாவது கல்பத்தில் முன்போல எல்லாவர்க்கங்களிலும் பிரவேசித்து அதன் பிறகு ஆறு ஏழாவது கல்பங்களிலும் அவ்வண்ணமே செய்த பிறகு ஜீவகோடிகள் நிரியாணத்தை யடைகின்றுர்கள். சூரிய மண்டலத்திலுள்ள அநேக கிரகமாலிகைகளிலும் இவ்விதம் ஜன்மம் எடுத்த பின்புதான் சூரியப் பிரளயம் சம்பவிக்கின்றது. அநேகமான சூரிய மண்டலங்களிருப்பதால் இவைகளின் பிரளயத்திற்குப் பிறகுதான் மஹாப் பிரளயம் சம்பவிக்கின்றது. மஹாப் பிரளயத்திற்குப் பிறகு பாப்பிரம்மம் முன்போலவே ஆய்விடுகின்றது.

## அத்தியாயம் 5.

# மனிதன்—ஏழு அம்சங்கள்.

மனிதன் புருஷன் என்று சொல்லப்படுகின்றான். மனிதன் மர்த்திய, (அதாவது நசித்துப்போவதும்) அமர்த்திய (அதாவது நசித்துப்போகாததுமான) இரு சுபாவங்களையுடையவன் என்பதை வேதத்திலும், பகவத் கீதையிலும் கூறப்பட்டிருக்கின்றன. பகவத் கீதையில் பதினைந்தாம் அத்தியாயம் பதினாறுவது ஸ்லோகத்தில் நசித்துப்போகும் பாகத்திற்கு க்ஷரம் என்றும், நசிக்காததற்கு அக்ஷரமென்றும் கூறப்பட்டிருக்கின்றன. இந்த க்ஷரபாகமே அக்ஷரபாகத்துக்கு இருப்பிடமாயிருக்கின்றது. ஒவ்வொரு மனிதனும் ஜனிக்கும்போது அவனது ஜீவன் சிருஷ்டிக்கப்படவில்லை. இந்த ஜீவன் புருஷோத்தமனாகும் பரமாத்மாவின் அம்சம். இது ஒவ்வொரு சரீரத்துடனும் சிருஷ்டிக்கப்படும்பக்ஷத்தில், சிருஷ்டிப்பவனுடைய அறிவு நிந்தனைக்கு உட்படும். கல்பாரம்பம் முதல் பிரளயம் வரையில் இருக்கப்பட்டவன் மேற்கூறிய அக்ஷரமான புருஷனே. இவனே மானவிக புத்திரன், க்ஷேத்திரஞ்ஞன் எனப்படுவன். குப்தவித்தியா சாஸ்திரப்படி பிரகிருதி புருஷ சம்பந்தத்தால் உண்டாகியும் வெவ்வேறு விசேஷணங்களோடுகூடியும் ஏழு பூமிகைகளையும் உடைத்தாயிருக்கின்ற பிரம்மாண்டத்தைப்போல, பிண்ட அண்டமாகின்ற மனிதனிடத்தும் ஏழு தத்துவங்கள் இருக்கின்றன.

பிரம்மாண்டத்தின் பூமிகைகளும் பிண்டாண்டத்தின் தத்துவங்களும் முறைப்படி சம்பந்தப்பட்டிருப்பதை நோக்காவிளங்கும்.

ஏழு தத்துவங்களில் சில எல்லாரிடத்தும், மற்றவை சிலரிடத்தும் பக்குவப்பட்டு வெளியாயிருக்கின்றன. அவைகளில் எங்கெந்த அம்ஸங்கள் வெளிப்பட்டிருக்கின்றனவோ அந்தந்த அம்ஸங்களிலே மனிதனது பிரக்ஞை விளங்கும். இவைகளுக்குச் சாதிருசியமான பிரம்மாண்டத்தின் தத்துவங்களையும் அவன் அறியக்கூடும். ஆனால் இந்த ஏழு தத்துவங்களும் பிரக்ஞாபேதங்களேயாகும். ஒவ்வொரு விதப்

பிரக்ஞையும் ஒவ்வொரு பூமிகையில் வியவகரிக்கின்றது. எங்ஙனமெனில் ஸ்தூல பூமிகையில் ஸ்தூலம் பிரம்மாண்டம் அறியப்படுகின்றது. சகல தத்துவங்களேயும் பக்குவப்படுத்தியவர்கள் பிரம்மாண்டத்தில் சகல இரஹஸ்யங்களேயும் அறிவார்கள். பிரக்ஞை பலவிதமானது என்பது விளக்குவாம்.

பசிதாகங்களே யுணர்ந்து அடி, காயங்கள், முதலியவைகளேயுணரும்போது ஸ்தூல சரீரமாகும் ஸ்தூல தத்துவத்தில் மனிதனது பிரக்ஞை விளங்குகின்றது. ஆனல் அவன் யுத்தகளத்திலிருக்கும்போது சரீரத்தை மறந்து தன் பிரக்ஞையை மனேவிகார பூமிகையில் நிறுத்துகிருன். அதனல் காயத்தினல் ஸ்தூல சரீரத்திற்கு உண்டாகும் வருத்தத்தை அவன் அறிகின்றதில்லே. யுத்தம் முடிந்தபின் அவனது பிரக்ஞை ஸ்தூல சரீரத்திற்குத் திரும்பி வந்து வலியையறிகின்றது.

ஒருவன் தத்துவ விசாரம் ஏகாக்கிர சித்தத்துடன் செய்துகொண்டிருக்கையில் பசி தாகம் முதலியவைகளேயும், விருப்பு வெறுப்பு முதலிய மனேவிகாரங்களேயும் பூரணமாக மறந்துவிடுகின்றுன். அவன் மனம் அக்காலத்தில் ஆலோசனே யென்னும் பூமிகையில் பற்றுதலேயடைந்து நிற்கின்றது. இவ்விதமே மனிதன் வெவ்வேறு ஸ்திதியிலிருந்துகொண்டு மற்றவைகளே மறந்துவிடவும் கூடும்.

காமம், குரோதம், வித்தியாப்பியாசம், தத்துவ விசாரம் முதலியவைகள் பலமாயிருக்கும் சமயம் அவைகளில் தத்பரனை ஒரே மனிதன் வெவ்வேருகக் காணப்படுகின்றுன். நம்முடைய பிரக்ஞையினல் உண்டாகும் ஒவ்வொரு வித்தியாசமும் நம்மை வேறு வேருகக் காண்பிப்பதால் ஒவ்வொரு பேதத்திற்கும் தனித்தனியே பெயர் கொடுக்கும்படி நேரிடுகின்றது. மனிதனது தத்துவங்களே விசாரிப்பதினல் அவன் நித்தன்மையன் என்றும் அவனது சக்திகள் அவைகளால் சத்தியமானவை இவைகளெல்லாம் தெளிவாய் விளங்கும். அவைகளைப்பிரித்தறியாவிட்டால் இவைகள் நன்ருய் விளங்காது.

மனிதனுடைய ஏழு தத்துவங்கள் அல்லது அம்சங்களாவன :—
(1) ஸ்தூல சரீரம், (2) லிங்க சரீரம், (3) பிராணன், (4) காமம், (5) மனது, (6) புத்தி, (7) ஆத்மா என்பவைகளாம்.

தாரக இராஜ யோகத்தின்படி மேற்கூறிய ஏழு அம்சங்களையும் நான்கு விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவை வருமாறு:

(1) ஸ்தூல உபாதி, (2) சூக்ஷ்ம உபாதி, (3) காரண உபாதி, (4) ஆத்மா என்பதாம்.

வேதாந்த சாஸ்திரத்தின்படி மேலே கூறிய ஏழு அம்சங்களையும், ஐந்து கோசங்களாகப் பிரித்து வைக்கப்பட்டிருக்கின்றது. அவை யாவன:—(1) அன்னமய கோசம், (2) பிராணமய கோசம், (3) மனோமய கோசம், (4) விஞ்ஞானமய கோசம், (5) ஆனந்தமய கோசம் என்பனவாம்.

இவைகளின் விபரமாவன:—

| குப்த வித்யா தத்துவங்கள். | வேதாந்த கோசங்கள். | தாரக ராஜயோக உபாதிகள். |
|---|---|---|
| (1) ஸ்தூல சரீரம் ... | (1) அன்னமய கோசம் | (1) ஸ்தூல உபாதி. |
| (2) லிங்க சரீரம் ... | | |
| (3) பிராணன் ... | (2) பிராணமயகோசம் | |
| (4) காமம் ... | (3) மனோமய கோசம்... | (2) சூக்ஷ்ம உபாதி. |
| (5) மனது { அசுத்தம் / சுத்தம் } | (4) விஞ்ஞானமயகோசம் | |
| (6) புத்தி ... ... | 5) ஆனந்தமய கோசம். | (3) காரண உபாதி. |
| (7) ஆத்மா ... ... | ஆத்மா ... | (4) ஆத்மா. |

மேற்கண்ட ஏழு அம்ஸங்களில் முதல் நான்கு நசித்துப்போவதாலும், பாக்கி மூன்றும் நாசமடையாமலிருப்பதாலும் இவைகள் க்ஷரமெனவும், அக்ஷரமெனவும் இரண்டு விதங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. எவ்விதமெனின், ஒருமாலையின் பல மணிகளில் நுழையும் நூல் ஒன்றாயிருப்பதுபோல அநேக ஜன்மங்களில் சம்பந்தப்படுவது ஆத்மா, புத்தி, மனது என்னும் மூன்றேயாம். இதுவே க்ஷேத்திரக்ஞன், பாரமார்த்திக ஜீவன், கூடஸ்தன் என்பன. மற்ற நான்கும் ஸ்தூல சரீரத்தின் மரணம் முதல் காலாவர்த்தியில் நசித்துப்போய் வேறு சரீரங்களின் உற்பத்திக்கு உபயோகப்படுகின்றன.

## அத்தியாயம் 6.

# ஸ்தூல சரீரம். [1—அம்சம்]

பிரத்தியக்ஷமாய்க் காணப்படும் மனிதனது ஸ்தூல சரீரம் முதலாவது அம்சமாகும். ஸ்தூல சரீரமானது ஞானேந்திரிய கோளங்கள், கர்மேந்திரிய கருவிகள், மூளை, நரம்பு, எலும்பு முதலிய வைகளுடன் கூடிய ஸ்தூல சரீரம் அநேக ஸ்தூல அணுக்களால் உண்டாயிருக்கின்றது.

மலை, மரம், மிருகம், மனிதன் ஆதியவைகளின் ஸ்தூல ரூபத்தி லுள்ள அணுக்கள் ஒரேவிதமாய் இருப்பதோடு ஜீவரூபமாயும் இருக் கின்றன. எல்லாம் பிரம்ம மயமாயிருக்கிற பிரம்மாண்டத்தின்கண் ஜீவனே யில்லாத அணுவே யில்லை.

மூன்றுவது அம்சமாகிற பிராணன் என்னும் மேஸ்திரியின் உத்தரவின்படி கொத்தர்கள் என்னும் அணுக்கள் சரீரம் (தேகம்) என்னும் வீட்டைக்கட்டுகின்றன. இதற்கு வேண்டிய உபகரணங்க ளெல்லாம் ஜீவரூப அணுக்களேயாகும். ஜட சரீரத்தின் இயற்கை யான பிரக்ஞை யெல்லாம் இந்த அணுக்களுடையதேயாகும். இவ் வணுக்களின் அறிவு மிகு விசேஷித்ததென்பதை யறியவேண்டுமாயின் இதன் தொழில் இன்னதென்று நாம் உணரவேண்டும். இது எங்ஙனம் உணர்வது என உற்று நோக்குழி நமது தேகத்தின்கண் பரவியோடும் இரத்தத்தினின்றும் தங்களுக்கு வேண்டியதை யெடுத்துக்கொண்டு, வேண்டாததை தள்ளிவிடுவதே இவ்வணுக்களின் அறிவாம். இவ் வறிவு நம்முடைய மூளை யறிகின்றது. ஆனல் அணுக்கள் நம்முடைய அறிவன்றியிலேயே சதையை வளரச்செய்வதில் தங்கள் பிரக்ஞை, யைக் காண்பிக்கின்றன.

இதனுலேயே இத்தூல சரீரத்தை மஹா ஞானிகளாயுள்ளவர்க ளான மஹாத்மாக்கள் இதனை ஸ்திரமாக மதிக்காமல் எந்த பிரம்மத்தி னின்றும் விச்ரம்பித்து ஆன்மாவந்ததோ அதையே மீண்டும் போயடை

வதற்குகந்த பிரயத்தனங்களைச் செய்யவேண்டு மென்று வற்புறுத்த இதனையும் இழித்துக் கூறியிருக்கின்றனர். அவர்களின் இழிமொழிக ளாவன :

“ என்பினை நரம்பிற் பின்னிக் குடர்வழும் பிறைச்சி மெத்திப்
புன்புழுப் பொதிந்து செந்நீர்ப் புண்ணசும் பொழுகி நாறித்
துன்பநோ யெவற்றினுக்கு முறையுளாய்ப் புறந்தோன் மூடும்
வன்புலை யுடம்பே யாவி வருத்திடும் பிணிவே றில்லை”

எனக் காஞ்சி புராணக்காரரான சிவஞான முனிவரும் ;

“ குடரு மெலும்புங் கொழுவுங் குருதியு மீருளுந் தசையுந்
தொடரு நரம்பும் போர்த்த தோலு மூளையும் வழும்பும்
அடரு மூவர் நீரு நனியரு வருக்கும் பவ்வீயும்
படரு முடலையும் பொருளா நினைப்ப ரோபண் புடையோர்.”

என திருப்பெருந்துறைப்புராண ஆசிரியர் ஸ்ரீமான் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை யவர்களும் ;

“ நறுந் தவளந் துகிலமுர்காய் நாறுதற்கு நலைவுடம்பி
னுறுந்தவறு தனையன்றி யொருநிமித்தம் பிறிதுண்டோ
விறுந்தனையு முடற்சுமையா மிதுசுமத்தற் கிளையாமற்
பெறுந்தகைய தெனக்கருதிப் பேணுவரோ பெரியோர்தாம்”

எனவும்,

“ பழித்திடுங் கோழைமூளை பற்றிய வழுக்கு மற்றை
யொழிந்திடு மலநீர் வெண்ணீ ருறைவயிற்றி னுலகத்தொன்று
மிழிப்புறு மியாக்கை காப்பா ரறிவுளா ராகுவாரோ”

என்று சேது புராண ஆசிரியரும் ;

“ ஊற்றைச் சரீரத்தை யாபாசக் கொட்டிலை யூன்பொதிந்த
பீற்றற் றுருத்தியைச் சோறிடுந் தோற்பையைப் பேசரிய
காற்றிற் பொதிந்த நிலையற்ற பாண்டத்தைக் காதல்செய்தே
யேற்றுத் திரிந்து விட்டே னிறைவா கச்சி யேகம்பனே”

எனவும்,

"ஒன்பது வாய்த் தோற்பைக் கொருநாளைப் போலவே
யன்புவைத்து நெஞ்சே யலைந்தாயே—வன்கழுக்கள்
தத்தித் தத்திச் சட்டைதட்டிக் கட்டிப்பிட்டுக்
கத்திக் குத்தித்தின்னக் கண்டு"

என்று தவராஜ சிங்கமாகிய பட்டினத்தடிகளும் ;

"புன்புலா னரம் பென்புடைப் பொய்யுட
லன்பர் யார்க்கு மருவருப் பல்லவோ
வென்பொலா மணியே யிறையே யித்தாற்
றுன்ப மின்றிச் சுகமொன்று மில்லையே"

எனத் தனிப்பெருங்கலையாகிய ஸ்ரீமத் தாயுமான சுவாமிகளும் ;

"என்பினை நரம்பை மூளையை மயிரை
யிறைச்சியைக் குருதிசுக் கிலத்தைப்
பின்புறுந் துவக்கை வேறு வேறாகப்
பிரித்துப்பை மறியென நோக்கி
அன்புறு மறிவாற் பௌதிக மெனநீத்து
ஆண்டமா விளைசைநா யகன்றன்
இன்பவா ரிதியிற் றிளைத்திடப் பெறுதார்க்கு
இறப்பதும் பிறப்பதும் இயல்பே"

என இளசைப் பதிற்றுப்பத்தந்தாதியின் நூலாசிரியராலும் ;

"குடரு நெய்த் தோரு மென்புங்
கொழுவும் வார் வழும்புந் தோலும்
தொடருநா டிகளும் வைத்துச்
சுமத்திய தடியுங் கொண்டு
படர்தரச் செய்த பவ்வீப்
பாண்டமா மடந்தை நல்லார்
இடனுடை வடிவ மந்தோ
இதற்கு முண் மயங்கா நிற்பர்"

எனக் குசேலோபாக்கியானத்தின் ஆசிரியரான ஸ்ரீமான், வல்லூர் தேவராஜப் பிள்ளையவர்களும் ;

" வினையின் வந்தது வினைக்கு விளைவாயது
புனைவன நீங்கிற் புலால் புறத் திடுவது
மூத்து விளிவுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை
யவலக் கவலை கையா றழுங்க
றவளா வுள்ளந் தன்பா லுடையது
மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து
மிக்கோ யிதனைப் புறமறிப் பாராய்"

என மணிமேகலையின் ஆசிரியரும்;

" வழும்பு தடி குடரென்பு வார் நரம்பு
மேதை நெய்த் தோர்
தழும்புழுக்கண் மூளைமயிர் சரும
மாதிகள் சூழும்
கொழும்பொதியைப் பகுத்திடுங்கால்
கோற் றொடியா ளெவள் காட்டாய்
விழுப்பிணத் தெவ் வுறுப்பில்லை
விழையாமை விடல்கிளவாய்"

எனத் தணிகைப் புராண ஆசிரியரும்;

" மாக்கேழ் மடநல்லா யென்றரற்றுஞ் சான்றவர்
நோக்கார்கொ னொய்யதோர் புக்கில்லை—யாக்கைக்கோர்
ஈச்சிற கன்னதோர் தோலறினும் வேண்டுமே
காக்கை கடிவதோர் கோல்"

என நாலடியாரிலும்;

" என்பினை நரம்பிற்பின்னி யுதிரந்தோய்த் திறைச்சி மெத்திப்
புன்புறத் தோலைப்போர்த்து மயிர்புறம் பொலிய வேய்ந்திட்
டொன்பது வாயிலாக்கி யூன்பயில் குரம்பைசெய்தான்"

என சீவக சிந்தாமணியிலும்;

" தீண்டா வழும்புஞ் செந்நீருஞ் சீயு நரம்புஞ் செறிதசையும்
வேண்டா நாற்ற மிகுமுடலை வீணே சுமந்து மெலிவேனோ



திருவள்ளுவ நாயனார்

நீண்டாய் தூண்டா விளக்கொளியாய் நின்றூ யொன்று யடியாரை
யாண்டாய் காண்டா வனமெரித்ததா யரங்கா வடியேற் கிரங்காயே''

எனப் பிள்ளைப்பெருமாளய்யங்கார் சுவாமிகளும் ;

" தோல்வா சந்துறந்திறந்து கிடந்தவழ
கியைக்காணச் சுடலை சென்றேங்
கோல்போன்ற வெள்ளென்பின் குலவையொன்றே
கண்டனஞ் செங்குமுத வாயும்
நூல்போன்ற விடையுமன நடையுமணி
தனமுமதி நுதலும் வாய்ந்த
சேல்போன்ற விழியும்பான் மொழியுங்கா
ணுமலுள்ளந் திகைத்தோ மன்னே''

எனவும்,

" நோக்கதனிற் பீளையிரு செவிகளிலுங்
குறும்பியன நுகர்வா யெச்சின்
மூக்கதனிற் சளிதலையிற் பேன் வெயர்வை
மலசலங்கண் மூளு நாற்றம்
போக்கவொரு நாள்சமுவா விடிலழுக்கு
மிகத்திரண்டு புழுத்து நாறும்
ஆக்கமில்லாத் தேகமிதை யழகென்னச்
செருக்கலறி யாமை யாமே "

என நீதி நூலாரும் கூறியிருப்பதானது ஸ்தூலத்தின் தன்மையை விளக்கியே எனப்படுவதாம்.

ஸ்தூல சரீரத்தினின்றுமே விஷயாதிகளையுணர வேண்டுமென்பது பன்னூல்களின் றுணிபாக விருப்பதாலும், ஸ்தூல சரீரத்தின் தோற்ற லக்ஷணத்தைச்கூறிய நாம் இனி லிங்க சரீரத்தைப்பற்றித் கூறுவோம்.

## அத்தியாயம் 7.

# லிங்க சரீரம். (2—அம்சம்)

லிங்க சரீரம் இரண்டாவது அம்சமாகும். வேதாந்த சாஸ்திரப்படி இரண்டாவது கோசமாகிய பிராணமய கோசமானது லிங்க சரீரத்தையும் மூன்றாவது அம்சமான பிராணனையும் அடக்கிக்கொண்டிருக்கின்றது. சூட்சும சரீரம் என்பதில் ஒரு அம்சத்திற்குமேல் சேர்ந்திருப்பதினால் இரண்டாவதாகக் குறிப்பிடுவதற்கு லிங்க சரீரமென்னும் பதமே உசிதமானதாகும்.

நம்முடைய பஞ்சேந்திரியங்களுக்குக் கோசமாயிருக்கும் ஒரு பொருளைக்காட்டிலும், சூக்ஷ்மமாயிருக்கிற பொருளால் இந்த லிங்க சரீரம் ஏற்பட்டிருக்கின்றதென அறியவேண்டும். அதனால் இதை லிங்கப்பொருளென்று சொல்லலாம். இது ஸ்தூலபூமிகையை யடுத்ததான லிங்க பூமிகைக்கு உரியதாகும். ஆனால் இது கட்டிரூபமாயும் ஜல ரூபமாயும் வாயுரூபமாயு மிருக்கின்ற பொருள்களைவிட அதிசூக்ஷ்மமானதாகும். இந்த லிங்க பூமிகையில்தான் அதிசூக்ஷ்மமான பதார்த்தங்கள் சப்தங்கள் முதலியன விளங்குகின்றன.

நிற்க, இந்த லிங்க சரீரம் எந்த ஸ்தூல சரீரத்தினுடைய சேர்க்கையுடையதோ அந்த ஸ்தூலத்தின் சரியான பிரதியாகும். இதினின்றும் அது பிரிவுபடவுங்கூடும். ஆனால் ஸ்தூலத்தைவிட்டு அதிக தூரம் அதுபோகாது. மேற்கூறிய வண்ணம் பிரிவுபட்டால் அக்காலத்தில் ஒரு வெண்மையான தந்துவினால் ஸ்தூலம் சேர்ந்திருப்பதாக சூக்ஷ்ம திருஷ்டியுடையவர்களுக்குத் தெரியவரும்.

ஸ்தூலத்திற்கும் லிங்கத்திற்கும் சம்பந்தம் வெகு நெருக்கமானதாயிருப்பதினால்தான் லிங்கத்தில் ஏற்படும் காயம் முதலியவைகள் ஸ்தூலத்தில் காணப்படுகின்றன. ஸ்தூலத்தினது உயிர் வியாபகங்கள் லிங்கத்தைப் பொறுத்ததாயிருக்கின்றன. லிங்கம் பிராணனுக்கு உபாதி (அதாவது வாகனமாயிருக்கின்றது.)

லிங்கம்பிரிவு படுவதற்குத் தகுந்தபடி ஸ்தூலத்தில் ஜீவ வியாபகம் குறைகின்றது. ஆகையால் உயிர் வியாபகம் (அதாவது) சரீர சேஷ்டைகளுக்கு முக்கியஸ்தானம் லிங்க சரீரமே யாகும். இவைகளை யநுசரித்தே பிராணமயகோசத்தில் லிங்க சரீரத்தையும் பிராணனையும் ஒன்று சேர்க்கப்பட்டதென்பது தெளியலாகும்

மனிதனது ஆகிருதிபோல ஒரு ஆகிருதி தோன்றுங்காலத்தில் இந்த லிங்க சரீரம்தான் பிரத்தியக்ஷமாகின்றது. யாதொரு சம்பந்தமின்றி ஓரிடத்திலுள்ள ஒரு வஸ்துவை மற்றொரு இடத்தில் வைக்கப் படுதல் இதன் செய்கையேயாம். இந்த ஸ்தூல பூமிகையில் இந்த லிங்க சரீரத்திற்கு அறிவு இன்மையினால் இதின் செய்கைகள் யாதொரு பிரயோசனத்தையும் உத்தேசித்ததாயிராது. இந்த லிங்க சரீரத்தைத் தம் இஷ்டப்படி உபயோகப்படுதத சாதாரண ஜனங்களுக்கு முடியாது. ஏனெனில் பக்குவப்பட்டவர்களாயும், உணர்ச்சி மிகுந்திருப்பவர்களாயுமிருக்கவேண்டும்.

இந்திரியங்களின் ஸ்தூல கோளகங்கள் ஸ்தூல சரீரத்திலும், சூக்ஷ்ம கோளகங்கள் லிங்கசரீரத்திலும் இருக்கின்றன. இந்திரியங்களானது சூக்ஷ்மகோளகங்களின் மூலமே வியவகரிக்கின்றன. லிங்க சரீரமானது ஸ்தூல பதார்த்தத்தையும் பிரக்ஞையையும் இணைக்கும் பாலம் போலிருக்கின்றது. வெளியிலுள்ள பொருள் ஸ்தூல சரீரத்துடன் சம்பந்தப்பட்டு அவனுள்ள அணுக்களில் அசைவையுண்டாக்குகின்றது. இந்த அசைவு லிங்கசரீரத்திலுள்ள இந்திரியங்களின் சூக்ஷ்ம அணுக்களில் அசைவை யுண்டாக்குகின்றது. இவ்வசைவின் அலைகள் மனசின் அதிசூக்ஷ்மமான அணுக்களில்மோதி அவைகளில் சலனமுண்டாக்குகின்றன. மீண்டும் இக்கடைசியான அசைவு ஸ்தூல மூளையின் அணுக்களில் மோதி நம்முடைய மூளைக்கு பிரக்ஞை உண்டாக்குகின்றது. பிறகுதான் நாம் வெளிப்பதார்த்தத்தை யறிந்ததாக நினைக்கின்றோம்.

நித்திரையில் ஸ்தூல பதார்த்தத்தினின்றும் அசைவு ஏற்படாமல் லிங்க பூமிகையில் ஏற்பட்டு மறுபடியும், லிங்கத்திற்கே திரும்பி வருவதினால் நம்முடைய ஜாக்ரத பிரக்ஞைக்கு இதுவிஷயமாகிறதில்லை. சூக்ஷ்ம திருஷ்டியுள்ளவன் தன் ஞாபகத்துடன் லிங்க சரீரத்திலுண்டாகும் அசைவை தன் மூளைக்குக் கொண்டுபோய் தன்பிரக்ஞைக்கு லிங்க பூமிகையின் பொருளை விஷயமாகக்கூடும்.

## அத்தியாயம் 8.

# பிராணன். (3—அம்சம்)

அகண்டமாயும் நிரந்தரமாயும் இருக்கப்பட்டதான பிராணன் என்னுஞ் சமுத்திரத்தில் பிரம்மாண்டம், லோகங்கள், மனிதர் மிருகங்கள், செடிகள், பாஷாணங்கள், அணுக்கள் முதலிய எல்லாம் முழுகியிருக்கின்றன. இந்த பெரிய சமுத்திரத்திற்கு ஜீவன் என்று பெயர். ஜீவனது வியக்தாவஸ்தையே பிரம்மாண்டமாம். எவ்விதமெனின், கடலிலுள்ள கடற்பஞ்சானது உள்ளும் புறமும் கடல் ஜலத்துடன் கூடியிருந்தும், தனக்குவேண்டிய ஜலத்தைமட்டும் ஸ்வீகரிப்பதுபோல், பிரம்மாண்டம் முதல் அணுவரையுமுள்ள ஒவ்வொன்றும் பிராணன் என்னும் சமுத்திரத்தில் முழுகி தனக்கு வேண்டியவரையிலும் ஸ்வீகரிக்கின்றது. கடற்பஞ்சிலுள்ள அம்சத்தை ஜலமென்றும், சுற்றிலுமுள்ளதை சமுத்திரமென்றும் கூறுவதுபோல, ஒவ்வொரு வஸ்துவிலுமுள்ள அம்சம் பிராணனென்றும், சமுஷ்டி பிராண சமுத்திரம் ஜீவன் எனவும் சொல்லப்படும்.

சரீர சேஷ்டைக்கு மூல ஆதாரமானது பிராணனேயாகும்: பிராணனது வியாபகம் லிங்க சரீரத்தின் மூலமாக ஸ்தூல சரீரத்தில் காணப்படுகின்றது. ஆகையினால் லிங்க சரீரம் பிராணனையும் ஸ்தூல சரீரத்தையும் ஒன்று சேர்க்கும் பாலம் போன்று இருக்கின்றது. பிராணனுடைய பல உட்பிரிவுகளில் கடைசியான உட்பிரிவுதான் ஜீவர்களாகின்ற அணுக்கள், இவைகளின் மொத்தமான ஜீவாம்சத்திற்கே பிராணன் என்னப்படும் பெயர் பொருந்தும்—பெயராகும். பிராணன் என்கின்ற சமுஷ்டி ஜீவாம்சம் அணுக்கள் என்கின்ற வியஷ்டி ஜீவாம்சங்களைப் பிரம்மாதி பிபீலிகை வரையில் ஒவ்வொரு பதார்த்தத்தின் ஆகிருதியையும் உண்டுபண்ணச் செய்கின்றது.

வேதாந்த சாஸ்திரங்களி இவைகள் பஞ்ச பூதங்களால் உண்டாயிருப்பதாகக் கூறியிருப்பினும் இந்த பஞ்சபூதங்களே ஜீவரூப அணுக்களாகும்.

பிராணன் எப்பொழுதும் நான்காவது தத்துவத்துடன் கலந்திருக்கின்றது.

# அத்தியாயம் 9.

## காமம். (4—அம்சம்)

மனிதனின் நான்காவது அம்சமாயிருப்பது காமம். வேதாந்த சாஸ்திரத்தின் மனோமயகோசமானது இந்த காமத்தையும் மனசின் ஒரு பாகத்தையும் அடக்கிக்கொண்டிருக்கின்றது. காமம் என்பதற்கு இச்சை யென்று பொருள். சரீரத்திற்குரிய பசி, தாகம் முதலியவைகள் சாதாரண அன்பு, துவேஷம், பொறுமை முதலிய உணர்ச்சிகள் இந்தக் காமத்தில் அடங்கியுள்ளன. காமம் என்பதுதான் நம் சரீரத்திலுள்ள மிருகாம்சம். இந்த அம்சம் சரீரத்திலும். கிரஹாதிகளிலும் * அகந்தை மமதைகளை யுண்டுபண்ணி, உண்மையைத் தெரியவொட்டாமல் பிரம்மிக்கும்படி செய்கின்றது. பந்தத்திற்கு முக்கிய காரணம் இதுவேயாகும், இது மனத்தின் அசுத்தாம்சத்துடன் கலந்து நம்முடைய சாதாரண பிரக்ஞையாக விளங்குகின்றது.

காமமானது பிராணனுடன் கலந்து தேகாதியந்தம் வியாபித்திருக்கின்றது. இந்திரியங்கள் விவகரிப்பதற்கும் காரணமாயிருப்பது இதுவே. பிராணனில்லாவிடில் ஸ்தூல லிங்க சரீரங்களிலுள்ளதான அணுக்களில் அசைவு உண்டாகமாட்டாது. காமம் இல்லாவிடில் சலனம் சலனமாகவேயிருக்கும். இந்த சலனத்தினின்றும் உணர்ச்சி ஏற்படும்படி செய்வது இக்காம அம்சமேயாம். இவ்வுணர்ச்சியே காம பூமிகையில் பிரக்ஞையாய் இருப்பது. ஒருவன் வெகு கோபத்திலிருக்கும் சமயம் காமபூமிகையிலிருக்கின்றான் என்னவேண்டும். அச்சமயம் அவனது பிரக்ஞை அந்தக் காம பூமிகையில தான் விசனப்பட்டு நிற்கின்றது.

---

* நான், என்னுடையது என்னும் அபிமானம்.

மனிதன் ஜீவித்து இருக்கும் காலத்தில் இந்தக் காமத்துக்கு ரூப மில்லை. ஆனால் இது மரணத்திற்குப் பின்னரே ரூபத்தைத் தரிக்கின் றது.

மரணத்திற்குப் பிறகு ரூபத்தைத் தடுக்கும் காமம் ஸ்திரமா யிருக்கின்றதாவென விசாரிக்கின் அதுவும் மரணமடைந்து விடுகின்ற தேயாகும் ஆனால் இதன் பிந்திய ஸ்திதியாதெனெ ஆராயவேண்டு மன்றோ ? இது வரையும் மனிதனது நஸ்வரமான நான்கு அம்சங்களை யடக்கிக் கொண்டிருக்கும் ரூபம் இன்னதென அறியப்பட்டது. இந்த அம்சங்கள் மனிதருக்கு மட்டு மல்லாமல் மிருகங்களுக்கும் இருக்கின் றன. இந்த அம்சங்களுடன்மட்டும் கூடியிருப்பதெல்லாம் மிருகஸ்வ ரூபமேயாம். ஒவ்வொரு அம்சமும் வெகுகாலமாக விருத்தியெய்தி வந்து கடைசியாகவே இந்த மிருக ரூபம் ஜனித்தது. சுபாவமான சைதன்னியத்தின் பலத்தால் சாக்ஷாத்காரமான சம்பந்த மின்றியே இந்த மிருக ரூபம் மாறி திவ்ய ரூபமாக ஏதுவில்லாமலிருந்தது. விதைரூபமாக இருந்த மற்ற மூன்று அம்சங்கள் வெளியாகும் பொருட்டு இந்த மிருக ரூபம் தேவாம்சத்தை எதிர்பார்த்துக்கொண் டிருந்தது. ஜீவனின் ஸ்தூல சரீரத்தைப் பூமியும், லிங்க சரீரத்தைச் சில பிதிர்க்களும், பிராணனைச் சூரியனும் கொடுத்தார்கள். மனம் கூடுவதற்கு முன் இந்த நான்கு அம்சங்களின் சேர்க்கையினாலு மூண் டான சரீரத்தில் உணர்ச்சியிருந்தாலும், சுயமாய் எவ்வித வியாபகத் தையுஞ் செய்ய ஏதுவில்லாமலிருந்தது. ஆகையினால் மனது என்கின்ற * மனிதனுடைய வரவை இவைகள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தன வென்பது விசிதம்.

---

* மனிதன் என்பது மனது என்பதன் மூலமாகப் பிறந்ததாகும். இது மன் X இதன் = மனிதன் எனப் பகுக்கப்பட்டிருப்பதால் மனதின் வயப்பட்டு நடப்பவன் எனப்பொருள் படுகின்றது. மனிதன் மனதின்வயப்பட்டு நடக்க லாமோவெனின், "மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என் னும் உலகநாதன் என்பார் அருளிச்செய்தவண்ணம் மனம் செல்லும் நன்னெறி யைக் கைப்பற்றித் தீநெறியை யொழித்தலே சாலச் சிறந்ததென்பது தெளி வாம்.

## அத்தியாயம் 10.

# மனம் (அம்சம் 5.)—அதன் தன்மை.

ஐந்தாம் அம்சமான மனம் வெகு முக்கியமானதால் அதைத் தெளிவாய் ஆராய்ந்து நோக்கவேண்டும், ஏனெனில் மனிதனுகப் பிறந்த ஒவ்வொருவனும் மனதின் காரணத்தாலேயே மனிதன் என்னும் சிறப்புப் பெயர் பெற்றிருப்பதினுலும், மனதின் வழியே நடக்கும் ஆற்றலுடையவனு யிருப்பதினுலும், மனமே சகலத்துக்குங் காரணமா யிருப்பதினுலும், ஒவ்வொருவரும் மனதைப்பற்றி வெகுவிசதமாய் அறிந்திருக்கவேண்டியது அவசியமேயாகும் :

ஆன்ருேர்கள் இம்மனதைப்பற்றி எவ்வளவோ விசதமாய்க் கூறியிருக்கின்ருர்களாயினும், வேதத்தின் நிரூபணமும் அதற்கு ஒத்தாப் போலிருக்கின்றதென்பது கொள்ளத்தக்கதாகும் : நிற்க, இந்த மனம் இரண்டு தன்மையுடையது. அற்ப புத்தியுள்ளவன் பெரும் புத்தியுள்ளவன் என்று உலகத்தில் விளங்குவதல், உயர்ந்த மனம் என்றும், தாழ்ந்த மனம் என்றும், அல்லது அசுத்த மனம் என்றும் சுத்தமனம் என்றும் இரண்டு விதப்படும். இந்த அசுத்தமனதுடன் காமம் சேர்ந்து தான் மனோமயகோசம் எனப்படுகின்றது. சுத்தமனதே விஞ்ஞானமயகோசமாம். இது இரண்டும் வேதாந்தத்தின் கோட்பாடு எனப்படும்.

மேலே நாம் மனதைப்பற்றி வேறு விதமாய்க்கூறினேமாயினும் மனது என்னும் பதமானது மன் என்னும் சம்ஸ்கிருதப் பகுதியினின்றுவருகின்றது. மன் என்ருல் நினைத்தல் பாவித்தல் என்னும் பொருளேயே அது தருவதாக சமஸ்கிருத அமரம் (நிகண்டு) கூறுகின்றது. ஆங்கிலத்திலும் மனதை Mind என்று கூறப்படுகின்றது. இதற்கு அம்மொழியிலேயே பொருள் கூறும்போது, Will என்றும், Heart என்றும் கூறப்படுகின்றது.

மனதைப்பற்றிக்கூறியபோது அசுத்தமனது, சுத்தமனது எனக் கூறியதில் மனதின் தீக்குணம் மூன்று என்பதும், சுத்தமனதின் நற்குணம் மூன்று என்பதும் விசதம். அவை வருமாறு :

மனதின் தீக்குணங்கள் மூன்றுவன :—

(1) கொல்ல நினைத்தல்.
(2) காமப்பற்று.
(3) ஆசை.
} இவைகளால் மனிதன் தீமையை யடைவதுடன் துன்பத்தை யநுபவிக்க நேரும்.

மனதின் நற்குணங்கள் மூன்றுவன :—

(1) அருள் நினைவு.
(2) ஆசை யறுத்தல்.
(3) தவப்பற்று.
} இவைகளால் மனிதன் மேன்மையும் கௌரவமும் சாந்தமும் அடைந்து செம்மை நெறியாளனெனும் கீர்த்தியும் அடைகின்றான். இத்தகையவனையே உலகம் ஞானியெனப் போற்றுகின்றது.

ஆகையினால் மனிதன் என்பவன் மனதை யுடையவனானதால் மனிதனுக்கு மனிதன் என்னும் பெயர் விளங்குகின்றமைபற்றி மனதையுடையவனை மனதாகவே நினைத்து விவரிக்கப்படுகின்றது.

பரப்பிரம்மத்தின் அம்சம்போன்ற அம்சத்தை யுடையதாயும், ஆனால் அதோடு ஐக்கியமாகும்படியான சுத்த அம்சமில்லாததாகியும், இவ்வைக்கியத்தை யடையும்பொருட்டு தான் தத்ஸ்வபாவத்தை சுத்தப்படுத்துவதாயும், இதற்காக ஒவ்வொரு பூமிகையிலும் அநேக ஜன்மங்களை கொடுக்கின்றதாயுமுள்ள ஒரு தெய்வம் இருக்குமாயின் அது வேமனம் எனப்படும். இதனையே மானச புத்திரர்கள் என்றும் கூறுவது. ஆனால் இதற்கு க்ஷேத்திரக்ஞன், பாரமார்த்திக ஜீவன், கூடஸ்தன் என்னும் வேறுபெயர்களும் வேதத்தில் காணப்படுகின்றன. இது பிரகிருதி ரூபமன்று. இது புருஷரூபமாகும். அநேக ஜன்மங்களில் அநேக ரூபங்களைத் தரித்துத் தான் மட்டும் ஒன்றாகவே இருப்பதும் இந்த மனதுதான்.

முதல் நான்கு அம்சங்களினால் கட்டப்பட்டதான சரீரம் என்கின்ற வீடு தயாராயிருக்கும்போது மானச புத்திரர்களாகிற அக்னிஷ்வத் பிதுர்தேவதைகள் வீடு காலியாயிருப்பதைப் பார்த்து தங்களின் அபிவிர்த்திக்காகவேண்டி அவைகளில் பிரவேசித்தார்கள். இதுதான்

ஜீவனுக்கு சரீரத்தில் முதல் ஜன்மம். மனம் ஆன்மாவைப்போல சுத்தமாயில்லாதபடியினால் மறுபடியும் ஆன்மாவுடன் சேரும்பொருட்டு அநேக ஜன்மங்களை இந்த மானச புத்திரர்கள் எடுக்கின்றனர். இந்த மானச புத்திரனே ஐந்தாவது அம்சம். நான் என்னும் பதமும் இதற்கே உபயோகப்படுகின்றது. ஆனால் நான் என்பது அகங்கார மமகாரங்களைக் குறிப்பிப்பதாக வேதாந்த சாஸ்திரங்கள் கூறுகின்றன. எது எப்படியாயினும் நான் என்னும் பதம் வழங்குவதற்குக் காரணம் இன்னதென விளக்கப்பட்டுவிட்டதும் வெகு விசேஷமேயன்றோ ?

மனமானது தனக்கென ஏற்பட்டிராநின்ற வீடாகிய சரீரத்தைப் பார்த்தமாத்திரத்தில் தன்னுடைய அதி சூக்ஷ்மமான அம்சம் ஸ்தூல அணுக்களுடன் சேராதெனத்தெரிந்துகொண்டு தன் ஒரு பாகத்தைப் பிரித்து வெளிப்படுத்துகிறது. பிரிபட்டபாகமானது சூக்ஷ்ம அணுக்களால் தன்னை மூடிக்கொண்டு கர்ப்பத்திலிராநின்ற சிசுவின் லிங்க சரீரத்தோடு கலந்துகொண்டு அதனுடைய மனதாகப் பரிணமிக்கின்றது. இவ்வண்ணம் பிரிவுபட்ட பாகத்திற்குப் பிரதிபிம்பம் என்றும், சாயை என்றும், கிரணம் என்றும், அசுத்தாம்சம் என்றும், சிதாகாசன் என்றும் சொல்லப்படும். இதுவே வியாவஹாரிக ஜீவாத்மா என்பது. மூலமனதோவெனின் சுத்தமனது. ஒவ்வொரு ஜன்மத்திலும் மனது இரண்டு பாகங்களாகப் பிரிவுபட்டு சுத்தமனது ஆன்ம விஷயத்திலும், அசுத்தமனது பிராபஞ்சிக விஷயத்திலும் செல்லுகின்றது.

அசுத்தமனது காமத்துடன் கலந்து காமமனதாகின்றது. ஆனால் மரணத்திற்குப் பின் இருபாகங்களும் மீண்டும் ஒன்று சேர்ந்துவிடும்.

---

## அத்தியாயம் 11.

# அசூயா மனம்.

வியாவஹாரிக ஜீவன் மேலே கூறிவந்த முதல் நான்கு அம்சங்களில் முழுகி ஒரு பாகத்தில் காமத்தையும் மற்றொரு பாகத்தில் சுத்தமனதையும் பிடித்துக்கொண்டு இருக்கின்றான். காமத்திற்குப்

பூரணமாகச் சுவாதீனப்பட்டு வருவதும், அல்லது தன்னுடைய ஸ்தானத்திற்குச் சாத்விக அநுபவங்களுடன் போய்ச் சேருவதும் எடுக்கும் ஒவ்வொரு ஜன்மத்திலும் தீர்மானிக்க வேண்டியதாக இருக்கின்றது. ஜீவித்திருக்கையில் காமமும் அசுத்த மனதும் சேர்ந்திருக்கின்றன. காமமானது உணர்ச்சிகளையும் மனோபாகம் அவைகளை யறியும் சக்தியையும் கொடுக்கின்றது. இதனால் தான் நமக்குச் சாதாரண மூளையில் பிரக்ஞை ஜனிக்கின்றது. அந்தக்கரணத்தினுடைய விருத்தி பாகம் விஷயத்தின் ஆவரணத்தை நீக்கி சிதாபாச பாகம் விஷயத்தைப் பிரகாசிப்பிக்கிறதாக விசார சாகரத்திலும் விளக்கி யிருப்பதானது இந்தக் காம மனதின் வியாபாரமேயாம். இவைகளின் பூரண விளக்கம் ஆராய்ச்சியின் மூலமும் ஆன்றோர்களின் அருளுரையினாலும் வெகு தெளிவாய்த் தெரியலாகும்.

முக்கியமாய் விளக்கினுடைய பிரகாசம் வர்த்தியையும் எண்ணெயையும் பொறுத்திருப்பதுபோல மனதின் பிரகாசமும் மூளையையும் காமத்தையும் பொறுத்ததாயிருக்கின்றது. காமமானது மிக்க பலமுடையதாயிருந்தால் மனதின் பிரகாசத்தை மறைத்துவிடும். அப்படியே மூளை பக்குவப்படாதிருந்தால் மனதின் பிரகாசம் ஸ்வல்பமாயிருக்கும். எங்ஙனமெனில், சங்கீதம் பாடகனது சாமர்த்தியத்தையும், வாத்தியங்களையும் பொறுத்திருக்கின்றதன்றோ? இவைகளில் ஒன்று குறைவு பட்டிருப்பின் நல்ல நாதம் ஜனிக்காது. அதுபோல ஒரு ஜீவனுக்கும் மற்றொரு ஜிவனுக்கும், ஸ்வரூபத்தில் பேதமில்லாமலிருக்கினும், ஒருவனைப் பெரிய மனுஷனென்னும் பெரும்பெயரையும் பெருமையையும் கீர்த்தியையும் அளிப்பதும், ஒருவனை அற்பனாகவும் லோபியாகவும் இன்னும் இழிவான தன்மையில் கொண்டு செல்வதும் மனதின் தேஜஸைப் பிரதிபிம்பிக்கும் மூளையின் ஸ்திதியும் தற்கால காமாதிகளுமே யாம்.

ஜனங்கள் தற்காலம் எய்தியிருக்கும் ஸ்திதியில் பெரும்பான்மையாய்ச் சுத்தமனம் விளங்குகின்றதில்லை. எப்பொழுதாவது ஒரு காலத்தில் விளங்குவதானது அதிமேதாவிகளின் செய்கைகளால் தெரியவருகின்றது. மனதின் பிரகாசம் நமக்கு தாராளமாய் எட்டாமற் செய்யும் பிரதி பந்தங்களை நிவர்த்திக்க அந்தக்கரண சுத்தியே முக்கியமான சாதகமாகும். தேகம் ஒவ்வொரு ஜீவனுக்கும் இருப்பிடம். அதில்

நான் என்னும் அபிமானத்தை அசுத்தமானது உண்டுபண்ணுகின்றது. இதனால்தான் ஜீவனுக்கு மற்ற ஜனங்களைக்காட்டிலும் தான் வேறென்னும் எண்ணமான பிராந்தி (பைத்தியக்காரத்தனமான) ஞானம் ஜனிக்கின்றது.

பிராபஞ்சிக பதார்த்தங்களின் பொய்த்தோற்றங்களால் பிரமையையடைந்து, தான் பிறந்த இடத்தை அசுத்தமனம் மறந்து விடுகின்றது. சுகதுக்கங்களை மிருக சுபாவத்திற்கும் இந்திரியங்களுக்கும் கொடுப்பது அசுத்தமானதேயாம். இதுவன்றியில் உணர்ச்சியானது உணர்ச்சியாகவே யிருக்கும். மூன்று காலங்களிலும் உணர்ச்சி சுகதுக்கங்களை அறிவது மனதிற்கே சாத்தியமானதாகின்றது.

---

## அத்தியாயம் 12.

# அரூயாமனதின் பிரவிர்த்தி.

கிடந்த அத்தியாயத்தில் பொதுவாக அசுத்தமனம் காமத்துடன் கலந்து பிராபஞ்சிக சுகதுக்கங்களை யடைகின்றதென்று கூறினேம் இனி மனம் பிரவிர்த்திக்கும்படியான விதத்தை விளக்கமாய் ஆராய்வோம்.

மனதின் பிரகாசம் விளங்குவது மூளையையும் காமத்தையும் பொறுத்ததா யிருக்கின்றதென்று மேலே கூறியிருக்கின்றோம். மூளையானது பரமாணுக்கள் சிறியதான கும்பல்களாகி அவைகளாலேயே உண்டாகின்றது. இந்த அணுக்கள் ஒன்றோடு ஒன்று சேராமலும், ஜீவன் சுபாவத்தால் ஒன்று சேர்க்கப்பட்டும் இருக்கின்றன. ஆனதால் அவைகளில் அசைவு ஏற்பட ஆஸ்பதமாயிருக்கின்றது.

காமமானது மூளையின் அணுக்களில் சலனத்தை ஏற்படுத்த நம்மூடைய மூளை பிரக்ஞைக்கு ஹேதுவாகின்றது. காமக்குரோதாதி மனோவிகாரங்கள் எல்லாம் இந்தக்காம மனதின் பிரவிர்த்திகளேயாம். மூளையில் அணுக்கள் சுத்தமாயும் காமத்தின் முக்கியகோளங்களான

ரல், மண்ணீரல் ஆகிய அவயவங்களும் சுத்தமாக யிருந்தால்தான் மூளை மூலமாக வெளியாகும் காமமானதும் சுத்தமாகவே யிருக்கும். ஆனால் அணுக்கள் பக்குவமெய்தாமலும், மயக்கத்தை உண்டாக்கக் கூடியதான கள், சாராயம், கஞ்சா, அபினியென்னும் மத்தியபானங் கள், விடவியவகாரங்கள் முதலியவைகளினால் இரத்தம் அசுத்தப் பட்டும் போயிருந்தால் அப்போது விளங்கும் மனோவியாபாரம் அதி துச்சமாயிருக்கும். முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது என்னவெனில், காமமானது தேகத்தை அடுத்திருக்கின்றது என்பதும், அது மூளையின் மூலமாக வியவகரிக்கின்றதென்பதும் மூளையின் பக்குவத்திற்குத் தகுந் தபடி மனத்தின் பிரகாசம் தெரியும் என்பதுமேயாம். இந்த ஞானம் புனர்ஜன்மம் என்னும் விஷயத்தைத் தெளிவாய் அறிய சாதகமானதா யிருக்கு மென்பது பொருத்தம்.

விலங்கினின்றும் விடுபடுவதற்குத் தக்கவண்ணம் ஒருவன் ஸ்வேச் சையான வியவகாரத்தையடைவது போன்று இவ் அசுத்தமனம் காமத்தினின்றும் ஒதுங்க ஒதுங்க இத்தேகத்துக்கு அரசனைப்போலாகி அதனுடைய மேன்மையான அம்சத்தை வெளியாக்குகின்றது. சரீரத் திற்குவேண்டியவற்றை யிச்சிப்பது காமத்தின் குணமாகும். இந்தக் காமத்தினால் மனம் பந்தத்தை யடைகின்றது. பந்தத்தை யடைந்த மனம் அந்தப் பந்தத்தினின்றும் விடுபடுவதற்குத் தக்கவிதமாய் அது சுவாதீனத்தையும் அடைகின்றது. காமம் என்னும் அசுரனை ஜெயித் துக்காலால் அவனை மிதிக்காதவரையில் மனதிற்கு மோக்ஷம் கிடைக் காது.

அசுத்தமனது எவ்வளவுக் கெவ்வளவு காம அணுக்களினால் கௌவப்படாமலும், தடைபடாமலும் இருக்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு அதன் மூலமாய் அதி சூக்ஷ்மமான சுத்தமனசின் பிரகாசம் சரீரத்திற் சம்பந்தப்பட்டு மூளையின் மூலமாகப் பிரபஞ்சத்தில் விளங் கும். அப்போதுதான் அந்த மனிதன் மற்றவர்களைக் காட்டிலும் ஸ்ரேஷ்டனாகின்றான்.

சுத்தமனம் மேலான நிலைமையிலேயே வியவகரிக்கக் கூடுமான தால் மிருக ரூபத்துடன் கலந்து நாசமடைவதும், அல்லது தான் ஜனித்த ஸ்தானத்திற்குப் போய்ச் சேருவதும் அசுத்த மனசின் சுயேச்சையில் இருக்கின்றது. அந்தக்கரண விருத்தியை ஆத்ம பரமாக

நோக்கச் செய்து ததாகாரமானவர்கள் யாரோ அவர்களே ஞானிகளா கின்றனர். அத்தகைய ஞானிகளே லோகத்தின்கண் காணப்படும் ஒவ்வொரு ஜீவனையும் தன்னைப்போல பாவிப்பவர்கள்.

அசுத்தமனமானது கீழ்க்காணும் மூன்று செய்கைகளில் ஒன்றை மட்டும் செய்யக்கூடியதாயிருக்கின்றது.

அவையாவன :—

(1) விடாமுயற்சியினால் தன் மூலஸ்தானத்தை யடையக் கூடும்.

(2) அந்த விடத்தை அடைவதற்குப் பிரயத்தினம் செய்வதும், பிரகிருதியுடன் சம்பந்தப்பட்டு பிராபஞ்சிக வியவகாரங்களில் பிரவேசிக்கவும் கூடும். இதுவே சாமான்ய மனிதர்களின் ஸ்திதி.

(3) காமத்தினால் நன்றாய்க் கௌவப்பட்டு காமத்தோடு ஒன்றாகி தன் மூலஸ்தானத்தைச் சுத்தமாய் மறந்து விட்டு அதினின்றும் பூரணமாய் பிரிபடவும் கூடும்.

மேற்கூறிய மூன்று பக்ஷங்களையும் விளக்கிக் கூறவேண்டியது அவஸ்யத்திலும் அவஸ்யமே யாகின்றமையினால் அதனை விளக்கிக் காட்டுவாம்.

முதற்பக்ஷம்.—மூலஸ்தானத்தை யடைவதெனின் எளிதில் ஆகக் கூடியதன்று. ஆனால் வெகு ஜன்மங்களுக்குப் பிறகு தான் இது சாத்தியமாகும். ஒவ்வொரு ஜன்மத்திலும் கொஞ்சங் கொஞ்சமாகப் பிரகிருதி சம்பந்தத்தினின்றும் விடுபட்டுப் பிராபஞ்சிகப் பிரமை முற்றிலும் நீங்கின பிறகே அசுத்தமனம் தன் தாயுடன் சேர்ந்து விடுகின்றது. சரீர சம்பந்தமான அநுபவங்கள் எல்லாவற்றையும் சம்பாதித்து விட்டமையினால் மீண்டும் சரீரத்தோடு சம்பந்தப்படவேண்டிய அவசியம் யாதொன்றுமேயில்லை. ஆனால் ஜீவகாருண்யத்தினால் பரோபகார நிமித்தம் இப்பேர்ப்பட்டஞானி இஷ்டப்பட்டவண்ணம் அவதரிக்கக் கூடும்.

இரண்டாம்பக்ஷம்.—இந்த சரீரமே யுத்தகளம். ஆத்ம இச்சையும் பிராபஞ்சிக (உலக) இச்சையுமே யுத்தவீரர்கள். இந்த யுத்தத்தில் சுத்தமனவின் தேஜோபலத்தால் அசுத்தமனது காமத்தைச் சில

சமயங்களில் ஜெபித்தாலும், மறுபடியும் மாயாபலத்தால் காமத்துடன் கலந்துபோகும். இவ்வண்ணம் இடைக்கிடை ஜீவித்திருக்குங் காலத்தில் நடைபெறுகின்றது. கிருஷ்ணார்ச்சுன சம்வாதமென்னும் பகவத் கீதையில் விவரிக்கப்பட்டதான குருக்ஷேத்திரம் என்னும் பூமி இச்சரீரமேயாம். பஞ்சேந்திரியங்களான பாண்டவர்களும், காமாதிகளாகின்ற துரியோதனாதிகளும் இருபக்கத்து யுத்த வீரர்கள். கிருஷ்ண பகவானே பரமாத்மா. கிருஷ்ணனென்ற தேஜோபலத்தினால் ஜீவனாகிற அர்ச்சுனன் காமாதிகளாகிற துரியோதனாதிகளைஜெயித்து மோக்ஷம் அடைகின்றான். ஆத்ம பரமாயும் அனாத்ம பரமாயும் பிரவிர்த்திக்கும் அறிவுடையவனுக்கு இத்தகையஞானம் உதித்தபின்னர்தான் இவ்வுலகின்மாந்தரை நன்னிலைக்குக்கொண்டு வரவேண்டுமென்னும் எண்ணம் உதித்து, பல நூல்களையும் ஸ்வயமாக ஆராய்ந்து அதிலுள்ள சத்தான விஷயங்களைத் தெளிவுபட விளக்கித் தானடைய வேண்டியதையும் பக்குமாய் அடைந்து விடுவான். இதுதான் மேலோர்களின்குணம்.

மூன்றுவதுபக்ஷம் —சுத்தமனசுடன் ஐக்கியப்படுவது (ஒன்றுபடுவது) வெகு அபூர்வம். அதுபோல காமத்துடன் ஒன்றாய்விடுவதும் மிக துர்லபமேயாம். ஆயினும் இத்தகைய ஸ்திதி ஒருவாறு சாத்தியமானதே. காமத்தில் அசுத்தமனது முழுகிப் போனவுடன், சிறிது சிறிதாக அதன் மூலஸ்தானமாகிய சுத்தமனதின் சம்பந்தம் குறைந்து முடிவில் பூரணமாய் விட்டுப்போகின்றது. அச்சந்தர்ப்பத்தில் தேவ அம்சம் குறைந்து மிருக அம்சமானதுமட்டும் மிச்சப்படுகின்றது. ஆனால் மற்ற சாதாரணமிருகங்களைக்காட்டிலும் இந்த மிருக ரூபம் வெகு பயங்கரமானது. ஏனெனில், சாதாரண மிருகங்களினிடத்தில் மனசின் தேஜஸ் சுத்தமாய் வெளிப்படாமலிருக்க, இந்த மிருக—மனிதரூபத்தில் மனசின் பிரதிபிம்பம் இருந்துகொண்டேயிருக்கின்றது. இந்த பலத்தினாலேயே மிருகங்களினால் செய்யச் சாத்தியப்படாததான பயங்கரமான செய்கைகள் எல்லாம் இந்த மிருக—மனிதனால் செய்யப்படக் கூடும். அன்பு, இரக்கம், பூததயை முதலிய குணங்கள் லவலேசங்கூட இராததான மிருகம் போல் திரிகின்ற ஜனங்கள் இந்த பயங்கரமான ஸ்திதிக்கு வரும்பாதையில் இருப்பதாக நிச்சயித்துக்கொள்ளலாம். இத்தன்மையாளர்களின் காமமானது எடுக்கும் ஒவ்வொரு ஜன்மத்திலும் அதிக துச்சமான ஸ்திதியில் விருத்தியடைந்து முடிவில் ஓய்வுபட்டு நசித்துப் போகும். இதன்

அணுக்கள் வேறு ஜீவனுக்கு உபயோகப்பட்டுப்போகின்றன. மானச புத்திரன் ஆதியில் ஸ்வீகரித்த சரீரத்தினுல் எவ்வித பிரயோஜன முள்ள அநுபவமும் சித்திக்கவில்லை. அதனுல் ஜன்மம் வியர்த்தமே ஆய்விட்டது.

இனி சுத்தமனதின் பிரவர்த்தியை விவரிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. என்றாலும் இதற்குமுன் கூறிவந்தவைகளின்கண் நான்காம் ஐந்தாம் அம்சங்களையும் சிறிது உற்று நோக்குதல் வேண்டு மன்றோ? அவைகளின் ரூபங்களையும் தெளிந்து கொள்ளுதல் காலச் சிறப்பினதாகுகமென வெண்ணி அதனைக் கூறுவாம்.

(1) சூக்ஷ்ம அணுக்களினுல் இயற்றப்பட்டதான ஒருவித சரீரத்து டன் ஜீவித்து இருக்கையிலேயே ஸ்தூல சரீரத்தைவிட்டு சித் பிரகாசத்துடன் ஜீவன் மனோவேகத்தோடு வெகுதூரம் சென்று அவ்விடத்திய பதார்த்தங்களை யறிந்து அந்த அறிவை ஸ்தூல மூளைக்குக் கொடுத்து அதன் மூலமாக இதர ஜனங் களுக்கும் தெரிவிக்கக்கூடும். இவ்விதம் அறியப்பட்டதான பதார்த்தத்தின் ஸ்மரணை (நினைவு) சாதாரணமாய் ஜீவனுக்குத் தங்கமாட்டாது. ஏகதேசத்தில் இந்த ஞாபகம் ஸ்தூல மூளை யில் இருக்கக்கூடும். இவ்விதம் சஞ்சரிக்கும் சரீரத்திற்கு காமமனசு ரூபம் என்னும் பெயருமிடலாம். இது இரண்டாம் அம்சமான லிங்க சரீரம் அல்ல என்பதை நன்றாய் அறிய வேண்டியது. ஏனெனில் லிங்க சரீரமானது மரணத்திற்கு முன் ஸ்தூலத்தைவிட்டுப் பிரியக்கூடியதன்று. அதோடு அவ் வறிவும் அதற்கு இல்லை. இந்தக் காம--மனோ ரூபம் ஸ்தூலத் விட்டு வெகு தூரம் போகவும் கூடும். எங்ஙனம் என்றால், ஒரு குழந்தையின்மீது அதிகமான பிரியத்தை வைத்த தாய் குழந்தையைவிட்டுப் பிரிந்து வெகு தூரத்தில் மரண மடையும் போது தன் குழந்தைக்குப் பிரத்தியக்ஷமாய்ச் சங்கதிகளைச் சொல்லுவாள் என்பது உண்மையில் நடந்திருக்கின்றதென அநேக அறிஞர்களாலும், மேல் நாட்டு நிபுணர்களாலும் ஆராய்ந்து அறியப்பட்டதென்பதும், நம் இதிகாச புராணங் களிலும் கூட சிற்சில விஷயங்கள் மேற்கூறியவண்ணம் நடை பெற்றதெனப் பெரியோர்களால் உரைக்கப் பட்டிருப்பதும் இவண் கவனிக்கத்தக்கதாகும். இவ்வித விஷயங்களில் நம்பிக்

கையே யில்லாத மேல் நாட்டவர்களும் காலம் மாற மாற இவ் விஷயங்கள் உண்மை யென்றும் ஒத்துக்கொள்ளுகின்றனர். நிற்க, குழந்தைக்குத் தோன்றின தாயின் சொரூபம் ஸ்தூல மல்ல. ஆனால் அது யாது எனின், காம—மனசு ரூபமேயாம். வியாதிப்பட்டிருக்கும் போதும், நித்திரையிலிருக்கும்போதும் காம மனசு ரூபமானது ஸ்தூலத்தைவிட்டுப் பிரிகின்றது. ஆயி னும் மரணத்தின் பின்னர் தோன்றக்கூடிய காமரூபம் இந்தக் காம—மனது ரூபம் அல்ல என்பதைக் கவனிக்கவேண்டும். ஜீவிதகாலத்தில் ஸ்தூலத்தைவிட்டுப் பிரிவதும் ஒன்றுபடுவது மாயிருப்பது காம--மனசு ரூபம் என்பதையும், ஆனால் மரணத் தின் பின்னர் தோன்றுவது காம ரூபம் என்பதும் இதனால் தெளிவாய் அறியப்படுகின்றது.

(2) மாயாவி ரூபம் என்பது வேறு ஒரு சூக்ஷ்ம சரீரமாகும். இது மஹான்களின் சுயேச்சையினால் ஏற்படுகின்றது. இம்மாயா விரூபமான சூக்ஷ்ம ரூபத்திற்கு அவர்களுக்குத் தோன்றும் (அதாவது அவர்கள் இஷ்டப்படும்) ரூபத்தைக் கொடுக்கின் றார்கள். இந்த சரீரத்தில தங்களுடைய பூரணப் பிரக்ஞை யையும் மேலான தத்துவங்களையும் செலுத்தி அச்சமயத்தில் அந்த சூக்ஷ்ம சரீரமே ஸ்தூலம்போல விளங்கும்படிச் செய் கின்றனர். இந்த சூக்ஷ்ம சரீரம் பாரமின்றி வேண்டிய இடத் துக்குப் போகவும், இஷ்டப்படிப் பிறருக்குத் தெரியும்படியும், அல்லது தெரியாமலிருக்கும்படி செய்யவும் அவர்களுக்கு சகஜ மானதாகும். மஹான்கள் தங்களுடைய ஸ்தூல சரீரம் இருக் கும் இடத்தைத் தவிர வேறு இடங்களில் செய்ய வேண்டிய வேலையை இந்த மாயாவிரூப சரீரத்தினால்தான் செய்கின்றார் கள். எந்தக் காரியத்துக்காக அவர்கள் அதை உண்டாக்கினர் களோ அந்தக் காரியம் முடியும் வரையில் மாத்திரம் அந்தச் சரீரம் இருப்பதால் அதை மாயாவி சொரூபமென்றே சொல் லப்படுகின்றது. இது சுத்தமனதினால் உண்டாவதால் இதற் குப் பாவனா சரீரமென்றும் பெயராகும். பகவான் பக்தர் களுக்குப் பிரத்தியக்ஷமாகியருள் அளிக்கின்றார் என்று கூறப் படும் நமது புராணேதிகாசங்களில் கூறப்பட்டிருப்பதும், பக வான் தனது பக்தர்களுக்குக் காக்ஷி கொடுக்கின்றார் என்பதும், இத்தகையதே என்பதும் ஊகிக்கப்படுகின்றது உண்மை யெனவே கொள்ளத்தகும்.

# அத்தியாயம் 13.

## சுத்தமனம்.

மனிதன் அடைந்திருக்கும் நிலைமையில் நாசமற்றதும் சிரஞ்சீவியானதுமான மனம் இந்த ஸ்தூலபூமிகையில் விளங்கமாட்டாதென்னும் விஷயத்தை இதுகாறும் கூறியவற்றினின்றும் ஊகிக்கலாகும். ஆயினும் அசுத்த மனசின்கண் அதன் தேஜஸினால் விளங்கும்படியான அதன் சில சக்திகளை நாம் அறியலாகும். ஸ்வேச்சாசக்தி அசுத்த மனசின் மூலம் விளங்குவதாக முன்கூறப்பட்டது. மஹத்தத்துவத்தினின்றும் உண்டான மனசில்தான் ஸ்வேச்சா சக்தி இருக்கின்றது. நம்முடைய காமக்குரோதாதிகளாகின்ற கீழ்பாகத்தை நம்முடைய மனமாகின்ற மேல்பாகத்தால் நாம் அதை யடக்கியாளலாம் என்னும் ஞானம் நமக்கு இருக்கின்றதன்றோ? இந்த ஞானம் மனதின் சக்தியன்றோ? நாம் காமம் அன்று. மனதுதான் என்று மட்டும் ஒரு முறை நிச்சந்தேகமாய் ஒருவன் அறிந்து விடுவானேயானால் காமம் அவன் வயப்பட்டு அடங்கியே போகுமென்பது திண்ணம்.

சுத்தமனசின் சக்தியாவது ஏதெனின், கிரியாசக்தியினால் இச்சித்த பாவங்களுக்கு உருவம் கொடுத்தலாம்.

மஹத்தத்துவத்தின் அம்சமான மனம் நித்திய முக்தமாய்ப் பூத பௌஷ்ய வர்த்தமானங்களின் ஞானத்தை அடக்கிக்கொண்டு இருக்கின்றது. அசுத்தமனது சுத்தமனதுடன் சேர்ந்தவுடன் பூரணஞான சக்தியை அடையவேண்டியதில் சந்தேகமே கிடையாது.

சுத்த அசுத்த மன அம்சங்களின் வித்தியாசம் இப்போது சரியாகத் தெரியவரும். யுக்தி சாக்கமின்றி தத்துவத்தை அறியக் கூடிய யுக்தி சுத்தமனதினதாகும் இதற்கு சாக்ஷாத்கார ஞானம் என்றும்: சுய அறிவு என்றும் பெயர். அசுத்தமனதின் காரியமாவன, பல விஷயங்களைப் பார்த்து யுக்தியினால்பகுத்தறிவதேயாம். இதுமூளை

யின் ஸ்திதியைப்பொருத்ததாகும். அசுத்த மனதின் சக்தி யெத்தகையதெனில் தெரிந்தவற்றினின்று தெரியாததையும், தெரியாதவைகளினின்று தெரிந்ததையும் ஊகித்தலேயாம். சுய அறிவு என்பது அந்தர்முக விர்த்தியினாலுண்டாகும் சாக்ஷாத்கார ஞானமாம். இந்த சாக்ஷாத்காரஞானம் காமவிகார பலத்தினால் வெளிப்படாது மூடப்பட்டுப்போகிறது. காமத்தினால் சஞ்சரிக்கின்ற அந்தக்கரணத்தில் மனசின் தேஜஸ் பார்க்கப்படமாட்டாது. அதன் வார்த்தைகள் எச்சரிக்கைகள் முதலியன கேட்கப்படமாட்டாது. மனச்சாக்ஷி என்னும் ஒன்று இருக்கிறதாகவும் தெரியமாட்டாது. அலைபடும் ஜலத்தில் சூரியனது பிரதிபிம்பம் தெரியாதது போலவும்; அலைகளினுடைய இரைச்சலினிடையே வேறு சப்தம் கேட்கப்படாதது போலவும், காமமாகிய அலைகள் ஓய்வடைந்து அந்தக்கரணம் ஸ்திரப்பட்டால் தான் தேவ அம்சமாகிய ஆத்மஸ்வரூபம் விளங்கும் என்பது உண்மை.

காமாதிகளாகிற மஹிஷாசுரர்களை ஜயித்தவன் ஆத்மாவுடன் ஒன்றுபடுகிறான். சரீரம் என்கின்ற எந்த உபாதியில் அவன் வசித்தாலும் தன்னுடைய நிஜரூபசக்திகளை யவன் மறக்கின்றதேயில்லை. அவனுக்குப் புனர்ஜன்மத்தின் பிரயோஜனம் இல்லை ஆதலால் அத்தகையவனே நித்திய சுத்த முக்தன். இந்த ஸ்திதி கிடைக்கும் வரையில் அசுத்தமனம் தன் தாயுடன்சேர பிரயத்தனப்பட்டுக் கொண்டேயிருக்கும். பிரார்த்தனைகளின் இரகசியமான கருத்தும் இதுவே யன்றி வேறல்ல. எந்த மதஸ்தர்களும் எந்த பாஷையில் எந்த தெய்வத்தைப் பிரார்த்தனை செய்தாலும் அந்தப் பிரார்த்தனைக்கு அர்த்தம் அந்த தெய்வரூபமாக வேண்டுமென்பதேயாம். இதையே மஹான்களும் போதித்து வருவது பிரத்யக்ஷ சித்தாந்தம்.

## அத்தியாயம் 14.

# புத்தி—(ஆன்மா.)

மனிதனது ஆறுவது அம்சம் புத்தி. ஏழாவது அம்சம் ஆத்மா என்பதாம். ஆத்மாவென்பது சர்வ வியாபகமாயும் ஏகமாயுமிருக்கின்ற பிரம்மத்தின் கிரணம். இதனால் தான் இதை பரப்பிரம்மத்தினின்றும் விச்ரம்பித்திருக்கின்றது என மூதறிவாளர் கூறியிருக்கின்றனர்.

காற்றும் ஆகாயமும் ஒருவனுக்குச்சொந்தமில்லாதததுபோல இந்த ஆத்மாவும் ஒருவருக்குச் சொந்தமானதன்று. ஏனெனில் இது எங்கும் வியாபகமானதினால் எல்லாருக்கும் உரித்தானதாகும். பெட்டியில் வஸ்து அடங்கியிருப்பதுபோல ஆத்மா சரீரத்திற்குள் அடங்கினதன்று. இது ஜடசரீரத்திற்கு மேல் நிற்கின்றதாகும். ஆனால் இதன் தேஜஸ்மட்டும் புத்தியின் மூலமாக சரீரத்திற்குள் பிரவேசிக்கின்றது. இந்த ஆத்மாவைத்தவிர வேறொன்றும் சத்தியமன்று, எல்லாம் இதன் தோற்றங்களேயாம். சத்ரூப பரமாத்மாவின் ஜீவஸ்வரூபமே இந்த ஆத்மாவாகும். பிரம்மாதி பிபலிகைவரையிலுள்ளதான சகலமும் இந்த ஜீவஸ்வரூபத்தில் அடங்கி இதன் தோற்றமாகவே விளங்குகின்றது எல்லா நிலைமைகளுக்கும் தான் ஆதாரமானதாயிருச்கினும் தாழ்ந்த நிலைமைகளில் தான் விளங்கமுடியாத தன்மையினால் ஆத்மா ஒரு உபாதியை அபேக்ஷிக்கின்றது. இந்த உபாதி புத்தி யென்பதாம். இங்கே கூறப்பட்ட "புத்தி" என்னும் பதத்திற்கு வேதாந்த சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட அர்த்தம்வேறு அதாவது அந்தக்கரணத்தின் பரிணாமமன்று. ஆனால் இதன் மூலமாகத்தான் நல்லது பொல்லாதது என்பவைகளைப் பகுத்தறியும் சக்தி, மனசாக்ஷி முதலியவைகள் மனதில் விளங்குகின்றன. இந்த புத்தியே தத்துவ விவேக அம்சம் ஆகும். இந்தப் பூமிகையில் இதன் பிரவிர்த்தி வெகு சொற்பம். மாயாவிரூபத்தை உண்டுபண்ணுவதில் இது மிக்க உபயோகமாயிருப்

பதாலும் இதை யறிந்தமாத்திரத்தில் சுத்த அந்தக்கரணமில்லாத ஜனங்கள் இந்த ஞானத்தை துர்விநியோகப்படுத்தி, பிரஜைகளுக்குத் துக்கத்தையே யுண்டாக்கக்கூடுமானதாலும் இந்த அம்சத்தைப்பற்றி அதிக விவரம் இரகஸ்யமாகவே இருக்கின்றது. ஆத்மா சர்வகதமானதால் அதன் உபாதியும் சர்வ வியாபகமேயாம். இந்தப் புத்திக்குதான் ஆனந்தமய கோசம் என்று பெயர். பூமியில் பதிந்திருக்கும் பாஷாணத்திற்குச் சூரியனும் சூரியகிரணங்களாலும் உபயோகமில்லாமைபோல, ஆன்மாவும் புத்தியும் தனிமையாயும், ஒன்றுபட்டும் சரீரத்திற்கு உபயோகப்படமாட்டாது. ஆனால் அவைகளின் தேஜஸைப் பிரதிபிம்பிக்கத்தகுந்த உபாதிவேண்டியது. இந்த உபாதிதான் மனம். ஆகையால் மனம் இருக்குமிடத்தேதான் ஆத்மாவின் தேஜஸ் பிரகாசிக்கக்கூடும். மிருகங்களுக்கும் மனிதனுக்கும் இருக்கப்பட்ட வித்தியாசம் இப்போ நன்றாய் விளங்கும். ஆத்மா-புத்தி-மனம எனனும் மூன்றின் சேர்க்கைக்கே பாரமார்த்திக ஜீவன் என்று பெயர். மனசு புத்தியில் ஐக்கியப்படும்போதும், புத்தி மனதுடன் சேரும்போதுமே புருஷன் ஆத்மாகாரமாகின்றான். மனது புத்திகளின் சேர்க்கைதான் எல்லா நிலமைகளினுமுள்ள அறிவுக்குக்காரணம். அசுத்த மனது சுத்தமனதுடன் சேரப்பிரயத்தனம் செய்கின்றதுபோல சுத்த மனதும் புத்தியுடன் சேரப் பிரயத்தனம் செய்கின்றது. ஒவ்வொரு ஜன்மத்திலுமுள்ள சாத்விக அநுபவ ஞானத்தை அசுத்தமனம் சுத்த மனசுடன் சேர்ப்பிக்கின்றது. எல்லா ஜன்மங்களிலும் சம்பாதித்த சாத்விக ஞானத்தை மனமானது சேர்த்துப் புத்தியுடன் கலந்து ஆத்ம தேஜசுடன் ஒன்றுபட்டுவிடுகின்றது. அப்போதுதான் ஆத்ம ஞானம் பூரணமாய் எல்லா நிலைமைகளிலும் விளங்கிச் சிருஷ்டியின் பிரயோஜனம் நிறைவேறுகின்றது.

மேலே கூறிய ஸப்த (எழு) அம்ஸங்களும் கத்தி உறைபோல் ஒன்றின்மேல் ஒன்றாயிருப்பதாக நினைக்கக்கூடாது. சரீரத்திற்குள் ஆகாயமும் காற்றும் ஒன்றுடன் ஒன்றுசேர்ந்திருப்பதுபோலஇவைகள் ஒன்று பட்டிருக்கின்றன வென்பதாக அறியவேண்டியது. எந்த சமயத்தில் எந்த அம்சம் மேலிட்டுக் கொண்டிருக்கின்றதோ அச்சமயத்தில் மனிதன் ததாகாரமாகின்றான். கோபிஷ்டன், சாமி, தத்துவ விவேகி இவர்களை இதற்கு உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம்.

மனிதன் மாட்டு விளங்கக்கூடியதான தத்துவங்களையெல்லாம் ஒருவாறு விளக்கினும். இனி பிரம்மாண்டத்துக்கும் பிண்டாண்டமா கிறைமனிதனுக்கும் இருக்கப்படாநின்ற சம்பந்தத்தை விளக்குவாம்.

பிரமாண்டத்து சைதன்யத்தின் வியக்தமான தோற்றம்போல மனிதனும் சைதன்யத்தின் வியக்தாவஸ்தையே. பிரம்மாண்டத்தின் மேலான பூமிகைகள் அரூபமாயும் பிரளயகாலத்திலும் இருக்கின்றது போலவே மனிதனது ஆத்மா, புத்தி, மனம் ஆகிய இவைகள் அரூபமாயும் மற்ற நான்கு தத்துவங்கள் நசித்துப்போயின பின்பும் இருக்கின்றன. பரமாத்மாவும் பிரத்யகாத்மாவும் இருக்கின்றது போல மனமும் மஹத்தத்வமும் சம்பந்தப்பட்டிருக்கின்றன. க்ஷரம் ஆகிய காமம், பிராணன், லிங்கசரீரம், ஸ்தூலசரீரம் இவைகள்பிரம்மாண்டத்தின் கீழான நான்கு பூமிகைகளுடன் சம்மந்தப்பட்டிருக்கின்றன. காம பூமிகையைப்பற்றி அதிக விவரம் அறியமுடியவில்லை யென்றாலும் அரூபம் ரூபமாவதற்கு இதுவே முக்கிய சாதகமாகும். பிராண பூமிகையே பிரம்மாண்டத்தின்கண் நான்கு பூமிகைகளுக்கும் அதிஷ்டானமாம். சமஷ்டி ஜீவாம்சமே மனிதனிடத்து பிராணனாக விளங்குகின்றது. அப்படியே ஸ்தூலசரீரமும் ஸ்தூலபிரம்மாண்டமும் சம்பந்தப்பட்டிருக்கின்றன. இந்த சம்பந்தத்தால் அறிந்துகொள்ளவேண்டியது யாதெனில், ஒன்று சமஷ்டியென்பதையும் மற்றொன்று வியஷ்டி யென்பதையும், ஒன்றின் மாட்டுள்ள தர்மங்களெல்லாம் மற்றொன்றினிடத்தும் இருக்கின்றனவென்பதுமாம்.

## அத்தியாயம் 15,

## மரணம்.

—(o)—

மரணம் உலகத்தில் நடைபெறுவதைக் காணுதார் ஒருவருமே யிராரென்பது எவரும் அறிந்ததேயாயினும் அதைப்பற்றி சிறிது விவரித்துரைப்பாம்.

மனிதன் பூரணவயது நிரம்பியபின்னர், அதாவது உலகிற் பிறந்து வளர்ந்து சதுர்வித ஆச்ரமங்களின் முதல் ஆச்ரமமாகிய பிரம்மசரியத்தைக்கடந்து கிருஹஸ்தனுகி, அதன் பின் வானப்பிரஸ்தனுகிக் கடைசியில் ஸந்நியாச ஆச்ரமம் பெற்று, அதன் பின்னர் தான் மரணமடைவான் எனப் பல நூல்களிற்காணப்படுகின்றது. அவைகள் இக்காலத்திற்கு அதிவிருத்தமானதாகும். ஒருகால வேதபுராண இதிகாச காலங்களில் அவ்வண்ணம் நடந்ததாகக்கூறியிருக்கின்றமையினுல் அக்காலங்களில் நடந்திருக்கலாமென்று ஒருவிதத்தில் நாம் ஒப்புக்கொள்ளுவோமாயினும், கலிபிறந்த இந்த ஐயாயிரத்துச் சொச்சம் ஆண்டுகளுக்குப் பிறகும் பிறந்தகாலம் முதலிலிருந்து நாளது வரையும் இறந்தவர்கள் பூரண ஆயுளுடனிருந்து மரணமடைந்ததாக ஒப்புக்கொள்ளமுடியாது. நூல்களும் சரித்திரங்களும் கூட அதைப்பற்றி தெளிவாகவே கூறியிருக்கின்றன. சைவ அடியார்களான அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய இவர்களில் அப்பர் ஸ்வாமிகள்மட்டும் எண்பத்தொரு வருஷம் உயிருடனிருந்ததாகவும், மற்றவர்களெல்லாம் பாதி ஆயுள் ஆகிறதற்கு முன்னரே மரணமடைந்தார்களென்றும் கூறுகின்றது.

சில ஆன்ருேர்கள் தேகம் (மரணம்) விழுவதைப்பற்றிக் கணக்குரைக்க முடியாதென்றும், அவரவர்கள் வினைக்குத் தக்கவாறு தான் ஜீவித்திருப்பார்களென்றும் கூறிவிடுகின்றனர். ஒருபெரியார்,

"வினைப்பயனே தேகம் கண்டாய்
வினையொழிந்தால் ஒரு தினைப்போதும் நில்லாது கண்டாய"

என்று விவரித்திருக்கிறார். வினையின் வசத்தது தேகமேயாயி னும் வினைக்கு மூலகாரணம் காமம். அதற்கு இடங்கொடாதவரையி லும் நம்மை தீவினை பற்றாது. நாம் நன்மையே செய்யின் நலத்தையே யடைவோம். தீமைசெய்யின் தீமையேயடைவோம் என்னும் உணர் வினை யறியாதார் ஒருவருமே இராரெனினும், அவர்கள் மதியை மலைக் கச் செய்து மனதை மயக்கும் காமம் என்னும் ஒன்றினாலேயே கலங்கி விடுகின்றனர். என்றும் அதற்கு இடந்தரப்படாதென்றும் பலவிதம் கூறுகின்றனர். ஆனால் மரணம் என்பது மனிதருக்கு மட்டுமல்லாமல் உலகில் தோன்றும் ஒவ்வொரு பதார்த்தத்திற்கும் உண்டென்பது திண்ணம். அது என் அங்ஙனமெனில்,

"தோன்றின மறையும், மறைந்தன தோன்றும்"

என்பது உண்மையாதல்பற்றியும், மரணம் என்பது உண்மை யென்பது திண்ணமேயாகின்றது. உலகில் இது வரையில் தோன்றிய வைகளெல்லாம் மறைந்தேபோய்விட்டனவென்பதும், இனிதோன்று லவைகளும் மறைந்துபோகுமென்பதும் திண்ணம்.

நிற்க, மனிதனது ஸப்த (ஏழு) தத்துவங்களில் முதல் மூன்று அம்சங்களான ஆத்மா, புத்தி, மனது இவைகள் நாசரகிதமாயும், மற் றவைகளான நான்கும் அதாவது காமம், பிராணன், லிங்க சரீரம், ஸ்தூல சரீரம், ஆகிய இவைகள் நாசசகிதமாயும் இருக்கின்றன. ஆனால் இதில் முதல்பாகம் அக்ஷரம், இரண்டாவதுபாகம் க்ஷரம். இந்த இரண்டு பாகங்களையும் சேர்ப்பது மனது. இது பிரதி ஜன்மத் திலும் சுத்தம் அசுத்தம் என இரண்டாகப்பிரிந்து அசுத்தபாகம் சரீ ரத்துடன் சம்மந்தித்து காம-மனதாக விளங்குகின்றது. இந்தக் காம மனது ஒரு பாகத்தில் சுத்தமனதுடனும் ஒரு பாகத்தில் காமத்துட னும் சம்மந்தப்பட்டு மனிதனுடைய பந்தங்களுக்கும் மோக்ஷங்களுக் கும் காரணமாவதால் முக்கியமாயிருப்பதுபோன்ற மரணத்தின் பின் னரும் இந்தக்-காம-மனதை முக்கியமாகக் கவனிக்கவேண்டியது அவ சியமாகும்

## அத்தியாயம் 16.

# ஸ்தூலத்தின் உண்மை விளக்கம்.

மாதாவின் கர்ப்பத்தில் பிறக்கப்போகிற சிசுவின் சூக்ஷம ரூபம் ஸ்தூல அணுக்களால் ஸ்தூல ரூபத்தையடைகின்றது. இது முதல் பிரதி க்ஷணமும் இந்த ஸ்தூல அணுக்கள் சரீரத்திற்கு வந்துக் கொண்டும் போய்க்கொண்டும் இருக்கின்றன. வெளியே சென்ற அணுக்கள் கந்தமூல மிருக மனுஷ்ய சரீரங்களை உண்டுபண்ணுவதற்கு உபயோகப்படுகின்றன. இந்த அணுக்களெல்லாம் ஜீவரூபங்களாகும். இவைகள் வெவ்வேறு, ஆயினும் சிறிய கூட்டங்களாகிச் சரீரத்தை உண்டாக்கி உள்ளும் புறமும் வந்து போய்க் கொண்டிருக்கிறதுடன் மனிதனையும் அவனைச் சுற்றிலுமுள்ள பிரபஞ்சத்தையும் ஒன்று படுத்தும் பாலம்போலிருக்கின்றன. பிராணனுடைய ஆக்ஞையின்படியே இவைகள் ஒரு சரீரமாகப் பரிணமிக்கின்றன. கர்த்தாவான பிராணன் பின்வாங்கிச் சரீரத்தை, விட்டுப் பிரியும்சமயம் இவ் அணுக்களாகிற ஜீவர்கள் ஒருவனது அதிகாரத்துக்கும் உட்படாமல் விலகிப்போய் விடுகின்றபடியினால் தங்கள் தங்கள் இஷ்டப்படி பிரவர்த்திக்கத்தொடங்குகின்றன. இத்தகைய அதிகப் பிரவிர்த்தியினால் அணுக்களின் சேர்க்கையினால் உண்டான சரீரம் என்னும் கட்டடம் இவைகளின் பிரிவினால் சிதறிவிடுகின்றது. இதுதான் ஸ்தூலத்தின் மரணம் என்று சொல்லப்படுவது.

அணுக்களின் அதிகப் பிரவிர்த்திக்கு அத்தாக்ஷி யாதெனில், பிணம் அழுகிப்போவதேயாம். பிராணன் ஸ்தூல சரீரத்துடன் எங்ஙனம் சம்மந்தப்பட்டிருக்கின்றான் என்னும் வினா நிகழும்போது அதற்கு விடை எதுவெனின், லிங்கசரீரத்தை உபாதியாகக்கொண்டிருக்கிற பிராணன் லிங்க சரீரத்தின் மூலமாகவே ஸ்தூலத்தோடு சம்பந்தப்பட்டிருக்கின்றான்.

பிராணன் லிங்க சரீரத்துடன் பிரிந்ததும் (அதாவது ஸ்தூலத்தையும் லிங்கத்தையும் இணைக்கும்படியான தந்து அறுபட்டதும்) மரணம் சம்பவித்து மனிதனின் மற்ற ஆறு தத்துவங்கள்மட்டும் மிகுதிப்படுகின்றன. ஸ்தூல சரீரத்தின் அணுக்கள் வேறு வேறாகப் பிரிந்து வேறு சரீரங்களில் சேர்ந்துபோகின்றன. ஒரு சரீரத்தின் மரணமே வேறொரு சரீரத்தின் உற்பத்தியாக முடிகின்றது.

நாம் மீண்டும் இக்கர்ம பூமிக்கு வரும்போது இவ்வணுக்களில் சிலதையே சந்திக்கலாம். நிற்க, ஸ்தூல சரீரத்தின் மரணமென்பது என்னையெனின், அணுக்கள் பிரிந்துபோவதேயாம்.

---

## அத்தியாயம் 17.

# லிங்கசரீரத்தின் கதி.

லிங்க சரீரம் என்பது ஸ்தூல சரீரத்துக்குச் சரியான பிரதியாகும் ஸ்தூல சரீரத்திற்கு மரணம் நேரிடுவதுபோல லிங்க சரீரத்திற்கும் ஒன்றாகக் கூடியிருந்த சூக்ஷ்ம அணுக்கள் பிரிகிறதினால் மரணம் சம்பவிக்கன்றது. பிராணனுக்கு உபாதியான லிங்க சரீரம் மரணகாலத்தில் ஸ்தூல சரீரத்தைவிட்டு வெளிப்பட்டு முன் மேலே கூறிய வெண்மையான தந்து அறுபட்டுக் கடைசியான சுவாசம் வெளியே போய் மனிதன் இறந்தான் என்று சொல்லப்படுகின்றான். லிங்கம் வெளியே போனதையெப்படி யறிய முடியு மெனில், சரீரம் கனக்கின்றதினால் லிங்க சரீரம் வெளியே போய்விட்டதாக ஊகிக்கலாம் இந்த லிங்க சரீரத்தின் மூலமாகச் சலனம் முதலியவைகளை உண்டுபண்ணின பிராணன் வெளியே போய்விட்டபடியினால் இந்தச் சலனம் ஆகியவைகள் இல்லாது போகின்றன. இது அநுபவத்திலறிந்த விஷயம். ஆனால் தந்து அறுபடாதிருக்குமாயின்—அல்லது அறுபடாத காலத்திலும் லிங்க சரீரம் வெளிப்பட்டிருக்குமாயின் சலனம் ஆகியவைகள் குறைவாகவேயிருக்கும்.

லிங்க சரீரமானது ஸ்தூல சரீரத்தை சுத்தமாய் விட்டுப் பிரித்த பிறகு, அதைவிட்டு அது வெகு தூரத்திற்குப் போகின்றதில்லை. சாதாரணமாய் அது பிணத்திற்குமேல் மிதந்து கொண்டேயிருக்கிறது. இது சில சூக்ஷ்ம திருஷ்டியுள்ளவர்களின் கண்ணுக்கு ஒருவித ஊதா ரூபமாய்க் காணப்படுகின்றதுண்டு. மற்றும் பிணம் புதைத்த விடத்தி லும் சிலருக்குக் காணப்படும். ஊதா நிறமுள்ள ரூபம் லிங்க சரீரமே யாம். மரண சமயத்திலும் மரணத்திற்குப் பிறகும் சிலருக்குத் தோன் றக் கூடிய ரூபம் இதுவே. இதையே ஆங்கில மொழியில் Astrol Body என்று கூறுவது.

மரணம் ஏற்பட்ட விடத்தில் அதிகமான துக்கம் வெளிப்படாத வரையில் ஜீவனுடைய பிரக்ஞை சாந்தமாயும், சொர்ப்பனத்தைப்போ லும் இருக்கின்றது. இந்த சந்தர்ப்பத்தில் கவனிக்க வேண்டியது என்னவெனின், லிங்க சரீரம் பிரியும்போதும், பிரிந்த உடனும் அவ்வி டத்தில் மரணம் நேரிட்டவிடத்தில் அதிக சப்தம் இருக்கப்படாது. ஏனெனின், அச்சமயத்தில் சுவாசம் இழுக்க ஆரம்பம் ஆனது முதல் பிராணன் சடத்தைவிட்டு வெளிப்படும் வரையில் இந்த ஜன்மத்தில் நடந்த விஷயங்கள் எல்லாம் ஜீவனின் திருஷ்டிக்கு முன்னர் ஏக காலத் தில் வருகின்றன. தற்காலத்தில் சித்திரகுப்தனின் கணக்குகள் என் கின்றார்கள் சிலர் அது தான் இத்தோற்றமாகிய வாழ்வின் பூரண விஷயங்களின் திருஷ்டியாகும். இச்சமயமே சென்ற ஜன்மத்தின் புண்ணிய பாவங்களின் கணக்கு வழக்குகள் பார்க்கப்பட்டு இனி தனக்கு வரவேண்டியதான ஜன்மத்தை ஜீவன் தீர்மானிக்கின்றான். அதி மேன்மையதான குண விசேஷங்களெல்லாம் மறு ஜன்மத்தில் பிறவிக் குணங்களாக வருகின்றன. தன்னுடைய பூரண சரித்திரத்தை யெல்லாம் ஏக காலத்தில் பார்த்து ஒரு தீர்மானத்துக்கு வருங்காலத் தில் ஜீவனுக்குத் தொந்தரவை யுண்டுபண்ணக்கூடாதென்னும் காரணத் தையொட்டியே மரணம் நேரிட்ட விடத்தில் பிரலாபித்தல் முதலியன இருக்கப்படாதென்பதும், சாகின்ற சமயத்தில் அதாவது தேகத்தி னின்றும் ஆத்மா பிரிகின்ற சமயத்தில் கூச்சலிருக்கப் படாதென்று ஜனங்கள் கூறுகின்றனர். இவ்விதம் பின்னருள்ள விஷயங்களைக்கண்ட பிறகு ஜீவனது பிரக்ஞை தூக்கம் போலாகின்றது. மரணமடைகின்ற மனிதன் மரணத்தறுவாயில் அதி தீவிரமான இச்சையை எண்ணி

யிருந்து அது நிறைவேறுதுபோயிருக்குமாயின், சில சமயங்களில் வீட்டிலாவது வீட்டின் சமீபத்திலாவது லிங்க சரீரம் காணப்படும். அப்படி லிங்க சரீரம் காணப்பட்ட காலத்தில் அதன் பிரக்ஞை முன் கூறியபடி தெளிவாயிருக்கமாட்டாது. கேட்கும் கேள்விகளுக்கும் உத்த ரம் வராது.

நாள் ஆக ஆக மேலானதான என ஐந்து தத்துவங்களும் லிங்க சரீரத்திலிருந்து பிந்து விடுகின்றன. முன்னர் ஸ்தூல சரீரமானது பிரேதமானதுபோல இந்த லிங்க சரீரமும் பிரேதமாய் விடுகின்றது. ஸ்தூலப் பிரேதத்திற்கு அருகிலேயே லிங்கப்பிரேதமும் இருந்து கொண்டு அத்துடன் இதுவும் நாசம் அடைகின்றது.

பிணத்தைப் புதைக்கின்ற விஷயத்தில் எலும்புகளின் அணுக்கள் பிரிய ஆரம்பிக்கிறவரையில் லிங்க சரீரத்தின் அணுக்கள் பிரிந்து கொண்டுவருகின்றன. ஆனல் தகனம் செய்யும் விஷயத்தில் ஸ்தூல சரீரத்தினதும் லிங்க சரீரத்தினதும் அணுக்களானது அதி சீக்கிர மாய்ப்பிரிந்து போகின்றன. இவ்விதம் பிரிந்த அணுக்கள் இதரமான நூதன ஸ்தூலசரீரத்தையும் லிங்க சரீரத்தையும் உற்பத்திசெய்ய உப யோகப்படுகின்றன.

பிரேதத்தைப் புதைப்பதினுல் சில ஜீவர்கள் தீவிரமான பிரபஞ் சிக வாசனையால் தாம் விட்ட கூடாகிற சரீரத்திற்குக் திரும்பி வரப் பிரயத்தனம் செய்யக்கூடும். அதன் மூலமாக ஜனங்களுக்குக் துக்கமே ஜனிக்கும். அணுக்கள் வேறு சரீரத்திற்கு உபயோகப்படு வதும் தவக்கப்படும். ஆகையினுல் தகனம் செய்யும் பக்ஷத்தில் ஸ்தூல லிங்கங்களின் அணுக்கள் விரைவில் பிரிந்து இதர சரீரத்திற்கு உப யோகப்படுகின்றது. இஃதன்றி தாமஸமாய்ப் பிரிவதினுல் உண்டாகும் தீங்குகள் இல்லாது போய்விடுகின்றன. இத்தன்மையினுல் புதைப் பதைக்காட்டிலும் பிரேதத்தைத் தகிப்பதே எல்லாருக்கும் நன்மை யாகும். இத் தத்துவத்தையறிந்தபடியினுலேயே இப்பரதகண்ட வாசிகளான நம்மவர்கள் சாதாரணமாய்ப் பிரேதத்தைப் புதைக்காது தகனம் செய்து விடுகின்றனர். இதற்கு அத்தாக்ஷியாகப் பட்டினத் தடிகளும் கூட,

"முடிசார்ந்த மன்னரு மற்று முள்ளோரு முடிவிலொரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணுவ துங்கண்டும்."

எனத் திருவாய் மலர்ந்திருக்கின்றனர்.

மேற்கூறிய காரணங்களை யநுசரித்தும், தீவிரமாய் மற்றொரு சரீரமுண்டாவதற்குக் காரணமான ஜீவ அணுக்களும் எலும்புகளின் அணுக்களும் பிரிபடுவதற்காகவேண்டி பிரேதத்தைப் புதைப்பதைக் காட்டிலும் தகிப்பதே உத்தமமாகும்.

---

## அத்தியாயம் 18.

# பிராணன்—காமம்—காமலோகம்.

ஸ்தூல லிங்க சரீரங்களினின்றும் பிராணன் பிரிந்த பின்னர் மற்ற ஐந்து தத்துவங்களும் காமலோகத்துக்கு வருகின்றன. லோகம் என்பதற்கு இடம் அல்லது ஸ்தானம் எனப்பொருள். காமம் என்பது சரீரத்தின்கணுள்ள இச்சை முதலான மனோவிகாரங்களின் அம்சமாகும். ஆகையினால் காமலோகம் என்பது இவைகளிருக்கக் கூடிய ஸ்தானம். இதையே புவர்லோகம் எனப்படும். இது பிரம்மாண்டத்தின் ஒரு பாகம். இந்தக்காமலோகத்தில் ஸ்தூல லிங்க தேகங்களை விட்டுவிட்ட பூலோகத்தில் ஜீவித்திருந்த சர்வ மிருக மானிட ஜீவன்களும் இன்னும் பல தேவ வர்க்கங்களும் வசிக்கின்றன. இப்பூவுலகத்தில் பல வர்க்கங்கள் வசிப்பதுபோலவே காமலோகத்திலும் அநேக வர்க்கங்கள் வசிக்கின்றன. இந்த லோகத்தில் வசிப்பவர்களுக்குப் பிரக்ஞையுண்டு. ஆகாயமும் வாயுவும் கலந்திருப்பதுபோலவே இந்தக் காமலோகமும் பூலோகமும் கலந்திருக்கின்றன. ஆனால் இவ்விரண்டுலோகங்களின் பிரகிருதி ஸ்திதி வேறுபடுவதினால் ஒரு லோகத்திலுள்ளவர்கள் மற்றொரு லோகத்திலுள்ளவர்களை அறியமுடிகிறதில்லை சில சக்திகளைப் பக்குவப்படுத்துவதினால் பூலோகத்திலுள்ளவர்கள்புவர்லோகத்திய விஷயங்களை யறியலாகும்.

இந்தப் புவர்லோகத்தில் இரண்டாம் முறை மரணம் சம்பவிக்கும் வரையில் மிருகங்களும் மனிதர்களும் தங்குகின்றார்கள்.

மிருகங்களுக்கு சூக்ஷ்ம அணுக்கள் பிரிந்த வுடனும், மனிதனுக்கு ஆத்ம புத்தி மனம் பிரிய ஆரம்பித்தவுடனும் இரண்டாவது மரணம் சம்பவிக்கின்றது.

இந்தக் காமலோகத்தில் ஜீவன் முதலில் ஐந்து தத்துவங்களோடே கூடியிருக்கிறான். ஜீவன் எங்ஙனம் பிரிந்துபோய் விடுகின்றதெனின், ஜலம் நிறைந்த குடம் குளத்தில் அமுக்கப்பட்டு உடைபட்டால் குடத்துக்குள் இருந்த ஜலம் குளத்து நீருடன் கலந்துவிடுவது போல சமுஷ்டிப் பிராணனினின்றும் கிரஹிக்கப்பட்ட வியஷ்டிப்பிராணன் தன் உபாதியாகிய லிங்க சரீரம் பிரிந்தவுடன் சமுஷ்டியுடன் கலந்து விடுகின்றது.

இந்தப் பிராணன் விலகினவுடன், ஆத்ம—புத்தி—மனதின் சேர்க்கையாகிற ஜீவன் முடிவான உடுப்பாகிய காம ரூபத்துடன் கூடியிருக்கிறான். ஜீவித்திருக்கும் காலத்தில் பூலோகத்தில் ரூபமற்று இருந்தது. புவர்லோகத்துக்குப் பிரகிருதியுடன் கலந்து காமம் ஒரு ரூபத்தைத் தரிக்கின்றது. அவ்விடத்திலிருக்கப்பட்ட சில தேவதைகளையும் இழுத்துக்கொண்டு தன் சுபாவத்துக்குத் தகுந்த ரூபத்தைக் காமம் புவர்லோகத்தில் தரிக்கிறது. இதை ஜீவனின் மூன்றாவது உடுப்பாகச் சொல்லப்படும். இது ஜீவனை மூடிக்கொண்டிருக்கிறது. இந்த லோகத்திலிருக்கும் வரையில் சாதாரணமாய் எல்லாருடைய பிரக்ஞையும் முன் சொன்னதுபோல ஸ்வல்பமாயும் தூக்கத்திலிருப்பது போலும் இருக்கின்றது. இந்தப் பிரக்ஞாவஸ்தையிலிருந்து ஜீவன் சொர்க்கத்திற்குப் போகுமுன் கொஞ்சகாலம் பிரக்ஞையை இழந்து விடுகிறான். சொர்க்கத்திற்குச் சென்ற பின்னர் பூலோகத்திலிருந்த பிரக்ஞையை மறுபடியும் அடைகிறது.

சுவர்க்கலோகம் போகுமுன் புவர்லோகத்தில் காமரூபத்தின் நிலைமை எத்தகையதா யிருக்கின்றதென உற்று நோக்குவாம். காம ரூபம் காமத்தினால் நிலைபெறுகின்றது. காமம் பலமாயிருந்தால் காம ரூபமும் பலப்படும். காமம் சொற்பமாயிருந்தால் காமரூபமும் உபாயமானதாகவேயிருக்கும். காம ரூபமானது விரைவில் நசித்துப்போவ

தும் அல்லது வெகு காலம் நீடித்திருப்பதும் அதின் பலத்தையே பொறுத்திருக்கின்றது.

மனம் பிராபஞ்சிக வாசனையைவிட்டு ஆத்மாவுடன் சேரப் பிரயத்தனம் செய்யக் கூடியதாயும், அல்லது ஆத்ம பரமாகியும், சிலவேளைகளில் பிரபஞ்சத்திலும் முழுகியிருக்குந் தன்மையதாயும், அல்லது ஆத்ம ஞாபகமில்லாமலேயே சுத்தப் பிரகிருதியுடன் மட்டும் சம்பந்தப்பட்டு மிருக்கக்கூடிய மூன்றுவித மனத்தையுடைய ஜீவன் காமலோகத்தில் இம்மூவிதமனதுடனிருக்கக்கூடிய ஸ்திதியைப்பற்றி நோக்குங்கால் அவை எத்தன்மையதா யிருக்கின்றதென்பதும், ஜீவனது ஸ்திதியும் கீழ்க்காணும் விதத்தாகுமென அறியக்கிடக்கின்றது. அவைவருமாறு.

சுத்த அந்தக்கரணத்துடன் ஒருவன் ஜீவித்திருந்திருப்பானாயின், அவனுடைய காமம் அதிக பலமுடையதா யிராதபடியினாலே காமலோகத்தில் அதற்கு அதிகப் பிரவிர்த்தியிருக்காது. ஜீவித்திருக்குங் காலத்தில் காமமும் அசுத்தமனதும் சேர்ந்திருந்தன. காமம் ஊர்ஜிதமாயில்லாதபடியினால், அது மனதின் மூலமாக சுத்தப்படுத்தப்படுகின்றது. காமத்தினது சுத்தாம்சத்தை மனது கிரஹித்து விடுவதினால் அசுத்தாம்சத்தைத் தள்ளி அதைவிட்டு விலக மனதிற்கு வெகு வருத்தமிருக்கமாட்டாது. ஜீவன் மெல்ல மெல்ல தன்னுடைய சாத்வீகாநுபவங்களைக் கிரஹித்துக் காமலோகத்தினின்றும் ஸ்வர்க்கலோகம் செல்லப் பிரயத்தனப்படுகின்றான். இதுவே இரண்டாவது மரணம் எனப்படும். ஜீவனுக்கு எவ்வித தொந்திரவும் கொடுக்காதவரையில் சாவதானமாய் இந்த இரண்டாவது மரணமடைந்து சுவர்க்கத்துக்கு வந்தவுடன் ஜீவன் விழித்துக் கொள்ளுவான்.

ஜீவனுக்கு தொந்தரவு வரக்காரணமென்ன? தொந்தரவு எப்படி வரக்கூடும்? என ஆராய்ந்து பார்க்கும்போது மனைவி, மக்கள், உற்றார், உறவினர், இஷ்டர்கள் ஆகியவர்களுடைய பிரலாபங்கள் தங்கள் சரீரங்களிலுள்ள காமத்தைச் சலனப்படுத்துவதன் மூலமாக மரணமடைந்த ஜீவனுடைய காமத்தில் சலனத்தையுண்டாக்கி தன் மூலஸ்தானமாகின்ற சுத்தமனதுடன் அசுத்தமனது சேருவதற்கு முன்னர், தூங்கிக் கொண்டிருக்கின்றதான அந்த அசுத்த மனதை யெழுப்பக் கூடும். அப்படி எழுப்ப விழித்துக்கொண்ட அசுத்தமனது ஜீவிதத்துடன் இருந்த காலத்தில் நடந்த சங்கதிகளையெல்லாம் ஞாபகத்துக்

குக் கொண்டுவரும். அநேக முறைகளில் இந்த விழிப்பினல் ஜீவனுக்கு வெகு வருத்தம் ஏற்படும். இந்தக் காமலோகத்தை விட்டுச் செல்வதும் தவக்கப்படுவதினல் ஜீவனுடைய ஸ்வேச்சா வியவஹாரத்துக்கும் தடங்கள் உண்டாகின்றது. ஸ்வர்க்கத்துச்குப்போகுமுன் சொற்ப காலத்துக்குள்ளேயே இந்தப் பூலோக சம்பந்தம் உண்டாகக்கூடும் ஏக தேசத்தில் காமரூபத்துடன் கலந்திருக்கும் ஜீவன் பூலோகத்திலுள்ள வர்களுக்கு ஏதாவது சங்கதிகளைச் சொல்லவும் கூடும். ஆனல் இதனல் ஜனங்களுக்கு உபகாரம் என்பது மட்டும் வெகு துர்லபமேயாம். சாதாரணமாய் ஸ்வர்க்கத்துக்குப்போகுமுன் பிரக்ஞை பங்கமாய் விடுகின்றது. அதி தீவிரமான ஆசையானது சிலவேளைகளில் ஜீவனைப் பூலோகத்திற்கு இழுக்கவுங்கூடும். சுத்த அந்தக்கரணமுள்ள ஜீவனுக்கு ஆசைபலமாயிராதபடியினல், நம்முடைய பிரலாபங்களினல் எத்தகைய தொந்தரவும் கொடாதவரையில் அவர்கள் ஸ்வஸ்தமாகத் தூங்கி இரண்டாவது மரணவிஷயத்தில் எத்தகைய வருத்தத்தையும் அடையாமல் ஸ்வர்க்கலோகத்திற்குப் போகக்கூடும். ஜீவன் அவ்விதம் சென்ற பிறகு காமலோகத்தில் காம ரூபம் மட்டும் தங்கிவிடும். ஆனல் நாளாவிர்த்தியில் அந்தக் காம ரூபத்தின் அணுக்களும் பிரிந்து போகின்றதுண்டு. இவ்விதம் பிரிந்துபோகும் அணுக்கள் அடுத்து வரும்படியான ஜன்மத்தில் காம ரூபமாகித் தொடர்ந்துவரும்.

---

## அத்தியாயம் 19.

# காமலோக ஸ்திதி.

ஜீவன் காமலோகத்திற்கு வந்ததும் இவனது இச்சைகள் காம ரூபத்தைத் தரித்து இந்த ஜீவனை மறைத்துக்கொள்ளுகின்றது. இந்தக் காமரூபம் அதி சூக்ஷ்ம அணுக்களால் உண்டாகின்றது. விஷய போகங்களில் ஆசக்தியடைந்திருந்த அசுத்தமனது தன்னால் உண்டாக்கப்பட்ட வலையிலிருந்து சீக்கிரத்தில் விடுபட்டுத் தன்மூல ஸ்தானத்திற்குப் போகமாட்டாது. இந்தக் காம ரூபம் க்ஷீணகதி யடையாத

வரையில் அசுத்தமனம் அதைவிட்டுப் பிரிவு படாததினால் சுத்தமன துடன் ஒன்றாகத் தாமஸமாகின்றது.

காமலோகத்தில் ஜீவனும் காமமும் சேர்ந்திருக்கும் வரையிலும் அந்த ஜீவன் பூலோகத்திற்குத் திரும்பவும் கூடும். இவ்விதம் திரும் பிச் செல்வதை அந்த ஜீவன் விரும்பவும் கூடும். ஏனெனில் பூலோக விஷயங்களிலேயே அந்த ஜீவனுடைய மனது பற்றுதலைக் கொண்டி ருக்கின்றது. தன்னுடைய சுத்தமான ஸ்தானத்திலிருந்து கொண்டு திருப்தியையும் ஆநந்தத்தையும் அடைய மனம் கொடுத்து வைக்க வில்லையென்பதுவே பெரியோர்களின் கொள்கையாகும். இத்தன்மை யினால் இதுவரையிலும் தீராத ஆசைகளைத் தீர்த்துக் கொள்ளும் வண் ணம் ஜீவன் மறுபடியும் பூலோகத்துக்கு இழுக்கப்படவுங் கூடும். இவ் விதம் இழுக்கப்பட்டால் காமலோகத்தில் ஜீவனுடைய வாசம் நீடித்து விடுகின்றது. இதனால் காம ரூபம் பலப்படுகின்றது. அதற்கும் ஜீவனுக்குமுள்ள சம்பந்தம் விடுபடுகின்றதில்லை. ஆகையினால் ஜீவ னுடைய ஸ்வேச்சா மனசுக்கு விரோதம் வருகின்றது.

தீய நடத்தையுள்ளவர்களும், மிகுந்த காமக்குரோதாதிகளை உடையவர்களும் காமலோகத்தில் வெகு காலம் தங்குகின்றார்கள். மீண்டும் பூலோக சுகங்களைப் பெறவேண்டுமென்கிற ஆசை அவர் களுக்கு வெகு பலமாகவே யிருக்கின்றது. இந்த ஆசைகளை நேரில் பூர்த்திசெய்துக்கொள்ள அவர்களுக்கு இயலாதபடியினால் பூலோக வாசிகளின் மூலமாகத் திருப்தியடைகின்றனர். இவர்களுக்கு வசப் பட்டுப்போனவர்களின் கதி அதோகதியேயாகும். எங்ஙனமெனில், பிசாசு பிடிக்கப்பட்ட ஒருவனுடைய இரத்தத்தை பிசாசு பானம் செய்து அவனைக் கிருசமாகச்செய்து விடுவது போலவேயாம். இவ் விஷயம் சகலருக்கும் தெரிந்ததேயாம்.

தற்கொலையினாலாவது, பிறராலாவது அல்லது தற்செயலாவது மரணமடைந்தவர்கள் காமலோகத்திலுள்ள ஒரு வகுப்பாளர்கள். பூலோகத்தில் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற இயற்கையான காலம் முடியும் வரையில் அவர்கள் காமலோகத்தில் ஆறு—ஏழாவது தத்து வங்களான புத்தி ஆத்மா இரண்டுமின்றி பிரிந்திருக்கின்றார்கள். மர ணத்தைக் கொடுத்த காரணம் காம லோகத்தில் இவர்களுடைய ஸ்திதி யைத் தீர்மானிக்கின்றது. மரணத்தினால் சம்சாரமென்னும் துக்கத்தி னின்றும் விலகலாமென நினைத்துத் தற்கொலை செய்து கொண்டவர்கள்

பூலோகவாசிகளின் மூலமாகத் தங்கள் ஆசைகளைத் தீர்த்துக்கொள்ளுகின்றார்கள். தங்களுக்கும் பூலோகத்தில் ஏற்பட்ட காலம் முடியும் வரையிலும் இவ்விதம் செய்துகொண்டு, பிறகு ஆறு—ஏழு அம்சங்கள் முழுவதையும் இழந்துவிடுவார்கள்.

தற்செயலாய் மாணம் சம்பவித்த விஷயத்தில் நாசரஹிததத்துவங்களும் நாசசஹித தத்துவங்களும் ஒன்றோடு ஒன்று சேர்வதற்கு முயற்சிக்கின்றன. நல்லவர்களாயின் இயற்கையான காலம் முடியும் வரையிலும் சமாதியில் இருந்ததுபோல இருந்து, பின்னர் ஸ்வர்க்கத்திற்குப் போகின்றார்கள். கெட்டவர்களாயின் அந்தக் காலம் வரையில் அங்குமிங்கும் திரிந்துகொண்டு ஜனங்களைக் கெட்ட செய்கைகளில் பிரவர்த்திக்கும்படிசெய்து அவைகளின் மூலமாகத் திருப்தியடைந்து பிறகு வேறு ஸ்தானத்திற்குக் கொண்டுபோகப்பட்டு அவ்விடத்தில் வெகு வருத்தமடைந்து நாசமாகிவிடுகின்றார்கள். கொலைகாரன் பூலோகத்தில் பயப்படத்தக்கவன். இவனுக்கு மாணதண்டனை விதிப்பதினால் இவன் புவர்லோகத்தில் இருந்தாலும் அதிகமாய்ப் பயப்படத்தக்கவனாகின்றான்.

துன்மார்க்கத்தினாலும், அதிகப்படிப்பினாலும், பெரிய விஷயத்தின் பொருட்டு தன்னைத்தானே பலிகொடுப்பதினாலும் ஏற்படும் அகால மரணம் காமலோகத்தில் ஜீவனை வெகுகாலம் நிறுத்திவைக்கும். மரணம் தேடின கருத்தே காலத்தையும் கதியையும் நிர்ணயிக்கும் சித்தப்பிரம்மையினால் தற்கொலை செய்பவன் காமலோகத்தில் தூங்கிவிடுகிறான்.

காமரூபம் என்னும் மேல்மூடி க்ஷீணித்தவுடன் ஜீவனானவன் காமலோகத்தினின்றும் ஸ்வர்க்கலோகத்திற்குப் போகின்றான். சுத்த மனம் அசுத்த மனசைத் தனக்குள் இழுத்துவிடுகிறது. புனர்ஜன்மம் ஏற்படும்வரையில் மனம் ஒன்றாகவேயிருக்கின்றது. அசுத்தமனசுடன் தனக்கு அநுகுணமாயிருக்கின்ற சாத்விகானுபவங்களையும் சுத்த மனம் கிரஹித்து விடுகின்றது. எங்ஙனமெனில், வயலினின்று குடியானவன் வரவழைக்கப்படுகிறான். அறுப்பு அதிகமாக அறுத்திருந்தாலும் சரி; அல்லது ஸ்வல்பமாக அறுத்திருநதாலும்சரி; அறுத்திருக்கப்பட்ட பலனுடன் குடியானவன் வந்துவிடுகிறான். அது போலவே காமலோகத்திலிருந்து ஜீவன் போனபிறகு பூலோகவாசிகளுடன் சேர முடியாது

# அத்தியாயம் 20.

## காமரூபம்.

—(o)—

ஜீவன் பிரிந்த பிறகு மிச்சப்படுவது காமரூபம். இது ஜீவனுடைய கடைசியான உறையாகும். பூர்வ ஜன்மம் சுத்தமாயிருந்தால் இந்தக் காமரூபத்தில் அதிகமனமில்லாது விரைவில் அதினுடைய அணுக்கள் சிதறிப்போகின்றன. பிரபஞ்ச இச்சை முதலியவைகள் அதிகபலமாயிருக்குமாயின், புஷ்பத்துடன் சேர்ந்த நாருக்குப் புஷ்பம் நீங்கின பிறகும் கொஞ்சநேரம் வாசனையிருப்பது போல, ஜீவன் நீங்கின பிறகும் சில காலம் இந்த ரூபத்துக்கு உணர்ச்சி முதலியவைகள் இருப்பதாகவும் பிரபஞ்சமும் தோன்றும்.

ஜன்மம் கெட்டதாக இருப்பதினால் அநுகுணமான பூலோகவாசிகள் இருக்கும் இடத்திற்கு இழுக்கப்பட்டு சில காலம் பலத்தைத் தேடி ஜீவிக்கலாம். முடிவில காமரூபத்தின் அணுக்கள் சிதறி விட வேண்டியதே தவிர வேறில்லை. சில வேளைகளில் இந்த ரூபத்தைச் சில பிசாசுகள் கைப்பற்றிக் சொள்ளவும் செய்யும் பிசாசுகளினால் இந்த ரூபம் கைப்பற்றப்பட்டால் ஜனங்களுக்கு அதிகமான உபத்திரவமேயுண்டாகும்.

இக் காமலோகவாசம் எவ்வளவு காலம் இருக்குமென யோசித்துப் பார்ப்போமாயின், காமலோக வாசம் சில மணி நேரம் முதல் சுமார் இருபத்தைந்து அல்லது முப்பது வருஷம் வரையிலும் இருக்கக் கூடும்.

இந்த காம ரூப அணுக்கள் புதியதாய் ஏதேனும் ஒரு காரியத்தை செய்யச் சக்தியுடையனவல்ல. செய்கிறதுமில்லை. ஆனால் ஆகாயத்தில் விதைகள் தொங்கிக் கொண்டிருப்பது போல இவைகள் இருக்கின்றன. ஜீவன்புனர் ஜன்மம் அடையும் காலத்தில் இந்த அணுக்கள் வந்து சேர்ந்துவிடுகின்றன.

இந்தக் காம ரூப சேர்க்கைக்குக் காமத் தொடக்கம் என்று பெயர். எடுக்கும் பிரதி ஜன்மத்திலும் இது சம்பாதித்த நல்வழியிலீடுபடவொட்டாமற் செய்து துன்பத்தையடைவித்து தீராத்துக்கத்தையநுபவிக்கும்படி செய்யக் கூடியதாயிருக்கின்றது.

## அத்தியாயம் 21.

## ஸ்வர்க்கலோகம்.

ஒவ்வொரு கல்பத்திலும் ஜீவன் புதிய ஜனனமரணரூப சம்சார யாத்திரையை ஆரம்பிக்குமுன் ஒரு தேவதை போல் இருக்கின்றான். இத்தகைய யாத்திரைகள் எத்தனையோ நடந்து விட்டன. இவ்வுண்மையைத் தவராஜவள்ளலும், தனபதியாயிருந்துங் "காதற்ற ஊசியும் வாராது கடை வழிக்கே" என்னும் உபதேச மொழியை ஓலை நறுக்கிற் கண்டதும் உலக இன்பங்களைத் துறந்து தனக்குறுதிதேட வெளிப்பட்டவரும், பட்டினத்தார் என்று பலராலும் கொண்டாடப் பட்ட வள்ளலுமான மூதறிவாளர்:

"மாதா வுடல்சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவுங் கைசலித்து விட்டானே—நாதா
இருப்பையூர் வாழ்சிவனே யின்னமோ ரன்னை
கருப்பையூர் வாராமற் கா"

என்றும்;

"மண்ணுந் தணலாற வானும் புகையாற
எண்ணரிய தாய்மா ரிளைப்பாற—பண்ணுமயன்
கையாறவு மடியேன் காலாறவுங் கண்பார்
ஐயா திருவையாறு"

என்றும்;

"அன்னை யெத்தனை யெத்தனை யன்னையோ
வப்ப னெத்தனை யெத்தனை யப்பனோ
பின்னை யெத்தனை யெத்தனை பெண்டிரோ
பிள்ளை யெத்தனை யெத்தனை பிள்ளையோ
முன்னை யெத்தனை யெத்தனை சன்மமோ
மூட னாயடி யேனு மறிந்திலே
னின்ன மெத்தனை யெத்தனை சன்மமோ
வென்செய் வேனிறைவா கச்சியே கம்பனே"

என்றும் திருவாய் மலர்ந்தருளியிருப்பதானது ஜனன மரண ரூப சம்சார யாத்திரையைத்தான் குறிப்பிக்கின்றது. நிற்க, அவன் சுத்த மாயும் கிரியா ரஹிதமாயும் இருக்கிற சைதன்னியம் அல்ல. சென்ற கல்பங்களில் பிரகிருதி சம்பந்தத்தால் அவன் புத்தியை அடைந்திருக்கிறான். ஆனால் பிரகிருதியைப் பூர்த்தியாக ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளும்படியான புத்தியை அவன் அடைந்திருக்கவில்லை. ஆகையால் அவனுடைய அஞ்ஞானம் பிரகிருதி மாயைக்கு அவனை உட்படுத்திவிடுகின்றது. மாயையானது எப்படி ஒருவன் நீலநிறக்கண்ணாடியைத்தரித்துக்கொண்டு பார்த்தால், மற்ற அவனால் பார்க்கப்படும் பதார்த்தங்களும் நீல நிறமாகத்தெரிகின்றதோ அவ்வண்ணமே மாயையும் மனிதனுக்குத் தோன்றுகின்றது. ஜீவன் சரீரத்தைத் தரிப்பதின் பிரயோஜனம் என்னையெனின், பிரகிருதியின் சம்மந்தப்பட்டாலும் அதின் மாயையால் மயக்கத்தையடையாமல் பிரகிருதியை உள்ளவாறு நோக்கியறிவதேயாம். இந்தசம்சார சாகரத்தில் இருவித நிலைமைகள் மாறிமாறி வருகின்றன. பிரகிருதியில் சுத்தமாய்ச் சூழப்பட்டு இந்த பூமியில் சொற்பகாலம் இருத்தல் ஒன்றும்; இந்தக் காலத்தை உத்தேசித்து சொர்க்கத்தில் வெகுகாலம் வசித்தல் மற்றொன்றும் ஆகும். இரண்டாவதான ஸ்வர்க்க லோகத்திலும்கூட பிரகிருதியினால் சூழப்பட்டாலும்கூட அது சூக்ஷ்மமாயிருப்பதுமன்றிப் பூலோகத்தைப்போல அவ்வளவு மயக்கத்தை யுண்டுபண்ணுகிறதில்லை. இநத இரண்டாம் நிலைமையிலே ஜீவனது சாதாரண நிலைமையாகச் சொல்லலாம். ஏனெனில் ஸ்வர்க்கத்தில் வாசஞ்செய்யும் காலமும் நீடித்திருக்கின்றது. தன்னுடைய தெய்வாம்சத்திற்கு அதிகமாக விலகிப்போவதில்லை. சூக்ஷ்மம் பிரகிருதி சம்பந்தப்பட்டாலும் அதன் மாயையினால் மயக்கம் அதிகமாகின்றதில்லை. மெல்லமெல்லப் படிப்படியாக அநுபவங்கள் திரும்பிவர சுத்தப்பிரகிருதி ஜீவனை மயக்கடிக்கமுடியாமல் அவனுக்கு ஸ்வாதீனப்பட்டு விடுகின்றது. இந்த ஸ்வர்க்கலோகவாசமே ஜீவனுக்கு சாத்தியமானதாகும். எவ்வண்ணமெனில், தேனீயானது பற்பல புஷ்பங்களிலிருந்து தேனைக்கிரஹித்து ஒன்றாய்ச் சேர்த்து எடுத்து வந்துவிடுவதன்றிப் புஷ்பத்தைக் கவனியாதிருந்துவிடுவதுபோல பலஜன்மங்களிலும் பிரவேசிக்கும்படியான ஜீவன் ஒவ்வொரு ஜன்மத்தின் சாரத்தைக் கிரஹித்துச் சேர்த்துக்கொண்டு முடிவில் சுத்த தெய்வமாக

ஆகிவிடுகின்றான். இவ்விதம் சேர்க்கப்படும் சாரத்திற்குப் புண்ணியம் என்று பெயர். இதையே "பதவி பூர்வ புண்ணியானும்" என்பதும்; ' தக்க முற்பவத்தில்ஆன்ற தருமம்நன்குஇயற்றினோர் ஒக்கஇப்பவத்தில் இன்பம் ஒருங்கு அநுபவிப்பர்" என்னும் தமிழ்ப்பெருந்தகையாளர் பெருமொழியும் கவனிக்கற்பாலதாகும்.

காமரூபத்தினின்றும் பிரிந்து ஸாத்விகாநுபவங்களுடன் ஜீவன் ஸ்வர்க்கத்துக்கு வந்து சேருகிறான். அதுவரையிலும் பிரக்ஞை பங்கமாகவே யிருக்கின்றது. சேர்ந்தபின்னர் பழைய பிரக்ஞையை அடைகிறான். இந்தவிடத்தில் புதிய அநுபவங்கள் எதுவும் இல்லையென்றே கூறத்தகும். ஆனால் பூலோகத்தின் பழைய அநுபவங்களின் பலன்களே இங்கு அநுபவிக்கப்படுகின்றன. பூலோகத்தைக் காரணபூமியாகச் சொன்னால், ஸ்வர்க்கலோகத்தைக் காரிய பூமியாகச் சொல்லலாம். எப்படி யென்றால், உழுதவிடத்தில் விதையை ஒரு க்ஷணத்தில் விதைக்கப்படுகிறது. பல மாதங்கள் சென்றபின்னரே அவைகள் முளைத்துச் செழித்துக் கதிர் விடுகின்றன. விதையைக்காட்டிலும் பன்மடங்கு அதிகமாகவே கதிர்கள் விடுகின்றன. விதை எந்த விதமானதோ அந்தவிதமான பலனே கிடைக்கின்றது. இதுபோலவே பூலோகத்தின்கண் சொற்பகாலத்தினுடைய அநுபவங்களாகிற காரணத்திற்குத் தகுந்தபடி சொர்க்கலோகத்தில் வெகுகால பலன்கள் கிடைக்கின்றன. காரணங்கள் அநேகமாயிருக்குமாயின் பலன்களும் அதுபோலவே நீடித்தவைகளாயிருக்கும். நிறைவேறாதஆசைகளெல்லாம் இவ்விடத்தில் திருப்தியெய்துகின்றன.

பிரகிருதி சம்மந்தமானவை யெல்லாம் பூலோகத்திலும் புவர்லோகத்திலும் விடப்பட்டிருக்கின்றன. ஸ்வர்க்கலோகத்தில் பலன் கொடுக்கும்படியான விதை பூலோகத்தில் ஸ்வல்பமாய் ஏற்பட்டு ஜீவனின் அபிவிர்த்திக்கு வேண்டிய ஆகாரம் போதாமலிருப்பதினால் அந்த அபிவிர்த்தியும் தாராளமாயிருக்காது. ஆகையினால்தான் ஸ்வர்க்கலோகத்திற்கு உபயோகப்படும்படியான விதைகளை விசேஷமாய் விதைத்திருக்கவேண்டியது. ஸாத்விக அநுபவங்களையே தாராளமாய்ச் சம்பாதித்து இருக்கவேண்டும். பூலோக ஜீவனுடைய அபிவிர்த்தியை நிர்ணயம் செய்கிறது. ஸ்வர்க்கத்தில் ஜீவன் இவைகளைப்

பரிசீலனைசெய்து அவைகளின் சாரத்தை மறுஜன்மத்தின் உபயோகத்திற்காகச் சேர்த்து வைக்கிறான். ஒருவன் சம்சாரபந்தத்தைச் சேதிக்கப் பெரியசத்தியுடன் வருவானேயாகில் ஸ்வல்ப அநுபவமுள்ளவன் சிறிய சத்தியுடன் வருகிறான். எவ்விடத்திலும் கொண்டுவரப்பட்ட சத்தி அவனவன் செய்து கொண்டதே யொழிய வேறில்லை. ஒருவன் பெரியதான பர உபகார விஷயத்தைச் செய்ய உத்தேசித்து மரணமடைவானுயின், ஸ்வர்க்கத்தில் அந்த உத்தேசத்தினுல் உண்டாகும் ஆனந்தத்தையடைந்து பாவனையையும் பலப்படுத்தி மறுஜன்மத்தில் தகுந்த காலதேசவர்த்தமானங்கள் அடைந்தவுடன் அந்த உத்தேசத்தைப் பூர்த்திசெய்வான். மனதிற்கொண்ட பாவனைக்காகவேண்டிய ஸ்தூலரூபம் கொடுப்பது மனசின் சிருஷ்டியேயாம். இதற்காக ஸ்வர்க்கலோகத்தில் காலஹரணம் ஏற்படாமல் அதிற்செலவாகும் காலமெல்லாம் ஜீவனுடைய நன்மைக்கே ஏற்படுகின்றதென்பது பொருத்தம்

எப்பொழுதும் பிரவிர்த்தி இருக்கமுடியாது. ஆனதால் ஸ்வர்க்கலோகத்தில் ஜீவன் ஸ்வஸ்தமாக இருக்கின்றான். இவ்விடத்தில் துக்கத்திற்கு ஆஸ்பதமில்லை. ஸ்வர்க்கலோகப் பிரவேசத்தை அந்தலோகத்தில் ஜனனமாகச்சொல்லலாகும். ஜீவனுக்குப் பூலோகத்தில் ஜனனம், வளருதல், க்ஷயமாதல், மரித்தல் ஆகிய ஆறு விகாரங்கள் இருப்பது போல ஸ்வர்க்கலோகத்திலும் அவைகள் உண்டு. ஸ்வர்க்கலோகத்தில் ஏற்படும் மரணமே பூலோகத்தில் ஜனனமாகின்றது.

ஸ்வர்க்கலோகம் என்பது ஒரு இடமல்ல, இது ஒரு ஸ்திதி. இது ஒவ்வொருவனாலும் செய்துகொள்ளப்பட்டது. ஆகையால் ஒவ்வொருவனுடைய ஸ்வர்க்காநுபவமும்ஒவ்வொருவிதமானதாயிருக்கும். ஸ்வர்க்கத்தை ஒரு இடமாக நினைக்கும்பக்ஷத்தில் அதில் வசிப்பவர்களுக்கு தாரதம்மியமில்லாமல் போகும். ஸ்வர்க்காநுபவமானது அவரவர்களின் புண்ணியத்தையே பொறுத்திருக்கிறபடியினுல் ஸ்வர்க்கத்தை ஸ்திதியாகவே நினைக்கவேண்டியது.

ஸ்வர்க்கம் என்னப்பட்ட ஸ்திதியிலும் அநேக உட்பிரிவுகளுண்டு. மொத்தமாய் இவைகளை ரூபஅரூப லோகங்களாகப் பிரிக்கலாம். அரூபலோகமே திருபவனம் என்று சொல்லப்படுகின்றது.

பூலோகத்தில் ஜனித்தபின் மீண்டும் தாயார் வயிற்றில் நுழைய முடியாது. அதுபோலவே ஸ்வர்க்கலோகத்தில் ஜனித்தபின் மறுபடியும் புனர்ஜன்மம் ஏற்படும் வரையில்பூலோகத்திற்கு வாமுடியாது. கடந்த ஜன்மத்தின் ஞாபகம் பூர்த்தியாக யிருந்தாலும் புனர் ஜன்ம காலத்தில்தான் ஜீவன் பூலோகத்திற்கு வாமுடியும்.

அசுத்தமனதின் அநுபவங்கள் பூலோகத்துடன் போய்விட்டாலும், ஸ்வர்க்கலோகத்திலிருக்கும் ஜீவன்தான் மரணம் அடைந்ததாகவாவது தன்னுடைய பிரீதிக்கு விஷயமானவர்களினின்றும் பிரிந்திருப்பதாகவாவது நினைக்கிறதில்லை. அவர்களுடன் கூடவேயிருப்பதாகவும் நினைக்கிறான். இதைப் பிரமையாக நினைக்கப்படாது. ஜீவன் இந்தக்காலத்தில் மானசிக நிலைமையில் இருப்பதினால், மானசிக தர்மமான அன்பு, தயை, பச்சாத்தாபம் முதலியவைகளைக் காண்பிக்க ஏன் முடியாது? இந்த அன்பு சொர்ப்பனத்திலும் வேறு வகையாலும் தெரிய வரும். சிசுக்களுக்குவரும் ஆபத்துகளை இறந்துபோன தாயின் அன்பே யல்லாமல் வேறு எதுதான் நீக்குகின்றது மேலும் இந்த அன்பு மறு ஜன்மத்தில் இருப்பவர்களையும் ஒரே இடத்தில் சேர்த்து விடுகிறது. ஸ்வர்க்கம் எவ்விதமானதாக இருந்தபோதிலும், பிராபஞ்சிகதுக்கம் ஸ்வர்க்கவாசியான ஜீவனுக்குத் தெரியமாட்டாது என்பது உண்மை. ஏனெனில், ஸ்வர்க்கத்தில் ஜீவன் மானசிக பூமிகையில் இருக்கின்றான்

ஆகையால் ஸ்தூலபூமிகையில் நடக்கும் சங்கதிகளை ஜீவன் அறியமாட்டான். மானசிக பூமிகை பூலோகத்திலிருப்பவர்களுக்கும் ஸ்வர்க்கத்திற்குச் சென்ற ஜீவனுக்கும் ஒன்றாகவேயிருப்பதினால் ஸ்வர்க்கவாசியான ஜீவன் தான் நேசித்தவர்களுடைய துக்கத்தைமட்டும் அறியாமல் அவர்களால் சூழப்பட்டிருக்கின்றது. அவர்கள் மரணமடைந்துதான் முன் ஸ்வர்க்கத்துக்குப்போயிருந்த ஜீவனைக்காணவேண்டு மென்பது இல்லை. இதுவே குப்தவித்தையின் நிச்சயம்.

ஜீவன் ஸ்வர்க்கத்தில் ஸ்வதந்திரத்தை யடைந்திருக்கின்றபடியாலும், தான் ஆத்ம சொரூபமாய் இருக்கின்றபடியினால் சர்வக்ஞத்தை யடையக்கூடுமே யென்னும் வினா நிகழும்பக்ஷத்தில் இது முடியாது. ஏனெனில் ஸ்வர்க்கலோகம் ராஜஸ தாமஸ அம்ஸங்கள்நீங்கலான ஸாத்விக பூலோகத் தொடர்ச்சியே. எவ்வண்ணம் இந்த ஜன்மத்தில்

பிரகிருதி பந்தத்தினால் நாம் சர்வக்ஞர்களாக இருக்கவில்லையோ அப்படியே ஸ்வர்க்கத்திலும் இருக்க முடியாது.

எல்லாருக்கும் ஸ்வர்க்காநுபவம் உண்டாவெனில் மரணத்திற்குப் பிறகு யாதொன்றுமில்லையென்று நிச்சயமாய் நம்புகின்றவனுக்கு இந்த அநுபவம் இல்லாமலே போய்விடும். ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப்போகின்றவன் தூக்கத்தில் மத்தியிலிருக்கப்படாநின்ற கிராமங்களை யறியாமற்போகக்கூடியதுபோல் மரணத்துக்குப்பின் யாதொன்றுமில்லையென்று நம்பினவன்போல புனர்ஜன்ம காலம்வரையிலும் தூங்குகின்றவன்போல இருந்துவிடுகின்றான். ஸ்வர்க்காநுபவ நஷ்டமே இவனது அவநம்பிக்கையின் பலனாகின்றது.

ஸ்வர்க்கலோகத்தில் யாதொரு நூதனமான செய்கையில்லாவிட்டாலும் ஒருவிதத்தில் ஞானம் அபிவிர்த்தியாகக்கூடும். ஒருவன் ஜீவிக்கையில் சரீர சம்பந்தம் இல்லாத விஷயங்களில் வெகு ஆசக்தி கொண்டவனாக இருந்தால், சங்கீதம், சித்திரம் எழுதுதல், கவனம் செய்தல் முதலிய விஷயங்களில் தீவிரமான புத்தியையுடையவனாக இருந்தால் அவன் இந்தப் புத்தியை அதிகமாக பக்குவப்படுத்தக்கூடும். பூலோகத்திலிருக்கும்போது விளங்காததான நூதன ஞானத்தைமட்டும் ஸ்வர்க்கலோகத்தில் இவ்விதம் பக்குவமடைந்ததற்கு அறிகுறியாவது சிலர் பிறந்தவுடன் அதிமேதாவித்தன்மையைக் காண்பிப்பதேயாம். சுருக்கமாகக் கூறப்புகின் மரணத்தின் பின்னர் பிரக்ஞை முதலில் பங்கப்பட்டுப், பிறகு முன்போலும் இருக்கக்கூடும். சிலருடைய விஷயத்தில் சுத்தமாயில்லாமலிருக்கவுங்கூடும்.

## அத்தியாயம் 22.

# மானிட பூலோக விஜயம்.

ஸ்வர்க்கலோகத்தில் வசிக்கக் கூடியகாலம் அவரவர்களுடைய புண்ணியத்தைப் பொறுத்ததென்பது திண்ணம். ஒரு மரணத்திற்கும் மறு ஜன்மத்திற்கும் இடையில் சுமார் ஆயிரத்தைந்நூறு வருஷங்கள் வரையில் செல்லுகின்றன.

இந்த ஆயிரத்து ஐந்நூறு வருஷங்கள் முடிந்தவுடன் மீண்டும் ஜீவன் பூலோகத்திற்குத் திரும்பிவருகிறான். அவ்விதம் திரும்பி வருகையில் தான் ஸ்வர்க்கத்தில் சம்பாதித்த அநுபவங்களையும், புதியதாய்ச் சேகரித்த ஞானத்தையும் ஜீவன் கொண்டுவருகின்றான். ஜீவன் சொர்க்கத்தின் வாசலைத்தாண்டி வருகையில் முந்திய ஜன்மத்தில் விதைத்திருந்த பாபமாகிய விதைகளைச் சந்திக்கின்றான். ஸ்வர்க்க லோகத்தில் இருக்கையில் துக்கரஹிதமாயிருந்தாலும் செய்தபாபம் நசித்துப்போகாமல் பலன்கொடுக்கக் காத்துக் கொண்டிருக்கின்றது.

பூமியில் விதைத்த விதைகள் சொற்பகாலம் பூமியிலிருந்து பிறகு முளைக்கிறதுபோல பாபங்களும் ஜீவன் ஸ்வர்க்கலோகத்திலிருக்கும் போது ஒன்றும் செய்யாமலிருந்து சூக்ஷ்ம சரீரம் உண்டாகும் காலத்தில் இதனுடன் கலந்து கொள்ளுகின்றன. அந்தகுணங்களுடன் ஜீவன் பூமியில் ஜனிக்கிறான்.

ஜீவன் சுத்தமாகிறவரையில் இந்த ஜனனமரண ரூப சம்சாரம் நடந்து கொண்டுவருகின்றது.

பூலோகவாசத்திற்கு ஸ்வர்க்கலோகம் எவ்விதமோ அவ்விதமே புனர்ஜன்மத்திற்கு நிர்வாணம் என்பது ஒன்றிருக்கின்றது. இந்த மேன்மையான ஸ்திதியைப்பற்றி முடிவில் விவரிப்பது சாலச்சிறப்பாமென எண்ணிவிடுத்து மேல்செல்லுதும். எனெனில் இதுவே சடைசியானபூரணபிரக்ஞையுள்ள ஸ்திதியாகும்.

இதன் முக்கிய விஷயம் யாதெனில், மோக்ஷம் என்பதாம், என்றாலும் மோக்ஷத்தைப்போன்றதான ஒரு உயரிய ஸ்திதியாகும். மோக்ஷம் அல்லது நிர்வாணத்திற் சென்றவன் மீண்டும் வேறே மஹா மன்வந்தரத்தில் தான் அந்த ஸ்திதியை விட்டு பிரவிர்த்தி மார்க்கத்தில் செல்லுகின்றான்.

மானிடன் பூலோகவிஜயம் செய்யும் விஷயத்தில் இவனிருக்கும்படியான லோகத்திற்கும் அல்லது மற்ற லோகங்களுக்கும் உள்ள சம்பந்தம் இவண் விவரிப்பாம்.

(1) ஜீவன் லிங்க சரீரத்தில் சொற்பகாலம் இருக்கக்கூடும் மரணகாலத்தில் தீவிரமாய்த் தரித்திருந்த எண்ணத்தை இச்சரீரத்தினின்றும் வெளியிடக்கூடும். ஆனால் இவ் விஷயம் வெகு அபூர்வமானதாகும். லிங்க சரீரத்தை விட்டு ஜீவன் சென்ற பிறகு லிங்க சரீரம் பிணமாகிவிடுவதால் அது எதையும் செய்ய மாட்டாது. ஆனால் அதை அப்படிச் செய்யும் படிச் செய்யக்கூடும். இந்த மார்க்கத்தையறியதவர்கள் உலகில் வெகு அற்பமேயாவர். இத்தியாதி விஷயங்களையறிந்தவர்களே ஞானிகள் என்றும் யோகிகள் என்றும் கூறப்படுவர்.

(2) ஜீவனது காமலோகவாசம்:—இந்தக் காம லோகத்தின் வாசகாலத்தை நிர்ணயிக்க முடியாது. ஆனால் ஜீவன் தன்னைக் காமரூபத்தால் மூடிக்கொண்டு சிலருடைய ஸ்தூல சூக்ஷ்ம அம்சங்களையும் உபயோகித்துக்கொண்டு, உலகில் ஜீவித்துக்கொண்டிருப்பவருடன் சேர்ந்து தனக்குத் தெரிந்த விஷயத்தையும், அல்லது தனக்கும் வேறு ஒருவனுக்கும் தெரிந்த விஷயத்தையும் சொல்லக் கூடும்.

(3) ஸ்வர்க்கத்தில் ஜீவனும் இதன் விபாமும்-இந்த ஜீவன் பூலோகவாசிகளுடன் சப்பந்தப்படக் கூடிய விஷயம் முன்னமே கூறப்பட்டிருக்கின்றதாயினும் பூலோவாசி ஸ்வர்க்கலோகவாசியுடன் சேரக்கூடுமா என்பதைப்பற்

றிய விவரம் மட்டும் கூறக்கூடிய நிலைமையிலில்லை யெனினும், மானசிக தர்மமானதால் அவ்வண்ணம் சில சமயங்களில் கூட்டைவிட்டு ஜீவன் சேரலாகும் என்பது தெளிவானதாம். எவ்விதத்திலும் சரீர சகித ஜீவன் தான் சரீர ரஹித ஜீவனிடம் ஆகர்ஷிக்கப்படுகின்றானே யொழிய சரீர ரஹிதன் கீழ்வருகின்றதேயில்லை. காம லோகத்திலாவது ஸ்வர்க்கலோகத்திலாவது சரீர ரஹித ஜீவன் இருக்கும் பரியந்தம் இவ்வண்ணம் சரீர சகிதத்தை இழுக்கக்கூடும். இந்தக்காலங்களில் ஒரு ஜீவனுடைய ஸ்திதியைமட்டும் அறியலாமே தவிர, எல்லா ஜீவர்களுடைய ஸ்திதியையும் அறியமுடியாது.

(4) இதரமான மற்ற சம்பந்தங்களாவன:—

(i) சுத்த காமரூபம்:— சுத்தகாம ரூபத்துடன் கொஞ்சகாலம் மனதுடன் கூடியதுபோல காணப்பட்டுச் சங்கதிகளைச் சொல்லும்.

(ii) அசுத்த மனோ தர்மங்கள்:—அசுத்த மனோதர்மங்களின் சம்பந்தம் வெகு அபூர்வமாகும்.

(iii) பஞ்சபூதங்கள்:—பஞ்ச பூதங்களுடன் சம்பந்தம் செய்கின்றதும், பதார்த்தங்களை ஓரிடத்தினின்றும் மற்றோரிடத்திற் கொண்டுபோய் வைப்பதும், இன்னும் வேறுவிதமான செய்கைகளையும் உடையதாகும்.

(iv) நிர்மாணகாயர்கள்:—நிர்மாணகாயன் அதிசுத்த அந்தக்கரணமுள்ளவனுடன்தான் சம்மந்தப்படக் கூடும். ஸ்தூல சரீரம் தவிர, மற்ற சர்வ அம்சங்களையும் உடைத்தாயிருந்து பூலோகவாசிகளின் நன்மைக்காகவே பூலோகத்திலிருப்பவர்கள். இவர்களையே நிர்மாணகாயரிகள் எனப்படுவது.

(v) ஜீவித்திருக்கும்ஞானிகள்:— ஜீவித்திருக்கும் ஞானிகளுடன்அதிசுத்த அந்தக்கரணம் அவஸ்யத்திலும் அவஸ்யமேயாகும்.

(vi) தன் ஆன்மா:—சுத்த அந்தகரணமுள்ள ஜீவன் மனப்பூர்வமாய் தன் ஆத்மாவுடன் சேரப் பிரயத்தனப்படுகையில் ஆன்மா தன் தேஜஸால் அவன் பிரக்ஞையைப் பிரகாசிக்கச்செய்வான்.

இதுகாறும் ஜீவனின் பூலோக விஜயமும் அதன் தன்மையையும் ஒருவாறு விளக்கினும். இனிமேல் புனர் ஜன்மத்தின் தன்மைகளை விவரித்துக்கூறுவாம்.

---

## அத்தியாயம் ௨௩

## புனர் ஜன்மம்.

புனர் ஜன்மம் என்பது அனாதிகாலமாய் இருந்து வருகின்றதென்பதே நமது வேதங்களின் கொள்கையாகும். இதன் உண்மையை விளக்குவதற்கு வேண்டியே நமது வேதங்களின் சாரமான சாஸ்திரங்களில் சிறந்ததான ஜ்யோதிஷத்திலும்,

"ஜனனீ ஜன்ம சவுக்கியானும்"

எனக் காணப்படுகின்றமையினாலும் புனர் ஜன்மம் என்பது ஒன்று இருக்கின்றதென்பது திண்ணமாகும்.

புனர் ஜன்மம் இல்லை யெனக் கூறும் மதங்கள் பல சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் இருந்ததாகச் சரித்திரவாயிலா யறியக்கிடக்கின்றதாயினும், தற்காலத்தில் முன்னர் புனர் ஜன்மம் இல்லை யென்று கூறிய மதஸ்தர்களும்கூட புனர் ஜன்மம் உண்டெனக்கூற முன்வந்திருக்கின்றனர். நிற்க, புனர் ஜன்மம் உண்டென்பதைப்பற்றி நமது முன்னோர்களிற்பலர் கூறியவைகளையும் நாம் அறிய வேண்டிய தவஸ்யமாமென இவண் எடுத்துக்காட்டுவாம்.

"தேற்றமுற் பவத்திற் செய்த தீங்குநன்கெனு மிரண்டு
மாற்றல் சால் கரும மென்ப ரக்கருமத்தை நோக்கிச்
சாற்றுமிப் பிறப்பிற் றக்க தரித்திரஞ் செல்வ நல்கி"

என வல்லூர் தேவராஜப் பிள்ளையவர்கள் தாமியற்றிய குசேலோபாக்கியானம் என்னும் பிரபந்தத்தினுள் கூறியிருப்பதோடும், மீண்டும் பிறவியென்ற விஷயத்தை விவரிக்க வந்தவிடத்து,

"முன்னம் எத்தனைபேர் மைந்தர் மூறைமை
பாராட்டினரோ ?
இன்னம் எத்தனைபேர் மைந்தர் முறைகொள
இருக்கின்றரோ ?"

என்றும்,

"சார் உறும் தந்தையாரும் தாயரும்
அனந்தம் ஜன்மம்
ஊரும் ஓர் அனந்தம் வாய்த்த உறவும்
ஓர் அனந்தம் பெற்ற
பேரும் ஓர் அனந்தம் கன்மப் பெருக்கமும்
அனந்தம் கொண்ட
சீரும் ஓர் அனந்தம் இன்னும் சேர்வதும்
அனந்தம் ஆம்"

எனவும்; மானிடர் பூர்வகர்மத்தை யநுபவிக்கின்றனர் என்பதையும், இதனல் புனர் ஜன்மம் உண்டென்னும் உண்மையும் விளங்கும் வண்ணம்,

"நல்வினை அடைந்த காலை நனிநிலம்
திளைப்பர் நன்மை
அல்வினை அடைந்தகாலை அல்லலில்
துளைவர் எல்லாம்
தொல்வினை வழியது ஆகும் தோன்று
அனுபவங்கள் தம் தம்
புல்வினையால் என்ற எண்ணல் புலமையோர்
இடத்து இன்று"

எனவும், எத்தகைய புண்ணியராயினும், அவர்கள் மீண்டும் பூலோகத்தில் புனர் ஜன்மம் எடுக்கின்றனர் என்னும் உண்மை விளங்கும் வண்ணம்,

" இம்மையில் தருமம் தானம் எழில்பெற
இயற்றினோர்கள்
அம்மையில் தேவராகி அமிர்தம் முன்
ஆனபோகம்
செம்மையில் துய்ப்பர் துய்த்துத் தீர்ந்தபின்
புவியில் மீட்டும்
தம் ஐயர் தாயர் என்று எது இலர் தழுவிப்
பிறப்பர்............"

என்று கூறியவாற்றானும் புனர் ஜன்மம் உண்டென்பது தேற்றமாகும் இவைகள் எல்லாம் எதனால் ஏற்படுகின்றதென்பது வினைசம்பந்தம் எனப்படும் ஆன்றோர் அறிவுறுத்துதலினால் உண்மையென்றே ஊகிக்குந்தன்மையதாக விருக்கின்றமையின் இதனை வலியுறுத்துதற் பொருட்டே,

" தழைவிரி கற்பநாடு சார்தலும் புவியில்யாரும்
விழைதரு போகம் துய்த்தும் எவனும் நல்லூழ் ஆம்
பிழைபட நிரயத்து ஆழ்ந்து பெரும்துயர் உறலும் மண்மேல்
குழைமிடி ஆகித்துன்பு கூர்தலும் ஊழ்........."

என்பதனால் அறிவிற் சிறந்தவரான உத்தமர்கள் இதை ஒரு சிறிதும் கருதார்கள் என்பதும், புல்லவர்களே மாயையின் வயப்பட்டு உழலுவார்களென்பதும் விளங்கும் வண்ணம்.

" இத்தரு துன்பம் இன்பம் எய்திடார் அறிவு சான்றோர்
பத்தியின் வழாது நின்று பகர் அருச்சனை இயற்றிக்
கைத்துமுன் செயலெல்லாம் நிஷ்காமியம் ஆக்கி என்றும்
பைத்த கார்வண்ணத்து எம்மான் பதமடைந்து இன்பத்து
ஆழ்வார்"

என்று கூறியிருக்கின்றனர். ஆனால் புனர் ஜன்மங்கொள்ளும் ஜீவர்கள்

" பாவம் மிகையால் பூதத்து உற்பவிப்பர்,
பூதசாரத்தின் விண்ணோர் உதித்திடுவர்.

பூவினிடத்து அவ்வினை இரண்டால் பூதபரிணமத்து
உயிர்களான இயல்மானிடம் மிருகம்
அனைத்தும் பையுள் ஆவனவே"

என்றும் காணுகின்றமையினால் புனர் ஜன்மம் உண்டெனப்படுவது திண்ணமன்றோ ?

சர்வத்திற்கும் காரணமாயும் ஆதாரமாயும் உள்ள பிரமத்தினின்றும் தான் வேறென்றும், பிரம்மம் வேறு என்றும் நினைக்கக் கூடிய த்வைத புத்தியினால் மனிதன் பிரம்மசக்கரத்திற்சுழலுகின்றானென்றும் பிரத்தியாகாத்மாவாகிய ஜீவனும் பிரம்மமும் தத்துவத்தில் ஏகமேயென்றும் அறிந்தபின், ஜீவன் அமிர்தத்துவத்தை யடைகின்றான். தானும் பிரமமும் அபேதமேயென்று அறிய அவன் முக்தியடைகின்றான்.

தத்துவசாஸ்திரங்களில் ஜீவாத்மா பிரம்ம ஸ்வரூபமெனவே சொல்லப்பட்டிருக்கின்றது. மனிதன் பழைய வஸ்திரங்களை நீக்கிவிட்டு புதிய வஸ்திரங்களை எவ்வண்ணம் தரிக்கின்றானோ, அவ்விதமே ஜீவாத்மா பழைய சரீரங்களை விட்டுவிட்டுப் புதிய சரீரங்களைக் கொள்ளுகின்றான் எனக் கூறப்பட்டிருக்கின்றது.

இது உண்மையா என விசாரித்து அறிதல் நமது கடமையாகுமன்றோ ? ஆனால் சிவவாக்கியரானவர்.

" கறந்தபால் முலைபுகாது கடைந்த வெண்ணெய் மோர்புகாது
உடைந்துபோன சங்கின் ஓசை உயிர்களும் உடல் புகாது
விரிந்த பூ உதிர்ந்தகாயும் மீண்டும் போய் மரப்புகாது
இறந்தவர் பிறப்பது இல்லை இல்லை இல்லையே"

என்று கூறியிருப்பதினால், மனிதனுக்குப் புனர் ஜன்மமேயில்லையென்பதற்கு அத்தாக்ஷியாகக் கொள்ளலாமாவென ஆராய்வோமாயின், இது சாஸ்திரீயமென்று சொல்வது தவறேயாகும். புனர் ஜன்மம் உண்டு என்பதைப்பற்றி சநாதநதர்மத்தில் கூறுவதாவது:

" ஜீவாத்மா அஞ்ஞானத்தினின்றும் நீங்கி ஞானமடைதலும், அசக்தனபிருந்து பூரணசக்தியையடைதலும் ஸ்ருதியில் வியக்தமாய்க்கூறப்பட்டிருக்கின்றது.

" மனிதன் வாழ்வு ஒரு நாளோடு அற்றது அன்று. அநாதித் தன்மையும் மரண ராஹித்யமும் உள்ளவன். தன் யதார்த்த சுபாவமும் நடையும் காலக்கிரமத்தில் அறிகின்றான்.

" பரமஞானமும் பரம சக்தியும் அவனிடத்து குப்தமாய் இருக்கின்றன. அவைகள் விகாரத்தை இனி அடையவேண்டுவது. பிறப்பும் இறப்பும் இதற்காகவேதான்.

" மனித இயல்பு இத்தன்மைத்தென உணர்ந்தோமாயின், ஜீவநிலையின் பெருமை, வலிமை, மஹிமை முதலியன துலங்கும். இதுவே எக்காலங்களிலுமுள்ள ஞானிகளின் கொள்கையாம்'

புனர் ஜன்மம் உண்டென்னும் உண்மையை நிரூபிப்பதற்கென தவராஜசிங்கமான திருவெண்காடர் என்னும் பெரியாரும்:

" எப்பிறப்பிற்காண்பேன் இனி"

என்பதனாலும்,

" இன்னம் ஒரு அன்னை கருப்பையூர் வராமல்கா"

என்பதனாலும்,

" புல் ஆகிப் பூடு ஆகிப் புலர்ந்த நாள் போதாதோ
கல்லாய் மரமாய்க் கழிந்தநாள் போதாதோ"

" கிரியாய்க் கீடமாய்க் கெட்ட நாள் போதாதோ
நீரியாய் ஊர்வையாய் நின்றநாள் போதாதோ"

" பூதமொடு தேவருமாய்ப்போன நாள் போதாதோ
வேதனை செய்தானவராய் வீந்தநாள் போதாதோ"

" அன்னை வயற்றில் அழிந்தநாள் போதாதோ
மன்னவனாய் வாழ்ந்து மரித்தநாள் போதாதோ"

" தாயாகித் தாரமாய்த் தாழ்ந்தநாள்போதாதோ
சேயாய்ப் புருடனுமாய்ச் சென்றநாள் போதாதோ"

" நோயுண்ணவே மலிந்து நொந்தாள் போதாதோ
பேயுண்ணப்பேயாய் பிறந்தநாள் போதாதோ"

எனவும்,

" பிறப்பைத் தவிர்த்தை யிலைபின்னுகக் கொண்டயிலை
இறப்பைத்தவிர்த்தயிலை..............."

என்றும்,

" எத்தனை தாய்தந்தை யிவர்களிடத்தேயிருந்து
பித்தனுயானும் பிறந்திறந்தேன் பூரணமே"

என்றும்,

" பெற்றலுத்தார் தாயார் பிறந்தலுத்தேன்"

என்றும்,

" பிறந்தலுத்தேன்"

என்றும்,

" பிரமன் படைத்தலுத்தான் பிறந்திறந்து
நானலுத்தேன்"

என்றும்,

" எண்பத்து நான்கு நூறுயிரம் சென்னமும்
செனித்துப் புண்பட்டுப் புலம்பினேன்"

என்றும் கூறியிருப்பதினுலும் புனர்ஜன்மம் என்பது உண்மையென்பதும் தெள்ளிதின் விளங்குகின்றது.

புனர் ஜன்மம் என்பதற்குப் பொருள் யாதெனின், புன: என்பதற்கு மறுபடியும் என்றும், ஜன்மம் என்பதற்குப் பிறப்பு என்றும், இருபதங்களினின்றும் வருகிறது. அதாவது மீண்டும் ஜனித்தல் என்பதால் ஜனித்தல் என்பது ஒன்று இருக்கவேண்டும் என்றும், ஜனனபூமிமட்டும்வெவ்வேருக இருக்கவேண்டுமென்றும், விளங்குகின்றதன்றோ? வேறுபடும் ஜனன ஸ்தானம் அடிக்கடி மறுவதால் ஜனிக்கும் வஸ்துவை உத்தேசித்து அது நஸ்வரமென்றும், ஜனிக்கிற வஸ்து ஒரு ஜன்மத்திற்கு மேலிருப்பதால், ஜனன ஸ்தானத்தை உத்தேசித்தும்

மேலேகூறிய உதாரணங்களின் மூலமாயும் ஸ்திரம் என்றும் விளங்குகின்றன. இவ்வுண்மையை பகவத்கீதையின் இரண்டாம் அத்தியாயத்திலும் ஸ்ரீ கிருஷ்ணபகவான் கூறியிருப்பதாவது:

(1) நித்தியனும் நாசம் அற்றவனும் அறியப்படாதவனும் தேகத்தை உடையவனும் இருக்கின்ற ஆத்மாவினுடைய இந்த தேகங்கள் முடிவை உடைத்தானவைகளாகச் சொல்லப்படுகின்றன.

(2) எவன் ஒருவனைத் தான் கொல்லுகிறதாக நினைக்கின்றானோ அல்லது எவன் ஒருவனால் கொல்லப்பட்டவனாக அறிகிறானோ அவ்விருவர்களும் அறிந்தவர்களன்று. இவன் கொல்லுகிறவனுமல்ல சொல்லப்படுகிறவனும் அன்று.

(3) ஆத்மா பிறப்பு இறப்பு அற்றவன். நாசமற்றவன். ஒரு விதமாயிருக்கிறவன். முன்னோன். ஆகையால் தேகமானது கொல்லப்பட்டபோதிலும் ஆத்மா கொல்லப்படுகின்றதில்லை. பிறக்கின்றதும் இல்லை. இறக்கின்றதும் இல்லை. உண்டாகி மறுபடியும் இருக்கப்போகின்றதும் இல்லை. உண்டாகி மீண்டும் உண்டாகப்போகிறதும் இல்லை. ஆனால் மனிதன் எவ்விதம் பழைய துணிகளைக் களைந்துவிட்டு, புதிய துணிகளை யணிகின்றானோ அவ்வண்ணமே ஆத்மாவும் பழைய தேகங்களைக்களைந்துவிட்டு வேறு வேறான புதிய உடல்களைத் தரிக்கின்றான். இதனால் தேகம் நாசமுள்ளதென்றும், தேகத்தையுடையவன் நாசம் அற்றவன் என்றும் வெளியாகின்றது.

(4) மானிட தேகத்திலிருந்து மிருகதேகத்திலும் பிறக்கக் கூடுமென்றும் சில சாஸ்திரங்களில்கூறப்பட்டிருந்தாலும், மனுஷ்ய சரீரத்தில் ஒரு முறை பிரவேசித்த ஆன்மா மறுபடியும் மிருகம் முதலிய வேறு சரீரத்தில் பிரவேசிக்காது.

குப்த வித்யா சாஸ்திரப்படி சைதன்யம் மனுஷ சரீரத்தில் பிரவேசித்த பிறகு, சரீரம் நாசம் அடைந்தபின் சொற்பகாலத்துக்குப் பிறகாவது வேறு மானிட சரீரத்தில் பிரவேசிக்கின்றதென்பதே

புனர் ஜன்மம் எனப்படும். எங்ஙனம் எனில் ஒரு நூலிழையில் பல மணிகள் கோர்க்கப்பட்டது போலவே ஒரே சைதன்ய விஷயமாய் அநேக சரீரங்களை ஒன்ருேடு ஒன்று இணைக்கப்பட்டிருக்கின்றன.

அநேக மானிட ஜன்மங்களில் ஜீவசுபாவமுள்ள ஒரு பதார்த்தம் வசிப்பதே புனர் ஜன்மம் என்று தெரிந்து கொண்டபிறகு அவ்விதம் ஜனிக்கும் பதார்த்தம் எது என்று அறியத்தக்கது அவஸ்யமன்ருே ?

---

## அத்தியாயம். 24

—(o)—

# புனர் ஜன்மம் கொள்வது எது ?

கடந்த அத்தியாயத்தின் முடிவில் மானிட ஜன்மத்தில் ஜீவ சுபாவமுள்ள ஒரு பதார்த்தம் வசிப்பதுதான் புனர் ஜன்மம் என்பது பற்றி அறியவேண்டிய தவஸ்யமெனக்கூறினேம். அதை இவன் விளக்குவது அவஸ்யமாகின்றமையினல் அவற்றை விளக்குவாம்.

ஜீவ சுபாவமுள்ள வஸ்துவுக்கு முதன் முதல் சரீரத்துடன் சம்பந்தம் எவ்வண்ணம் வந்தது என்பதை முக்கியமாய் அறிந்து கொள்ள வேண்டுமென்னும் ஆற்றல்பற்றி அதை ஆராயுமிடத்து சச்சிதானந்த ரூபமான ஆத்ம புத்தியே சகல சிருஷ்டிக்கும் மூல ஆதார மென்று சொல்லப்பட்டது. இந்த சரீரம் அநேக கோடி வருஷமாய்ப் பக்குவ மாய்க்கொண்டு வந்ததென்று முன்னரே கூறப் பட்டிருக்கின்றது இரண்டரை மன்வந்தரம் வரையிலும் மனுஷிய சரீரம் மிருகரூபமா கவே இருந்து ஸ்தூல சரீரம், லிங்கசரீரம், பிராணன், காமம்இந்நான் கும் மிருகங்களுக்கும், மிருகரூபமனிதனுக்கும் இருந்தன. சைதன்யம் இல்லாதஇடம்யாதொன்றும் இல்லையாயினும், அந்த சைதன்யம் மேன் மேலும்விளங்கமிருகசரீரத்தில்தகுந்தஉபாதியில்லாமல்இருந்தது. மஹத் தத்துவத்தினின்றும் அபிவிருத்தி பெற்றுவரும் மானசிக புத்திரர்கள் இந்த மிருக ரூப மானிட சரீரத்தைப்பார்த்துஇவைகள் தங்களுக்குத் தகுந்த வாசஸ்தானமென்று நினைத்து, இரண்டரை மன்லந்தரம் முதன்

மூன்றரை மன்வந்திரம் வரையில் இவைகளில் குடிவந்து கொண்டிருந்தார்கள். இப்போதுதான் மனதின் பிரவேசத்தினால் மிருக மானிட ரூபம் சுத்தமானுஷ்ய ரூபம் ஆயிற்று. மனம் என்கின்ற மானச புத்திரன் முதல் சரீரத்தில் சம்பந்தப்பட்டதுபோல ஒவ்வொரு சரீரத்திலும் அவதரிக்கின்றான். இதனால் மனிதன் என்னும் பதமே மனதின் சம்பந்தத்தை வியக்தமாகத் தெரிவிக்கின்றதன்றோ? இம்மனிதனே தேவாம்சத்தையும் மிருகாம்சத்தையும் இணைக்கும் கட்டு. தான் சுயம் ஞான சொரூபமாயிருந்தாலும் தன் சம்பந்தம் பெற்ற சரீரம் என்கின்ற உபாதியைச் சுத்தப்படுத்தி அதன் மூலம் சுய அநுபவ ஞானத்தை சம்பாதிக்கும்பொருட்டே பல ஜன்மங்களை இம்மானச புத்திரன் எடுக்கிறான். ஆகையினால் ஜன்மங்கள் மனசுக்கே ஏற்பட்டனவாம் என்பதினால் புனர் ஜன்மம் எடுப்பது மனம்தான் என்பது தெளிவாகும்.

ஆனால் சிலர் ஆத்மா—புத்தி மனசு ஆகிய மூன்றின் சேர்க்கையே ஜன்மம் உண்டாவதற்குக் காரணம் என்பர். இதில் குற்றமொன்றுமில்லை யெனினும், ஆத்ம:புத்தி அகண்டமாயும் எல்லாருக்கும் பொதுவாயும் இருப்பதினால், ஆராய்ந்து நோக்குவோமாயின் மனசுக்கே ஜன்மம் உண்டாகின்றதென்பது செவ்வையாக விளங்கும். எவ்விதமெனில், ஒரே ஜன்மத்தில் அநேக விஷயங்களினின்றும் ஒரு சாரத்தையும் கிரஹிப்பதுபோல அநேக ஜன்மங்களின் சாரத்தினின்றும் மனசானது தீர்மானமான ஞானத்தைச் சம்பாதிக்கின்றது. இவ்விதம் சம்பாதித்து மீண்டும் தன் ஸ்தானமாகிய பரமபதத்தையடைவதற்கே புனர் ஜன்மம் ஏற்பட்டிருக்கின்றது.

## அத்தியாயம் 25.

# புனர் ஜன்மம் கொள்ளாதது எது?

மானசபுத்திரன் குடிவருமுன் மனுஷ சரீரம் ஆகாரத்தைத் தரித்துக்கொண்டு வந்ததென்று முன் கூறியிருக்கின்றோம்.

மனிதன் தேஜஸைப்பெற்றிராது ஜன்மம முதல் பைத்தியக்காரனாக இருக்கின்றவனுடைய ரூபம் மனிதரூபமாயிருக்கினும் அவன் மிருகத்துக்குச் சமானமானவனாயிருக்கின்றான். ஆகையினால் இரண்டு வர்க்கங்களையும் பேதப்படுத்திக் காண்பிப்பது மனதேயாம். ஆனால் இது மூளையின் மூலமாகத் தன் சக்திகளை வெளியிடுகின்றதென்பதை முன்னமே கூறியிருக்கின்றோம்.

மிருக-மானிடரூபம் மாதரு கர்ப்பத்திலிருந்து ஜனிக்கின்றது

மனது அதனுடன் கலந்து கொள்ளுகின்றது.

அதாவது ஒரே மனது ஒரு ஜன்மத்தில் இராமன் என்பவனது மூளை மூலமும்; ஒரு ஜன்மத்தில் கிருஷ்ணன் என்பவனது மூளை மூலமும் இதேபோல ஒவ்வொரு ஜன்மத்திலும் அததன்மிருக-மானிடமூளை மூலமாகவும் வியவகரிக்கின்றது. ஒவ்வொரு ஜ்ன்மத்திலும் ஜனிக்கும் மூளை வெவ்வேறாக இருக்க அதனுடன் கலந்து வரும் மனம் மட்டும் ஒன்றாகவே இருக்கின்றது. எங்ஙனமெனின், அநேக உடுப்புகளைத் தரிக்கும் ஒருவன் தானே அந்த உடுப்புகள் ஆகாததுபோல அநேக தோல் உடுப்புகளாகின்ற ஸ்தூல சரீரம், லிங்க சரீரம், காமரூபம் இவைகளைத் தரிக்கிற மனது அவைகள் ஆகாது.

ஸ்தூல சரீரம் முதலியவைகளின் அணுக்கள் பிரிந்து போவதையும், வேறு சரீர உற்பத்திக்கு உபயோகப்பட்டுப் போவதையும் முன்னர் கூறியிருக்கிறோம். ஆகையினால் இவைகளுக்குப் புனர் ஜன்மம் சொல்லக்கூடாது. ஆனால் புனர் ஜன்மம் நாசமற்றதான மனசுக்கே சொல்லவேண்டும்.

## அத்தியாயம் 26.

# மனிதன் தன்னிலைக்கு எப்படி வருகிறான்.

மனிதனானவன் சத்யம், ஜீவதயை, பொறுமை, உண்மையான தெய்வபக்தி, சுத்தம், பொறாமையின்மை, மங்களகுணம், லோபத்தனமில்லாமையாகிய மேன்மையான குணங்களை உடையவனாய் இருக்கவேண்டும்.

சத்யம்:—பிறருக்குத்துன்பம் வராதபடி உண்மையையே யுரைத்தல். மெய்ம்மொழியினாலும் தீமையுண்டாகுமாயின் அது பொய்க்குச்சமானமேயாம். பொய்யினாலும் நன்மையுண்டாகுமாயின் அது மெய்க்குச் சமானமென்னலாம். இதையே தமிழறிவிற்சிறந்தனிப்பெரும் பெயர் பெற்று விளங்கிய தமிழ்ப்பேராசிரியரா ஸ்ரீமத் திருவள்ளுவ தேசிகர்.

"பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"

என நவின்று போயினார். என்றாலும் மனிதன் உண்மை மொழிவதையே உறுதியாகக் கொள்ளல் வேண்டும்.

தயை:—பிறர்க்கு நேர்ந்த துன்பம் தனக்கு நேர்ந்ததுபோல மனம் நொந்து அதை நீக்க முயலுதலே தயை யென்னப்படும்.

பொறுமை:—தனக்குப் பிறர் செய்த கொடுமைக்குக் கோபங் கொள்ளாதிருத்தல் பொறுமையெனப்படும்.

தெய்வபக்தி:—கடவுளிடத்தும் ஞானிகளிடத்தும் அன்புடனிருத்தலேயாம். பூஜையென்பது ஈஸ்வரனிடத்தில் பரமபிரேமை வைப்பதும், சமஸ்த பிராணிகளிடத்தும், காருண்யம் வைப்பதும் பூஜை யென்னப்படும்.

சுத்தம்:—மனம், வாக்கு காயம் இவைகளினுல் தகாததான காரியங்களை எண்ணுமலிருப்பதும், சொல்லாமலிருப்பதும், செய்யாமலிருப்பதுமே சுத்தமாகும்.

மங்களகுணம்:—மனம், வாக்கு, காயம் ஆகிய இம்மூன்றினுலும் தனக்கேயாயினும், பிறனுக்காயினும் துக்ககரமானவைகளைப் பரிசியாமல் பிரியமானவைகளையே செய்தல் மங்களகுணம் எனப்படும்.

மனிதனுப் பிறந்தவன் நீக்க வேண்டிய குணங்கள் என்வயெனில், 1. ராகம், 2. துவேஷம், 3. காமம், 4. குரோதம், 5. லோபம், 6. மோகம், 7. மதம், 8. மாச்சரியம் 9. ஈரிஷை, 10. அசூயை, 11. டம்பம், 12. தர்ப்பம், 13. அஹங்காரம் என்பனவாம்.

1 ராகம் என்பது பரஸ்திரீயை இச்சிப்பது.

2 துவேஷம் என்பது அபகாரத்திற்குப் பிரதி அபகாரம் நினைப்பது.

3 காமம் என்பது மென்மேலும் பொருள் முதலியவைகளின் மீது ஆசைகொள்வது.

4 குரோதம் என்பது தன் காரியத்திற்கு விக்கினஞ்செய்தவன் மீது ஆக்ரமித்தல்.

5 லோபம் என்பது ஒரு காசும் செலவிடக்கூடாதெனும் சித்த விருத்தி.

6 மோகம் என்பது தான் சம்பாதித்த பொருள்களின் மீது பிரியம் மோதப்தப் பிரமோதமாய் வரும் சித்த விருத்தி; வசிகரமுடைய ஸ்திரீயின் மீது மிதமிஞ்சின ஆசையை வைத்தல்.

7 மதம் என்பது ஐஸ்வர்யம் அல்லது கல்வி அதிகரித்தலினுல் கொள்ளும் கர்வம்.

8 மார்ச்சரியம்—என்பதுஒருவர் சுகத்துடன் வாழ்வதைக்கண்டு சகியாமை.

9 ஈரிஷை என்பது தனக்கேற்பட்ட துக்கம் அல்லது துன்பம் பிறருக்கும் வராதா என்றெண்ணுவது.

10 அசூயை என்பது தனக்கேற்பட்டிருக்கும் சுகம் பிறர்க்கு வரலாமா என்னும் எண்ணம்.

11 டம்பம் என்பது தன் தர்மம், வீடு, ஆடை, ஆபரணதிகள், இன்னுமிரானின்ற இதர செல்வங்களைப் பலரும் கண்டு மெச்சவேணுமென்னும் எண்ணமே டம்பமெனப்படும்.

12 தர்ப்பம் சகலசம்பத்தும் தனக்கே உரியதென எண்ணல்.

13 அகங்காரம் என்பது தனக்குமிஞ்சினவன் ஒருவனுமில்லை யென்றெண்ணல்.

தனக்குக் கல்வி கற்பித்த குருவையல்லது சாஸ்திரோபதேசம் செய்த குருவை தெய்வமென வெண்ணி உபசரிக்கவேண்டும் அற்பமாகிலும் ஆன்மா கடைத்தேறும்வழியை யறிவித்தவனையும் குருவாகவே எண்ணவேண்டும்.

மனிதன் முக்கியமாய் அறிந்து ஒழுக வேண்டிய முறைகளிற் சிறந்தன கூறுவாம்.

"எங்கும் தன்மைத்தாய் ஏகமாய் இருப்பதுதான் ஆத்மா எனப்படும். அத்வைத சித்தாந்தப்படி அந்த ஆத்மாவினிடத்தில் கயிற்றில் பாம்பு தோன்றுவதுபோல மாயை ஜனித்து, அதன் சேர்க்கையினால் ஜகத் சிருஷ்டி யுண்டாயிற்றென்றும்; ஜகத்தைச் சிருஷ்டித்து அந்தர்யாமியாய், சத்யம். ஞானம், அநந்தம், ஆனந்தம் முதலிய குணங்களுடன் பொருந்தினவனுயுள்ளவனே ஈஸ்வரன் என்றும் முடிவில்லாத தத்வத சொரூபியாயிருக்கும் ஈஸ்வரன் சர்வ வியாபகமாயிருந்தும், தன்னுருவம் இவ்வளவென்று பாவனை செய்யுங்கால், அதன் தொடர்ச்சியாய் இடம், காலம், தொழில்களும் பலநாம ரூப விகாரங்களும் ஆரோபமாயுண்டாகி அந்த ஈஸ்வரனே ஜீவனுகின்றுன். பரிபூரண ஆத்மாவாகிய சைதன்னியத்தினிடத்து மாயை யென்னும் பிரமாண்ட கடம் உண்டாயிற்று கடத்திலுள்ள வெளியை ஆவரித்துப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் தீபம்போல, மாயையினின்றும் உண்டான பிரம்மாண்டத்தில் ஈஸ்வரன் விளங்குகின்றுன் கடத்திலுள்ள தீபம் கடத்தின் பலதுவாரங்களின் வழியாகக் கடத்தின் துவார ஆகாரத்துடன் கூடி, அந்த ரந்திர ஆகாசஆதாரமாய் அநேக தீபங்களாகப் பிரகாசிப்பதுபோலவே ஈஸ்வரன் ஒருவனே மாயையாகிய பிரம்மாண்டத்தின் விஷேபமான ரந்திரங்களாலே ஆன்மாவை ஆதாரமாகக் கொண்டு அநந்தம் ஜீவர்களாக விளங்குகின்றுன். ஆதலால் ஈஸ்வரன் ஒருவனே எல்லா ஜீவர்களுக்கும் ஆதாரமெனக் கொள்ளவேண்டும் எங்ஙனம் எனெனின், கடத்திற்கும் விளக்கிற்கும் ஆதாரம் ஆகாசமே

போல, பிண்டாண்ட பிரம்மாண்ட ரூபமான சகல பிரபஞ்சத்திற்கும் சர்வவியாபகமான ஆத்மாவே ஆதாரம். இதனால் ஆத்மாவுக்கு ஈஸ்வரத்துவம், ஜீவத்துவம் இரண்டும் உண்டென ஏற்படுகின்றது. இது எங்ஙனம் ஏற்பட்டதெனின் சமஷ்டி வியஷ்டியாலுண்டான பேதம் எனப்படும் அவை :—

| சமஷ்டி. | வியஷ்டி. |
| --- | --- |
| (1) வெகு ஜனங்கள். | (1) ஒரு மனிதன். |
| (2) காடு. | (2) காட்டில் ஒரு விருக்ஷம். |
| (3) கிராமம். | (3) கிராமத்தில் ஒரு வீடு. |
| (4) ஈஸ்வரன். | (4) ஜீவன். |

சர்வ ஜீவர்களின் தொகையே ஈஸ்வரன் என்பதனால் சகல ஜீவர்களினிடத்தும் அந்தர்யாமியாய் விளங்குபவன் ஈஸ்வரன் எனப்பொருளாம். எங்ஙனமெனின். ஒரே மனிதன், அவனுக்குப் பிள்ளையிருக்கப் பிதா வென்றும், பேரனிருக்கப் பாட்டன் என்றும், பெயர் ஏற்படுவது போல எங்கும் வியாபகமான ஆத்மாவுக்கே சமஷ்டி உபாதியால் ஈஸ்வரன் எனவும், வியஷ்டியுபாதியால் ஜீவனெனவும் பெயருண்டாகின்றது. ஈஸ்வரன் சர்வக்ஞனாகவு மிருக்கின்றான். ஓர் பெரிய ஏரியின் ஜலம் அநேக கிராமங்களை இரக்ஷிக்கும் தன்மையது. ஓர் குளத்தின் ஜலமோ ஒரு கிராமத்தைமட்டிலும் இரக்ஷிக்கும் தன்மையதாவது போலும்; ஓர் விளக்கின் ஒளி சமீபத்திலுள்ள வஸ்துக்களைமட்டும் விளக்குவிக்கும். தீவர்த்தியோவெனில் கொஞ்சதூரத்துள்ள வஸ்துக்களைப் பிரகாசிப்பிக்கும்; நிற்க, தற்காலம் காணப்படும் காஸ்லைட் (Gas Light) என்னும் விளக்கோவெனில், தீவர்த்தியைக்காட்டிலும் அதிகமாகப் பிரகாசித்து அதிகமான ஒளி தருகின்றது; அதிலும் அதிகமான பிரகாசத்தை மின்சார விளக்கு (Electric Light) நீண்ட தூரத்துள்ள வஸ்துக்களை விளக்கக்கூடிய அவ்வளவு பிரகாசத்தைத் தருகின்றது. இவைகளெல்லாம் நாம் காணும் காக்ஷியேயாகுமன்றோ? இஃதேபோல ஆத்ம சைதன்யத்துக்கு சமஷ்டியினால் மஹத்வமான சர்வக்ஞத்வமும், வியஷ்டியினால் அணுத்வமாகிய கிஞ்சிக்ஞத்வமும் உண்டாம்.

இவ்வண்ணமாக சமஷ்டி வியஷ்டி என்னும் உபாதியாலும், பேரறிவு சிற்றறிவு என்னும் உணர்வினாலும் ஈஸ்வரனுக்கும் ஜீவனுக்கும் பேதமுண்டு ஆனால் இந்த பேதம் கற்பிதமென்பது அத்வைதக் கொள்கையாம். எங்ஙனம் எனின், ஏரியின் ஜலத்துக்கும் தடாகத்தின் ஜலத்துக்கும் பேதமில்லையோ அதுபோலும், அக்கினிக்கும் விளக்கொளிக்கும் பேதமில்லையோ அது போலும், பேதமாயிருக்கும் உபாதிகளை நீக்கிப் பார்க்கின் ஈஸ்வரனிடமிருப்பதும், ஜீவனிடமிருப்பதும் ஓரே சைதன்ய விளக்கமென அறியலாகும்.

இத்தியாதி உண்மைகளை உணர்ந்தவர்களே தந்நிலைமை யின்னதெனத் தெளிந்து அந்நிலையை யடைந்தவராவர் என்பது ஆன்றோர் துணிபு.

இவ்வாறு திவ்விய ஞானம் பெற்றவனே தன்னிலையான முடிவுக்கு வந்து பூரணத்தையடைகின்றானென்றும், இவனையே ஜீவன் முக்தன் என்றும் கூறப்படுவது. இந்நெறியையே மனிதராய் ஒவ்வொருவரும் அடைய வேண்டுவதென ஸ்ரீமத் திருவள்ளுவ நாயனாரும்

"பிறப்பு என்னும் பேதமை நீங்கச் சிறப்பு என்னும்
செம்பொருள் காண்பது அறிவு"

எனத் திருவாய் மலர்ந்தருளிச் சென்றார்.

---

## அத்தியாயம் 27.

# மனிதன் மிருகமுதலியன ஆகக் கூடுமா?

மனித ஜன்மமே உலகில் நாம் எடுக்கும் முடிவான ஜன்மம் என்பது ஆன்றோர்களின் துணிபும் சாஸ்திரங்களின் முடிபுமாம்.

பூர்வம் பல பிறவிகளிற் செய்த புண்ணியங்களுக்கிடாகவே மனிதப் பிறவியை யடைகின்றோமென்பது புராணேதிகாசங்களின் தீர்க்க தரிசனமாகும்.

மனிதன் ஆதியில் பிருதிவியாகிப் பின்னர் அப்புருவெடுத்து, மூன்றாவதாக வாயுவிற் சனித்து, நான்காம் முறை தீயெனத் தோன்றி யதன் பின்னர் ஆகாயமாகின்றானெனவும், முடிவில் ஐம்பூதங்களும், ஆறறிவும் கூடிய மனித ரூபம் எய்துகின்றானென்றும் ஒரு சிலர் கூறுவர். ஆனால் தபசிரேஷ்டர்கள் அங்ஙனமல்லவென்றும், அவனி யின் மாட்டுப் பல்வேறு பிறவிகளையெய்துகின்றன ரென்றும் கூறா நிற்பர். ஆனால் மனிதன் முக்கியமாய்ப் பல பிறவிகளையெடுக்கின்றா னென்பது மட்டும் உண்மை யென்பது வேதங்களினின்றும் துணியப் படுவதாகும். அவ்விதம் மனிதன் அல்லது ஜீவன் பிரவேசிக்கும் ஜன் மங்களைப்பற்றி நமது சாஸ்திரங்கள் கூறுவன எவையெனின்,

(1) சராயுஜம்—(பையிற்கட்டுப்பட்டுப் பிறப்பது)
(2) அண்டஜம்—(முட்டையிற் கட்டுப்பட்டுப் பிறப்பது)
(3) ஸ்வேதசம்—(வேர்வையினிடமாகப் பிறப்பது)
(4) உற்பீஜம்—(பூமியில் முளைத்து வருவது)

ஆக நான்கு வகைத்தாம்.

இதை யோனிபேதமாகப் பிரித்து பகுக்கப்படுமிடத்து இதுவே எண்பத்து நான்கு லக்ஷம் யோனிபேதம் எனப் பகுக்கப்பட்டிருக் கின்றது.

யோனிபேதங்களின் விளக்கமாவன :—

| | | | |
|---|---|---|---|
| (1) | தேவபேதம் | ... ... 16 | லக்ஷம். |
| (2) | மானிடபேதம் | ... ... 9 | ,, |
| (3) | மிருகபேதம் | ... ... 10 | ,, |
| (4) | பக்ஷிபேதம் | ... ... 10 | ,, |
| (5) | ஊர்வனபேதம் | ... ... 11 | ,, |
| (6) | நீர் வாழ்வனபேதம்... | ... 10 | ,, |
| (7) | தாவரபேதம் | ... ... 18 | ,, |
| | ஆக | ... 84 | லக்ஷம். |

மேற்சொல்லப்பட்ட எண்பத்து நான்கு லக்ஷம் பேதப் பிறவி களும் எழுவித யோனிமூலம் பிறக்கின்றனவாயினும், இவ்வளவிலும் கடைசியாகப் பிறப்பதே மானிடபேதமான உற்பத்தியென்றும், அவ்

விதம் பிறக்கும் மானிடர்கள் மரித்த பின்னர் மீண்டும் தாழ்ந்த பிறப் பினையடையார்களென்பதே பல்லோருடைய துணிபா யிருக்கின்றது.

மஹா தபஸ்விகளுங்கூட கூறுவது என்னையெனின், முன்னர் நாம் எடுத்த பிறப்புகள் இன்னதினைய தென்னும் விவரணமேயாம். அவையாவன :—

(1) புல்லாகிப் பூடாகிப் புலர்ந்தேன் பலகாலம் ;
(2) கல்லாகி மரமாகி கழிந்தேன் பலகாலம் ;
(3) கிரியாய்க் கீடமாய்க் கெட்டநாள் பலகாலம் ;
(4) நீரியாய் ஊர்வனவாய் நின்றநாள் பலகாலம் ;
(5) பூதமொடு தேவருமாய்ப் போனநாள் பலகாலம் ;
(6) வேதனைசெய் தானவராய் வீந்தநாள் பலகாலம் ;
(7) அன்னைவயிற்றில் அழிந்தநாள் பலகாலம் ;

எனப் பகர்ந்திருப்பதினாலும், மானிட ஜன்மமே கடைசியான தென்ப தும் பெறப்பட்டது.

இதனையே குப்த வித்யா சாஸ்திரமும் வலியுறுத்துகின்றது. நிற்க, மனிதன் மிருகமாகக் கூடுமாவென நாம் எடுத்துக்கொண்ட பிரச்னையைச் சிறிது வரைவாம்.

ஒருவன் ஒரு ஜன்மத்தில் மனிதனாக இருந்து மறுஜன்மத்தில் மிருகமாகப் பிறக்கக் கூடுமென்று சிலர் சொல்லுகின்றார்கள். இது அசம்பாவிதமானதேயாம். ஏனெனில், ஒவ்வொரு ஜன்மத்திலும் பிரவேசித்து வருவது மனமேயன்றி வேறல்ல வென்றும், மிருக சரீரம் தங்களுடைய காரியத்திற்கு உபயோகப்படாததினால் இரண் டரை மன்வந்தரத்திற்குப் பின்னரே மிருக மானிட சரீரத்தில் மானச புத்திரர்கள் பிரவேசித்து மனிதர்களை ஆக்கினார்களென்றும் முன் சொல்லப்பட்டிருக்கின்றது.

அப்போதே உபயோகப்படாத மிருக சரீரத்தில் இப்போது அவர்கள் எவ்வாறு பிரவேசிக்கக்கூடும் ?

ஆனால் ஜடபாதர் என்பவர் மான் ரூபமாகப் பிறந்தமையினால் மனிதன் மிருகமாகவும் ஜனிக்கக் கூடுமேயென்று ஆக்ஷேபஞ் சொல்ல ஏற்படுமாயின், இதற்கு மனு ஸ்மிருதியில் பன்னிரண்டாம் அத்தியா யத்தின் நாற்பதாம் ஸ்லோகத்தில் எத்தகைய சமாதானம் கூறப்பட்

டிருக்கின்றதெனில், சத்துவ ரஜஸ் தமோ குணங்களில் சத்துவகுணம் தேவாம்சத்தையும், ரஜோகுணம் மானிட அம்சத்தையும், தமோ குணம் மிருக அம்சத்தையும் அடைகின்றனவே தவிர முக்குணங்களுடன் கூடினவன் மீண்டும் மிருகமாகவே பிறக்கின்றான் என்பதல்ல. அதாவது ஒருவனை நரியென்று சொல்லுவதில் அவன் நரி வயிற்றில் நரி ரூபமாகப் பிறந்திருக்கின்றான் என்பது எப்படி நமது கருத்தல்லவோ அதுபோலும், ஆனால் அவனது கபடம் நரியின் கபடத்துக்குச் சமானமாக இருப்பதால் அவனை நரியென உவமித்து உரைத்தல்போலும் மனிதன் மிருக ரூபமாகப் பிறக்கின்றான் என்பதை அறியவேண்டியது.

பிரம்ம வித்தையின் பிரகாரம் மனம் மிருக ரூப சரீரத்தில் பிரவேசிக்கமாட்டாது.

ஒரு மானிட சரீரத்திலிருந்து வேறு மானிட சரீரத்தில் பிரவேசிப்பதே புனர் ஜன்மம். ஆதலால் இது மனசுக்கு ஏற்பட்டிருக்கின்றதே தவிர மிருகத்துக்கு ஏற்படவில்லை.

இதனால் மனிதன் மனிதனாகவே பிறக்கின்றான் என்பது சித்தாந்தமாகும்.

---

## அத்தியாயம் ௨௮.

# புனர் ஜன்மம் ஏற்படும் விதம்.

பிரம்மாண்டத்தின் தத்துவங்களும் அதாவது பூமிகைகளும் மனிதனுடைய தத்துவங்களும் சம்பந்தப்பட்டிருப்பதாக முன்னர் கூறப்பட்டது.

மனம் மஹத்தத்துவத்தின் அம்சமானதால் அதின் சக்திகளும் மனதுக்கு உண்டு. மஹத்தத்துவம் ரூபத்துக்கு ஆதாரம். ஆகையால் மனதும் தன் சக்தியால் பாவனைக்கு ரூபம் கொடுக்கக்கூடும்.

மனதில் உதிக்கும் பாவத்துக்குக் கல்தச்சன், தச்சன், சித்திரக்காரன் இவர்கள் கல்லிலும் மரத்திலும், படத்திலும், உருவத்தைக்

கொடுக்கின்றார்களல்லவா ? ஒருவன் மனோபாவத்தை அவன் சரீர லக்ஷணத்திலிருந்து நாம் அறியவில்லையா ? ஸ்தூல அணுக்களுக்கு மனோபாவம் தன் ரூபத்தைக் கொடுக்காதவரையில் இது எவ்வண்ணம் சாத்தியமாகும் ? ஸ்தூல அணுக்களே மனோபாவத்தால் ரூபத்தைத் தரிக்கும்படி இருந்தால், சூக்ஷ்ம அணுக்களுக்கு வேண்டிய ரூபத்தை மனோபாவம் தருவதில் சந்தேகம் என்ன ? ஆகையினால் உருவத்தைக் கொடுக்கும் சக்தி மனதிற்கே இருக்கிறது.

பிரம்மாண்டத்தில் ஏழு பூமிகைகளுண்டென்றோ மன்றோ ? இதில் மனம் ஐந்தாவது பூமிகையாகும். இவ் ஏழிலும் முன்வருவது பின் வருவதைப் பார்க்கிலும் ஸ்தூலம். பாவம் என்பது மனோதர்மம் ஆனதால் ஜனிக்கப்பட்ட ஒவ்வொரு பாவம் மானிசிக பூமிகையில் ரூபத்தைத் தரிக்கிறது. அதினின்றும் காம மானசிக நிலைமைக்கு வந்து அவ்விடத்தில் ஸ்வல்ப ஸ்தூலமாகின்றது. சமயம் வரும் வரையில் இந்தப் பூமிகையில்தான் அந்த பாவம் இருந்து சமயம் வந்தவுடன் ஸ்தூல அணுக்களுடன் கலந்து சாதாரண ஜனங்களுக்குப் பிரத்தியக்ஷமாக ஒரு ரூபத்துடன் அது விளங்குகின்றது. கண்ணுக்குக் கோசரமாகாத அதி சூக்ஷ்மமான பதார்த்தமும் ஸ்தூலமாகி பிரத்தியக்ஷமாவதற்கு ஜல உதாரணத்தைப் பார்க்கக் கண்ணுக்குத் தெரியாத சில ஆவிகள் கண்ணுக்குத் தெரியும்படியான சில ஆவிகளாகி பிறகு ஜல ரூபமாகி ஜலம் பனிக்கட்டியாவதும் பிரத்தியக்ஷமாய்க் காணக் கிடப்பதொன்றன்றோ ?

ஆகையால் சூக்ஷ்ம ரூபம் ஸ்தூலத்தைத் தரிக்குமென்பதில் ஐயப்பாடேதேனும் உண்டோ ? இது போலவே மனோபாவம் ஜனித்தவுடன் எங்கும் நிறைந்ததான பிரகிருதியுடன் கலந்து அதி சூக்ஷ்மமான ரூபத்தைத் தரிக்கின்றது.

ஆவியாவது போல காம மன நிலைமையில் ரூபம் தரித்து ஜலம் ஆவதுபோல, லிங்க பூமிகையில் சூக்ஷ்ம ரூபத்தையும் ஜலக்கட்டிபோல ஸ்தூல பூமிகையில் ஸ்தூல ரூபத்தையும் தரிக்கின்றது. அப்பிரத்தியக்ஷம் பிரத்தியக்ஷமாகும் என்பதும் கந்த மூலாதிகளைப் பார்க்கின்றதினாலும் தெரியலாகும். அப்பிரத்தியக்ஷமான சில வாயுக்களைக் கிரஹிக்காமல் எவ்விதம் இவைகள் வளர்கின்றன ? ஆகையால் அதி சூக்ஷ்மமான ரூபங்கள் அதி ஸ்தூல ரூபத்தைத் தரிப்பது சகஜம்.

ஸ்தூல வியவஹாரங்களெல்லாம் சூக்ஷ்ம காரணங்களின் காரியங்களே தவிர வேறில்லை. குப்தவித்தையின்படி இந்த ஸ்தூல தேகமும் சூக்ஷ்ம காரணத்தின் காரியமே. அதாவது பாத்திரத்தை வார்க்கிற வார்ப்புக்காரனுடைய மண் குகைபோலிருக்கும் லிங்க சரீரமாகிற குகையில் ஸ்தூல சரீரம் வார்க்கப்படுகின்றது.

சித்திரத்தின் பாவத்தை மனசில் தரிக்கிறவன் அந்தப் பாவத்துக்குக் காகிதத்தில் முதலில் பென்ஸிலால் (எழுது கருவி) சூக்ஷ்ம ரூபத்தைக் கொடுத்துப் பிறகு வர்ணம் முதலியவைகளினால் ஸ்தூல ரூபத்தைக் கொடுப்பது போல சூக்ஷ்மபாவம் லிங்க சரீரமாகிப் பின் ஸ்தூல சரீரமாகின்றது.

நம்முடைய வியவசாரத்தில் நாம்பிரதி க்ஷணமும் மனோபாவங்களை உண்டு பண்ணிக் கொண்டேயிருக்கிறோம். ஆனால் இந்தப் பாவங்கள் நம்மைச் சுற்றி யிருக்கும் ஆகாசத்தில் பதிந்து க்ஷணத்திற்கு க்ஷணம் விருத்தியடைந்துக்கொண்டே யிருக்கின்றன. இவைகளின் சேர்க்கைப் பலன்தான் மனிதனுடைய குணமாக விளங்குகின்றது. மரண சந்தர்ப்பத்தில் அதிக சூக்ஷ்மமான சரீரங்கள் ஸ்தூலத்தை விட்டுப் பிரிகின்றன. லிங்க சரீரம் மட்டும் ஸ்தூலத்தைப்போல் நாச மடைகின்றது. பழைய அநுபவங்களின் காரியமான பாவனா சரீரத்தின் ஸ்திதியைப் பற்றி அதிக விவரம் சாதாரண ஜனங்களுக்குச் சொல்லப்படவில்லை. ஆயினும் நிச்சயமாய் எல்லாருக்கும் தெரியவருவது யாதெனின், புனர் ஜன்ம காலம் வருவதற்கு முன் இந்தப் பாவனா சரீரம் லிங்க நிலைமைக்கு வந்து அந்நிலைமையின் அணுக்களைத் தரித்து இனி ஜனிக்கப் போகிற ஸ்தூல சரீரத்திற்கு லிங்க சரீரமாகத் தயாரா யிருக்கிறது. ஸ்தூல மூளையும் ஸ்தூல சரீரம் போல் இந்த லிங்க சரீரத்தால் உண்டாவதால் இந்த மூளையின் ஆகாரமும் முந்தின மனோபாவங்களைப் பொறுத்திருக்கின்றது. நல்ல மனிதன் அன்பு முதலிய பரோபகார பாவங்களையே உண்டு பண்ணுகிறான். இவைகள் புனர் ஜன்ம காலத்தில் லிங்க ரூபத்தைத் தரித்து அநுகுணமான இடங்களில் ஸ்தூல ரூபமாய் வெளியாகி விர்த்தியாகின்றன. கெட்ட மனிதன் ஸ்வயப் பிரயோஜனத்தையே உத்தேசித்து ஸ்வயப்பிரயோஜன சம்பந்தமான பாவங்களையே உண்டுபண்ணுகிறான். புனர் ஜன்ம காலத்துக்குமுன் இந்தப் பாவங்கள் லிங்க ரூபத்தைத் தரித்து அவைகளுக்கு அநுகுணமான இடங்களில் ஸ்தூல ரூபத்தை யெடுத்து மனிதனாகக் காணப்படுகின்றான். ஆகையால் இப்போது காணப்படுகிற மனுஷ்ய ஆகாரம்

முன் உண்டுபண்ணின பாவங்களின் காரியமே தவிர வேறில்லை. பிறவி முதல் காணப்படும் மனோ குணங்கள் முந்தின காரணங்களின் காரியங்களேயாம். இவ்விதமே இந்த ஜன்மம் மறு ஜன்மத்தையும், இவ்வாறே மேலும் மேலும் ஜன்மங்கள் உண்டாகின்றன. ஒவ்வொரு ஜன்மத்திலும் மனதின் ஆவிர்ப்பாவம் அபிவிர்த்தியாகிக்கொண்டே வருவதில் மனது தான் நிரந்தரமான தென்றும் நசித்துப்போகும் சரீரம் நாம் அல்லவென்றும் மனிதனுக்குத் தெரியவந்து இந்தப் பாவனை பலப்பட பலப்பட மிருக ஸ்வபாவம் குறையக் குறைய கடைசியாகச் சுத்த தெய்வ ரூபத்தை மனிதன் அடைகிறான்.

புனர் ஜன்மத்தின் பிரயோசனம் முன் சொல்லியபடி இதுயாது எனின், மிருக—மனுஷ்ய ரூபத்தைத் தெய்வ ரூபத்துக்கு உபயோகமாகும்படியான கருவியாக ஒழுங்குபடுத்தித் திருத்துவதேயாம். இந்த சிக்ஷையில் மனமே சம்பந்தப்பட்டிருக்கின்றது.

இவ்வண்ணமாகத் தெய்வாம்சம் அடையும் விதம் எங்ஙனமெனில், மிருக—மானிட ரூபத்தில் மானஸ புத்திரன் குடிபுகுந்த காலத்தில் அந்த வீடு நாம் அறியும் ஸ்தூல அணுக்களால் கட்டப்படவில்லை. இப்படிப்பட்ட சரீரத்திலுள்ள மூளையின் மூலமாக வியவாரிக்கும் மனது தன்னுடைய சர்வ திருஷ்டி சர்வக்ஞதை முதலான குணங்களை விளங்கும்படிச் செய்கிறது. ஆனால் நம்முடைய தற்கால மூளையின் மூலமாக விளங்குகிற மானசிக குணங்கள் அக்காலத்தில் விளங்கவில்லை. மானசிக குணங்கள் இந்த ஸ்தூல அணுக்களுடன் சேர்ந்த பிறகு தான் தோன்றுகின்றன. அந்தக் காலத்தில் சரீரங்கள் வெகு சூக்ஷ்மமான அணுக்களால் உண்டாக்கப்பட்டிருந்தபடியால் மிக்க இலேசான மறைவிலுள்ள பதார்த்தங்கள் வருத்த மன்றியில் தெரியவருவது போல ஒரு சரீரத்தின் மனதில் விளங்கும் பாவங்களை வேறு சரீரத்திலுள்ள மனது தானாகவே அறியும்படியிருந்தது. இப்பேர்ப்பட்ட சரீரத்தில் சாக்ஷாத்காரமான ஞானமே ஜனித்துக்கொண்டிருந்தது. காலம் செல்லச் செல்ல மனோபாவங்கள் ஸ்தூல அணுக்கள் மூலமாக விளங்கும்படி நேரிட்டபோது ஸ்தூல அணுக்களில் மனோபாவங்கள் முன்போல விரைவில் பதிய முடியாமல் யுக்தியாலும், பாஷையாலும், ஒரு சரீரத்திலிருந்து வேறு ஒரு சரீரத்திற்குப் போகும்படி ஏற்பட்டது.

சூக்ஷ்மத்தைப் பார்த்தல் கேட்டல் முதலியவை சூக்ஷ்ம சரீர மூளையின் தர்மங்கள். ஸ்தூலத்தை மட்டும் அறிவது நம்முடைய ஸ்தூல மூளையின் தர்மம். இதுவரையில் மனசின் சக்திகள் சூக்ஷ்மத் துவார ஸ்தூல மூளைமூலமாக வெளிப்பட்டுக்கொண்டே வந்தன இந்த மூளை பக்குவமானவுடன் வருத்தமின்றி சூக்ஷ்மபாவங்களை உடனுக்குடனே முன்போல் அறிவது மூளையின் மேல்விர்த்தி லக்ஷணம். இப்பொழுது சூக்ஷ்ம பாவத்தை அறியாமல மத்தியில் இழந்திருந்த சக்தியும் மூளைமூலமாக விளங்கும் சக்தியும் ஆக இரண்டு சக்திகளும் விளங்குகின்றன. இந்த சக்திகள் விருத்தியாக மனதின் சாக்ஷாத் ஞானசக்திகளெல்லாம் நேரில் விளங்குகின்றன. இவ்வண்ணம் சாக்ஷாத்தாக விளங்கும் சக்தியை யுடையவர்களில் சிலர் இக்காலத்திலும் காணப்படுகிறார்கள். இவர்களையே மஹான்களென்று உலகத்தவர்கள் புகழ்ந்து கூறுகின்றார்கள் இந்த மஹான்களுடைய சரீரம் இவர்களை எந்தவிதத்திலும் பந்தத்துக்கு உட்படுத்துகிறதில்லை. இவர்களுடைய ஆக்ஞை (உத்தரவை)யை நிறைவேற்றவே இந்தச் சரீரம் இருக்கிறது. மனசு தன்நிலைமையில் சாதாரணமாய் வியவகரிக்கக் கூடும். மற்ற நிலைமைகளில் வியவகரிக்கமாட்டாது. ஆகையால் எல்லா நிலைமைகளிலும் வியவகரிப்பதற்கு, எல்லா நிலைமைகளிலிருந்தும் அநுபவங்களைச் சம்பாதிக்கவேண்டியது. அப்பொழுது தான் எல்லா நிலைமைகளிருந்தும் வியவகரிக்கும் சாமார்த்தியம் ஜனிக்கும். இதன்பொருட்டு தான் அதி சூக்ஷ்மமான மானசபுத்திரர்கள் சரீரத்துடன் சேர்ந்து அதன் மூலமாய் அநுபவத்தைச் சம்பாதிக்கிறார்கள். இதுவே புனர் ஜன்மங்களின் முக்கிய பிரயோஜனமாகின்றது.

பிரகிருதியை பூரணமாய் ஜயித்து எல்லா நிலைமைகளிலும் இருக்கக்கூடிய மஹா புருஷன் அடியில்கண்ட இரண்டுவித காரியங்களில் ஒன்றைமட்டும் செய்யக்கூடும்.

1 இந்தலோகத்தில் தெரிந்து கொள்ளவேண்டிய தெல்லாம் தெரிந்து கொண்டு விட்டபடியால் மேல் அபிவிர்த்திக்கும் மோக்ஷதசைக்கும் இதர நிலைமைகளைத் தேடலாம்.

2 தன் சொந்த மோக்ஷத்தைவிட்டு ஜன உபகார விஷயமாய் மீண்டும் தன் ஸ்வய இச்சையால் வேண்டிய சரீரத்தைத் தரித்து ஜனங்களையும் மோக்ஷமார்க்கத்தில் சேர்ப்பிக்கப் பிரவிர்த்திக்கலாம்.

இவ்விதமான தன்மையுடையவர்களுக்கே நிர்மாணகாயர்கள் என்று பெயர் கூறப்படுகின்றது. இத்தகைய பெரியோர்கள் இக்காலத்திலும்—இந்தசமயத்திலும் இருக்கிறார்கள்.

தாம் ஜனன மரணமாதி சம்சார சக்கரத்தினின்றும் விடுபட்டது போல மற்ற பிரஜைகளும் விடுபட வேண்டுமென்று எண்ணம் கொள்ளும் மஹா புருஷர்களான உத்தமர்களை உண்டாக்குவதே புனர் ஜன்மத்தின் பிரயோஜனமாகும்.

குறிப்பு:—தேவர்கள் மனிதர்களாகப் பிறக்கக்கூடுமா என்னும் ஒரு ஐயம் ஏற்பட்டுச்சிலரை வருத்துவதுண்டன்றோ? அது எங்ஙன மெனின், மனித ஜன்மத்தினின்று இயற்றும் நன்கு தீங்கெனும் இருவித கர்மங்களுக்கேற்ப, சில காலங்களில் செய்தவப் பயனாய் தேவராகி அப்புண்ணியம் தீர்ந்தபின்னர் மீண்டும் புவியில் மாந்தராய் தோற்றுவரென்பதும் சாஸ்திரங்களின்சித்தாந்தமாகும். இதை விளக்கவே குசேல உபாக்கியானத்திலும்.

" இம்மையிற் றருமதான மெழில்பெற வியற்றினோர்க
ளம்மையிற் றேவராகி யமிர்த முன்னனபோகஞ்
செம்மையிற் றுய்ப்பர் துய்த்துக் தீர்ந்தபின் புவியின் மீட்டுந்
தம்மையர் தாய ரென்றே திலர்த்தழீஇப் பிறப்ப ரன்றே''

என்று உரைத்திருக்கின்றமையினாலும், தவராஜ சிங்கமாய்த் துறவிற் சிறந்த வள்ளலாரான ஸ்ரீமத் பட்டினத்துஸ்வாமிகளும் பூர்வம் குபேரனுயிருந்து மனம் உலகில் வசிக்கும் எண்ணம் கொண்டமையினாலும் சிவாக்ஞையினாலும் இவ்வுலகிற்பிறந்து வாழ்ந்து பின்னரே மோக்ஷமெனும் பெரும்பதவி யெய்தினாரென்பதும்; காத்தற்கடவுளான மஹா விஷ்ணுவும் பத்துவித பிறவியெய்தினாரென்னும் கூற்றும் இதையநுசரித்தே யெனினும்,

மனிதராயிருந்து தேவராகி, மீண்டும் மனிதராவர் என்னும் உண்மை தோற்றுவிக்கவுமே ஏற்பட்டது போலும் என்றே ஊகிக்க வேண்டியதாகின்றது.

---

அத்தியாயம். 29.

# புனர் ஜன்ம காரணம்.

பிரமாண்டம் முதல் சகல வஸ்துக்களும் வியக்த அவ்வியக்த ஸ்திதிகளை அடைகின்றன. அதாவது சில காலங்களில் பிரத்தியக்ஷ மாயும், சில காலங்களில் அப்பிரத்தியக்ஷமாயும் இருக்கின்றன. இவை களுக்குப் பிரம்மத்தின் பகற்காலம் என்றும், இராக்காலம் என்றும் பெயர். இந்தவிதமாக நிலைமைகள் மாறி மாறி வரவேண் டிய காரணம் மட்டும் இன்னதென்று அறிந்து கொள்ளக்கூடவில்லை. ஆனால் ரிக்வேதத்தில் காமமே காரணம் என்று சொல்லப்பட்டிருக்கின் றது. காமத்தால் தான் வியக்த நிலைமை அடையப்படுகின்றது. தேவதைகள் இந்தக்காமத்துடன் சேர்ந்தவுடன் அது ஊர்ஜிதப்படு கின்றது. "இச்சாமாத்திரம் பிரபு ஸ்ருஷ்டி" என்று கூறப்பட்டிருக்கின்ற படி இந்தக்காமமே பிரமாண்டமுதல் மற்றுமுள்ளதான பலவும் விசிரம்பிக்கக் காரணமாகிறது. இந்தக்காமமே புனர் ஜன்மத்துக்கும் காரணமாகும்.

"எவனுடைய கர்மங்கள் ஆசையும் சங்கல்பமும் அற்றிருக்கின்ற னவோ அவனை விவேகியாக ஞானிகள் சொல்லுவார் கள். காமத்தில் ஆசையை யொழித்து சரீரசெய்கை களை சரீரத்தால் செய்துக் கொண்டு மோக்ஷத்திற்கு அவன் பாத்திரனாகின்றான். அதாவது புனர் ஜன்மத் திற்குப் பாத்திரனாகிறதில்லை"

என்று பகவத்கீதையின் நான்காம் அத்தியாயத்தின்கண் காணப்படுவ தொன்றும்.

புனர் ஜன்மத்திற்குக்காரணமாவது * இச்சையேயாம். ஆனதால் இவ்விச்சையைக் கொல்லவேண்டுமென்பது இப்போ நன்ருய் விளங்குகின்றது. ஆயினும் சகல அநுபவ ஞானத்தையும் அடையும் பொருட்டே பிரகிருதி புருஷ சம்பந்தம் ஆதி முதல் ஏற்பட்டிருக்கின்றபடியினுல் இச்சையை ஒழித்துவிடவேண்டுமென்றதினுல் எல்லா இச்சையையும் விட்டுவிட வேண்டுமென்பது கருத்தன்று. ஆனுல் தன் சரீர சம்பந்தமான இச்சைகளையும் அபிமானத்தையும் விட்டுத் தன் அபிமானத்திற்குச் சகல பிராணிகளும் பாத்திரர்களாகவேண்டியதென்பதே கருத்தாகும். தன்னிடத்திலும் தன்னைச் சேர்ந்தவைகளிடத்திலும் அபிமானத்தைவிடவேண்டியதென்பதினுல் அவைகளைத் துவேஷிக்க வேண்டுமென்பது கருத்தன்று. தான் உட்பட சகல பிராணிகளிடத்திலும் ஒரே விதமான அபிமானம் இருக்கவேண்டும். என்பதேயாம். கர்மம் செய்யாவிட்டால் சரீரம்கூட நசித்துப்போகும். ஆனதால் கர்ம பல அபேக்ஷையை விட்டுவிடவேண்டுமென்பதே கருத்து. மோக்ஷத்துக்குக் காரணம் ஆன்ம ஞானம் இந்த ஆன்ம ஞானம் நிஷ்காம கர்ம மன்றியில் ஜனிக்கமாட்டாது. இதற்காக வேண்டியே கர்மத்தைச் செய்யவேண்டியது. கர்மத்தைச் செய்வதில் அதன் பலத்தில் மட்டும் ஆசையை ஒழித்துவிடவேண்டியது. காரணம் காரியத்தைக் கொடுக்காமல் போகமாட்டாது. ஆசையையுண்டு பண்ணினுல் அது தீராமல் நிவர்த்தியாகமாட்டாது. ஸ்தூலப் பிரா

---

* இச்சை யென்பதற்கு ஆசை யென்று தான் பொருள். ஆ—பசுக்களாகிய மானிடர், சை—விரும்புதல்-அதாவது ஆன்மாக்கள் விருப்பத்தின் பொருட்டே பல பிறவியெடுக்கிறன ரென்பது துணிபாக விளங்கப்படுவதினுல், ஆசையே புனர் ஜன்மததிற்குக் காரணம் ஆகின்றது. அதாவது மரணகாலத்தில்மனிதன் எந்த இச்சையைக்கொள்ளுகின்ருனே, அதைப்பூர்த்தி செய்விக்கும் நோக்கத்துடனேயே மீண்டும் உலகில் ஜனிக்கின்ருனென்பதே தெள்ளத் தெளிந்த ஞானிகளின் கொள்கையாகும். பிறத்தலும் சாதலும், துஞ்சலும் விழித்தலும் போன்றதென ஸ்ரீமத் திருவள்ளுவநாயனுரவர்களும் தம் குறளில் தெளிவுபடுத்திக் கூறியருளினுர்.

“ துஞ்சுதல் மரண மென்பர் துஞ்சி
விழித்தலே சனனமாகும்”

என்னும் உண்மை விளக்கப்பட்டிருப்பதினுலும் துணியப்படும். இவைகளை பின்னர் விளக்கமாக விவரிப்பாம்.

பஞ்சிக ஆசை சாகும்முன் நிறைவேறுமல் இருந்தால் அது ஸ்தூல பூமியிலேயே நிறைவேற வேண்டுமாகையினுல் அதன் பொருட்டு ஸ்தூலபூமிக்கு அவசியம் வரவே வேண்டும். இவ்விதம் வருவதற்கு ஸ்வர்க்கத்தில் வசிப்பதாக முன்னமேயே சொல்லப்பட்டிருக்கின்ற தன்றோ? எப்படி எப்பொழுது வேலை செய்ய முடியமாட்டாதோ அல்லது எப்பொழுதும் போஜனம் செய்துக்கொண்டேயிருப்பதும் முடியமாட்டாதோ அப்படி எப்போதும் பிரபஞ்சத்திலேயே இருப்பதும் முடியாது. ஜீவனுக்கு ஸ்வல்பசாந்திவேண்டியது அவஸ்யம் அன்றோ? இதற்காகவேண்டியே ஸ்வர்க்கலோகவாசம் ஏற்பட்டிருக்கின்றது. சிரம பரிகாரம் ஆனபின்னர்தான் மீண்டும் வேலையை ஆரம்பிக்க ஏற்படுவதுபோல ஸ்வர்க்கத்தில் சிரமபரிகாரம் செய்துக்கொண்ட ஜீவன் மறுபடியும் பூலோகத்தில் ஜனிக்கத் தயாராவன் ஜனன மரண ரூபசம்சார சக்கரத்தின் முடிவில் கடைசியான ஏழு ஜன்மங்களில் தான் ஜீவன் இந்த ஸ்வர்க்கலோக சிரம பரிகாரத்தை அபேக்ஷிக்கிறதில்லை ஏனெனில் அது சச்சமயம் அடைந்திருக்கும் பலம் சிரமத்தை ஜெயித்துவிடுகின்றது.

ஜனனபூமி, ஜாதி, குலம் முதலியவை எதனுல் தீர்மானிக்கப்படுகின்றன? மனசு இவைகளை ஸ்வய இச்சையால் தேடுகின்றதா? அல்லது நிர்ப்பந்தத்தால் ஏற்படுகின்றதா? அல்லது வாசனுபலத்தினுல் ஏற்படுகின்றதா? என ஆராய்ந்து பார்ப்போமாயின், கர்மபலத்தினுல் முன் ஜன்மத்தில் மனம் அடைந்திருந்த குணங்களுக்கு அனுகூலமாயும், முன்னர் விதைத்த விதையின் பலத்தை அநுபவிக்கத் தகுந்ததாயும் இருக்கிற இடத்தில் தான் ஜனனம் சம்பவிக்கின்றது.

இவைகள் இங்ஙனமிருக்க, ஸ்திரீபுருஷ ரூப பேதங்களைக்கொடுப்பது எதுவெனில், எல்லாகுணங்களும் ஆவிர்ப்பாவத்தை அடைந்து அபிவிர்த்தியடைவதே புனர் ஜன்மத்தின் பிரயோஜனமானதினுலும், ஸ்திரீ புருஷர்களிடத்தில் வெவ்வேறு விதமான குணங்கள் காணப்படுவதாலும், இப்பொழுது காணப்படுவதே குணங்களை அபிவிர்த்தி செய்யும் பொருட்டு இந்த ஜன்மத்தில் ஸ்திரீ ரூபமானுல் மறு ஜன்மத்தில் புருஷ ரூபமும், அவ்வண்ணம் இந்த ஜன்மத்தில் புருஷ ரூபமானுல் மறு ஜன்மத்தில் ஸ்திரீ ரூபமும் சாதாரணமாய் ஏற்படும் என்று தோன்றுகின்றது. ஆனுல் இந்த விஷயத்தில் நிச்சய ஞானம் சாதாரண ஜனங்களுக்குக் கொடுக்கப்படவில்லையென்றே கூறவேண்டும்.

---

76876

## அத்தியாயம் 30.

# புனர் ஜன்மத்தின் அவஸ்யம்.

புனர் ஜன்மம் ஆவஸ்யமா? என்னும் வினு நிசழுமாயின், "ஆம் அவஸ்யமே" என்னும் விடையையே கூறப்படும். என் புனர் ஜன்மம் வேண்டும்? இந்த ஜன்மத்தில் அநுபவித்த துன்பங்கள் போதாவோ? மீண்டும் துன்பத்தை யநுபவித்துத் துக்கத்திலுழன்று வருந்துவதற்கா புனர் ஜன்மம் வேண்டும்? இல்லை. இல்லை. மனம் பக்குவமடைய வேண்டுமாயின் பல ஜன்மங்களை எடுத்தேயாகவேண்டும். அவ்விதம் பல ஜன்மங்களை யெடுத்து ஆசையை மறுத்து இன்பத்தின் பெருமையை இன்னதன்மையதென்றும் மன்னுயிரைத்தன்னுயிர் போலெண்ணும் திறமையும் வகிக்கும் வரையும், கல்வியிலும், கேள்வியிலும் பூரண ஞானம் அடைந்து பேரறிவானபிரம்மஞானம் இன்ன தென அறியும் அளவும் பிறந்து இறந்து பிறந்து இறந்து உழன்றேவந்தாக வேண்டும். அவ்வண்ணம் உழன்ருலன்றி அநுபோகம் ஏற்படா தன்றோ?

எங்ஙனமெனில் ஒருவன் ஒரு தொழிலைக்கற்று அதில் நிபுணனுவதற்கும், நிபுணனுனபின் தன்னைப்போல பிறரைப் பயிற்றுவதற்கும் நீண்ட நாள் அநுபவம் பெற்றிருக்கவேண்டியது எப்படி அவஸ்யமோ அஃதேபோல ஞானமுதலியவற்றையடைந்து பக்குவப்படுவதற்கு மனதுக்கும் நீண்ட நாள் அநுபவம் வேண்டியது அவஸ்யம் ஆகின்றது. ஆதலினுல் புனர் ஜன்மம் அவஸ்யமாகும். இதனைக் குப்த வித்யா சாஸ்திரிகள் விஸ்தரித்திருக்கும் வகையும் இம்முறையேயாம். அதையும் ஒருவாறு ஆராய்ந்து பார்க்குமுன் சில விஷயங்களை இங்கு கூறுவாம்.

அதாவது ஸ்ரீராமனைக் கைகேயியானவள் காட்டிற்குப் போகுமாறு தசரதச்சக்ரவர்த்தி கூறினுரெனக் கூறியதில், பதினுன்கு வருஷம் இராமன் காடாளவேண்டுமென்றும், பரதன் நாடாள வேண்டுமென்றும், கூறியிருப்பதில் பதினுன்குவருஷம்வரை யளவு

படுத்தியதென்னை யெனின், சாதாரணமாய் ஒரு விஷயத்தில் ஒருவன் பக்குவப்படவேண்டுமாயின், பன்னிரண்டு ஆண்டுகள் செல்லவேண்டு மென்னும் சித்தாந்தம் பற்றியேயாம். பனிரண்டு ஆண்டுகள் வரையும் பக்குவமடைந்து விட்டால் பின்னிருக்கும் இரண்டாண்டுகள் வரை தனது ஸ்வய திறமையைத்தானே யறியும்வண்ணமும், பிறரால் அறிந்து கொள்ளும் வண்ணமும் கூறினரெனக் கூறுவதும் ஒருசாரார் கொள்கை யென்பது தேற்றமேயாம்.

நிற்க, நம் நாட்டவரில் முன்னர்க் காலங்களிலிருந்தவர்களும் கூட தங்கள் குமரர்களை குருகுலவாசத்தில் பனிரண்டு வருஷங்கள் வரைவிட்டு வந்தனரென்பதும் புராணேதிகாசங்களிலும் காணக்கிடக் கின்றதேயாம். இம்முறையையே தற்கால ஆங்கில அரசாக்ஷியிலும் போதிக்கப்படும் கல்வி முறையிலும், ஆங்கிலக் கல்வியின் முடிவும், பனிரண்டு ஆண்டுகளில் முடிவடைகின்றதென்பதும் கண்கூடாகக் காணப்படுபவைகளே. பனிரண்டு ஆண்டுகளின் முடிவில் ஆங்கில பாஷையின் முடிவானது Marticulation என்னும் பெயரோடு முடி வடைகின்றது. இதற்குமேல் படிக்கும் படிப்புகளெல்லாம் விசதமான படிப்புகளெனப் பெயர் பெறும். இவைகளுக்கெல்லாம் அநுபவம் எப்படி அவஸ்யமோ அஃதே போல மனசுக்கும் பக்குவமடைய புனர் ஜன்மம் அவஸ்யமேயாம்.

ஆனால் மனிதன் ஒரு முறைதான் ஜனிக்கிறான் என்றும், அந்த ஒரு ஜன்மமே மரணத்திற்குப் பிந்தின ஸ்திதியை நிர்ணயஞ் செய் கின்றதென்றும் ஒரு சாரார் நினைக்கின்றனர். அப்படிஅவர்கள் நினைப் பது தவறு.

சம்சாரத்தின் பாரத்தை வகிக்கும் சாமர்த்தியம் பால்யத்தின் ஒருநாள் அநுபவத்தால் ஏற்பட்டு விடுமா? இதுபோல பூரணமான ஞானத்தைச் சம்பாதிக்கவும் சகல அநுபவங்களைப் பெறவும் ஒரு ஜன்மத்தின் * எழுபது வருஷங்கள் போதாது.

---

* எழுபது வருஷங்கள் என்று இவண் கூறியதாவது என்னையெனின், ஒருவனுக்கு சாதாரணமாய் வேதத்தில் விதிக்கப்பட்டுள்ளவயது நூறு. அதில் பாலியத்தில் இருபத்தைந்தையும், விருத்தாப்பியத்தில் மரணத்தினிலே தொண் ணூற்றைந்திலிருந்தேயாரம்பமாவதினால் இதையும் சேர்த்து முப்பது ஆண்டு களை நீக்கிக்கூறியதாகும்.

"வேதம்நூற் பிராயம் நூறு மனிதர்தாம் புகுவ ரேனும்
பாதியு முறங்கிப் போகும் நின்றதிற் பதினை யாண்டு
பேதை பாலகன தாகும் பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலால் பிறவிவேண்டேன் அரங்கமா நகரு ளானே"

என மேதக்கவள்ளலாரான ஆழ்வார் சுவாமிகளும் அருளிச் செய்கின்றனர். இதில் நித்திரையில் கழிவது நமக்கு விதித்திருக்கும் நூறு ஆண்டில் பாதியான ஐம்பதாம். மிகுதியிருப்பதோ ஐம்பதே. இந்த ஐம்பதும் எவ்விதம் கழிந்து ஒழிந்துபோகின்றதெனில், குழந்தைப்பருவம், பாலபருவம், பேதமைத்தன்மை, வாலிபத்தன்மை முதலியவைகளோடு வியாதி, பசி, கிழப்பருவம், துக்கம்முதலியவைகளில் கழிந்துவிடுகின்றது. இங்ஙனம் நிகழுமாயின் அநுபவம் எங்ஙனம் கிட்டும்? கிட்டாதன்றோ? இது கருதியே புனர் ஜன்மம் அவஸ்யம் என்பது ஆன்றோரது கொள்கையும் கருத்துமாகுமாயினும் அநுபவத்திற்கும் அவஸ்யம் என்பது பெறப்படுகின்றது.

சிருஷ்டியில் மனிதன் அடையவேண்டிய பிரயோசனத்தையும் அதற்காக அவன் எடுத்துக்கொள்ளும் பிரயத்தனத்தையும் ஆலோசித்துப்பார்த்தால் மேலே கூறப்பட்டவைகள் தெளிவாய் விளங்குமென்பது திண்ணம். எங்கும் விருத்தி அம்சமே பிரதியக்ஷமாய்த் தெரிவதால், மனிதனும் தன் ஸ்திதியிலிருந்து தெய்வத்தின் ஸ்திதியை அடையவேண்டிய முக்கிய பிரயோசனமாக இருக்கின்றது. இதற்கு தற்காலத்தில் அவனுக்கு இருக்கும் சிக்ஷை யென்னவெனில் ஒரு வித நிலைமையில் ஸ்வல்ப அநுபவமும் ஸ்தூல இந்திரியங்களால் அடையப்படும் ஞானமுமேயாம்.

இந்த சிக்ஷையுடன் இறந்த மாத்திரத்தில் பூரண ஞானிகளை அவன் அடைய யோக்கியனுவானு?

இந்த அயோக்கியத்தன்மை கீழ்க்குறித்திருக்கும் மூன்று காரணங்களில் ஒன்றுல் நிவர்த்தியாகலாம் என்பது பெறப்படுகின்றது.

அவை எவை யெனின்,

1. மரணமே அதை நிவர்த்திக்கக்கூடும்,
2. மரணத்திற்குப் பிறகு ஒருவித சிக்ஷை
3. அடிக்கடி பூலோகத்தில் ஜன்மம் எடுப்பது.

மரித்த மாத்திரத்தில் ஞான ஐஸ்வரியாதிகள் கிடைக்குமாயின் எல்லாருடைய பிந்தினஸ்திதியும் ஒரேவிதமாயிருக்கவேண்டும். ஆனால் இது யுக்திக்கு விரோதமாம். நூதன சிக்ஷையும் மோக்ஷமும் ஒன்பது விஷயங்களால் ஒப்பத்தகுந்ததாகாது.

ஆகையினால் புனர்ஜன்மத்தையே அங்கீகரிக்கவேண்டும். இந்த விஷயங்களைப் புனர்ஜன்மம் திருப்தியாக விளக்கிவைக்குமாயின் இந்த மதமே சரியானதாகும் அவைகளாவன:—

1. இந்த லோகத்தில் இத்தனை விதமாய் ஜீவன் ஜீவிக்கக் கூடுமென்னும் ஞானம் குறைவாக இருக்கும் ஒவ்வொரு விதமான அநுபவத்தையும் அடையாதவரையில் பூரண அநுபவியென்று ஒருவனைச் சொல்லக் கூடாது. ஒரு ஜன்மம் சகலமான அநுபவங்களையும் கொடுக்கமாட்டாதென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே.

2. ஜீவ இரக்கம், பர உபகாரம், மனோதைரியம், பொறுமை நன்றியறிவு முதலான உத்தம குணங்கள் பூரணமாய் விளங்க ஜனங்களுடன் சம்பந்தத்தைப் பூரணமாய் அபேக்ஷிக்கிறது. இவைகள் மரணத்திற்குமுன் பக்குவமாய் விளங்காது போய்விட்டால் இந்த குறைவை நிவர்த்திக்க வேண்டுவதற்குப் புனர்ஜன்மம் ஆவசியம்.

3. ஒரு ஜன்மத்தில் தன்னுடைய ஸ்திதியில்தான்கொண்ட ஆசைகளைத் திருப்திசெய்து கொள்ள முடியவில்லை யென்று மட்டும் ஒருவன் அறியக்கூடும். எந்த ஸ்திதியிலும் துக்க நிவர்த்தியும் சுகப் பிராப்தியும் உண்டாகமாட்டாதென்பதற்குஎல்லா ஸ்திதிகளிலுமிருந்து பரீக்ஷை பார்க்கவேண்டியது. காலாந்தரத்தில் பிரகிருதி சம்பந்தத்தால் ஆசை தீரமாட்டாதென்பதை ஜீவன் அறிந்து ஆத்மாவுடன் சேரப் பிரயத்தனம் செய்கிறான்.

4. நாம் சரீரம் அன்று என்று அறிந்தவர்கள் வெகு ஸ்வல்ப மானவர்களே. அநாத்மப் பிராந்தி நீங்காமல் ஆத்ம ஞானம் சித்திக்கமாட்டாது. ஆத்மஞானம் சித்திக்க வேண்டுமென்னும் எண்ணம் இல்லாதவர்களேயிருக்க மாட்டார்களெனினும் அதை யறிந்து அநுஷ்டிக்க வேண்டியது ஆவஸ்யம் என்பதுபற்றி யதனை இவண் விளக்கி மேற்செல்லுவாம். ஆனால் தலை சிறந்த ஞானிகள் பலவிதமான உபாயங்களை மொழிந்துள்ளா ரெனினும் நாம் இவண் சுருக்கிச் சில மொழிகின்றும். அவை. சமாதிஷட்சம் பத்தியும், இருவிதத் தியான முமே மனிதர் மோக்ஷநிலையினை யெய்துதற்காகு வழிக ளாம். அவை வருமாறு:—

(i-ii) சமம் தமம்:—சமமாவது அந்தகரணத்தை லௌகிகவிஷயங்களிற் செல்லாமல் தடுத்தலாம். தமமாவது புறத்திலுள்ள சுரோத்ராதி தசேந்திரியங்களைத் தடுத்தலாம். மன சும் இந்திரியங்களும் வெளிவிஷயங்களிற்பிரவேசித்து அலையாமல், அவைகளை அகமுகமாய்த் திருப்பி ஆன்மாவை அறியும்படிச் செய்யும் சாதனங்கள் சமதமாதிகள் எனப்படும். நாம் நம்மருகிலிருக்கும் வஸ்துக்களைக் காண்கிறோம். ஆனால் அவைகளைக் காண்பது கண்மாத்திரமே யல்ல. கண்ணுக்கும் மூளைக்கும் மத்தியிலே யுள்ள நரம்பின் வழியாய் ஓடிக்கொண்டிருக்கும் இந்திரியம் வஸ்துக்களைக் காண மிக உபயோகமானது. கண்ணென்னும் அவயவம் காணுந்தொழிலுள்ள இந்திரியத்துக்கு ஓர் கருவியாம். அந்த இந்திரியம் இன்றேல், ஒருவனுக்குப் பல கண்க ளிருப்பினும் அவன் ஒரு வஸ்துவையும் பார்க்க முடியுமோ? முடியாது கண்ணென்னும் கருவியும் கண் இந்திரியமும் இருந்தாலும் இவைகளுடன் மனம் கலந்தால் அல்லாமல் வஸ்துக்களைக்காண வியலாது. ஆகவே ஒன்றைக் காணவேண்டுமெனின், கண்ணும் இந்திரியமும், மனமும் ஆக மூன்றும்

வேண்டும். இங்கு அதி முக்கியமாய்க் கவனிக்க வேண்டுவது யாதெனின் மனம் வேறு இந்திரியத்தோடு சேர்ந்து வேறு கருவியின் மூலமாய், வேறு தொழிலில் இறங்கிவிட்டால், கண் இந்திரியமும், கண் கருவியும் பயன்படாது. ஆகலால் ஒரு விஷயத்தை உணரவேண்டுமானல், அவ்வுணர்ச்சிக்குக் கருவி இந்திரியம், மனம் இம்மூன்றும் அவசியமே. இவ்வுண்மையை விளக்கவே ஒரு பெரிய மேதாவியான கவிஞர் "பூமியில் மனிதனை விடப்பெரிது ஒன்றுமில்லை. மனிதனில் மனதை விடப்பெரிது ஒன்றுமில்லை" யென்று விசதமாய்க் கூறியருளினர். மேலே கூறியவைகளுக்கு நம்மொவ்வொருவருடைய அநுபவமே திருஷ்டாந்தமாகும். நாம் ஒரு நண்பரை வெளியிடத்தில் சந்திக்கிறோம். அச்சமயம் நமது மனம் வேறு விஷயத்திற் பிரவேசித்திருப்பதால் நம்மெதிர்ப்பட்ட நண்பரைக் கண்டு கொள்ளாமலே போய்விடுகிறோம். இந்த நண்பர் மற்றொரு சமயம் நம்மைச் சந்திக்கையில் ஆயாசத்துடன் "அன்றைய தினம் நான தங்களைச் சந்தித்தேன். தாங்கள் பேசாமலே போய்விட்டீர்கள்" என்று கூறுகின்றார். அந்தசமயம் நாம் திடுக்கிட்டுபோகிறோம். இந்த நிஷ்டூரத்திற்குக் காரணமானது மனதேயன்றிவேறல்ல. இதுபோலவேதான் காதுக்கும். காதுகேட்கும் கருவியாயினும் செவி இந்திரியமும் மனமும் கூடாமல் சிறு சப்தத்தையும் கேட்கமுடியாது. சில சமயம் மனம் வேறு விஷயத்தில் பதிந்திருந்தால் குண்டு சப்தம்கூட கேளாமலே போகின்றது. இதுபோல மற்றவைகளெல்லாம் என்று கூறவேண்டுமோ? நிற்க, நாம் வஸ்துக்களைக் காண்கையில் மனம் அவைகளின் மீது தாவுகின்றது. கண்களை மூடிக்கொண்டு அவைகளை நினைக்கையில் மனம் உள்ளேயே இந்திரியங்களோடு சேர்ந்து தொழில் செய்கின்றது. இந்திரியங்களினுதவியில்லாமல் ஓர் எண்ணமும் உண்டாகாது

ஓர் வஸ்துவின் அடையாளமின்றி மனம் அதைநினைக்காது. ஆனால் அந்த அடையாளங்களை மனதுக்குக் கொண்டு வருவது இந்திரியங்களேயாம். ஸ்வப்பனத்தில் கண்மூடப்பட்டிருப்பதனால், கண் ஒன்றையுங் காண்பதில்லை; ஆயினும் மனிதன் தன் ஜாக்கிரதா அவஸ்தையில் கண்ணாற்கண்ட வஸ்துக்களின் அடையாளத்தை இந்திரியங்கள் ஸ்வப்பனத்தில் கொண்டு வருகையில், ஸ்வப்பனத்தில் அந்த வஸ்துக்களைக் காண்கின்றான். ஸ்வப்பனமின்றி நித்திரை செய்யும் போது மனம் அடங்கியிருக்கையில் ஒன்றும் காண்பது இல்லை. ஜாக்கிரத்தில் வஸ்துக்களைக்காண கண் என்னுங் கருவி யுதவுகின்றதால் அச்சமயம் கண்ணே முக்கியமென அறிகிறோம். கண்ணை மூடிக்கொண்டு நித்திரை செய்யுங்கால், ஸ்வப்பனம் ஏற்படின், கண் முக்கியமல்ல இந்திரியமே முக்கியமென அறிகிறோம். ஸ்வப்பனம் நீங்கி, மனோவியாகூலமும் நீங்கி தூங்குங்கால் ஒரு வஸ்துவும் காணாதபடியினாலும், நினையாதபடியாலும் இந்திரியம் முக்கியம் அல்ல வென்றும், மனம் முக்கியமென்றும் அறிகிறோம். மனம் வெளியே தாவி விஷயங்களை பற்றுவதற்கும், உள்ளேயே பல வாறான எண்ணங்கள் கொள்வதற்கும் இந்திரியங்களே முக்கிய ஹேதுக்களாயிருப்பதால் இந்திரியங்களை முன்னர் அடக்கிப் பின்னர் மனதையடக்க வேண்டும். இந்திரிய நிவர்த்தி சமம். மனோ விர்த்தி தபம் எனப்படும். இதை ஞானவாசிட்டத்தில்,

" எழுந்தெழுந்து சீறு மிந்திரியப் பாம்புகளை
  யிதயந்தன்னில்
அழுந்து விவேகத் தடியால் வச்சிரங்கொண்
  டிந்திரன் வெற்படர்வ தள்ள
விழுந்திட மோதுற வேண்டுஞ் சாந்தியினாள்
  தமமே யிடர்தீர் நெஞ்ச
முழுந்து சுகவடிவாந் தற்பத நிலையைப்
  பெறுமிதுவே முத்தியென்ன"

என்றுங்காணப்படுவதினால் சமம் தமம் இரண்டும் அவஸ்யமெனப் படுகின்றது

(iii) உபரதி:—உபரதியென்பதற்கு வெறுத்துத்தள்ளல் என்பது பொருளாம். விசிதகர்மங்களை விவேகத்தால் விடுதல் உபரதி யென்பது ஒரு சாரரின் அபிப்பிராயமாகும். கர்மங்களில் கர்த்திருத்துவ அபிமானம், பல அபேக்ஷை யின்றி புண்ணியமானவைகளையே பகவத்பிரீதியாகச் செய்தலே உபரதியென்பது தகுதி. பலனை கோராமல் கர்மஞ்செய்வது சாத்தியமாகுமா? ஓர் கர்மமும் செய்வ திலலை யென ஒருவன் பிரதிக்ஞை செய்துக்கொண்டிருந் தாலும், அவனது பூர்வ கர்மாநுசாரமாக விருத்தி யடைந்த ஸத்வம் ரஜஸ் தமம் என்னும் முக்குணங்களும், இவனறியாமலே துஷ்கர்மங்களில் இழுத்துச் செல்லும் சத்கர்மங்கள் பலனைக் கோராதுசெய்ய சாந்தியப்படாத ஒருவனுச்கு வேறு எக்கருமமும் செய்யாதிருக்க விய லுமா? இயலாது. இதன் உண்மை யாதெனில், கர் மங்களின் பலனில் பற்றுவைத்துச்செய்தால் அப்பலனை அநுபவிக்க ஜன்மங்கள் எடுக்கவேண்டிவரும். ஆசையே பிறவிக்கு வித்து என்னப்படுகின்றபடியினால் ஜன்மங்கள் எடுத்தலே துக்கத்திற்கு ஹேதுவாகின்றது. மனிதன் கருமங்கள் செய்யாதிருக்க சாத்தியமாகாது ஆதலால், கருமங்கள் செய்யவும் வேண்டும்; அவைகள் ஜன்மங் களைப் பின்னும் உண்டாக்காதவையாயிருக்கவும் வேண் டும். இதற்கு உபாயம் என்னவெனில், தருமசாஸ்கிரங் களிற் சொல்லியிருக்கும் ஸத்கருமங்களை, பலனில் சிறிதும் ஆசைவையாது ஈஸ்வர அர்ப்பணஞ் செய்தலே யாம்.

(iv) திதிக்ஷை:—திதிக்ஷை யென்பது சமதேக நிஷ்டையெனப் பொருள்படும். மேலே கூறிய உபரதியென்னும் சாத னம் சாதித்தவனுக்கு திதிக்ஷை சுலபமாக முடியும். சுக துக்கங்களைச் சகித்தலே திதிக்ஷை யெனப்படும். ஒருவன்

தன்பிராரப்த கர்மபலனாக எது வரினும், அதை அநுப வித்தே தீரவேண்டுமென்று தன்மனதில் திடம் செய்துக் கொண்டு தான் எதை யிழக்கிடினும் அதற்காக மகிழா மலும் சமசித்தத்துடன் இருத்தலே திதீக்ஷையாகும். சுகதுக்கங்கள் தேகத்தாலும் மனதாலும் அநுபவிக்கப் பட்டவைகள். ஆதலின் அவைகள் நாம் என்னும் ஆத்மா வைச் சாரா. சுகதுக்கங்கள் நமக்கு அல்ல என்று எண்ணி அவைகள் நேரிடுங்கால், அவைகளில் தான் பந் தப்படாமல், தான் சாக்ஷியாய் தனியே நின்று பார்க்க வேண்டும். இந்த ஞானம் ஏற்படுமளவும், உலகத்தில் சீதோஷ்ண முதலியவைகளினாலும் பிணிமுதலியவைகளி னாலும் வரும் சுகதுக்கங்களைப்பொறுத்தலே திதீக்ஷை யாம. இதைப்பற்றி ஒழிவிலொடுக்கம் என்னும் நூலில்,

“ வையினும் வாழ்த்தினும் மலர்கொடு ஏத்தினும்
வெய்யவ ராவிடை விழ நூக்கினும்
எய்யினும் எறியினும் இயாது செய்யினும்
நைவொரு மகிழ்வில ஞானி சீலமே”

என்றும்,

“ நாயேறி வீழ்ந்தென் னடாத்துகிலென் ஞானிக்குப்
பேயாச் சுகம் பழித்தென் பேணுகிலன்—றூயார்
பெருமை சிறுமையிலேப் பின்னுமுன்னுமில்லை
வரைவற்று வேண்டுவ செய்வார்”

என்றும் உரைக்கப்பட்டதும் காண்க.

(v) சிரத்தை:—சிரத்தை என்பது உபநிஷத்துகள் முதலிய ஞான சாஸ்திரங்களில் மனதை நிறுத்தி, அவைகளில் நம்பிக் கையும் சற்குருவினிடத்தில் நிஜபக்தியும் விசுவாசமும் வைப்பது சிரத்தையெனப்படும். எந்த விஷயத்திலும்

சிரத்தையில்லாவிடின் எண்ணின எண்ணம் நிறைவேறாது என்பது எவர்க்கும் தெரிந்ததே. ஆதலால் ஒருவன் உலக விஷய சுகங்களில் எவ்வளவு ஆவல் வைப்பானோ அவ்வளவு ஆவலும் இன்பும் தன் ஞானாசிரியனிடத்தும் சாஸ்திரங்களினிடத்தும் வைத்தால், தன் கோரிக்கை தடையின்றி சித்தி பெறும். இதற்கு வேண்டியது முயற்சியேயாம். இதை திருவள்ளுவர்:

"முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்திவிடும்"

எனத்திருவாய் மலர்ந்தருளியதை கவனிக்கவும்.

(vi) சமாதானம் சமாதானம் என்பது உபாதியொழிந்து உள்ளொளி கருதலாம். சிரவண மனன நித்தியாசங்களிற் பயின்று பக்தி விஸ்வாசத்துடன் அடைந்த குருவானவர் உபதேசித்த லக்ஷியத்திளின்றும் பிறழாது, வேதத்தினால் அளவு படுத்தப்பட்டதான ஒன்றையே மனதில் பெரும் நிலைமாக நிறுத்துவதே சமாதானமெனப்படும்.

சமம், தமம், உபாதி, திதிக்ஷை, சிரத்தை சமாதானம் என்னும் சமாதிஷட்கம்பத்தி யென்னும் ஆறையும் அறிவித்தோம் இனி முமுக்ஷுத்வத்தைப்பற்றிக் கூறி மேற்செல்லுவாம்.

முமுக்ஷுத்வம்:—உலகபந்தத்தினின்றும், ஜனன மரண துக்கத்தினின்றும் நீங்குவது எப்படி யென்னும் விசாரத்திலேயே மனம் உறுதியடைந்து வேறு விஷயங்களிற் செல்லாதிருப்பதே முமுக்ஷுத்வம் எனப்படும். அநுஷ்டிக்க வேண்டிய முறையை ஞானவாசிட்டத்தில் பலவிதமாகச் சிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது ஒரு வீடு

தீப்பிடித்து எரியும்போது அதில் அகப்பட்ட மனுஷன் தன் புத்திர களத்திரமித்திரர்களாதியோர் எவ்வண்ண மானுர்களோ என்றும் நெருப்பில் தகிக்கப்பட்டவனாய், அவர்களை விட்டுப் பிரிந்து தண்ணீரில் பிரவேசித்ததுபோலும்; நித்திய தரித்திரனை இராஜஸிம்மாஸனத்தில் இருத்தியது போலும்; குருடனுக்குக் கண் தெரிந்தாற்போலும்; தீராத வியாதியஸ்தனுக்குப் பிணி நீங்கினுற்போலும் பிறவி யென்னும் கடலில் அழுந்தி சம்சாரதாபாக்கினியால் தவிக்கப்பட்ட புருஷன், இப்பவசாகரத்தினின்றும் நீங்கி சம்சாரபந்தத்தைப் போக்கத்தக்க சற்குரு எங்கிருக்கிறரோ? இதற்கு என்ன சாதனம் தேவையோ வென்று தாபங்கொண்டு அலைந்து தேடுகிற சித்த விருத்திக்கு முமூக்ஷுத்வம் என்று பெயர்.

"கருகிய கங்குலின் மறையாக் கதிர்க்கு மட்காக்
காண்பரிய பொருளெல்லாங் காணுங் கண்ணற்
றெருளுற நாணு ருலகம் வந்தவா றென்
பிறவியார கெனுந் திகழ்விசார
மிருளுறு மாயத்தினுக்கு மருந்தா மப்பாலேற்றமுன்
சந்தோஷமே தென்றேதில்
வருபொருளி லின்பமறத் துய்த்து வாராவன்
பொருளிற் றுன்பமிலா மகிழ்ச்சிதானே"

என்னும் ஞானவாசிட்டம் கூறும் கூற்றினையு மநுசரித்தும் மேற்கூறிய அவ்வளவும் சித்தியெய்தவேண்டியிருப்பதினுலும் ஆத்மஞானம் விரைவில் சித்திக்கமாட்டாது.

ஆகையினால் பிராந்தி ஒரு நாளில் அல்லது ஒரு ஜன்மத்தில் நீங்க மாட்டாது. இதற்காகவே அநேக ஜன்மங்கள் எடுக்கவேண்டியது அவஸ்யம் ஆகின்றது.

(5) சகோதரபாவம் ஒரு ஜன்மத்தில் நன்றாகப் பிடிபடமாட்டாது. எல்லாம் பரப்பிரம்மத்தின் அம்சங்கள் என்றும், ஒன்றும் மற்ற எதினின்றும் பிரிந்திருக்கவில்லையென்றும், இந்தஞானம் பேசஞானமாயிருக்கும் வரையில் விளங்க மாட்டாது. ஆதலால் இதற்கு ஒரு ஜன்மம் போதாது.

(6) ஏழையானவன் பணக்காரனுடைய அநுபவங்களை இச்சித்திருந்தால் அவன் பணக்காரனுடைய நிலைமையிலிருந்து தான் இந்த ஆசையைத் தீர்த்துக் கொள்ளவேண்டும். அதோடு அந்த ஆசையும் தீரவேண்டும். ஆசையினால் இந்த ஆசை அடிக்கடி பூலோகத்திற்கு இழுக்கும். இதினால் மரணத்திற்குப் பிந்திய சிக்ஷை தடைப்படும்.

(7) ஜன்மம் ஒன்றானால் சுத்த நியாயம் கிடைக்கமாட்டாது. எந்த எந்த நிலைமையில் எங்கெந்த காரியங்கள் செய்யப்படுகின்றனவோ அந்தந்த நிலைமைகளில் தான் அவைகளின் பலன்கள் அநுபவிக்கப்படவேண்டுமென்பது நியாயம். அடித்தவனுக்கு மனோவருத்தம் சரியான பலன் அன்று. அடிக்குப் பிரதி அடியே சரியான பலன். அவ்வண்ணமே நன்மையும். ஒருஜென்மத்தில் இந்தப் பலன்களுக்கு ஆஸ்பதம் இல்லாவிடில் அநேக ஜன்மங்கள் வேண்டியது அவசியம்.

(8) பூரணத் தன்மை யடைவதற்கு அநேக சிக்ஷைகள் வேண்டியது. மரணத்திற்குப் பிறகு சிக்ஷை ஒருவிதமாய்மட்டும் இருக்கக் கூடுமானதால், புனர் ஜனமம் அவசியம் வேண்டியது.

(9) ஒவ்வொரு சிசுவும் ஒவ்வொரு சரீரத்துடனும் நூதனமாக சிருஷ்டிக்கப்படுமேயானால், தாய் தந்தைகளிடமிருந்து கர்ப்பத்தில் கிரஹித்த அம்சங்களையே அது அபிவிருத்

திசெய்யக் கூடும். அநேக ஜன்மங்களிலிருந்து அது வருவதாக இருந்தால் அவைகளில் சம்பாதித்திருந்தவை களையும் கூடவே கொண்டுவந்து அவைகளை மேன்மேல் அபிவிருத்தி செய்யக்கூடும். இவ்வண்ணம் அபிவிருத்தி யாவதால் கடைசியில் தெய்வ அம்சம்கிடைக்கும். புனர் ஜன்மம் இல்லாவிடின் இதற்கு இடமில்லை.

மேற்கூறிய ஒன்பது விஷயங்களையும் யோசித்துப் பார்க்குமள வில் ஒரு ஜன்மம் ஜீவனுக்குப் போதாது என்பது நன்றாய் விளங்கும்.

---

## அத்தியாயம் 32.

# புனர் ஜன்ம நிரூபணம்.

புனர் ஜனமம் உண்டு என்பதற்கு அநேகம் ருஜுக்கள் இருக் கின்றது. அவற்றில் சிலவற்றைமட்டும் அடியில் குறிப்பிப்பாம். அவை யாவன :—

(1) தங்களுடைய முந்திய ஜன்மங்களைச் சிலர் அறிகின்றனர். பத்து வருஷத்துக்கு முன் நாம் இருக்கவில்லை யென்று நாம் நம்பும்படி நம்மை ஒருவரும் செய்ய முடியாதது போல முந்தின ஜன்மங்கள் அவர்களுக்கு இருக்க வில்லை யென்று அவர்கள் நம்பும்படி செய்ய ஒருவராலும் முடி யாது.

(2) தாய் தந்தைகளிடத்தில் காணப்படாத குணங்கள் சிசுக்க ளிடத்தில் காணப்படுவதால், அவைகள் முந்திய ஜன்மங் களினின்றும் தொடர்ந்து வந்திருக்கவேண்டும்.

(3) யோக்கியன் வம்சத்தில் அயோக்கியனுடைய ஜனனம், அவ்விதமே அயோக்கியன் வம்சத்தில் யோக்கியனுடைய ஜனனம், ஒரு தாயின் வயிற்றில் பிறந்தவர்களில் குணங்

கள் வெவ்வேருய்த் தோன்றுதல், இவைகளெல்லாம் புனர் ஜன்மத்தையே அறிவுறுத்துகின்றன.

(4) இரட்டைய பிள்ளைகள் பார்வைக்கு ஒன்ருக இருந்தாலும், கர்ப்பத்திலும் சேர்ந்து இருந்தாலும், அவர்களுடைய புத்தி பேதத்துக்குக் காரணம் முந்திய ஜன்மத்தில் விட்ட குறையே தவிர வேறில்லை. பாலியத்தில் தாய்க் குக்கூட பேதம் தெரியாமல் அவர்களுடைய உருவம் இருக்கக்கூடும். வயது சென்ற பின் மனதின் பிரவிர்த்தி பலப்பட பலப்பட உருவமும் ஸ்வல்பம் வித்தியாசத் தைக் காண்பிக்கின்றது. இந்தவித்தியாசத்திற்கு முந்தின ஜன்மத்தின் மனோ விர்த்தியின் சாரம் தவிர, வேறு என்னகாரணம் இருக்கக் கூடும்.

(5) ஒரு தாயின் கர்ப்பத்திற் பிறந்த அநேகர்களில் ஒரு சிசு அதிமேதாவியாயிருப்பதற்கு இதைத் தவிரக் காரணம் இல்லை.

(6) ஒரு விஷயத்தை இரண்டு பிள்ளைகளுக்குச் சொல்லப்பட் டால் ஒருவன் சீக்கிரத்தில் கிரஹிப்பானேன் மற்ருரு வன் தாமஸமாய் கிரஹிப்பானேன். முந்திய ஜன்மத்தில் சிக்ஷை யடையப்பட்டதும் அடையப்படாததுமே இந்த வித்தியாசத்திற்குக் காரணமாகும்.

(7) யுத்தி சாதனமன்றியில் தத்துவத்தைச் சொன்னமாத்திரத் தில் சாக்ஷாத்தாய் அறிவது யுக்தி சாதனங்களை முன் னமேயே அடையப்பட்டிருக்க வேண்டும் என்பதைக் காண்பிக்கின்றது.

(8) பிறவி முதல் காணப்படும் தரித்திரம், செல்வம், பிணிமுத லியன காரணமின்றி யேற்படுமா?

(9) ஜனனம் இருப்பதற்கு மரணமுமுண்டு ஜீவன் மரணமில் லாத மோக்ஷத்தை அடையலாமானல் அவன் முந்திய ஜனனம் இல்லாமலும் இருக்கவேண்டும்.

(10) பூலோகத்தில் சில இடங்களில் ஜனங்கள் புத்திஹீனர்க ளாகவும், சில இடங்களில் புத்திசாலிகளாயும் ஜனித்து

மரிக்கின்றனர். முன் சொன்னவர்களின் புத்தி பக்குவமடைவதற்கு அடிக்கடி ஜனனம் வேண்டியது அவசியம்.

(11) சரித்திரங்களிலும் இன்னும் பிற நூல்களிலும் ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்தவர்களே மறுபடியும் ஜனனமெடுத்துவருவதாய்த் தோன்றுகிறது.

(12) சில மானிடவர்க்கங்கள் நாசம் அடைந்து வருகின்றன. அவ்வர்க்கத்திலுள்ள ஸ்திரீகள் மலடிகளாகிக் குழந்தைகள் பிறப்பதே துர்லபமாய் முடிவில் அந்த வர்க்கமே இல்லாமல் நாசமாய்ப் போய் விடுகின்றது, இதற்குக் காரணம் என்ன? புனர் ஜன்மவாதி சொல்வதாவது: அந்த வர்க்கத்தில் அடையக்கூடிய அநுபவ ஞானத்தை ஜீவன் அடைந்து விட்டபடியால் மறுபடியும் அதில் ஜனனம் எடுக்கப் பிரயோஜனமில்லை. ஆகையால் ஜீவன் நூதன வர்க்கத்தில் பிறக்கின்றான். இந்தப் புதுவர்க்கத்தின் ஜனனம் பழைய வர்க்கத்தின் நாசமும் புனர் ஜன்மத்தினால் விளங்கும்.

இதுவல்லாமல் இன்னும் அநேக உண்மைகளிருக்கின்றனவேனும் நூல் விரியுமென்னும் நோக்கங் கொண்டு இதுவரையும் கூறியதே விசதமாதற்குப் போதுமானதென்றெண்ணி இத்துடன் நிற்குதும்.

---

## அத்தியாயம் 33.

# ஆக்ஷேப சமாதானம்.

ஆக்ஷேபம்:—பூலோகத்தில் நாம் இதற்கு முன் வசித்திருந்தால் அதை நாம் அறியாதிருப்பதற்குக் காரணம் என்ன? ஒரு சமயம் அவ்வண்ணம் இருந்திருந்தால் ஸ்மரணையிருக்கக்கூடுமன்றோ?

சமாதானம்:—ஸ்மரணையென்பது மூளையின் சக்தியாகும். மூளையில் பதிந்திருக்கும் விஷயத்தின் ஸ்மரணைவரக்கூடும். மூளையில் பதி

யப்படாதது எவ்விதம் ஞாபகத்திற்கு வரக்கூடும்? நம்முடைய மூளை நம்முடைய ஸ்தூல சரீரத்தின் ஒருபாகம். ஸ்தூல சரீரம் நாசமடைவதால் ஸ்தூல மூளையும் நாசமடைந்து விடுகின்றது. ஆகையால் இப்போது இருக்கும் மூளை நாம் முந்தின ஜன்மத்தில் பெற்றிருந்த மூளையன்று. இந்த மூளை மூலமாக முந்திய ஜன்மத்திய விஷயம் ஞாபகத்திற்கு எப்படி வரக்கூடும்? முந்திய ஜன்மத்தின் ஞாபகத்தைப் பெற வேண்டுமானால் இரண்டு ஜன்மங்களையும் எது கோக்கிறதோ அதாவது எது இரண்டிலும் சம்பந்தப்படுகின்றதோ அதன் சாதகம் வேண்டியது. ஒவ்வொரு சரீரத்தினுடனும் மனது கலந்து கொள்ளுகிற தென்றும், அதற்கே புனர் ஜன்மம் இருக்கின்ற தென்றும் முன்னர் கூறப்பட்டிருக்கின்றது. ஆகையினால் முந்திய ஜன்மத்தின் ஞாபகம் சுத்தமனதின் பலத்தால்தான் கிடைக்கக்கூடும். அது அமுந்தியிருக்கும் வரையில் அசுத்தமனது முந்தின சங்கதிகளை அறியவுமாட்டாது, அறியுஞ்சக்தியும் அதற்குக் கிடையாது.

ஆக்ஷேபம் :—ஜன கணிதப்படி ஒரு காலத்தைவிட வேறொரு காலத்தில் அதிக ஜனங்கள் காணப்படவேண்டிய காரணம் என்ன?

சமாதானம் :—ஜகத்தின் ஜனகணிதம் எப்போதும் எடுக்கப்படவில்லை. ஆகையால் அதிகம் என்று எப்படி உண்மையாய்ச் சொல்லலாம். ஜன்மம் எடுத்தவர்களைக் காட்டிலும் ஜன்மம் எடுக்கவேண்டியவர்கள் அதிகமாயிருப்பதால் பிரபஞ்சத்தில் ஒரு காலத்தில் அதிக ஜனங்கள் இருக்கக்கூடும். இந்த லோகம் பிரம்மாண்டத்தில் ஒருபாகம். ஒரு பட்டணத்தில் ஒரு வீடு போலும், வீட்டுக்குவரும் ஜனங்கள் அதிகமானாலும் குறைவானாலும் பட்டணத்திலுள்ள ஜன சங்கியையில் வித்தியாசமே வருகின்றதில்லை.

ஆக்ஷேபம் :—நல்ல குலத்தில் அயோக்கியன் ஜனிப்பானேன்?

சமாதானம் :—முன் செய்த கர்ம பலன்தான் இதற்குக் காரணம்.

## அத்தியாயம் 34.

# பிரம்மலக்ஷணம்

" பிறப்பு என்னும் பேதமை நீங்கச் சிறப்பு என்னும்
செம்பொருள் காண்பது அறிவு "

என்னும் ஆன்றோர் வாக்கின்படியே நாம் நமது பிராப்த கர்மத்தை யொழித்து, சத் சங்கத்தை யநுசரித்து நல்ல ஞானாசிரியனைத் தேடி யடைந்து நல்விவேகத்தை யடைந்து பிரம்மம் இன்னதென வறிந்து அதீத நிலையை யடையவேண்டியது ஒவ்வொருவரின் கடமையும் ஆகும்.

நித்தியமாய், சர்வ வியாபகமாய், விகாரம் அற்றதாய், எந்தக் காலத்திலும் ஒரே தன்மையுடையதாயுமிருப்பதுவே பிரம்மம் எனப் பெரியோர் பலவித ஆதாரங்களை யநுசரித்துக் கூறுவர். அந்த பிரம் மம் என்னும் வஸ்துவைக் காண்பதாவது.

" ஜீவன் பிறவிக்குக் காரணமாகிய தன் அஞ்ஞானம் நீங்க, அந்தப் பரம்பொருளில் லயமாக அல்லது அதனுடன் கலக்க, இடை விடாமல் மனதை நாட்டியிருத்தலாம். இதைத்தான் சமாதியெனப் படுவது. அதன் விவரமாவன :—

அஷ்டாங்கயோகத்தின் கடைசி அங்கமாகிய சமாதி எனப்படு வது ஸம் பிரக்ஞாத சமாதி யென்றும், அஸம் பிரக்ஞாத சமாதியென் றும் இரண்டுவிதப்படும். முன்னைய சமாதியால் பஞ்ச பூதங்களையும், தன்மாத்திரைகளையும், அந்தக் கரணங்களையும் அடக்கியாளும் சக்தி யுண்டாகும்.

பின்னைய சமாதியால் தேகம் நாமல்ல, தேக சம்மந்தமான மன மும் புத்தியும் நாமல்ல, நாம் எங்கும் வியாபகமாயிருக்கும் ஆன்மாவே யென்றறிந்து பந்தம் நீங்கி மோக்ஷமடையலாகும்.

ஸம் பிரக்ஞாத சமாதி நான்கு பிரிவினதாகும். அவை :— (1) ஸவிதர்க்கம் (2) நிர்விதர்க்கம், (3) ஸவிசாரம், (4) நிர்வி சாரம், என்பலவகளாம்.

யோகியானவன் ஐம்பூதங்களின் ஸ்வரூபத்தையும், அவைகள் உண்டாகி, இருந்து அழியும் இடத்தை அறியும் பொருட்டு அவைகளினிடத்தே தன் மனதை ஏகாக்கிரமமாய் நிறுத்தி ஆராய்ச்சி செய்வதுவே ஸவிதர்க்கசமாதி யெனப்படும்.

ஸ்தூல பூதங்களின் ஆராய்ச்சி முடிந்து அவைகளின் நிஜ ஸ்வரூபத்தை அறிந்த பின்னர் காலம், இடம், காரணம் இவைகளைக்கடந்து அந்த பூதங்களிடத்தே மனம்பற்றி தியானம் செய்திருப்பதே நிர்விதர்க்கசமாதி யெனப்படும்

[ஸவிதர்க்க சமாதியில் தர்க்கம், (வியவகரித்தல், உண்டு, நிர்விதர்க்கசமாதியில் வியவகரித்தல் இல்லை.]

முதிர்ந்த தியானத்தால் சூக்ஷ்மமான தன்மாத்திரைகளை ஆராய்ந்து அறிதலே ஸவிசார சமாதி யெனப்படும்.

காலம், இடம், காரணம் இம்மூன்றையும் தாண்டி, தன்மாத்திரைகளின் உண்மையான ஸ்வரூபத்தையறிந்து, அதில் ஏகாக்கிரமமாய் மனதை நிறுத்துதலே நிர்விசார சமாதி யெனப்படும்.

சங்கற்பமே மனதிற்கு சொரூபமானதால், சங்கற்பங்கள் உண்டாகாமலேயிருந்தால் மனம் நாசமானதென யோகிகள் கூறுகின்றனர். இதனால் மனம் இறந்த சமாதியே அஸம்பிரக்ஞாத சமாதியெனப்படும். இதுவே பூரண சமாதியென்பது அச்சமாதியில் ஆத்மா தான் தனியே நிற்கும். ஸம்பிரக்ஞாத சமாதியில் சித்த விருத்திகள் அடங்கியிருந்தாலும்; சமாதியிருக்கிறோம். தத்துவங்களை அறிவோம் என்னும் மனோ சங்கற்ப மிருப்பதால், அடங்கிய சித்த விருத்திகள் மனதைக் கவரக்கூடிய சுக விஷய சம்பந்தம் நேரிடின், யோகத்தில் அமர்ந்த மனிதனை உலக வியாபாரத்தில் இழுக்கும். அஸம்பிரக்ஞாத சமாதியிலோ மனமிறந்து ஆத்மா தான்மாத்திரமே நிற்றலால் மனோ சங்கற்பங்களுண்டாக ஏதுவில்லை. ஆதலால் இச்சமாதியே மேலானதெனக் கொள்ளவேண்டும். இங்கே சுழுப்திக்கும் சமாதிக்கும் உள்ள பேதம் சிறிது கூறுவாம்.

இருளாகிய சுஷுப்தியில்மனம் நசித்ததால் ஒன்றும்தெரியவில்லை. சமாதியிலும் நினைப்பு மறப்பு அற்றிருப்பதால் ஒன்றும் தெரியவில்லை. இப்படி ஒத்திருத்தலால் சுழுப்தியும் சமாதியும் சமமாமோ வெனின்

ஆகாது. எப்படியெனின் அற்பஞானமுள்ள ஒருவன் அஷ்டாங்க யோகஞ் சாதித்து அஸம்பிரக்ஞாத சமாதியில் அடிக்கடி பழகுவரின் அவன் மஹா ஞானியாகின்றான். இதைப்பற்றி ஸ்வாமி விவேகானந்தர் கூறுவதாவது: "ஒருமனிதன் சமாதியிற் பிரவேசிப்பானாயின், அவன் மூடனாக அதிற் சென்று முனியாக வெளியில் வருகின்றான்" சுஷுப்தியிற்சென்றவனோ வெனில், சொர்ப்பனந்தாண்டி சுஷுப்தியில் எத்தனை நாளிருப்பினும் அவன் உறங்குவதற்கு முன் எவ்வளவு ஞான முடைத்தானவனா யிருந்தானோ அவ்வளவேதான் அவன் உறங்கி விழித்த பின்னும் உடைத்தாயிருப்பான். அவனது ஞானம் அம்மட்டேயாகும். சமாதி நிஷ்டைகூடும் யோகிகளோ அநேக அற்புதங்களைப் பலவிடங்களில் வெகு ஜனங்களின் முன்னே காண்பித்திருக்கிறார்கள். சமாதியிற் சிறந்தயோகிகளோ வெனில் தம்மை யடைந்தவர்களுக்கு உபதேசஞ் செய்து நற்கதியைக் காட்டக் கூடியவர்கள். இவைகளில் வித்தியாசமிருப்பதால் சுஷுப்தியின் தன்மை வேறு. சமாதியின் மஹிமை வேறு என்பது விளங்குகின்றது. சமாதி சுகம் எத்தன்மைத் தெனின், அந்த சுகம் பெற்றவர்களான மஹான்களுக்கே தெரியுமெனச் சொல்லவேண்டும். ஸ்திரீபுருஷர்கள் ஒன்று கூடி மனங் கலந்து அநுபவிக்கும் சிற்றின்பத்தை அவர் ஒருவர்க்கு ஒருவரே நாவினால் சொல்லிக்கொள்ள முடியாதிருக்க, இந்திரியங்கள் ஈர்த்து மனம் மடிந்து தன்மாத்திரமாய் சமாதியிலடைந்த பேரின்பத்தைச் சொல்ல சாத்தியம் ஆகுமா? ஆகாது. இந்த சுகத்தைப்பற்றித் திருமந்திரத்திலும் சொல்லொணாதென்பதை விளக்குவது கருதியே,

"மகட்குத் தாய்தன்மணாள னோடாடிய
சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமா றெங்ஙனே"

என்பதாம். நிற்க, ஒருவன் நித்திரை செய்யுங் காலத்துப் பல விஷயங்களிலிழுக்கும் இந்திரியங்களுக்கும் மனம் சூக்ஷ்மமாய் அடங்கி அஞ்ஞானத்தால் ஆன்மா மூடப்பட்டு தனியே நிற்றலால், சுஷுப்தி சுகம் தருகின்றது. இந்த அஞ்ஞானம் நீங்கி, பல விஷயாதி விகாரங்கள் ஒழிந்து நினைப்பு மறப்பு அற்று, ஆன்மா சுயமாய் நிற்கையில் ஜனிக்கும் சுகத்தை அளவிடயாவரால் முடியும்? இக சுக துக்கங்கள் அடைவதற்குக் காரணமாயுள்ள மனோசங்கற்பங்களே ஜனன மரணங்களுக்குறித்தாம். ஜனனமரண நீக்கமே மோக்ஷமாம். இதைப்பற்றி ஸ்ரீமத் திருவள்ளுவ நாயனார்,

" அவா வெல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றும்
தவா அப்பிறப் பீனும் வித்து"

என்றும், சொரூப சாகரத்தில்.

" ஞான நூல் கற்றாலு நற்றறவு பூண்டாலு
மோன சமாதி முயன்றாலும்—தானாகி
எல்லாக் கவலையு மற்றின் புற்றிருப்பதுவே
சொல்லாரு முத்திச் சுகம்"

எனவும் விளக்கப்பட்டிருக்கின்றது. இது சமாதியின் தன்மையாம். இனிமேற் செல்லுதும்.

ஜீவர்கள் தம் மரணகாலத்தில் எண்ணுகிறபடி பிறவி ஏற்படும் என்னும் சித்தாந்தம் இருப்பதால் மோக்ஷத்தில் ஆசையுள்ளோர்க்கு அக்காலத்தில் தத்துவப் பொருளைப் பாவிக்க, முன்னமேயே ஞான யோகப் பழக்கம் செய்தலைவிட வேறு உபாயமில்லை.

---

## அத்தியாயம் 34.

# பிரம்ம லக்ஷணம்.

ஞானயோகத்தினால் அறியப்படும் அப்பரவஸ்து எத்தன்மைத்து என ஆராயுமிடத்து அதைச் சொல்லாமற்சொல்லும் வேதம், என விவரிக்கப்பட்டிருக்கின்றது. அந்த பரம்பொருளை தமது நிஜ பத்தியினாலும், தத்துவ விசாரத்தினாலும் அறிந்த வண்ணம் நமது மூதாதைகளான உத்தமப்பெரியோர்கள் பலவிதமான வழிகளையும் அதை அடைய வேண்டிய மார்க்கத்தையும் அந்தப் பிரம்மம் என்னும் வஸ்துவின் லக்ஷணத்தையும் தெளிவுபடுத்தியிருக்கின்றனர். அதில் பிரம்மத்தைப்பற்றி திருமந்திரம் என்னும் நூலில், பிரம்மானது கடலாகியும், மலையாகியும் முதலாயும் திசைகளாயும், தேவர்களாயும் உடலாயும், உயிராயும், தத்துவமாயும் உலகத்திற்குத் தலைவனுமாயுமிருப்பதுதான் பிரம்மம் என்பதை,

" தானே கடல்மலை ஆதியும் ஆய்நிற்கும்
தானே திசையொடு தேவரும் ஆய்நிற்கும்
தானே உடலுயிர் தத்துவம் ஆய் நிற்கும்
தானே உலகில் தலைவனும் ஆமே."

என விளக்கியிருக்கின்றது. அவரோத உந்தியார் என்னும் நூலில்

" பார் ஆதி எட்டும் அப்பாலும் எப்பாலுமாய்
ஓர் சோதியே நின்றது உந்தீபற
உன்னு வேறில்லை என்று உந்தீபற"

என்றும், தேவாரத்தில், விஷ்ணுவும் பிரம்மாவும், பெரும்பூதங்களாகியும், சுகம், துக்கம் சந்தோஷம் முதலியனவாகி பக்கங்களாகி எட்டு திசைகளுக்கும் எல்லையாகி பரப்பாகி பரலோகமாகி, பூலோக புவர் லோக சுவர்க்கலோகமாகிப் பொறிகளாகி, பழமையாகி நின்ற தனிப் பெருந்தத்துவக்கடலாய் விளங்குவது பிரம்மம் என்பதை,

" மாலாகி நான் முகனாய் மாபூதமாய் மருக்கமாய்
அருக்கமாய் மகிழ்வுமாகிப்
பரலாகி யெண்டிசைக்கும் எல்லையாகிப் பரப்பாகிப்
பரலோகந் தானே யாகிப்
பூலோக புவலோக சுவலோகமாய்ப் பூதங்களாய்ப்
புராணந் தானே யாகி
ஏலாதன வெலா மேல்விப் பானு யெழுஞ்சுடரா
யெம்மடிகள் நின்ற வாறே"

என்றும், மாணிக்கவாசகப் பெருந்தகையாரும் திருவாசகம் என்னும் நூலில் பிரம்மத்தைப்பற்றிக் கூறப் புகுந்த சமயம் நிலம், நீர், நெருப்பு உயிர், ஆகாயம், சந்திரன், சூரியன் முதலியவையாய்நின்ற தென்னும் தன்மையை விவரித்து,

" நிலநீர் நெருப்புயிர் நீள் விசும்பு நிலாப் பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்
உலகே ழெனத் திசைபத்தெனத் தானொருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ"

என்றும், ஆழ்வாராதிகள் திருவாய் மொழிந்தருளிய திருவாய் மொழி யென்னும் நவ்வியப் பிரபந்தத்தில் பிரம்மலக்ஷணத்தைப்பற்றிக் கூறுவதாவது:

" துன்பமும் இன்பமும் ஆகிய செய்வினையாய்
உலகங்களுமாய்
இன்பம் இல் வெந்நரகு ஆகி இனிய நல்வான்
சுவர்க்கங்களும் ஆய்
மன் பல் உயிர்களும் ஆகிப் பல பலமாய்
மயக்குகளாய்
இன்பு உறும் இவ்விளையாட்டு உடையானைப் பெற்று
ஏதும் அல்லல் இலேனே"

என்று விவரித்தும், தேவிகாலோத்தரம் என்னும் நூலில்

" ஒன்றுடனுந்தோய் வில்லா னொத்தார்
மிக்காரில்லா னுலகமிலான்
நின்ற நினைவுக் கெட்டா நித்தன் காணப்படா
நெஞ்சுள் நிற்பான்
பொன்று பிறப்பிலா முதலா மறிவின் நிட்களன்
பழையோன் பொருள் களில்லோன்
என்று நினைந் தடிக்கடியும் பிரமமென
நோக்குதலே யியல்ப தாமே"

எனவும், ஞானவாசிட்டத்தில்,

" திக்கும் காலமும் முதலிய வசத்துறு
சிறுவடி வறத் துன்பம்
தொக்கவன்னவற்றுன் மறைவாகியே
சூக்கமாய் நொய்தாகி
மிக்க சோதியா யனைத்துமா யொன்றுமாய்
மெய்யறிவு ஒன்றேயாந்
தக்க விந்நிலை நில்லென வுரைத்தனன்
தலைமையாம் உபதேசம்"

எனவும், சிவஞான சித்தியாரில்

" உலகமே யுருவமாக யோனிக ளுறுப்பதாக
இலகுபே ரிச்சா ஞானக் கிரியையுட் கரணமாக
அலகிலா வுயிர் புலன்கட் கறிவினையாக்கி யைந்து
நலமிகு தொழில்களோடு நாடக நடிப்பபனுதன்"

எனவும், திருவம்மானை யென்னும் நூலில்,

" பார்த்த விடமெல்லாம் பரமே காணம்மானை
பாரா மலிருந்தாலும் பாழ் பட்டேனம் மானை"

எனவும், நெஞ்சுவிடு தூது என்னும் நூலில்,

" பாருந் திசையும் படரொளிபாலே நிறைந்தான்
தூருந்தலையுமிலாத் தோன்றவான்—வேராகி
வித்தாகி வித்தின் முளையாய் விளங்கு தனிச்
சத்தாதி பூதங்கள் தானகிச்—சுத்த
வெறு வெளியாய் பாழாய் வெறும் பாழுக்கப்பால்
உறு பொருளாய் நின்ற வொருவன்"

எனவும், உரைக்கப்பட்டிருப்பதினால் பிரம்மலக்ஷணம் இன்னும் விரிவுடையதாம் என்னுந்தன்மைபற்றி இது அளவு கூறினும்.

பிரம்மத்தை யறிவதற்கு முக்கியமாய் வேண்டுவது வைராக்கியம். மனிதன் வைராக்கியத்தையுடையவனைபின் தானெடுத்த காரியத்தைச் சாதிக்கும் தன்மையன் ஆவான் அதுவும் எளிதில் கூடும்.

வைராக்கியம்:—மனிதன் நித்திய அநித்திய வஸ்து விவேகத்தால் இந்த பிறப்பில் அனுபவிக்கும் விஷய போகங்கள் யாவும் அநித்தியம் என்றும், க்ஷணத்தில் அழிவன என்றும், அவைகள் துன்பமேபயக்கும் என உணர்ந்தபின், அந்த போகங்களில் மனப்பற்றைத்தீர வொழித்தலே வைராக்கியம் எனப்படும்.

இந்த வைராக்கியம் என்னும் பதத்திற்குப் பிரதி பதமான பொருள் யாதெனின் " இகமுத்திரார்த்த பல போகவிராகம் " எனப்படுவதாம்.

உலக விஷயங்களில் நாம் சுகம் என்று எண்ணுவது எல்லாம் உண்மையில் சுகமல்ல. நாம் எதைச் சுகம் என்று எண்ணுகின்றோமோ அதனுடன் துக்கமும் கலந்து தான் இருக்கின்றது. துக்கம் அற்றவன் உலகத்தில் எவனுமே யில்லை. இந்த விஷயத்தில் தனிகனும் வறியவனும் ஒன்றே யாவர். இஃதல்லாமல் சுக்கரவர்த்தியும் யாசகனும் கூட ஒரே நிலையினுவுள்ளவர்களேயாவர்.

இவ்வுலகத்தில் சுகதுக்கங்கள் மாறிக் கொண்டேயிருக்கின்றன. சிறிது காலத்திற்குமுன் ஐசுவரியவானயிருந்த ஒருவன் தற்போது ஏழையாயும், சில வருஷங்களுக்கு முன் நித்திய தரித்திரனயிருந்த ஒருவன் தற்காலம் சகல சம்பத்துகளுடனும் வாஹனதிகளுடனும் வாழ்கின்றான். இதனால் இது அதிசயமல்ல வென்பதும், உலகத்தின் சுபாவமென்றும் விளங்குகின்றதன்றோ ?

நித்திய அநித்திய வஸ்து விவேகத்தினல் உலகத்திலுள்ள வஸ்துக்கள் யாவும் நாம ரூப விகாரமானவைகள் என்றும்; உண்மையானவைகள் அல்ல வென்றும் அறிந்தபின், அசத்தாயும் அநித்யமாயுமுள்ள இந்த உலகில் நித்ய சுகம் எவ்வண்ணம் கிடைக்கும் என்பதை மனதார எண்ணி, இகபோகங்களை யெல்லாம் வெறுத்து வைராக்கியம் அடைவதே இக முத்திரார்த்த பலபோக விராகமாகும் விராகம் உண்டாயினும் அது நிலையாய் இருப்பது கடிணமே, சாஸ்திர புராண இதிகாசங்களைச் சிரவணம் செய்யும் போது மாத்திரம் 'அதன் படியே நடக்கவேண்டும்' என்றும், 'புண்ணியமே செய்ய வேண்டு' மென்றும் 'பாபம் செய்யக் கூடாது என்றும்' 'எப்பொழுது கடவுளைத்தியானிக்க வேண்டு மென்றும் எண்ணுவதற்குப் புராண வைராக்கியம் எனப் படும். பிரேதத்தைச் சுடுகாட்டுக்குக் கொண்டு போய் கட்டை யடுக்கித் தீயிடும் வரை (அதாவது ஸ்மசானத்திலிருக்கும் வரையும்) அல்லது சுடுகாட்டுக்குக் கொண்டு போவதைக்கண்டபோது மாத்திரம் 'இது என்ன வாழ்வு' என்றும், 'என்ன போகம்' என்றும் 'பெரியோர்கள் சொன்னதெல்லாம்சரிதான்' என்றும், 'நாமே திருஷ்டாந்தமாகப்பார்க்கிறோம்' என்றும், 'இந்த உலகவாழ்வும் வாஞ்சையும் நிஷ்பிரயோஜனமானது' என்றும், 'இவைகளைத் துறப்பது நலம்' என்றும் எண்ணுவதே ஸ்மசான வைராக்கியம் எனப்படும். ஒரு ஸ்திரீ கருப்ப நோய் பொறுக்கமாட்டாது, அற்ப சுகத்திற்காக இந்தத் துன்பத்தை ஏன் அனுபவிக்க வேண்டும். இனி இந்த புருஷன் முகத்தைப் பார்க்கவே கூடாது, என்றும் அந்தச் சமயம் மட்டும் நினைப்பதற்குப் பிரசவ வைராக்கியம் என்றும் கூறப்படும். இந்த உலக வாழ்க்கையை ஒழித்துப் பேரின்பவாழ்வைப் பெறவேண்டும் என துக்கம் ஏற்பட்ட காலத்தில் மட்டும் நிச்சயம் செய்து கொள்வதற்கு பிரஸவெனவராக்கியம் என்று பெயர். ஆனல் இது போன்ற வைராக்கியங்கள் இன்னும் பல

உள. இவைகளெல்லாம் சிறிது நேரமே யிருக்கும். அந்த சமயம் கழிந்தால் வைராக்கியமானது விலகி பழையபடி ஆசையே முன்னிற்கும் இத்தகைய வைராக்கியங்களை யடைவது பலபோக விராகமாகாது.

ஆனால் எப்பொழுதும் உலகம் அநித்திய மெனவே யெண்ணி அதிலுள்ள அற்ப சுகத்தைக் கண்டு பிரம்மிக்காமல், அது துக்கத்தையே தருமென்று நிச்சயித்து வெறுத்தும் பரமாத்மா அல்லது பகவான் ஒருவனே நித்தியமான சுக ஸ்வரூப மென்று உள்ளபடியே அவரிடத்து மனப்பற்று வைத்தலே இக முத்திரார்த்த பலயோக விராகம் எனப்படும் வைராக்கியத்திற்கு ஹேதுவாவது எவை யெனின் "விஷயங்களிடத்தில் தோஷ திருஷ்டியே வைராக்கியம்" ஆகும்.

இதைப்பற்றித் திருவாய் மொழியில்

" மின்னினிலை யிலிம் மன்னுயிராக்கைகள்
என்னு மிடத்திறை யுன்னுமின் நீரே"

என விசதப்படுத்தியுரைத் தருளியிருக்கின்றனர். இவ்வைராக்கித்தைப்பற்றி சிவதருமோத்திரம் என்னும் உயரிய நூலில்

" அன்னையின் வயிற்றிடையநேக துன்பமே
பின்னையும் பிறப்புழிப் பெரிது துன்பமே"

எனவும்,

" காலையு மலத்தினாற் கடிது துன்பமே
சாலவும் பசியினால் தளர்வர் உச்சியின்
மாலையில் காமமும் மலிய வாடுவர்
வேலைதொறு மிடர் விளையும் விஞ்சியே"

எனவும், அஞ்ஞவதைப்பரணி யென்னும் ஓர் அரிய நூலில்

" தமர் பிறர் அற்றார் சமயமும் அற்றார்
சகவியல்பு அற்றார் தமை யொழிவு அற்றார்
அமர் இடம் அற்றார் அறம் அற்றார்
அறிவு அயர்வு அற்றார் அவர் அடியவரே"

என்றும், ஞானவாசிட்டத்தில்

"தவம் மகம் தீர்த்தம் சேவை அருச்சனை தானம் ஆதி
அவமயக்கத்தால் நீள்காள்விலங்குபோல் அவலத்துஆழ்வர்
பவம் உறும் இவற்றை விட்டுப் பரிசுத்த பரமயோகம்
கவர் வறப் பற்றி யெல்லாக் காதலும் நீங்கி நிற்பாய்"

எனவும் விசதப்படுத்தி விளம்பியிருக்கின்றமையினால், பிரமத்தை யறிவதற்கு வைராக்கியம் வேண்டும் என்பதும் ஒப்பத்தகுந்த தொன்றும். இதனுடன் உலகவாழ்வின் விளக்கங்களைக் காண்டொறும் அவைகள் எவ்விதமிருக்கின்றனவென நோக்குங்கால், அது பல திறப்பட்டு நிற்கின்றதேனும், இகலோக வாழ்க்கை மாயையின் சம்பந்தப்பட்டிருக்கின்றமையினால் அம்மாயை இத்தகையதென அறிய வேண்டுவது அவஸ்யமாகின்றமையினால் அதனைப்பற்றி விளக்க வேண்டுவது கருதி மாயையின் விளக்கம் மதிபுகக் கூறுதும்.

---

## அத்தியாயம் 35.

### மாயை.

அத்வைதம் என்பதன் முக்கியமான கருத்து எது என ஆராய்வோமாயின் அது "தத்துவமசி" என்பதேயாகும். தத்துவமசி என்பதற்குப் பொருள் "அது ஆகிறாய்" என்பதாம். இதுவே மஹாவாக்கியத்தின் முடிவு.

பிரம்மம் ஒன்றே நித்திய நிர்க்குண வஸ்து; மற்றெல்லாம் மித்தையே. ஜீவாத்மா பரமாத்மா இரண்டும் அபேதமானது. ஆனால் பேத எண்ணத்திற்குக் காரணம் எதுவெனின், அஞ்ஞானமேயாம். அஞ்ஞானம நீங்க ஜீவாத்மா தன் நிலைமையை யுணர்ந்து பந்த நிவர்த்தி அதாவது மோக்ஷம் அடைகின்றான் அல்லது பிரமத்தில் லயமாகின்றான் என்பதுவே அத்வைதம்.

அந்த அஞ்ஞானம் அல்லது அறியாமை எவ்விதம் ஜனித்தது எனின், அதுவே மாயையின் காரியம். சிரசினின்றும் சிகை உதிப்பது போல பிரம்மத்தினின்றும் பிரபஞ்சம் உதித்தது எனவும், மாயா காரியம் எனவும் கூறப்பட்டிருக்கின்றது.

> "சிலந்திப் பூச்சி அல்லது பட்டுப்பூச்சி நூலைத்தன்னிடமிருந்து உற்பத்தி செய்தபின் மீண்டும் எவ்வாறு கிரஹிக்கின்றதோ அது போலவும்; எவ்விதம் பூமியில் விருக்ஷம், செடி முதலியவைகள் உண்டாகின்றனவோ அது போலவும் ஜீவித்திருக்கும் மனிதனிடமிருந்து தலைமயிர்கள் எப்படி உண்டாகின்றனவோ, அது போலவும் அழியாத பரமாத்மாவினின்றும் இந்தப் பிரபஞ்ச முண்டாகின்றது"

என முண்டகோபநிஷத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

முக்கியமாய் உலகத்தில் ஏற்பட்டிருக்கும் பல மதங்களும் இந்த விஷயத்தைத் தழுவியே யிருக்கின்றதெனினும அதற்குப் பெயர்மட்டும் வேறு வேறாகக் கணாப்படுகின்றது. அவை:—

(1) கபிலரால் உண்டாயிருக்கப்பட்ட சாங்கியமதத்தில் அவிவேகம் என்பதும்,

(2) கௌதமரால் உண்டாயிருக்கப்பட்ட நியாய மதத்தில் மித்தியா ஞானம் என்பதும்,

வேதாந்தத்தில் அவித்தையெனப்படுகின்றது. ஆனால் இம்மதங்களின் முடிவான கருத்தோ ஒன்றேயாகும். அதாவது அஞ்ஞான நிவிர்த்தியாம்.

அவித்தை நிவிர்த்திதான் ஆநந்தப் பிராப்தியென்பதும், அந்த ஆனந்தம் ஆத்ம தரிசனத்தால் உண்டாவதென்பதும், அதுவே மீக்ஷி, முத்தி அல்லது மோக்ஷம் என்பதுமாம்.

> "ஈஸ்வரனுடைய ஓஜஸ்ஸாகிய சக்தியை பிரபஞ்சத்தை வியஷ்டிப்படுத்தும் தேஜஸ்ஸை மாயை யென்று ஸ்மிருதி கூறுகின்றது. மாயை ஈஸ்வரனினின்று அபின்னமானது. சந்திரனும் அதன் கிரணங்களும் எவ்விதம்

அபின்னமோ, அக்கினியும் அதன் தான சக்தியும் எவ்
விதம் அபின்னமோ அது போலவே யுள்ளது"

என சநாதன தர்மத்தில் காணப்படுகின்றது. நிற்க இம்மாயை ஞான நூல்களில் மூலப்பிரகிருதி யெனவும், பிரகிருதி யெனவும் சாதாரண மாய் வழங்கப்படுகின்றது.

தைத்திரீய உபநிஷதத்தின் சங்கரானு வியாக்கியானத்தில் பிரம்ம லக்ஷணம் கூறிவருதல் "அந்தக் குணங்கள் தோற்றப் பிரபஞ்சத்தி லுள்ள வஸ்துக்களின் குணங்கட்கு சிறிது வேறானவை யென்றும், ஆயினும் பிரம்மம் என்பது இத்தன்மைத்து எனக்கூற வியாலா தென் றும அந்த பிரம்மம் ஒன்றே நித்தியமாய் தன்னுடைய சோதியாய்பகுக் கப்படாததாயுள்ள தென்றும், ஆனந்தமயமான தென்றும் காணப்படு கின்றது

பாரமார்த்திகத்தில் உலகம் பொய் யென்பதும் அந்தப் பெரியாரது கொள்கையாயிருக்கினும், வியகாரத்தில் மட்டும் இந்திரியக் கோற்ற மான வஸ்துக்களும் மனிதர் முதலான அசித்ய ஆத்மாக்களும் இல்லா தன அல்ல என்பது, பிரம்மம் எவ்வளவு நித்தியமோ அவ்வளவுக் உலகம் நித்திய மென்பதும் யதார்த்தத்துவ பிரபஞ்சமும் பிரம்மமும் ஏகமே ஆதலின் இவ்விரண்டும் பகுக்கப்படாதவையாகவே கொள்ள வேண்டிய தென்பதும் அவரது துணியெனத் தெரிகின்றது.

நிற்க, பிரம்மத்துக்கு வேறாக எண்ணப்படும் உலகம் பொய் என் பதும், அவ்வண்ணம் வேறு என்னும் மனோபாவனை யதார்தத ஞா னம் உதித்தவுடனே மறைந்து போகின்றது, உண்மையில் சர்வமும பிரம்மமயம் என்பது சாந்தோக்ய உபநிஷத்தின் கருத்தாகும்.

பிரபஞ்சம் மாயையினின்றுமே உண்டான தெனின், பிரபஞ்சத்தி லுள்ள அளவிலாப் பேதங்கட்கும் மூலமான இம்மாயை எங்கிருந்து எவ்வாறு ஜனித்தது? பிரம்மம் ஞானமயமானது. மாயையும் பிரம் மத்துக்கு உரியதேயாம். ஞானமயமாயுள்ள பிரம்மத்தினின்றும் அஞ் ஞானம் எப்படியுண்டாகும்? பிரம்ம நிஷ்கிரியா அதாவது செயலற்ற வரினின்றும் செயலெப்படி யுண்டாயிற்று என்னும் வினா நிகழு மாயின், குணங்களின் சேர்க்கை யென்பது மட்டும் பொருந்தும்.

மாயை ஐந்து விதமானது. அவைகளின் பெயர் செய்கை முதலியன:—

(1) தமம் Disposition ஜீவசைதன்யத்தை மறைக்கையினால் தமம் எனப்படுகின்றதும், இன்னும் இதன் தன்மையாதெனில் ஆத்மாவின் ஞானத்தையும் மறைக்கின்றது மாம். Obscuring the Superior faculities of the Soul.

(2) மாயை Personified Manner ஜகத்து ரூபமான அன்யதாத் தோற்றத்திற்குக் காரண மாகையால் மாயை யென்றும், இன்னும் இதன் விஷயம் எதுவெனின், பிரபஞ்ச ரூபமான வேறான படைப்புக்குக் காரணமாயிருக்கிறது. A reflected innings, as in a mirror, of the alono really existing God

(3) மோகம் Depravity விபரீத ஞானத்தை யுண்டாக்குகையினால் மோகம் என்றும், ஒரு வஸ்துவைமற்றொரு வஸ்துவாக அறிகிற ஞானத்தை யுண்டாக்குகின்றதுமாம். Taking by mistake one thingfor another as bad for good and good for bad

(4) அவித்தை Ignorance உணர்வையழிக்கையால் அவித்தையென்பதும், உண்மையான ஞானத்தை அழிக்கிறதுமாம். That which destroys true wisdoms.

5 அநிர்தம் Strange சத்து ரூபத்துக்கு அன்னியம் ஆகையால் அநிர்தம் என்கின்றதும், அதாவது உண்மையான கடவுளுக்கு வேறாயிருக்கின்றதுமாம். To the existence of God.

மாயை என்பது மயக்கத்தினின்றும் பிறந்ததையனாலும், மயக்கத்தினையுண்டாக்குகின்றவர்கள் உலகத்தில் மங்கையர்கள் என்பது பற்றியும் மாயைப்பற்றிக்கூறுவந்த ஆன்றோர்கள் மாயை யென்பதற்கு கீழ்க்கண்டவாறு பொருள் விரித்துப்போயிருக்கின்றனர்.

SB

மாயை என்பதற்கு (1) இந்திர ஜாலம் என்றும்;
(2) இரதி தேவி யென்றும்;
(3) இலக்ஷ்மி யென்றும்;
(4) காளி யென்றும்
(5) பொய் என்றும்;
(6) மாயா சத்தி யென்றும்;
(7) வஞ்சம் யென்றும் இன்னும் பலவிதமும் விளக்கியுள்ளார்கள்.

பொதுவில் மாயை யென்பது மயக்கத்திற்கு ஆஸ்பதமானது யென்பது எவரும் ஒப்ப முடிந்ததேயாம்.

(1) ஒருவனுக்குத் திரண்ட செல்வம் ஏற்பட்டுவிடின் அவன் அதில் அழுந்தி மற்றெதையும் கவனியாது முடிவில் துக்கத்தையே யனுபவிக்க நேருகின்றது. இதற்கும் பல ஜன்மங்கள் உண்டென்பது திண்ணம்.

(2) ஒருவனுக்குப் புத்திரப்பேறு மிகுந்துவிடின் அதன் மூலம் தனது பிரியத்தையவர்கள்பால் செலுத்தி துன்பத்தை யனுபவிப்பது உண்டு. இதற்கும் பல ஜன்மங்கள் உண்டு.

(3) ஒருவன் ஒருஸ்திரீயின்மீது தன் காதச் செலுத்திதயதன் மூலம் இறுதியில துன்பமே யநுபவிக்க நேர்ந்துவிடுகின்றது. இதற்க்கும் பல ஜன்மங்கள் ஏற்படும்.

ஆக மேற்கூறிய அவ்வளவும் நமது ஞானத்தை மறைத்து நம்மை பிறவி யென்னும் கடலில் தள்ளி சுக துக்கம் என்னும் அலைகளின் மத்தியில் அகப்பட்ட துரும்பாக்கி முன்னும் போகவிடாமல் பின்னும் போகவிடாமல் செய்வதாகும்.

மாயையின் தோற்றமும் அழிவும் கூறுங்கால்,

"ஜீவாத்மா தன் நிஜவடிவமறியாதிருப்பதே அஞ்ஞானம் என்பதும், மெய்ஞ்ஞானம் உதயமானதே அஞ்ஞானம் அழியும்."

முக்கியமாய் கவனிக்குமிடத்து மாயாகாரியங்கள்மட்டும் வருவனவாயும் போவனவாயும் இருந்தாலும், மாயை மட்டும் எப்போதும் உள்ளது அது நாசம் அற்றது என்பது ஆன்றோர்கள் கருத்தாகும்.

மாயை அநித்ய தோற்றங்களை ஜனிப்பிக்கும் சக்தியாயிருப்பினும், அதற்கு நிராதீனத்துவம் absolute existence கிடையாது. அநாதியாயும் நித்திமாயுமுள்ள வஸ்து ஒன்றேயல்லது இரண்டல்ல. ஆனால் பிரம்மமும் நித்தியமானது. மாயையும் நித்திய மென்பது மஹா மேதாவியான சங்கராச்சாரியஸ்வாமிகளின் அபிப்பிராயமாகும்.

மாயை என்பதைப்பற்றி யாராயும் சமயம் மாயை என்பது ஒன்றில்லை யென்பதும் பல ஆன்றோர்களின் கருத்தாகியிருக்கின்றது. இந்த மாயையைப் பற்றிப் பிரம்ம கீதையினில்:

"எப்பொருளு மாயையினா லெனச்சிலவ ரியம்புவர்காணா
மெய்ப்பரமன் றனையொழிய வேறொருமா யையுமில்லை
ஒப்பரிய பரனொழிய வொருமாயை யுண்டாகில்
அப்பெரிய பரன்பெருமைக் கதுநேரழி வன்றோ?"

என்பதில், எல்லாப்பொருளும் மாயையினால் ஏற்பட்டதெனச் சிலர் கூறுவர். அங்ஙனம் கூறுவது பொருத்தமன்று ஆனால் உண்மையான பரமனை வொருவனைத்தவிர, வேறே யொரு மாயையும் இல்லை யென்றும்; ஒப்பு உபர்வு அற்ற பரனைத்தவிர்த்து ஒருமாயை யிருக்குமாயின், அந்த பரனது பெருமைக்கு அது நேர் அழிவு அல்லவோ? என்றும்; ஞானவாசிட்டத்தில்,

"பேதமுறு புத்தியே மாயையாகும்
பெரிது வருந்தியு மிதனைப் போர்த்தல் வேண்டும்
போத முறும் பேற்றினா லன்றி மாயைப்
பொருநதியின் கரை தோன்று பொருந்தத் தோன்றில்
ஏதமறு மப்பதமே யிறவா வீடா மிம்மாயை
பிறப்பிடமே தென்ன வேண்டாஞ்
சேதமுறக் கொல்வழியே தென்று தேர்வாம்
சிதைவற்று மதனியல்பு தெரியு மன்றே"

எனவும் காணப்படுவதினால் மாயையின் தன்மை நன்கு விளங்காதொழியாது.

## அத்தியாயம் 36.

# ஆத்மா—அதன் தன்மை.

மேலே பதினான்காவது அத்தியாயத்தில் ஆத்மாவைப்பற்றிக் கூறுவதற்குப் புகுந்த நாம் புத்தியும் ஆத்மாவும் என்பவைகளைப்பற்றி குப்த வித்தியா சாஸ்திரப்படி விவரித்தோம் இவ்வத்தியாயத்தில் ஆத்மாவையும் அதன் தன்மையையும் விவரித்துப்பல கருத்துகளுடன் ஒருவாறு விளக்கிக்கூறவேண்டிய அவசியமென வெண்ணி இவண் தனித்துக் கூறப்புகுந்தனம்.

ஆத்மா என்பது உலகத்தில் பரந்துள்ளதென்றே கொள்ளத்தகும். இதை ஒவ்வொருமதஸ்தர்களும் அங்கீகரியாமலிருக்கமாட்டார்கள்.

இது ஜீவாத்மா என்றும் பரமாத்மா வென்றும் இருவகைப்பட்டதாகும். ஜீவாத்மா என்பது ஜீவன், மனிதன் என்றும்; பரமாத்மா என்பது ஈஸ்வரன், கடவுள் என்றும் பிரம்மம் என்றும் வேதாந்த சித்தாந்தங்களின் கருத்தாகும்.

ஆனால் ஜீவாத்மா வேறு, பரமாத்மாவேறு என்பது துவைதம்.

ஜீவாத்மா வேறு என்னும் பாவம் முதலிலும், பின்னர் அது பரமாத்மாவின் அம்சமாய் ஏகம் என்பது சிவிஷ்டாத்வைதம்.

ஜீவாத்மாவும் பரமாத்மாவும் எக்காலமும் ஒன்றே யென்பதும், ஜீவன் அவித்தையினால் மறைக்கப் பட்டுப் பரமாத்மாவை யறியவில்லை யென்பதும் அத்வைதம்.

ஆத்மா தேகத்தில் இருக்கும் இடம் இன்னதென சில நூல்கள் கூறும் முறையை யிவண்காண வேண்டுவது அவஸ்யமென்பது பற்றிச் சிலகுறிப்பிடுதும்.

(1) "இப்பிரமபுரமாயுள்ள சரீரத்தில் ஒரு சிறிய தாமரை மொட்டு போன்ற குகைக்கியிருன்றது. அதன் கண் அந்தகார ஆகாசம் இருக்கின்றது. இதில் ஆத்மா வசிக்கிறான்"

சாந்தோக்ய உபநிஷத்

(2) "பிராணனுள்ள தேகத்தில் அதன் சாதாரண ஸ்திதியில் ஆத்மா இருதயக்குழியில் வசிக்கின்றது".

பிரகதாரண்யக உபநிஷத்

(3) "பூர்வமூல வாக்கியங்களில் ஆத்மா அரிசி அல்லது வால் கோதுமை யளவுள்ளது" பிரகதாரண்யக உபநிஷத்.

(4) "பிந்தியவாக்கியங்களில் அங்குஷ்டப்பிரமாணம் உள்ளது".

கதோப நிஷத்.

(5) "உருவத்தில் மனுஷன் போன்றது" தைத்திரியோப நிஷத்

(6) "மின்னலின் பளபளப்புபோன்றது" பிரகதாரண்யக உபநிஷத்.

(7) "ஆத்மா புகையற்ற ஒளிபோன்றது" கத உபநிஷத்

(8) "ஆன்மா தன்னுணர்ச்சி, பிராணவாயு, கண், காதுடையதாய், பிருதிவி, அப்பு, வாயு, தேயு, ஆகாயம் முதலிய அதனுள் அடங்கியிருக்கின்றது உஷ்ணமுள்ளதும் இல்லதுமாயும், இச்சையுடையதும் அற்றதுமாயும், கோபம் உடையதும் அற்றதுமாயும். விதிக்கு அடங்கியும் அடங்காமலும் இருக்கின்றது". பிரகதாரண்யக உபநிஷத்.

(9) "மனம் மாத்திரம் அல்லது தன்னுணர்ச்சி மட்டும் உள்ளது"

பிரகதாரண்யக உபநிஷத்.

(10) "ஆன்மாக்கள் நான்கு உள்ளன. அவை ஒவ்வொன்றும் மனிதன் போன்றதே" தைத்ரியோபநிஷத்

பழைய உபநிஷத்துகளின் நிழலிட்டதுபோலக் காணப்படும். இந்த கோட்பாடானது பின்னர் உண்டான வேதாந்த சாஸ்திரங்களில் பஞ்சகோசக் கொள்கையென்னும் பெயருடனே அபின்னபாகமாகச் சேர்க்கப்பட்டுள்ளது இது எக்காரணம்பற்றி யெனின், அவரவர் கருத்தாய் நிற்குந் தன்மைபற்றியேயாம். ஆனால் இதன் உண்மையை இந்நூலின் பதினான்காவது அத்தியாயத்தில விசதமாய் விளக்கியிருக்கின்றது கவனிக்கத் தக்கதாம்.

நிற்க, ஒரு மனிதனுக்கு ஆத்மா எவ்வண்ணம் இருக்கின்றதென்பதும், ஜீவனாகிய சமுத்திரத்தில் சகல ஜீவகோடிகளும் முழுகியிருக்கின்றதென்பதும், அங்ஙனமிருக்கும் ஜீவகோடிகளில் அதிமேன்மைய

தான படைப்பு எனப் பல ஆன்றோர்களாலும் கருதும் மானிடவர்க் கத்தினரைப்பற்றியாராயுங்கால் ஆன்மாவைப்பற்றி சில கூறுவது பொருத்தம் என எண்ணிப் பின்னும் சில கூறி மேற் செல்வது கருது தும்.

"சொர்ப்பனத்தில் ஆத்மா தேகத்தினின்றும் விலகியிருப்ப தால் ஒரு மனிதன் நித்திரையில் இருக்கையில் அவனைத் திடீரென்று எழுப்பக்கூடாதென்றும், அவ்விதம் செய்யின், ஆத்மா அந்த தேகத் தில் மீண்டும் பிரவேசியாவிடின் அவன் பிணமாவன்" என்று பிரகதா ரண்யகோபநிஷத்தில் காணப்படுகின்றது. இது அநுபவத்தில் நடை பெற்றதாகப் பலரது அபிப்பிராயம்.

"ஆன்மா சில வியாதிகளில் நீங்கியிருப்பது போல சுஷுப்தி யவஸ்தையிலும் நீங்கியிருக்கின்றது" என்பது ஐதரியஆரண்யகஉபநிஷ தங்களின் கொள்கை.

ஆன்மாவானது தேகத்தினின்றும் விலகியிருக்கின்ற தெவ்வண் ணம் என்பதனை பிரகதாரண்யக உபநிஷத்தில் "ஸ்வப்பனுவஸ்தையில் விலகியுள்ளதான ஆன்மா தன்னிஷ்டம்போலத்திரிந்துகொண்டு வல் லூறு எப்படி அலைந்து உழன்று தன்னிறகுகளை மடித்துக்கொண்டு தன் கூடுபோய்ச் சேரும் வண்ணம் போல, ஆழ்ந்த நித்திரையில் யாதொன் றையும் விரும்பாத யாதொரு பனே கற்பனையும் செய்யாத நிலை யெதுவோ அந்த நிலைக்கு திரும்பப்போகின்றது" என்று கூறுகின்றது

ஆன்மா சரீரத்தில் தங்கியிருக்கும்போது அநுபவித்த விஷயங் களின் ஞாபகமே கனவு ஆதலின் கனவு பொய் எனவும் காலம் இடம், காரணத்துவம் இம் மூன்றும் கடந்தது எனவும்; ஆனால் அது நற்பாக்கியம் அல்லது துர்ப்பாக்கியம் இவைகளுக்கு முன் னெச்சரிக் கையாயிருக்குங்கால் மெய்யெனவும் கொள்ளப்பட்டிருக்கிறது.

இன்னும் இதைப்பற்றி கூறப்புகுந்த ஒரு பெரியவர் கூறுவதா வது: "கனவற்ற பூரணநித்திரையில் எழுபத்திரண்டு ஆயிரம் நரம்பு களின் மூலமாய் ஆன்மா தேகாதியந்தமும், மயிர்களிலும், நகங்களி லும் கூடப்பரவுகின்றது. அப்போதான் ஆத்மா ஓய்வு எடுத்துக் கொள்ளுகின்றது.

மாண்டூக்யோபநிஷத்தின் கருத்தாவது: "ஜாக்கிரம், ஸ்வப்பனம், சுஷுப்தி யென்னும் மூன்று அவஸ்தைகளுடன் துரியா வஸ்தையும் ஒன்றாய். இந்த துரியாவஸ்தைகளுள்ள புருஷன்தான் தன் ஆத்மாவும் பரப்பிரம்மமும் ஏகமேயாகும் என அறியப்படுகின்றது. தனது ஆத்மதத்துவமுணரவே பரமாத்மாவின் உணர்ச்சியுண்டாகும் இது வே முக்தியடைந்தவன்நிலை என்றும் ஜீவன் முக்தத்வம் என்றும் கூறப்படுவது.

ஆனால் ஆத்மாவானது ஓர் ஜீவன் பூமியில் உதிக்காமுன் வேறொரு தேகத்தில் தங்கியிருந்ததாக பிரகதாரண்யக உபநிஷத்துக் கூறுகின்றது

மண்டையெனும்புப் பெருத்துவழியாய் உற்பத்தியாகும் தக்ஷணமே இடையிற்சேர்க்கப்படுகின்றதென தைத்ரீயோபநிஷத்துக் கூறுகின்றது.

கால் விரல்களின் நுனிகள் மூலமாய் வயிற்றின் வழியாக மேல் நோக்க சிரசில்பாய்ச்சப்படுகின்றது என ஐதரீயோபநிஷத்கூறுகின்றது.

மனிதனுக்குப் பிராணன் போகையில் ஆன்மா தேகத்தை விட்டு நீங்கி விடுகின்றதென்பது நமது சாஸ்திரங்களின் துணிபாகும். ஆனால் பிராணன் நீங்குங்கால் ஆன்மா ஆகாயத்திற்செல்லுகின்றது; மனிதனிடமிருந்து அவன் கர்மம் தவிரவேறொன்றும் மிச்சமாய் விடப்படவில்லையென்று பிரகதாரண்யக உபநிஷத்தின் ஒரு பாகத்தில் காணப்படுகின்றது.

இவ்வபிப்பிராயத்தைப்பற்றிப் பலரது கருத்து எவ்விதமாயினும் தமிழ்வேத கருத்தாவன நாயனார் என்னும் சிறப்புப்பெயருடைய திருவள்ளுவதேவர்.

"குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு"

என்க் கூறியிருக்கின்றமையினால் ஆத்மசம்பந்தக்கோட்பாடு ஒரு பெரிய இரகசியப்பொருளாயும், பஹிரங்கத்தில் தர்க்கிக்கத் தக்கவிஷயமாயின்றியும், குருமூலமாய்த் தெளிய வேண்டியதாயும் இருக்கின்றதென்பது ஒரு சாரார் கொள்கையாகும்.

இவ்விஷயங்களின் உண்மையயை நாம் முன்னரே கூறியிருக்கின்றோம்.

ஞானவாசிட்டத்தில் உண்மை ஞானமான ஆத்மதரிசனத்தைப் பற்றிக் கூறியிருப்பதாவது:

“ அவ்வறிவு சங்கற் பத்தாற் கட்டுண்ணு மதுவிடில்
வீடுறு மந்த வறிவு தன்னை
செவ்விதினீ யறிந்தனையாற் போகத் திச்சைச் செகக்
காட்சி யனைத்தினையுந் தீர்தி யானுப்
எவ்வமற நிறை மனத்தா லடையற் பால யாவு
மடைந்தாய் காட்சிக் கெட்டா தோன்றிற்
கவ்வை யறவடை கின்றாய் முத்தனாய்க் கருத்திலுறு
மயக்கமெனுங் கவலை தீர்வாய்”

என்றும்,

“ படர்சித் துருவாய்ப் பிரிவிலனாய்ப்
பாரா பாரம் பற்றிலனாய்த்
திடமுற் றனது கனவடிவை நினைசங்
கற்பஞ் சேராதே
கடனுவுயிர் கொல்லுறு பகைவன்
கருத்தில் வஞ்சமிலா நட்பிற்
றொடர்பானவனே யெனக் காணுமவனே
கண்டோன் றாய்தாக”

என்றும் கூறப்பட்டுள்ளதின் கருத்தாவது: பகைவனை உறவாளி அல்லது நண்பனாக உண்மையிலே களங்கமறக் காண்பவன் எவனோ, அவனே ஆத்ம தரிசனஞ் செய்தோன் என்பதுவாம்.

அதாவது உலகில் ஒவ்வொருவரும் உண்மை வழியில் நின்று சமரஸபாவனையுடன் ஒழுகிப் பிறவுயிர்களையுந் தன்னுயிர்போல எண்ணி வருமாற்றலை யெய்துவாராயின் அவரே ஆத்ம விசாரணை புரிந்து முக்தி யெய்துபவராவர்.

---

## அத்தியாயம். 36.

# ஆரோபம்—அபவாதம்.

மனிதர்களாகப் பிறந்தவர்களின் நிலைமையும் ஆத்ம வாசம் முதலிய பலவிஷயங்களைப்பற்றி விவரித்து வந்தநாம் ஆரோபம் அபவாதம் என்பதைப் பற்றி விவரிப்பது கருதினும். இவைகளின் விபரமாவன:—

ஒரு வஸ்துவை வேறோர் வஸ்துவாகக் காண்பதற்கு ஆரோபம் என்றும், அந்த வஸ்துவை உள்ளபடியே காண்பதற்கு அபவாதம் என்றும் பெயர். பஞ்சபூதத் தோற்றமாகிய பிரபஞ்சத்தை மெய்யெனக் கொள்ளல் ஆரோபம்; தத்துவ விசாரத்தினாலும் அநுபவத்தினாலும் அது பொய்யெனத் தள்ளி, அதற்கு அதிஷ்டானமான பிரம்மம் ஒன்றே மெய்யெனக்கொள்ளல் அபவாதம். கயிற்றைப் பாம்பெனக் காண்பது ஆரோபம், பாம்பு போலத் தோன்றிய கயிற்றினைக் கயிறாகவே காண்பது அபவாதமாம். இதுபோலவே நாமரூபங்கள் இன்றி எங்கும் எச்சமயமும் ஒரே தன்மையாய் விதமாகிய காரண காரிய பாகுபாடு இன்றி ஏக சொரூபமாயும் அகண்டஞானப் பிழம்பாயுமுள்ளது எந்தப் பிரம்மமோ அந்தப் பிரம்மத்தினிடத்து மெய்போல் தோன்றும் பஞ்சபூத விகாரங்களான சகல சராசரங்களும கற்பிதமேயன்றிவே நல்ல வென்று அறியவேண்டும். கயிறு பாம்பாகத் தோன்றிய போது அக்கயிற்றினிடத்து பாம்பு என்னும் நாம ரூபங்கள் எப்படியில்லையோ, அதுபோலவே பிரம்மம் ஜகஜீவபரங்களாகத்தோன்றியபோதும் அந்தப் பிரம்மத்தினிடத்தில் நாம ரூப விகாரங்கள் இல்லை எங்ஙனம் எனின் கயிறு பாம்பாகத் தோன்றியபோதும் பாம்பல்ல; பாம்பு என்னும் பிராந்தி பயம் அல்லது நினைவு நீங்கியபோதும் பாம்பு அல்ல அதுபோலவே விசாரணைக்குமுன் பிரம்மம் ஜகஜீவபரங்களாய்த் தோன்றிய போதும்; விசாரணை பின் பின் அவைகள் அல்லவெனத் தெளிந்தபோதும் பிரம்மம் பாறுதல் சொல்லாமலே விகாரமின்றி உள்ளது.

ஞானமயமாய் இரண்டற்று இருக்கும் பிரம்மம் ஜகஜீவபரங்களாய்த் தோன்றுதலே ஆரோபமாம். அந்தத் தோற்றம் பொய் என்று தெளிதலே அபவாதமாம்.

அகண்டமாய், பரிபூரணமாய், சத்து சித்து ஆனந்த சொரூபமாய் விளங்கும் பிரம்மத்தினிடத்தில் சிப்பியில் வெள்ளி தோன்றுவது போல ஓர் ஞெப்திகிளம்பியது; அதற்கு மூலப்பிரகிருதி யென்று பெயர். அந்த ஞெப்தி யென்னும் மூலப்பிரகிருதி ஜகஜீவபரங்கள் என்னும் மூன்று வஸ்துக்களையும் உள்ளடக்கிக்கொண்டு நிற்கும்அவசரத்தை மஹத்தத்துவம் என்று ஒரு சாரார் கூறுகின்றனர்.

நிலத்தில் இட்ட விதை உப்பி முகவில் ஒரு முளைவிடுவதுபோல, இந்த மஹத்தத்துவத்தினின்றும் அஹங்காரம் ஜனித்தது என்றும்; அவித்தையினின்றும் உண்டான அந்தமுளை மூன்றாக விரியுமாறு அஹங்காரத்தினின்றும் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்கள் உண்டாயின வென்றும்; ஸத்வ குணமே மாயை யென்றும் அதினின்றும் பிரதிபலித்த பிரம்மசைதன்யத்திற்கு ஈஸ்வரனென பெயரொன்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன ரஜோ குணம் ஒன்றொன்று தாரதம்மியமுள்ள பல ரூபங்களாயிருக்கும். அங்ஙனம் தோன்றுபவைகளுக்கு அவித்தை யெனப் பெயராகும் அந்த அவித்தையினிடத்து "மலினசலப்பிரதிபிம்பம்" போல பிரம்ம சைதன்யம் பிரதிபிம்பிக்கின்றதெனவும், அந்தப் பிரதிபிம்பங்களுக்கு ஜீவர்கள் என்று பெயரென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. தமோ குணமானது ஆவரணம் விக்ஷேபம் என்னும் இரு குணங்களையுடைதாம். ஆவரணம் என்பது மறைப்பு. இதையே பஞ்சகோசமென ஒரு சாரார் கூறுகின்றனர் இந்த ஆவரணசக்தி, தேகம் ஜீவபரங்களின் பேதம் அறிய வொட்டாமல ஜீவர்களை மறைத்து நிற்கும் ஆனால் இந்த சக்தி மாயாரஹிதனான ஈஸ்வரனையும் தன்னையுணர்ந்த ஜீவன் முக்தர்களையும் அறுகாமல, தேகமே தான் என்றும, லோக போகங்களை நித்தியானுபவம் என்றும், அஞ்ஞான வசப்பட்டு அலையும் மாந்தர்களையே மறைத்து நிற்கும். இந்த ஆவரண சக்தியாலேயே சம்சாரப்பற்று அதிகரித்து முக்திக்குத் தடையாகின்றது. விக்ஷேப சக்தியோ முக்திக்கு ஹேதுவாம். ஒன்று மற்றொன்றாகத் தோன்றுதல் ஆவரணம் ஒன்றை மற்றொன்றாக உணர்தல் விக்ஷேபம். விக்ஷேபத்தால் துக்க நிவர்த்தியுண்டு துக்கநிவர்த்தியே முக்தி. இதையே குப்த வித்தியாசாஸ்திரத்தில் கூறியபடி நிர்வாணம் எனப்படும்.

விக்ஷேபசக்தியினால் ஸப்த, ஸ்பரிச, ரச, ரூப, சந்தம் என்னும் பஞ்ச தன்மாத்திரைகளும், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களும்; அந்தக்கரணமும்; கர்மேந்திரியங்களும், ஞானேந்திரியங்களும், பிராணாதி தசவாயுக்களும், தத்துவங்கள் தொண்ணூற்றாறும், இன்னும் பற்பல பேதங்களும் பலவேறு வேறான சரீரங்களும் உண்டாயின.

இவைகளின் உண்மை யைக்கைவல்ய நவநீதம் என்னும் நூலில் (1) ஆரோபம்—அபவாதம் (2) ஆரோபவியல்பு, (3) அபவத வியல்பு, (4) ஆவரணத்தீமை, (5) விக்ஷேபநன்மையென விளக்கப் பட்டுள்ளது.

அவையாவன்:—

ஆரோபம்—அபவாதம்.

“ அந்தியா ரோபமென்று மபவாத மென்றுஞ் சொல்லும்
யுத்தியாற் பந்தம் வீடென் றுரைக்கும் வேதாந்தமெல்
லாம் மித்தையாமாரோ பத்தாள் பந்தம பவாதத்தால்
முத்தியா மிவ்விரண்டின் முந்தியா ரோபங் கேளாய்”

“ஆரோபம் என்றும் அபவாதம் என்றும் சொல்லப் படாநின்ற யுக்தியினால் பந்தம் என்றும் மோக்ஷம் என்றும் கூறப்படுகின்றதான வேதாந்தங்களெல்லாம் பொய்யாகும். ஆரோபத்தினால் பந்தமும், அபவாதத்தினால் முக்தியும் ஏற்படும். ஆனால் இவ்விரண்டினிலும் முந்தியதான ஆரோபத்தின் இயல்புகளைக் கேள்” என்று ஆரோப வியல்பு கூறப்படுகின்றது.

(2) ஆரோபவியல்பு.

“ ஆரோப மத்தி யாசங் கற்பனை யாவ வெல்லாம்
ஓரோர்வஸ்துவினை வேறே யோரோ
வஸ்துவென வோர்தல்
நாரூடு பணியாத் தோன்ற னரனைத் தறியிற்
றோன்றல்
நீரூடு கானற் றோன்ற னிரந்தரம் வெளியிற்
றோன்றல் ”

" ஆரோபம் அத்தியாசம் என்பன வெல்லாம் கற்பனையாகும். அதாவது ஒரு வஸ்துவை வேறு ஒரு வஸ்துவாக நினைத்தல், அதாவது கயிற்றினிடத்தில் பாம்பாகக் காணப்படலும், மனிதனுக உரு வெளிதோன்றுதலும், நீர் போல கானல் தோன்றுதலும் இன்னும் பலவுமாம்,"

3. அபவாத வியல்பு.

" அரவன்று கயிறென்றாற்போ லாளன்று
தறியென் றாற்போல்
குரவன்றனுபதேசத்தாற் கூறுநூ
லொளியைக் கொண்டு
புரமன்று புவன 'மன்று பூதங்க
ளன்று ஞானத்
திரமென்றும் பிரமமென்றும் தெளிவதே
யபவாதங் காண்"

" பாம்பு அல்ல கயிறு என்பது போலும்; ஆள் அல்ல உரு வெளி என்பது போலும்; குருவின் உபதேசத்தினுல் கூறும் சாஸ்திரங்களின் பிரகாசமான தீக்ஷண்ய அறிவினைக்கொண்டு ஊரல்லவென்றும் உலகம் அல்லவென்றும், ஞானத்தின் முதிர்ச்சியென்றும், பிரம்மம் என்றும் தெளிவதுவே அபவாதமாம்".

4. ஆவரணத்தீமை.

(i) " தோற்றமாஞ்சத்திதானே துன்பமாம்
பவமா னாலும்
ஆற்றலான் முத்தி சேர்வார்க் கனுகூல
மாகுங் கர்ணீ
ஊற்றமாம் பகற்கா லம்போ லுபகார
நிசியி லுண்டோ
மாற்றமென் னுரைப்பேன் மைந்தா மறைப்பது
மிகப்பொல் லாதே"

" தோற்றமானதான சத்தியே துன்பமாம். பவம் ஏற்படினும் ஆற்றலினுல் முக்தியை யடைபவர்க்கு அநுகூலம் ஏற்படும். உற்சா

கத்தையளிக்க வல்லதான பகற்காலத்தைப்போல வெளிச்ச விசேஷ மான உபகாரம் இராக்காலத்திலுண்டான மறைப்பு என்னும் இருள் மிகக் கொடியதாகும்".

(ii) "சுழுத்தியிற் பிரளயத்திற் றோற்றமாஞ்
சகங்கண் மாண்டும்
அழுத்திய பவம்போய் முத்தியடைந்தபே
ரொருவ ருண்டோ
முழுத்த விக்ஷேப மெல்லா முத்தியிற்
கூட்டுகிற்கும்
கொழுத்த வாவரண முத்தி கூடாமற்
கெடுத்த கேடே"

"சுழுத்தியில் பிரளயத்தில் தோற்றமாகும் சகங்கள் மாண்டும், துன்பத்திலே அழுத்தியதான பவம் நீங்கி முத்தியை யடைந்தவர்கள் எவரேனும் இருக்கின்றனரா? முழுந்ததான விக்ஷேபம் என்பது முத்தியில் கூட்டுவிக்கும். கொழுத்த ஆவரணமானது முத்திகிட்டா மற் கெடுத்ததேயாம்."

5. விக்ஷேப நன்மை.

"சுத்தியில் வெள்ளிபோலத் தோன்றிய தோற்றமான
சத்தியும் பொய்யே யென்றாற் சத்திசாதனமாவந்த
முத்தியும் பொய்யா மென்னின் மோக நித்திரை விலங்கால்
நித்திரை தெளியுமாபோ னிர்வாண நிலைமெய்யாமே"

"சிப்பியில் வெள்ளி தோற்றப்படுவதுபோல; சத்தியையும் பொய் என்று கூறினால், அதன் சாதனமாக வந்ததான முத்தியும் பொய்யாம் என்றால் மோக நித்திரையான விலங்கால் நித்திரை தெளி வதுபோல நிர்வாணம் என்னும் நிலையானது மெய்யாகும்".

இதனால் ஞானம் என்பது இன்னின்ன விதத்தினால் தெளிவு படாமல் மறைவுபட்டிருக்கின்றதென்பது தெளிவாகும். இனிபிரமத் தின் தன்மையையும் ஜீவனின் நிலையையும்தெளிவுபடக்கூறி, ஜீவாத்மா வுக்கு ஏற்படாநின்ற மூன்று அவஸ்தைகளைக் கூறுவாம்.

## அத்தியாயம் 37.

# ஜீவாத்மாவின் அவஸ்தைகள்.

ஜீவன்—ஜீவாத்மாவுக்கு அவஸ்தைகள் நான்கு என்பது மாண்டூக்ய உபநிஷத்தின் கருத்து.

அவைகளின் விபரம்:—

1. ஜீவன் விழித்துக்கொண்டிருக்கும் காலம் ஜாக்கிராவஸ்தையென்றும்;
2. ஜீவன் கனவு [சொர்ப்பனம்] காணும் காலம் சொர்ப்பனாவஸ்தை யென்றும்;
3. ஜீவன் சுக நித்திரையிலிருக்கும் காலம் சுஷுப்தியவஸ்தை யென்றும்;
4 ஜீவன் மேற்கூறிய மூன்று அவஸ்தைகளையும் கடந்து நிற்கும்காலத்திற்கு துரியாவஸ்தையென்றும் நான்கு அவஸ்தைகள் உண்டு.

முதல் அவஸ்தையில் ஜீவனுக்கு வைசுவானரன் என்றும்; இரண்டாவது அவஸ்தையில் ஜீவனுக்கு தைஜஸன் என்றும்; மூன்றாவது அவஸ்தையில் பிராக்ஞனென்றும் பெயர்கள் ஏற்பட்டிருக்கின்றன.

நான்காவதான துரியாவஸ்தையில்தான் ஜீவனுக்குப் பிரம்மம் என்று பெயராகும். அதனால் தான் பிரத்யாகாத்மாவாகிய ஜீவனும் பரமாத்மாவாகிய பிரம்மமும் யதார்த்தத்தில் ஏகமே. இந்தக் கருத்துக்களையே உபநிஷத்துகள் போதிக்கின்றன.

இந்த துரியாவஸ்தையிலுள்ள ஜீவனுக்கு மட்டும் மற்ற எல்லாருக்கும் பிரத்தியக்ஷமாகக் காணும் பிரபஞ்சம் மித்தை [பொய்] யாகத் தோன்றும்.

இந்த ஜீவாத்மாவின் உபாதிகளாக முக்கியமான சரீரங்கள் * மூன்று உண்டு. அவை:—

1. ஸ்தூல சரீரம். இது இந்திரியங்களுக்குப் புலப்படும் தன்மையதாம். இது ஜாக்கிராவஸ்தையிலுள்ள ஆத்மாவின் உபாதி.

2. சூக்ஷ்மசரீரம். இது நுட்பதேகம். சூக்ஷ்ம திருஷ்டிக்கு மட்டுமே புலனாவது. Astrol Body. இது சொப்பனாவஸ்தையிலிருக்கும் ஆத்மாவின் உபாதியாயம்.

3. காரண சரீரம் இது முழுநித்திரையிலுள்ள ஆத்மாவின் உபாதியாம்.

ஆத்மா முப்பான்மையுடையவன் என்னும் உண்மை கீழ்க் குறிக்கும் மஹாவாக்கியங்களால் தெளியப்படும்.

"ஆத்மா ஸ்தூல உபாதியில் விஸ்வன்" என்றும்;

"ஆத்மா சூக்ஷ்ம உபாதியில் தைஜஸன்" என்றும்;

"ஆத்மா காரண உபாதியில் பிராக்ஞன்" என்றும்;

அழைக்கப்படுகின்றான். ஆகையினால் ஆத்மா முப்பான்மையுடையவனென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

பிரம்மத்தின் மூன்று குணங்களான சத்தியம், ஞானம், அநந்தம் இவைகள் பிரதிபிம்பித்து பிராகிருதியில் மேலே கூறிய மூன்று உபாதிகளாக வெளியாகின்றன ஸ்தூல சரீரமும் அந்த சொரூபத்தின் உபாதி. சூக்ஷ்ம சரீரம் ஞான ஸ்வரூபத்தின் உபாதியாம்.

ஜீவாத்மாவுக்கு ஐந்து வகைக் கோசங்கள் அமைக்கப்பட்டுள்ளதெனக் கூறுகின்றன ஞானசாஸ்திரங்கள். அவைகளை முன்னர் விளக்கியிருக்கின்றோமாயினும் மீண்டும் குறிப்பிடுதும் அவை: அன்னமய கோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமய கோசம் ஆனந்தமயகோசம் ஆக ஐந்து.

* இதை நான்கு என ஒரு சாரார் கூறுகின்றனர். ஆனால் அவர்கள் நான்காவதான சரீரத்தை விளக்காமற்போனது விசனிக்கத்தக்கதேயாகும். நமது ஆராய்ச்சியின்கண் அகப்பட்டதானமூன்றைமட்டும்விளக்கலாம். ஆயினும் நான்காவது முக்தி அல்லது நிர்வாணம் எனக்காணப்படுவதினால் அவர்கள் கூற மபங்கி வழிவிடுத்துச் சென்றிருப்பரென் றெண்ணுதும்.

" பிருதிவியின் தத்துவம் ஆறுவிதமாய்ப் பரிணமித்திருக்கின்றது. அதாவது:

1. பிருதிவி—ஸ்துலத்தன்மை.
2. அப்பு—திரவியபதார்த்தத்தன்மை.
3. வாயு—ஆவித்தன்மை.
4. தேயு—பிரகாசமான பதார்த்தத்தன்மை.
5. ஆகாயம்—ஆகாசத்தன்மை.
6. பர ஆகாயம்—பரம அணு சூக்ஷ்மத்தன்மை.

இக்கப்பிரகிருதி பரிணமங்களின் சேர்க்கைகளில் அதாவது அணுத்திரள்களில் பிருதிவி தத்துவம் பிரதானமாக விளங்குகின்றது' ஸநாதானதர்மம்

ஜீவாத்மாவான மனிதனில் பிரக்ஞாவஸ்தையாயுள்ள துபிராணன். அந்தப் பிராணன் ஆத்மாவினின்றும் பிறந்தது என்பது பிரஸ்நோபநிஷத்தின் கூற்று.

மேற்கூறிய கோசங்களில் அன்னத்தினுல் அதாவது ஆகாரத்தினுல் ஆனதுமுதலாவதான அன்னமயகோசம்: இதுவே ஸ்தூலாம்சம். இந்த ஸ்தூலாம்சம், திரவாம்சம், ஆவியம்சங்களால் அமைந்திருக்கின்றது. இவைகளில் பிருதிவி தத்துவம் பிரதானம். கர்மேந்திரியங்களுக்கு மூலங்களான வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் இவைகட்கு இருப்பிடம் இதுவே.

இந்தக் கோசத்தில் மூளையை நடுநாயகமாக உடைத்தான நாடி ஸமூகம் இருக்கின்றது. அதன் சாதனத்தினுல் ஜாக்கிராவஸ்தை யபிமானியான வைசுவானரன்பூலோக விஷயங்களில் சம்பந்தித்து நடந்து கொள்ளுகிறுன்.

சூக்ஷ்ம சரீரமானது பிராணமய, மனேமய, விஞ்ஞானமயகோசங்களால் உண்டாகின்றதென்பது சித்தாந்தமாகும்.

ஞானேந்திரியங்கள் ஐந்து, கன்மேந்திரியங்கள் ஐந்து, பிராணன்கள் ஐந்து; விக்ஞான சேர்க்கையாகிய இவைகள் சூக்ஷ்ம சரீரமாம். இந்த சரீரம் பிராணமய கோச மூலமாய் பூலோகத்தில் சம்பந்தித்து, அதன் சம்பந்தமான நுண்ணிய ஆகாச அணுத்திரள்களால் அமைக்கப்

பெற்றுள்ளது. ஸ்தூல சரீரக்கிருஷியை நடத்தும் பிராணன்கள் ஆகாசத்தில் சஞ்சரிக்கின்றன. இக்காரணம் கொண்டே பிராணன் வெளிப்பட தேகம் மரணமடைகின்றது எனக்கொள்ளவேண்டும்.

ஸ்நாதனதர்மம் கோஷிப்பதாவது:

" தற்காலத்துப் புலனறிவு Phisiology சாஸ்திரத்து முடிவான அபிப்பிராயம் யாதெனின், மேலே விவரிக்கப்பட்ட சக்திகளில் விகசிப்பன வெல்லாம் நுண்ணியதான ஆகாச அணுத்திரள்களில் ஏகமாம் என்பதும், இந்த ஆகாசமே மேலேகூறிய பிராணமய கோசத்தி அமைப்புப் பொருள் என்பதும் ஆகும்"

காரண சரீரம் என்பது வேதாந்திகள் கூறும் ஆனந்த மயகோசமாம். ஜாக்கிராவஸ்தையில் அன்னமய, பிராணமய, மனோமய கோசங்கள் சுறுசுறுப்பாயிருக்கின்றன. அந்த அவஸ்தையில் தீவிர புத்தியுடைய ஞானிகள் விஞ்ஞானமய கோசத்தைக் கருவியாகக் கொள்ளுகின்றனர். சாதாரண மனிதர்களோ மனோமய கோசத்தைத் தாண்டிப்போக சாத்தியமற்றிருக்கின்றார்கள்.

மரணகாலத்தில் பிராணமய கோசம் அன்ன மயகோசத்தினின்றும் பிரிகின்றது என்பதும், தேகத்தில் பிராணஸ் உள்ள வரையில் ஜீவன் இருக்கின்றது என்பதும் உபநிஷத்துகளின் கூற்றும். ஜாக்கிராவஸ்தை சம்பந்தமான எல்லாச் சக்திகளும் பிராணனில் அடக்கமெனவும்; பிராணன் பிரியும் காலத்து இந்த சக்திகள் எல்லாம் கூடவே செல்லுகின்றன வென்பதும்; ஜீவன் வெளியேறுங்காலத்தில் எல்லா சக்திகளும் ஜீவனோடேயே வெளியேறுகின்றன வென்றும்; அப்போது மரணமான மனிதன் சூக்ஷ்மசரீரங்களிலிருக்கின்றான் என்றும்; இறந்து போன மனிதனைப்பற்றி கௌஷீதகி உபநிஷத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

இனி கர்மம் என்பதையும் தர்மம் என்பதையும் விளக்குவான் கருதி ஜீவபிரம்ம உயர்வைப்பற்றிக்கூறும் ஆன்றோர் கருத்தான பிரம்மகீதையிற் காணப்படும் ஒரு விஷயத்தை விளக்கி அடுத்த அததியாயத்தை யாரம்பிப்போம். அதாவது;

" உயர்ந்த மெய்ஞ்ஞான நிட்டையா லனைத்தும்
உணர்ந்த மேலோர்க் குளமகிழ

வியந்துடலாவி பொருளையும் சமர்ப்பித்
திணையிலாப் பிரமவானந்தம்
தயங்கினோ ருடலபி மானத்தை நீக்கித்
தனத்தின்மேற் பற்றுதலின்றிச்
சுயம்பிர காசச் சிவமல தொன்றைச்
சுட்டிடாரவர் பதந்துதிப்பாம்''

எனக் காணப்படுகின்றதில், "உயர்ந்த அறிவு அதிலும் மெய்ஞ் ஞானம் என்றது பிரம்ம ஞானம் எனப்படுவது இந்த பிரம்ம ஞான மானது கைகூடுவதினால் மோன நிலையினையுணர்ந்தவர்களான பெரி யோர்களுக்கு உள்ளம் மகிழ்ச்சியெய்தும் வண்ணம் உடல், பொருள், ஆவி மூன்றினையும் அர்ப்பணஞ்செய்து இணை சொல்லக் கூடாதான உபாவினையுடைய பிரம்மானந்தத்தை யடைந்தோர் அல் லது பிரம்மானந்தத்தில் முழுகினோர் தான் தனது என்னும் தேசாபி மானத்தை யொழித்து, திரவியத்தின்மீது ஆசையற்றவர்களாகிச் சுப மானதும் மங்களகரமான ஜோதிவடிவினதான சிவம் அல்லது வேறு ஒன்றையுங் குறிப்பிடாதவர்களான பெரியோர்களின் பாதாரவிந்தங் களைத் துதிப்பாம்' என்பது கருத்தாகவே எவரும மேலானஞான மான பிரம்ம ஞானத்தையடைய விரும்புமாறு நாம் கோருதும்.

---

## அத்தியாயம் 38.

## கர்மம் — அதன் சவிஸ்தாரம்.

மனிதன் தன்னுடைய அசுத்த அம்சங்களைப் போக்கி தெய்வ பாவத்தை யடையும் பொருட்டு அடிக்கடி பூமியில் ஜனிக்கின்றான். இந்தப் புனர்ஜன்மத்தை நிர்ணயம் செய்வது எது வெனில், கர்மமே யாம. காமத்தின் ஸ்வரூபமாவது காரணத்துக்குத் தக்கபடி காரியம் தவறாமல் ஜனிக்கும் என்பதேயாம். இந்த காரிய காரண நியமத்தை ஸ்தாபிப்பது எதுவெனின், காரணமன்றியில் காரியம் இல்லை யென்ப தும், காரணத்தை யநுசரித்துக் காரியம் இருக்கின்றதென்பதும்,' ஒன்றிருந்தால் மற்றொன்று இல்லாமல் போகமாட்டாது என்பதுமே

யாம். கர்மம் என்பதற்குக் கிரியையென்று பொருள். ஆயினும் கிரியையையும் அதன் காரியமான பலனையும் இணைக்கும் நியமம் கர்மம் என்றும் சொல்லப்படுகிறது. ஒவ்வொருவனுடைய நடத்தையின்படி பலன் கொடுப்பதே விபாகம். இதுவே கர்மம். ஜனங்களுடைய கிரியைகளை ஒழுங்குபடுத்தும் யமனே இந்தக்கர்மம (யமயதீதியம:) பக்ஷபாதமன்றியில் பலனைக் கொடுப்பதால் சமவர்த்தியென்றும் தரும ராஜன் என்றும் யமனுக்குப் பெயர் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகை யால் இது அறிவுடைய நீதிபோலும்.

இதனை இன்னதென்று நாம் அறியக்கூடாவிட்டாலும், இதன் செயல்மட்டும் நமக்கு நன்றாய்த் தெரியவரும்.

காரணத்தை யநுசரித்துக் காரியம் ஜனிக்கின்றது என்னும் நியமம் பிரம்மாதி பிபீலிகை வரையில ஒவ்வொரு பூமிகையிலும் காணப்படுகின்றது. இது ஒரு குறிப்பானவிதமாய் விளங்கும் என நியாயம் இல்லை. ஆனால் பிரமமாண்டத்தில ஸ்வபாவ நிலைமையில் எப் போது வேறுபாடுகள் நேரிடுகின்றனவோ அப்போ அவைகளைக்கர்மம் திருத்தி சமத்துவத்துக்கு கொண்டு வருகின்றது. இஃதெங்ஙனம் எனின், ஒரு குளத்தில ஜலம் அசைவற்றிருக்கும்போது ஒரு கல்லை அதில் எறிந்தால் அலைகள ஏற்பட்டு கலவிழுந்த இடம் சக்கராகார மாய்ப் பரவுகின்றன. அந்த அலைகள் குளத்தின் கரையில் மோதுவ தால் தடைபட்டுத் திரும்பி மறுபடியும் மூலஸ்தானத்துக்கு வந்து விடுகின்றன. பிறகுதான் குளம் முன்போல ஸ்தம்பமாகின்றது இது போல பிரம்மாண்டத்தில் எந்தச்செயலும் ஸ்வபாவ நிலையில் வேறுபாடு உண்டுபண்ணுகின்றது. மீண்டும் ஸ்பாபம் தன் நிலைமைக் குத் திரும்புகின்றது. இதுவே கர்மம். கர்மத்தின் வியாபாரங்களா வன:

பிரம்மாண்டங்கள், சூரியமண்டலங்கள், லோகங்கள் முதலியன உண்டாகிறதும், லயமடைகிறதுமாம். எவ்வண்ணம் எனின் ஒருவன் ஒரு கல்லை அதன் ஸ்தானத்திலிருந்து வளைக்கிறான். அதிக பல மாய் வளைப்பதினால் இவன் கையை விட்டு அது போகிறது. அப்படி அக்கல்போகையில் இவனுக்குக் காயம் நேரிடுகின்றது. இப்போது கல் காயம் உண்டுபண்ணினதாகச் சொல்லலாமா? அது தன்

ஸ்தானத்துக்குத்தானே திரும்பிற்று. இதனால் இவனுடைய பலம் இவனுக்குக் காயத்தை உண்டுபண்ணினதேயன்றி கிளைக்கு இவனிடத்தில் எத்தகைய கோபமும் இல்லை. இதுபோலவே நம்முடைய சுக துக்க அநுபவங்களுக்கு நாமே காரணம். நம்மைத் தவிர வேறே ஒன்றுமில்லை. விதைக்கு வேறாக பலன் உண்டாகமாட்டாது. எவ்விடத்தில் எச்செயல் கலக்கம் உண்டுபண்ணுகிறதோ அந்த இடத்தில் அந்தக்கலக்கம் திரும்பி லயம் அடையாதவரையில் ஸ்வபாவ நிலைமை சித்திக்காதுபோல, ஒருவன் செய்யும் கர்மபலன் அவனுக்கே முக்கியமாய்த் திரும்பிவருமே தவிர வேறொருவனுக்குப் போகமாட்டாது.

ஸத்கர்மத்தைச் செய்கிறவன் சுகத்தையும் துஷ்கர்மத்தைச் செய்கிறவன் துக்கத்தையும் அநுபவிக்கவேண்டியது.

கர்மம் மானசிக, வாசிக, காயிகமாக இருக்கக் கூடுமானதால் பலனும் மூன்றுவகையானதேயாம். மேலும் கர்மம் சஞ்சிதம், பிராப்தம், ஆகாமியம் என மூன்று வகைத்து. இந்த ஜன்மத்தில் பலனுக்கு வந்திருப்பது பிராரப்தம் என்றும் பலனுக்கு வராத முந்திய ஜன்மங்களின் கர்மம் சஞ்சிதம் என்றும் இப்போது செய்யப்பட்டு இனிமேல் வருவது ஆகாமியம் என்றும் கூறப்படும்.

கர்மம் மோக்ஷத்தைக் கொடுக்கமாட்டாது என்பது வேதாந்த சாஸ்திரத்தின் கொள்கையாம்.

நாம் செய்யும் கர்மத்தின் பயனை யநுபவித்தே தீரவேண்டும். இந்தப் பலன் சம்பவிக்காதிருக்கும்படி செய்ய ஒருவனாலும் முடியாது.

கை விட்டுப்போன பாணமானது எப்படியும் அடித்தே தீரும்.

உபாசனையினாலும், பிரார்த்தனையினாலும் தெய்வத்தின் அநுக்கிரஹத்தைப்பெற்று செய்த குற்றங்களுக்கு மன்னிப்பு அடையலாம் என்று சிலர் வீணாசை கொள்ளுகின்றனர். பிரம்மாண்டத்தில் மன்னிப்பு என்பது கிடையாது. அசங்க பரமாத்மாவைத் தவிர சத்தியமாவது வேறு யாதொன்றும் இல்லாதபடியினால் மன்னிப்பு யாரால் கிடைக்கக்கூடும்? ஒருவனின் கெட்ட செயல் மன்னிக்கப்பட்டு அதன் துக்க ரூபபலன் அவனுக்கு உண்டாகாமல் போவதும், அச்செயலால் தீங்கடைந்தவனுக்குச் சமாதானம் கிடைக்காமல் போவதும் அயுக்த

மாம். மன்னிக்கும்படியான சக்தி தெய்வத்திற்கு இருந்தால் தீங்கு அடைந்தவனின் துக்கத்தையும் நிவர்த்திக்கக்கூடுமன்றோ?

தீங்கு நீங்காமலிருக்க, மன்னிப்பு மட்டும் சாத்தியம் என்று நினைப்பதற்குக் காரணம் என்னை? காரணத்துக்குத் தக்கபடி காரியம் சம்பவிப்பது நியாயமாயிருக்க தீங்குசெய்தவன் விஷயத்தில் மட்டும் இந்த நியமத்திற்கு விலக்கு இருப்பானேன்? வெங்கலபாத்திரத்தைத் தட்டுவதால் உண்டாகும் சப்தம் பாத்திரம் எடுபடுவதால் போய் விடுமா? புலியின்மீது விடப்பட்ட பாணம் பசுமாடு என்று அறிந்த மாத்திரத்தில் அதையடிக்காமல் போகுமா? இதுபோலவே செய்த செயலின் பலன் விசனப்படுவதினால் நிவர்த்தியாய் விடுமா? கர்மமானது வேண்டுமென்று ஒன்றையும் செய்கிறதில்லை. காரணத்துக்குத் தக்கபடி பலனையளிக்கின்றது. இப்படிச் செய்வதினால் கர்மத்தினிடத்தில் கோபதாபங்கள் இருப்பதாக எண்ணப்படாது காரணங்களுக்கு ஆதாரம் மனிதன் இவனது செயலால் உண்டான அஸ்திரதையை நீக்குவதே கர்மத்தின் செய்கையாம்.

பிரபஞ்சத்தில் பிரார்த்தனை என்னும் ஒரு வியவஹாரம் ஏற்பட்டிருக்கின்றது.

பிரார்த்தனை என்னும் விஷயத்தில் சாதாரண ஜனங்களின் அபிப்பிராயம் என்னவென்றால், தாங்கள் செய்த குற்றங்களின் மனனிப்பைத் தெய்வத்தினிடத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும், வேண்டிய பொருளைத் தெய்வானுகிரஹத்தினால் பெறலாம் என்பதுமாம். நம்முடைய குற்றங்களை யொருவன் மன்னித்துவிட்டால் அவைகளை அடிக்கடிச் செய்ய நம்முடைய தைரியம் பலப்படுமேயன்றி நாம் நல்வழியிற் செல்லுவோமா? செல்லவே மாட்டோம். இதனால் ஜனங்களுக்குத் துக்கம் அதிகமாகுமேதவிர வேறு நன்மையொன்றும் ஏற்படாதன்றோ?

நாம் கேட்கும் பொருளைக் கொடுப்பதே உபாசனையின் பலனாகில் அப்பொருளை சம்பாதிக்க நமயிடமுள்ள சக்தியில் நமக்கு நம்பிக்கை போய்விடும். அதோடு நாம் எந்தவிதமான பிரயாசையும் எடுத்துக் கொள்ளமாட்டோமன்றோ? இதனால் நம்மிடம் அஹம்பாவமும் ஸ்வய பிரயோஜனமுமே விருத்தியாகும். இவ்விதம் அஹம்பாவமும் ஸ்வய பிரயோஜனமும் விருத்தியெய்துவதினால் பிறருசகு ஹிம்சையே அதி

கப்படும். ஒரு தொழிலாளி (வேலைக்காரன்) வேலைசெய்யாமல் எஜமானனைக் கூலிகொடுக்கப் பிரார்த்தித்தால், எஜமானன் எங்ஙனம் கூலி கொடுப்பான்? இதுபோலவே எவ்வித பிரயாசையுமின்றி எவ்விதம் நம்மால் பொருள் சம்மதிக்க வியலும்?

நாம் இச்சிக்கும் பலன் நம்மையே பொறுத்திருக்கிறபடியால் சாதாரணமாய் ஜனங்கள் நினைக்கிறபடி பிரார்த்தனையிலும் உபாசனையிலும் ஞானிகளுக்கு நம்பிக்கையே கிடையாது.

உபாசனை சித்திக்க, உபாசகன்உபாசிக்கத் தக்க வஸ்து உபாசனையாகிற கர்மம் இம்மூன்றும் சித்திக்கவேண்டும். எங்கும் வியாபகமான பரமாத்மாவைத் தவிர வேறு ஒன்றும் இல்லாதவிடத்தில் யார் யாரை உபாசிக்கிறது. மேலும் அசங்கமானது உபாசனையை எவ்வண்ணம் அங்கீகரிக்கும்? இதனாலேயே ஞானிகளை நாஸ்திகர்கள் என்றும் அவர்களுக்கு எத்தகைய பிரார்த்தனையும் இல்லை யென்றும் நாம் நினைக்கக்கூடாது. பிரம்மத்திற்கு வேறாகாத ஞானிகள் எதைப்பிரார்த்திக்கின்றனர் என்னும் வினா நிகழ்த்தப்படுமாயின், அவர்கள் தங்களுடைய பிரத்ய காத்மாவைப் பிரார்த்திக்கின்றனர். ஆனால் இவர்களுடைய பிரார்த்தனையின் கருத்து எதுவாயிருக்கும்? அல்லது எதுவாயிராது என ஆராய்வோமாயின், பொருள் சம்பாதிக்க வேண்டுமென்பதும், பிராபஞ்சிக இஷ்ட காரியம் சித்திக்க வேண்டுமென்பதும் அன்று. பிரகிருதி சம்பந்தத்தினால் மூடப்பட்டுபோன தாங்கள் பந்தத்தினின்றும் விடுபட்டு தங்கள் மூலஸ்தானமான பரமாத்மாவுடன் சேரவேண்டுமென்கிற தீவிரமான இச்சை எதுவோ அதுவே உபாசனையெனப்படும். இது ஹிருதயத்திலிருக்கப்பட்ட பரமாத்மாவை நோக்கியதே தவிர வேறு ஒரு தெய்வத்தையும் நோக்கியதன்று என்பது திண்ணமான மொழியேயாம். இத்தகைய பிரார்த்தனையை பிரதி தினமும் ஒவ்வொருவனும் அப்பியசிக்கவேண்டியது அவஸ்யத்திலும் அவஸ்யமேயாம்.

மனிதனது செயற்கை கர்மாதீனமா? அல்லது சுவேச்சாதீனமா? என ஆராயுங்கால் அதைப்பற்றி சாஸ்திரங்களும் வேதங்களும் கூறுவதென்னை?

> "மனிதர்க்கு மனம் விஷயங்களைப்பற்றி நின்றால் அது பந்தத்துக்குக் காரணமாகும். அதனைப்பற்றாமல் நின்றால் அது மோக்ஷத்துக்குக் காரணமாகும். ஆதலினால் பந்தத்துக்கும் மோக்ஷத்திற்கும் காரணம் மனதேயாகும். இத்

தகைய காரணங்களினால் புருஷன் ஈஸ்வர ஞானம் உள்ளவன் அந்தமனதை விஷயங்களினின்றும் திருப்பி அதைக்கொண்டு பரப்பிரம்மமான சர்வேஸ்வரனை மோக்ஷத்திற்காகத் தியானிக்கவேண்டும். விஷ்ணுபுராணம்.

"மனிதன் இச்சையின் காரியம். இந்த ஜன்மத்தில் அவன் இச்சை எவ்விதத்தாயிருக்கின்றதோ அது போலவே அவன் மறு ஜன்மத்திலும் இருப்பான் சுத்தமான இச்சையைக்கொள்ள வேண்டுவது அவஸ்யமாகின்றது", சாந்தோக்ய உபநிஷத்

ரிக் (Rig ada) வேதத்திலும் கூட ஒரு இருஷிசாமா நிகளைஜயிக்கும் பொருட்டு மனோ தைரியத்தை யபேக்ஷித்ததாகக் கூறப்பட்டிருக்கின்றது. இவ்வண்ணமெல்லாமிருக்கையிலசகலமும் ஈஸ்வர ஆக்ஞையால் நடக்கிறதென்றும், மனிதனுக்குச் சுதந்தரம் இல்லையென்றும் சர்வ ஜனங்களும் சாதாரணமாய்க் கூறுவதற்குக் காரணம் என்னவாயிருக்கலாம் ஆராயின் கீழ்கண்டவைகளில் ஒன்றாயிருக்க வேண்டுமெனவே தோன்றுகின்றது. அவையாவன:—

1. சில ஜனங்கள் தங்களுக்கு யாதொரு ஸ்வதந்திரமும் இல்லையென்றும், எந்தச் செயலும் ஈஸ்வர ஆக்ஞையால் தான் நடை பெறுகின்றதென்றும் நினைக்கின்றனர். இவ்வண்ணம் நினைப்பதினால் உண்டாகும் கெடுதியை அவர்கள் கவனிக்கிறதேயில்லை. இந்த மதத்தால் தெய்வம் இவ்விதம் செய்யக்கூடுமென்றும், யுக்தி புத்தியுடன் கூடின மனிதன் கேவலம் யந்திரம் போலவென்றும் நினைக்கவேண்டியது. இஷ்டப்படி செய்கிறதினால் புண்ணிய பாபங்கள் வியர்த்தமாய் விடுமே யெனில், புண்ணிய பாவத்தை யநுசரித்துத்தான் செயல்களைச் செய்யும்படி தெய்வம் செய்வதாகச் சொல்லுகின்றனர். அப்போ புண்ணியபாவத்தை முதலில் செய்யும்படி செய்தது யாது? இவைகளை யெல்லாம் ஆலோசித்துப் பார்க்கும் அளவில் தெய்வத்திற்குச் சுத்த ஸ்வதந்திரமும், மனிதனுக்குப் பாதந்திரமும் யுக்திக்கு ஒவ்வுகின்றதா? ஒவ்வவில்லையே. இதை எங்ஙனம் கொள்வது?

2. பகவத்கீதையில் பதினெட்டாவது அத்தியாயத்திலும், மஹாபாரதம் அநுசாஸனபர்வத்திலும் செய்த கர்மத்தின் பலனைக் குறிப்பிட "தெய்வம்" என்னும் சம்ஸ்கிருத பதம் உபயோகப் படுத்தப்பட்டிருக்கின்றது. இந்தப்பதத்தினால் தேவதையின் சம்மந்தம் இருப்பதாகத் தோன்றுகின்றது. தெய்வம் என்னும் பதத்திற்குச்சாதாரணமான பொருள் தேவதையின் சம்மந்தமாகயிருந்தாலுங்கூட இதற்குஒரு விசேஷ அர்த்தமிருக்கிஸ்றது. அதைப்பற்றி அமரகோசத்தில் "தெய்வம்" என்னும் பதத்திற்கு இன்னும் ஐந்து வேறு பதங்களுக்கும் அர்த்தம் கர்மத்தின் பலன் என்று கூறபட்டிருக்கிறது. மச்ச புராணத்திலும் வாயு புராணத்திலும் "தெய்வம்" என்பதற்குக் கர்ம பலன் என்று விபரமாய்க் கூறப்பட்டிருக்கின்றது. இந்த அர்த்தமானது மஹாபாரதம் இன்னும் அநேக சம்ஸ்கிருதாதி கிரந்தங்களாகியவற்றினின்றும் [illegible]கிக்க வேண்டிய நிலைமையிலிருக்கின்றது.

"எவன் சமஸ்த விஷயங்களையும் விட்டு ஆசை, மமதை, அஹங்காரங்கள் அற்று இருக்கின்றானோ அவன் சகல துக்கங்களிலிருந்து விடுபட்டு மோக்ஷத்தையடைகின்றான்"

பகவத்கீதை. (II. 71.)

"தேகத்தை உண்டாக்கப்பட்ட முக்குணங்களை அதிக்கிரமித்துப் பிறப்பு, இறப்பு, மூப்பு முதலிய துக்கங்களிலிருந்து விடுபட்டவனாய், ஜீவன் பிரம்மானந்தத்தை யடைகின்றான்."

பகவத்கீதை (XIV 20

தெய்வமே வேண்டுமென்று பந்தத்தை யுண்டு பண்ணியிருந்தால் அதினின்றும் மனிதன் தப்பித்துக் கொள்ள முடியுமா ? பந்தத்தை மனிதனே உண்டுபண்ணிக்கொண்டதாக நினைத்தால், அதினின்றும் அவன் தப்பித்துக் கொள்ளக்கூடும். கர்மபலனைக் குறிப்பிட தெய்வம் என்னும் பதத்தை உபயோகித்தகன் கருத்து அது மிகவும் முக்கியமானது. அதை அலக்ஷியம்பண்ணத்தகாது என்பதைக் காட்டுவதேயாம்.

3 பகவத்கீதையில் "சகல பூதங்களும் என்னிடம் இருக்கின்றன" என்று பகவான் கூறியிருப்பதினால் மனிதனுக்கு

ஸ்வதந்திரம் இல்லையென்று ஒரு சாரார் கூறுகின்றனர். ஆனால் மேலே கூறிய வசனத்தினால் கடவுளின் ஆதிபத்யம் விளங்குகிறதே தவிர, ஈஸ்வர ஆக்ஞையல்லாது ஒரு விலைகூட அசைக்க மனிதனுக்கு ஸ்வதந்திரமில்லை யென்பது அர்த்தமல்ல.

" தன்னிடத்தில் உள்ள பிரகிருதி பலத்தால் ஒவ்வொருவனும் காரியம் செய்யும்படி செய்யப்படுகிறான்"

பகவத்கீதை அத்-III ஸ்லோ 5

" ஈஸ்வரன் ஜனங்களுக்காக கர்த்திருத்துவத்தையாவது, கர்மங்களையாவது, கர்மபலன்களில் பற்றுதலையாவது உண்டாக்குகிறதில்லை. ஸ்வபாவமேயாகாவது மாயையானது பிரவிர்த்தித்திருக்கின்றது"

பகவத்கீதை அத் V ஸ்லோ. 14.

" அஞ்ஞானத்தினாலே விவேகமானது மூடப்பட்டிருப்பதனால் மனிதர்கள் மோகிக்கிறார்கள். பிரம்மஞானத்தினால எவருடைய அஞ்ஞானமானது நசிக்கப்பட்டிருக்கின்றதோ அவர்களுக்கு ஞானமானது சூரியனைப்போல் பரப்பிரம்ம சொரூபத்தைப் பிரகாசிப்பிக்கிறது,,

பகவத்கீதை அத் V ஸ்லோ 15-16

" விவேகமுள்ள தன் மனதினாலே தன்னை சம்சாரசமுத்திரத்திலிருந்து மனிதன் கரை யேற்றிக்கொள்ள வேண்டியது."

பகவத்கீதை அத VI ஸ் 5.

" பூரணமாய் ஆராய்ந்து எவ்விதம் இச்சிக்கிறானோ அவ்விதமே மனிதன் செய்யவேண்டியது

பகவத் கீதை அ XVII ஸ் 63

இதுபோன்றபல வாக்கியங்கள் இன்னும் அளவற்றனவாய்இருக்கின்றன. மனிதனது ஸ்வதந்திரத்தை ஸ்தாபிக்காவிட்டால் அவைகளுக்கு இன்னும் வேறு அர்த்தம் என்னவாயிருக்கக்கூடும்? ஆகையினால் மனிதன் செய்யும் செயல் கர்மாதீனமா? அல்லது இச்சாதீனமாவென கேட்ட வினாக்களுக்கு இரண்டும் உண்டு எனறே கூற

வேண்டும். இது எவ்விதம் ஒப்பத்தகுந்ததாகுமெனின் செய்த கர்மங்களின் பலன் பட்டும் இவனுடைய இச்சையைப் பொறுத்திருக்காமல், இனி செய்யப் போகிற கர்மம் அவனது இச்சையைப்பொறுத்தேயிருக்கும். நூதனமாகச் செய்யப்போகிற கிரியைகளில் இவனுடைய ஸ்வதந்தரத்தை உபயோகிக்கலாமே யொழிய செய்த கர்மம் இவன் இச்சையன்றியில் பலனைக் கொடுத்தே தீரும்.

ஒருவன் துக்கத்தைச் சகிக்க கர்ம நியாயத்திலுள்ள நம்பிக்கையே முக்கியமான சாதகமாகும். ஒரு சிலர் ரோகமற்றவர்களாகவும் ஒரு சிலர் தரித்திரர்களாகவும் ஒரு சிலர் பணக்காரர்களாகவும் ரோ[illegible] இருப்பது கண்கூடாகக் காணும் விஷயமன்றோ? இதில் ஒருவன் சுகியாயும் ஒருவன் துக்கியாயும் இருப்பதற்குக் காரணம் என்ன? ஈச்வரன் அவ்வண்ணம் சிருஷ்டித்தானென்று கூறினால் அவரிடம் பக்ஷபாதம் சம்பவிக்குமன்றோ? அஃதன்றியில் மனதிற்குத் திருப்தியும் உண்டாகமாட்டாது. காரணமில்லாமலே ஒவ்வொருவனுடைய ஸ்திதியும் வெவ்வேறுவிதமாய் இருக்குமோ? இவைகளின் காரணம் தெரிந்தால் ஒருவன் இவைகளைப் பொறுத்துக் கொள்ளுவதும் அல்லாமல் மறுபடியும் துக்கம் சம்பவிக்காத மார்க்கத்தையும் தேடக்கூடுமன்றோ?

தன் சுகதுக்கத்தைத் தானே தேடிக்கொள்ளுகின்றான் என்றும், அவைகள் தற்செயலாய் ஏற்படுகின்றதில்லையென்றும் தன்னுடைய முந்தின ஜன்மங்களின் கர்மாக்களே தன் சுகதுக்க பலன்களுக்குக் காரணம் என்று அறிந்த மாத்திரத்தில் அவைகளிடத்தில் வெறுப்பு ஏற்பட்டு, மனிதன் சாவதானப்பட்டு மீண்டும் துக்கம் நேரிடாமலிருக்கும்படி தன் நடவடிக்கைகளைத் திருத்திக் கொள்ளுகிறான். இந்த நியாயத்தையறிந்தவன் பிறனுடைய சுகத்தால் தான் தனக்குச் சுகம் கிடைக்குமென்பதைக் கண்டு கொண்டு பிறனுடைய சுகத்தைத்தி முக்கியமாய்த் தேடுவான். இந்தப்பாதி காரணங்களினால் ஜனங்களுக்குக் கர்மத்தில் அவசியம் நம்பிக்கை வேண்டியது.

ஒவ்வொருவருடையை சமும்சேர்ந்து ஒருவர்க்கத்தின் கர்மம் காடிமுகிறது. எலலா வாககஙளின கர்ம சமுஷ்டி பஞ்சத்தின் கர்மமாகின்றது.

துக்கப்படும் ஒருவர்க்கம் சுகத்தைப் பெறவேண்டியதேயாகில் அதில் அடங்கிய ஒவ்வொருவனும் தன்னாலான ஸத்கர்மத்தைச் செய்ய வேண்டியது. இந்தச் சமஷ்டி ஸத்கர்மத்தால் தான் சமஷ்டி துக்கம் நாசம் அடையும்.

இந்தக் கர்மநியாயத்தின் விஷயங்களை நாம் பொதுவாய் அறியக் கூடுமேயொழிய அதின் இரகஸ்ய விவரங்களை ஞானிகளே யறிவார்கள்.

ஞானிகளைப்பற்றி முன்னமே விரிவாக விளக்கியிருக்கின்றோம். ஞானிகளினுடைய சக்திகளை யடைய வேண்டும் என்னும் இச்சை பொதுவாக எல்லாருக்குமே இருக்கக்கூடும் ஆனால் அவைகளைப் பெற ஏற்பட்டிருக்கும் விதிகளைத் தவறாமல் ஒவ்வொருவரும் அநுஷ்டிக்க வேண்டியது அவஸ்யத்திலும் அவஸ்யமேயாம். இந்த விதிகளைக்கண்டு மயங்காத தைரியசாலிகளோ வெகு ஸ்வல்பமே.

தான் தன்னுடையது என்னும் அபிமானத்தை விட்டு எல்லாரும் பரப்பிரமத்தின் அம்சங்களாகின்றதால் எல்லாரிடத்திலும் சமபுத்தி வைக்கவேண்டும்.

# அத்தியாயம் 39.

## தர்மம் அதன் நிலை.

முந்தின அத்தியாயங்களில் நாம் விளக்கின விஷயங்களில் பெரும்பாலும் பரமாத்மாவைத் தவிர வேறு ஒன்றும் சத்தியமாயில்லையென்றும், எந்த ஜீவனும் வேறு எந்த ஜீவனிடத்திலிருந்தும் பிரிந்திருக்கவில்லை யென்றும், ஒவ்வொரு ஜீவனுடைய சுகமும் மற்ற ஜீவர்களின் சுகத்தைப்பொறுத்ததாயிருக்கின்றதென்றும் ஒருவாறு விளக்கினோம். நம்முடைய சரீரத்தில் அநேக கிருமிகள் இருப்பது போலவே ஹிரண்ய கர்ப்ப சரீரத்தில் அநந்தகோடி ஜீவர்கள் இருக்கின்றார்கள். நம்முடைய சரீரத்தில் யாதேனுமொரு அவயவத்தில் வியாதி முதலியவை பீடிக்குமாயின் மற்ற அவயவங்களுக்கும், அதனால் முழு சரீரத்துக்குமே எப்படி சுகம் ஏற்படுகின்றதில்லையோ, வியாதி முதலியவைகளை நிவர்த்திக்கும்பொருட்டு அவயவங்களெல்லாம் பிரவிர்த்திப்பதுபோல, ஹ்ரண்யகர்ப்ப சரீரத்திலுள்ள அநேக ஜீவர்களில் எந்த ஜீவனுக்காவது துக்கம் இருக்கும்பக்ஷத்தில் அது மற்றவர்களைக் கொஞ்சங்கூடப்பாதிக்காமல் எப்படி சுகத்தை கொடுக்கும்? எப்படியெனில் பெரிய குளத்தில் எறியப்பட்ட சிறு கல்லால் உண்டாகும் வர்த்துமான அலைகள் குளமுழுமையும் பரவாமலிருக்கிறதில்லை. அதுபோல ஒருவன் செய்கை எவ்வளவு சொற்பமாகிலும் எல்லாரையும் பாதிக்காமல் விடாது. ஒரு பாகத்தில் துக்கம் இருந்தால் முழுதும் சுகம் எப்படி உண்டாகும்? உண்டாகாது. ஆகையால் சுகப்பிராப்தியின் பொருட்டு ஒவ்வொருவனும் பிறருடைய துக்கத்தை நீக்கத் தன்னால் ஆனமட்டில் பிரயத்தினம் செய்வது அவஸ்யத்திலும் அவஸ்யமாகும்.

இனி மனிதன் நடந்து கொள்ளவேண்டிய விதங்களை விளக்குவது அவஸ்யம் என எண்ணி சில கூறுவாம். அவை யாதெனின் மனிதன் பலஜன்மங்களெடுத்துழலாவண்ணம் நிர்வாணம் என்னும் உயரிய நிலையினை யெய்துதற்கு அவஸ்யமானது எதுவெனில் பிரம்மஞா

ணம் என்பதாம். அந்தப் பிரம்மஞானமே ஆத்மஞானமென்னும் பெயரும் பெறும். ஆதாலால் ஆத்மஞானம் விருத்தியடையும் கிரமத்தைப்பற்றி குப்த வித்தியா சாஸ்திரம் விளக்கும் சிலவற்றை ஈண்டு விளக்குதும்.

1. ஞானம் அடையவேண்டிய வழியில் சாராம்சமாவது மனித சுபாவத்தில் மிகவும் உத்கிருஷ்டமானதாயும் ஆத்ம சம்பந்தமாயுமுள்ளதான விஷயங்களில் கருத்தைச் செலுத்த வேண்டியதை எல்லாத் தொழிலுக்கும் மேலாகப் பாவிக்கவேண்டும்.

2. இவ்வண்ணம் செய்வது நான்கு விதத்தால் சாத்தியமாகும் அவைகளாவன:—

(i) எல்லாவிதமான சுய பிரியத்தையும் விடுத்து மற்றவர்களின் நன்மைக்காகவே கைம்மாறு கருதாது பாடுபட்டு எல்லாரிடத்திலும் கருணையுடன் இருக்கத்தக்கதான நற்குணத்தை விருத்திசெய்து வரவேண்டியது;

(ii) பரமாத்மாவைத் தியானம் செய்தல், ஆசாரத்தை யநுஷ்டித்தல், இனிய சொற்கள் இயம்பல் முதலிய நற்கிரியைகளினால் ஞானக்கண்ணைப்பெற முயலவேண்டும்

(iii) விஷய சம்பந்தமான சகலவித அபிமானங்களையும் ஆத்மாவின் கட்டளையை மீறி மேற்செல்லா வண்ணம் உறுதியுடன் புத்திபூர்வமாய் அடக்கவேண்டும்.

(iv) தானிருக்கும் நிலைமைக்குத் தக்க வண்ணம் செய்யவேண்டியதான காரியங்கள் ஒன்றையும் விடாமல் அதனால் ஏற்படும் பலாபலன்களை தெய்வப் பிரமாணங்களுக்கு விட்டுவிட்டு அதாவது நிஷ்காமியமாய்ச் செய்ய வேண்டும்.

3. எந்த ஜீவனோடும் வியவஹரிக்கும் சமயம்தன் விஷயத்தில் மற்றவர்கள் எவ்வண்ணம் நடந்துகொள்ள வேண்டுமென்று நாம் அபிப்பிராயப்படுகின்றோமோ அதுபோலவே அவர்கள் விஷயத்தில் நாம் நடந்து கொள்ள வேண்டும்.

பிசலாது செய்யும் தருமப்பயனற்றதாகும் என்பதைப் பற்றி இரண்டொரு ஆன்றோர்களின் கூற்றை யிவண் விளக்குவாம்.

"கழுநீருட் காரட சேனு மொருவன்
விழுமிதாக் கொள்ளினமிழ் தாவாம்—விழுமிய
குய்த்துவையார் வெண் சோறே யாயினு மேவாதார்
கைத்துண்டல் காஞ்சிரங் காய்"

என்று நாலடியாரிலும்;

"அரியவன் பினிற்கொடுத்த விழிந்ததா யினுஞ்சி றந்த
திரிபுமாதன் பினிற் கொடுத்த விழிந்ததே சிறந்த தேனும்
பெரியவர் புகழ்ப் பட்ட பெருந்தவர் குசேல போலோன்
உரியவன் பினையுங் கூட்டி யொருபிடி யவறின் றானே"

என்குசேலோபாக்கியானத்திலும்;

"ஆதர வின்மையேல் வேண்டு மறத்தினிற்
பொருளோர் செம்பொற்
பூதர வளவ ளித்தும் பொருளழி
வளவே யாகும்
ஆதரவுளதேனல்கும பொருளணு
வளவென் றாலும்
பூதர மெனவ ளர்ந்து புண்ணியப்
பொருள ளிக்கும்"

எனப் பிரபுலிங்கலீலையிலும்;

4 தன்னைச் சேர்ந்தவர்களிடத்திலும் இவ்வண்ணமே நடந்துகொள்வதுடன் விவாகாதி சம்பந்தக்கால வற்றுக்கொண்டிருக்கும் பொறுப்பையும் சரியாய் நிறைவேற்றவேண்டும்.

5. அந்தக்கரணத்தை சுத்தப்படுத்தி, மனச்சாக்ஷியைத் தவிர, வேறு எதற்கும் பயப்படாமலும், பிறருடைய தூஷணையைப் பற்றிக் கலங்காமலும், பூசனையைப் போற்றுதலைப் பற்றி சந்தோஷியாமலும் தன் மனச்சாக்ஷிக்கு சரியெனத் தோன்றுவதை சரிவர ஆராய்ந்து, அரைகுறையாகச் செய்யாமல் செவ்வையாகச் செய்து முடிக்க வேண்டும்.

6. தன்னால் கூடியமட்டில் தர்மத்தைத் தனநிலைமைக்குத் தக்கவாறு உள்ளன்போடு செய்யவேண்டியது அவஸ்யம். உள்ளன்

" வருந்தே னதுவென் றுணைவானவன்
வைத்த சாத
லருந்தே னினியாது மென்னுசை
தீர்பி னல்லாற்
பொருந்தேன் பொழிசார னின்னன்பு
பிணித்த போதே
யிருந்தே னுசர்ந்தே னினினுங்
கினியீவ துண்டே"

எனக்கம்பராமாயணத்துள்ளும் காணப்படுவதோடு அன்பிலாதளிக்கும் எதுவும் துன்பத்தினையுண்டாக்கு மென்பதும் அன்புடனளிப்பதே யமிர்தத்தினு மிகுந்த தென்றும் விளக்கும் ஔவைப்பிராட்டியின் திருவாக்கினையும் விளக்குதும்.

" காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணொக்க வாய்திறக்க மாட்டாதே —வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி யெரிகின்ற தையையோ
வன்பில்லா ளிட்ட வமுது"

என்பதும்,

" வரகரிசிச் சோறும் வழுதுணைக்காய் வாட்டும்
முரமுரென வேபுளித்த மோரும் உரம்பெருத்த
புல்வேளூர்ப் பூதன் புகழ்ந் துபரிந்திட்டசோ
றெல்லா உலகும் பெறும்"

என்பதும் சாணக்கிடக்கும் சாக்ஷிகளாம் இதனால் ஒவ்வொருவரும் நிலைமையை யநுசரித்து உள்ளன்போடு தர்மம் செய்து வரவேண்டு மென்பது முறையாம். நிற்க, பிறர் படும் துக்கத்தை நிவர்த்திக்க சாமர்த்திய மில்லையென வெண்ணி வாளாவிருத்தல் கூடாது.

" அக்கினி பாதையில் அகப்பட்ட வீட்டிலிருந்து கைவிட்டு எறியப்பட்ட வஸ்துக்களே பிரசமாய் உபயோகப்படுவது போல தர்மத்தில் செலவு செய்வதினால் கைவிட்டுப் போவதே ஒருவனுக்கு உபயோகமாகுமே தவிர வேறு ஒன்றும் உபயோகமாகாது"

என்னும் ஆன்றோர் வாக்கியம் காணப்படுவதினால் நம்மால் இயன்றவரையில் பிறர் துக்கத்தை நிவர்த்திக்கவும் பிறருக்கு உபகாரம் செய்யவும் முற்பட வேண்டும்.

7. அபராதத்தை க்ஷமிக்கவேண்டியது. ஏனெனில் ஒருவன் செய்த குற்றத்தை யவனது கர்மமே திருத்திவிடும். ஆதலால் நாம் அதில் அனுவசியமாகப் பிரவேசிக்க வேண்டியதில்லை.

8. நமக்கென ஏற்பட்டுள்ள மிக்கவிலையுயர்ந்ததும் அருமையானதுமான காலத்தை வீணாக் கழிக்காமல் ஸத்விஷயத்திலும் பிறருடைய உபயோகத்திற்காகவுமே உபயோகிக்க வேண்டும்.

9. தன் அபிவிர்த்தியே மேலானதாக நினைக்கக்கூடாது. அவ்வண்ணம் நினைத்து வாழ்பவன் எப்போதும் நன்னிலைமைபெய்த மாட்டாதவனாய் தன்னிலைக்கே தடையேற்படுத்திக் கொண்டவனாகின்றான்.

10. தனக்குத் தெரிந்ததைப் பிறருக்கு உபதேசம் செய்ய வேண்டும். அவ்விதம் செய்யாதவன் துரோகியென்னும் பெயர். பெறுவான் என்று கூறப்படுகிறதென்றாலும், எப்பொழுது தனக்குத்தெரிந்த ஒன்றை பிறருக்குக் கூறாமலிருப்பவன் தனக்குத்தானே நாசம் தேடிக் கொள்பவனாவான்.

11. தனக்கேற்படும் குறைவுகளை நிவர்த்தித்துக்கொள்வதோடு மனத்திருப்தியடைவதும், அவைகளை மனதில்வைக்காமல் நீக்குவதும் பிறருக்கு ஏற்படும் துன்பங்களுக்கு வருந்தியவைகளை ஒழிக்க முயல்வதும் முக்கியமாகும்.

12 எந்தக் காரணங்கொண்டும் பிறரை நிந்திக்கலாகாது. நம்மைச் சேர்ந்தவர்களாயினும் சரி; சேராதவர்களாயினும் சரி; அவர்கள் விஷயத்தில் தூஷணைபரன வார்த்தைகளை எந்தக்காரணத்தை யநுசரித்தும் சொல்லக்கூடாது. நம்மைச் சேர்ந்தவர்கள் விஷயத்திலும் ஏகாந்தத்தில் பிறருடைய நன்மையையுத்தேசித்து நல்ல புத்தி சொல்ல வேண்டியது.

13, மனம், வாக்கு, காயம் ஆகிய இம்மூன்றினலும் தீ நெறிக்கண் செல்லாது அடங்குதலுடையவனாகவேண்டும். அடக்கம் என்னும் அறம் தேவருலகத்துய்க்கும் என்பது திண்ணமாம். ஏன் அடக்கம்கூற வேண்டுமெனின், அடங்காமையாகிய பாவம் தங்குதற்கரிய இருளின் கண் செலுத்தும் என்பதாம். அவ்விருளாவன:—

"கல்லிற் பிறக்குங் கதிர்மணி காதலி
சொல்லிற் பிறக்கு முயர்மத—மெல்ல
வருளிற் பிறக்கு மறநெறி யெல்லாம்
பொருளிற் பிறந்து விடும்"

என்னும் நான் மணிக்கடிகையிற் கூறியவண்ணம் அடங்காமையென்பது ஓர் நரகத்தில் சேர்த்து விடும் என்பது பெறப்பட்டது.

14. ஒழுக்கம் தத்தம் வருணத்திற்கும் நிலைக்குப் ஒதப்படாதலின் அதை எவரும் அநுஷ்டிக்கவேண்டியது அவஸ்யம். ஆதலினுல் ஒழுக்கம் சிறப்பினைத்தரும் என்பதும், அதனுல் அவ்வொழுக்கத்தினை உயிரினும் அதிகமாக விரும்பிச் செய்யவேண்டுமென்பதும் எவரும் ஒப்பமுடிந்ததாம்.

15. பொறுமை யென்பது அதிமுக்கியமாயிருக்க வேண்டுமென்பது கூறுமலே விளங்கும் தன்மை யதாதலால் ஒவ்வொருவரும் பொறுமையுடையாராதல்வேண்டுமென்னும் எண்ணம் எவருக்கும் இருந்தேயாக வேண்டும் அந்தப்பொறுமை யெத்தகையதாயிருக்க வேண்டுமெனின், "பூமியை வெட்டுந் தோறும் தன்னை வெட்டுவோனையும் தாங்கும் நிலம்போல, தம்மை யிகழ்வாரைப் பொறுத்தலே பொறுமையின் தலைமையாகும்" ஆதலினுல் ஒவ்வொருவரும பொறுமையைக் கைகொண்டொழுகவேண்டும்.

16 அவசியம் அருளுடைமையுண்டாயிருத்தல் வேண்டும். அருளுடைமையின்றேல எவர்க்கும் நன்மை யென்பது ஏற்படாது. ஆதலினுல் அருள் உடையவராயிருத்தல வேண்டும் என்பது அவஸ்யததி

னும் அவஸ்யமேயாம். இவண் அருள் என்பதற்குக்கருணை யென்பது பொருளாம். கருணையை ஒவ்வொருவரும் உடையவராதல் சாலச் சிறப்புடையதாம்.

17. முயற்சி எவற்றினும் சிறந்தது. ஒருவரை யெதிர்பாராது தான் கருதிமுடிக்க வெண்ணும் கருத்தை முட்டின்றி முடிக்தற் பொருட்டு ஒவ்வொருவரும் முயற்சித்தல் அவஸ்யம். இதனினும் மிக்க அவஸ்யமானது பிறர்க்கு நன்மையுண்டாக வேண்டியதும்;பிரம்ம ஞானமுதிக்க வேண்டியதுமான விஷயத்தில் முயற்சித்தல் முக்கிய அவஸ்யமாம்.

18. மேலே கூறிவந்தவற்றுள் எல்லாம்வாய்மையே சிறந்ததாகும். வாய்மை யென்பது எவர்வாட்டுளதோ அவரே சிறந்தவரென்பது ஆன்றோர் கருத்தாயிருப்பதனால் ஒவ்வொருவரும் பொய்யை யொழித்து உண்மையே யுரைக்க வேண்டும். இதை நாயனார் கூறமுற்பட்டதில் உண்மையின்னதென விளக்குவதாவது:

“ உள்ளத்தாற் பொய்யா தொழுகினுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன்”

என்பதனால், உண்மையின் உயர்வினை யொவ்வொருவரும் கவனித்து ஒழுக வேண்டும்.

19, கோபம் என்பது எல்லாவற்றினும் கொடிது. அதை ஒரு சிறிதும் கொள்ளவே கூடாது. கோபம் என்பது குடிகெடுக்கும் மஹாராஷ்டிபாஷையில் கோபத்தைப்பற்றிக் கூறும் பழமொழி „கோபம் பிச்சை யெடுக்கச் செய்யும்” என்கிறார். அதாவது “ ராகமணே பீக்கமாக” என்பதாம். இத்தியாதி காரணங்களை யநுசரித்து கோபத்தையறவே ஒழித்து விடவேண்டும்.

20 பிறருக்குத் தீமை யென்பதே செய்யப்படாது. பிறர்க்குத் தீமை செய்தால் அதனால் அவர்கள் வருந்துவர். அந்தப்பாபம் நம்மைச் சேருமாதலினால், நாம் பிறர்க்குத் தீமை செய்யாமலேயிருக்க வேண்டும்.

21. நிலையா என்பது இன்னதென உணர்ந்து அவைகளையறவே ஒழித்தல் வேண்டும். நிலையாமையாவது: தோற்றமுடையனயாவும் நிலையானதல்ல. நிலையானதென மயக்கினால் அது பேய்த்தேரிற் புனர் போலத் தோன்றி, மெய்யினையுணர்ந்த பின்னர், கயிற்றில் அரவு போல கெடுதலிற் பொய் யென்பாரும், நிலைவேறுபட்டு வருவதால் கணந்தோறும் பிறந்து இறக்கும் என்பாரும், ஒருவாற்றான் வேறுபடுதலும் ஒருவாற்றான் வேறுபடாமையும் உடைமையினால் நிலைத்தலும், நிலையாமையும் ஒருங்கேயுண்டு என்பாரும் என்று பொருட்பெற்றி கூறுவார் பல திறத்தவர் ஆவர். எல்லார்க்கும் அவற்றது நிலையாமை உடம்பாடாகலின், ஈண்டு அதனையே கூறினும். இதனையுணர்ந்தால் அல்லது பொருள்களில் பற்று விடாது. இதனானே நிலையாமையைப்பற்றி கீழ்க்கண்டவற்றைக் கவனிக்கவும். அவைகளாவன:—

(i) தோற்றமுடையவற்றைக் கேடிலாதது தென்று கருதும் புல்லறிவினால் அவற்றின்மீது பற்றுவைத்தல் பிறவித் துன்பத்திற் கேதுவாம்.

(ii) ஒருவனுக்கு பெரிய செல்வம் வருதல் கூத்தாடும் அரங்கின் கண்(Stage or Theatre) காண்பதற்கு வரும் கூட்டம் வருவது போன்றதாம் அதனது போக்கோ வெனின், அச்செல்வத்தின் போக்கு எங்ஙன மெனின், கூத்தைக் காணவந்தவர்கள் போவது போன்றதேயாம்.

(iii) நில்லாத இயல்பினையுடையது செல்வம்; அதனைப்பெற்றால் அதனால் செய்யப்படும் அறங்களை அந்த செல்வம்பெற்ற பொழுதே செய்யவேண்டும்

(iv) உணர்ச்சி யுடையவர்க்கு நாளென்று அறக்ப்படுவதொரு காலவரையறைபோலத் தன்னைக் காட்டி ஈர்ந்துசெல்கின்ற வாளினது வாயது உயிராகும் என்பதால் காலம் என்னும் அருவப்பொருள் உலகியல் நடத்தற் பொருட்டு ஆதித்தன் முதலிய அளவைகளாற் கூறப்பட்டதாக வழங்கப்படுவது அல்லது தானாகக் கூறபடாமையின் நாளெனவொன்றுபோலென்றும் அது தன்னை வாளென்று உணரமாட்டாதார் நமக்குப் பொழுது போகாது நின்றதென்று இன்புறமாறு நாளாய் மயங்கலில் காட்டிஈர்ந்து செல்லும் வாளின் வாயது வானதனால் அதனையும் நிலையுடைய தென்றெண்ணலாகாது.

(v) உரையாடா வண்ணம் நாவினையடக்கி விக்குளெழுவதன் முன்னரே, வீடடிற்கு (மோக்ஷத்திற்கு) ஹேதுவான தான நல்வினைகளை (அறங்களைச்) செய்து வருதல் வேண்டும். ஏனெனில் நம்மைப்பற்றித்தொடரும் " இருவினையாம் புண்ணிய பாவங்களுமே "என்னும் ஆன்றோர் வாக்கியமிருப்பதினால் நல்லறங்களைச் செய்ய முபடற் வேண்டுமென்பதாம்.

(vi) ஒருவனுக்கு மரணமானது நித்திரை ஏற்படுவது போன்றதாயும்; நித்திரையினின்று விழிப்பது போன்றுள்ளது பிறப்பாக விருத்தலினாலும் மரணம் ஏற்படுவதும், பிறப்புண்டாவதும் சகஜ மானதினால் நன்மையைச் செய்ய முற்படுதல் எச்சமயத்தும் உத்தமமாகின்றமையினால் இதையநுசரித்து வருதல் வேண்டும். ஏனெனில் உடலினுள் வாதபித்த சிலேத்மங்களுடன் ஒதுக்கிருந்த உயிரானது அதிலேயே வசிக்காது அடிக்கடி அதை விட்டு மாறி புதிய வீடுகளான தேகங்களைத் தேடிச் செல்லும் தன்மையதாதலினால் அது என்றும் நிலையாமையென வெண்ணி நற் கருமங்களைச் செய்துவருதல் அவஸ்யமென்பது கருதுதல் வேண்டும்.

22. நித்தியா நித்திய வஸ்து விவேகம், விஷய மோகங்களின் வைராக்கியம், விஷயங்களில் மனதையும் இந்திரியங்களையும் போக வொட்டாமல் தடுத்தல், மோக்ஷமடைய வேண்டுமென்கிற இச்சையாகிய இந்த நான்கு சாதனங்களையும் அப்பியசிக்கவேண்டும். இதில் முக்கியமாய்ச் சொல்லவேண்டியது அவாவறுத்தலாம். ஆசையை ஒழித்தால் அஃது வீடு என்னும் பெரும் பேற்றையளித்து நம்மை மேனெறிக்கண் செல்லச் செய்விக்கும். இதனுனே இதனை விளக்க வந்த திருவள்ளுவ நாயனுரும்,

"தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வா அய்மை வேண்ட வரும்"

என விசதப்படுத்தி விளம்பினர். ஆதலினல் முக்கியமாய்த் தான் தனது என்னும் அபிமானத்தை மலினப்படுத்திக்கொண்டு வர வேண்டும். சகோதரபாவத்தை ஒரு க்ஷணமும் மறக்காமல் சகல விவகாரங்களிலும் கவனிப்பதுவே ஒருவனுடைய அபிவிர்த்திக்குச் சாதகமாயிருக்கும். ஆகலினல் மேற்கூறியவைகளின் மனப் பூர்வகமான அப்பியாசத்தால் ஞானம் விருத்தியெய்திப் பின்னர் பிரம்ம ஞானம் உதிக்கும். இதனல் மேன்மேலும் அபிவிருத்தி யெய்தலாம் என்பது திண்ணம்.

## அத்தியாயம் 40

# பிரம்மஞான முடிவுரை.

பிரம்மஞானம் அநாதியாயுள்ளது பூர்வீக மஹரிஷிகளாலும் மஹான்களாலும் அனுபவித்த அனுபவங்களை ஆதாரமாகக்கொண்டு ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சுபாவத்தைப்பற்றியும் ஜீவதத்துவத்தைப்பற்றியும் உள்ளதான உண்மைகளை விளக்குவதாகும்.

இந்த ஞானமானது வெறுங்கற்பனையாயிராமலும், அனுமானமாகவும் இராமல் அதனையடைய வேண்டியதற்கான சாதனங்களைச் சாதிக்க விரும்பியவர்களால் பிரத்யக்ஷமாய் அனுபவித்து அறியப்படுவதாகும். அதன் முக்கிய கோட்பாடுகளிற் சில கூறுதும்.

1. மனிதனிற் சத்தியமானதாயும் சாஸ்வதமானதாயும் இருப்பது அவனது ஆத்மா ஒன்றே. மற்றவைகளோ வெனின், பிரகிருதியிலிருந்துண்டான தத்துவங்களின் வெவ்வேறுவிதமான சேர்க்கையால் ஆனபடியாலும், சேர்க்கைவஸ்துவாயிருக்கிற ஒவ்வொன்றிற்கும் நாசத்வம் சுபாவ சித்தமா யிருப்பதினாலும் அழியத்தக்கவைகளேயாம். மேலும் பிரபஞ்சம் என்பது சமஷ்டியாயிருப்பது. அதின் கண்ணுள்ள ஒவ்வொன்றோடும் தனித்தனியாயிராமல் சமஷ்டியோடும் மற்ற ஒவ்வொன்றோடும் சம்மந்தப்பட்டிருப்பதால் எல்லாம் சகோதரபாவமாய்ப் பிரிக்கக் கூடாதவண்ணம் பிணைக்கப்பட்டிருக்கின்றன. அதனது தீர்ந்த நிலையோ வெனில் அதுவே பரிபூரண ஞானம் எனப்படும். இங்ஙனம் இருப்பதால் சமஷ்டியின் ஒவ்வொருபாகத்திலும் பதியப்படாமலும், ஒவ்வொருபாகத்திலும் பார்க்கப்படாமலும் இருக்கக்கூடியதான எத்தகைய நினைப்பும் செயலும் உண்டாகிறதில்லை.

2. ஆத்மத்திற்குக் கீழாயும் அந்தக்கரணத்திற்கு மேலாயும் உள்ள நிலையில், சாதாரணமாய் ஞான உடம்பென்று அழைக்கப்படுகிற ஒரு சரீர மிருக்கின்றது. இதில் மனிதனது சகல அநுபவமும் பதிந்திருக்கின்றன. தேகம், புத்தி என்னும் இவைகளை எவ்வண்ணம் வளரச் செய்யக் கூடும். இந்த அறிவு வளர்ச்சியானது தேக சம்பந்தமான அபிமானம், ஆசாபாசம் முதலியவற்றையடக்கி ஆத்மசம்மந்தமான

விஷயங்களில் அபிமானம் ஆசை முதலியவைகளையுண்டாக்கிக்கொண்டால் மட்டும் சாத்தியமாகும். இங்ஙனம் ஆ வேண்டியது சுபாவத்திற்கு இசைந்ததாயிருப்பதுமன்றி அதை உண்டாக்கிக் கொள்ள கிரமமான மார்க்கங்களும் உண்டு.

இந்த மார்க்கத்தில் ஒழுங்காய்ப் பழக்கப்பட்ட மனிதர்கள் ஸ்தூலம் அல்லாத சூக்ஷ்மமாயுள்ள பிரபஞ்சங்களை தெளிவாய்ப் பார்க்கும் சக்தி பெறுகிறார்கள்.

புலனுக்குப் புலப்படக் கூடியவற்றை பாஹ்ய இந்திரியங்களும், மனம், புத்தி, இவைகளுக்குப்புலப்படக்கூடியதை அந்தக்கரணமும் எவ்வளவு சுலுவாயும் சீக்கிரமாயும் கிரஹிக்குமோ அவ்வாறே அவர்களின் அகக்கண்ணும சூக்ஷ்மப்பிரபஞ்சங்களின் உண்மைகளைக் கிரஹிக்கும். இக்காரணம்பற்றி இவ்வுண்மைகளைக்குறித்து அவர்கள் கூறுவது பூத ஆராய்ச்சி செய்யும் சாஸ்திரிகளும் தத்துவ ஞானிகளும் தங்களுக்கு சம்பந்தப்பட்ட விஷயங்களில் சொல்வது எவ்வளவு உண்மையாயிருக்குமோ அவ்வண்ணமேயிருக்கும்.

இந்த விதமான ஞானவித்தை பழகும்போது மற்றவர்களுக்கு அதிரிசியமாயிருக்கும் அநேகம் சக்திகள் அவர்களுக்குப் புலப்படுகிறதுமன்றி அவைகளையாளும் திறமையும் ஏற்படுகின்றது. இதைக் கொண்டு உலகத்தோரால் சாதாரணமாய் அற்புதங்கள் என்று அழைக்கப்படும் காரியங்களைச் செய்ய வல்லவராகின்றார்கள். ஆனால் உண்மையில் இக்காரியங்களோவென்றால் சுபாவமாயுள்ள பிரமாணங்களை மற்றவர்களைப்பார்க்கிலும் அவர்கள் அதிகமாய்த் தெரிந்துகொண்டிருப்பதால் சாத்தியமாகின்றன.

இந்தவிதமான சக்திகளைக்கொண்டு தாங்கள் பரீக்ஷை பார்த்து உண்மையென்று தெரிந்து கொண்டிருக்கும் ஞானக்கண்ணால் அறியப்படக்கூடிய உண்மைகளைக்குறித்து அவர்கள் சொல்வதெல்லாவற்றையும் ஒவ்வொருவரும் (மதாபிமானியும்) நிஷ்பக்ஷபாதத்தோடு பரிசோதித்துப் பார்க்கும் பொருட்டுபின்னடையாமல் முன்னுக்கு வந்து நிற்கின்றன

இத்தகைய ஞானத்தை யடைந்து நன்மையெய்து மாறு ஒவ்வொருவரும் அதற்கு வேண்டிய சாதனங்களை யடைய வேண்டுவது அத்யாவஸ்யமாகும்.

---

## அத்தியாயம் 41.

# நிர்வாணம் எய்தும் நிலை.

(ஆசிரியன் கருத்து).

இதுகாறும் நாம் பிரம்மஞான மென்பதை முதலாகக் கொண்டு பிரம்மாண்டங்களின் விளக்கத்தையும் பிண்டாண்டத்தின் விளக்கத்தையும், பிரம்மத்தின் நிலையையும் மிக்க விளக்கமாகக் கூறினோம்.

இனி நாம் பிரம்ம நிலையென்னும் நிர்வாணம் என்னும் ஸ்திதியை யடைவதற்கு வேண்டியவைகளை ஒருவாறு தொகுத்துரைத்து நூலினை முடிப்பாம்.

மனிதர்க்கு இன்பத்தில் விருப்புறுவது இயற்கையேயாகும் யார் யார் தம்மை எந்த எந்த விதமாக நினைத்திருக்கின்றனரோ அந்த அந்த நினைவுக்குத் தகுந்தாற்போல அவரவர்களுக்குப் பற்பல போகங்களிலும் பற்றுண்டாகின்றது.

ஒருவன் தேக இந்திரிய ஸ்வரூபமான ஜடப்பொருளையே தான் என்பதாக நினைத்திருப்பானேயாயின் அவன் அந்த தேகத்தினால் இந்திரியங்களைக் கொண்டு அநுபவிக்கக் கூடியவைகளான வீடு, வாசல், தோட்டம், ஊண், உடை, பிள்ளை, பெண்டிர் என்பது போன்ற யோகங்களிலேயே பற்றுக்கொண்டு அவைகளைத்தேடித் திரிவதிலேயே காலத்தைச்செலுத்துவது இகலோகப்பற்றுடைமையாகும். ஆனால் இவைகளெல்லாம் மேனிலைக்குத் தடையனதாகும்.

ஒருவன் நிர்வாணம் என்று கூறக்கூடிய மோக்ஷநிலையை யெய்துவதற்கு வேண்டிய முறையாவன.

1. "ஒருவன் இப்பரந்த பெரிய உலகத்திற்கு ஒரு கடவுள் இருக்கிறார்" என்னும் உண்மையை யறிந்து கொண்டு அந்தக் கடவுளை வழிபடவேண்டும்."

2. ஒருவன் எல்லா நூல்களையுங்கற்றானாயினும், அந்தக் கல்வி கற்றதன் பயனாகக் கடவுள் ஒருவர் உண்டென்னும் உண்மையை யறிந்து வழிபடுவது முறையாம்.

3. ஒருவன் பேரின்பமென்னும் பெருநிலையை யெய்துதற்கு மற்றவர்களிடத்துத் தன்னன்பைச் செலுத்தித் தன்னைப்போல பாவித்து நடப்பதுவாம்.

4. ஒருவன் எவரிடத்தும் எச்சமயத்தும் இன்சொல்லே வழங்க வேண்டும் அவ்வண்ணம் வழங்குவதினால் ஏற்படுவதான நன்மையைப்பற்றி இவண் நாயனார் வாக்கியத்தை நோக்க நன்கு விளங்கும். அவை.

"சிறுமையு ணீங்கிய வின்சொன் மறுமையு
மிம்மையு மின்பந் தரும்"

எனக்காணப்படுவதினால், இனிய மொழிகளையே கூறி வரவேண்டும். இதனால் பரப் பிரம்மத்தினிடத்திலும் இன்மொழியே ஒக்கப்பெறும் பாக்கியம் சித்திக்கும்.

5. ஒருவன் அடக்கத்தைத் தன்னிடத்தே கொள்ளவேண்டும் அடக்கம் மோக்ஷத்தின் முதற்படியாகும். இதனால் மௌனம் சித்தி பெறும். மௌனம் சித்திக்கதும் எய்தும் நிலையே நிர்வாணம் என்பது ஆய்ந்த அறிஞரின் அமுத மொழியாகின்றதினால் இதனைக் கைப்பற்றி யொழுக வேண்டும்.

6. மேற்கூறியவற்றிற் கெல்லாம் சிறப்பினையளிப்பது ஒழுக்கம் ஆதலால் அதனை ஒவ்வொருவரும் தன்னுயிரினும் மேலானதாக எண்ணி அதன் வழியே நடக்கவேண்டும்.

ஒழுக்கத்தால் உயர்பதவி யெய்தலாகுமென்பது எவரும் ஒப்பத்தகுந்ததாகும்.

7. இவ்வளவுக்கும் ஒருவன் முக்கியமாய்க் கொண்டிருக்கவேண்டிய குண விசேஷங்களில் சிறந்ததான ஈகைத்தன்மையைத் தனது முக்கிய கடமையாகக்கொள்ள வேண்டும். ஈதலே மிக்க சிறந்ததாகும், இக்குணமும் மோக்ஷத்தையடைவிக்கும் முக்கியப்பொருளென்பது எவரும் உணர்ந்ததேயாம்.

8 உலகத்தில் பலவித செல்வங்களுள் சிறந்தது அருட் செல்வமாம். அந்த அருளினால் வருஞ்செல்வம் எத்தகையதெனின், உயிர்களைத் தன்போலெண்ணும் தாத்தினதாகின்றமைப்பற்றி எல்லா செல்வத்தினும் சிறந்ததாகும் இவ்வருளுடைமையை ஒவ்வொருவரும் கைக்கொண்டு ஒழுகிவருதல் வேண்டும். இவ்வருளுடைமையும் மோக்ஷ சாதனமானதாகுமென்பது திண்ணமாம்.

9. ஊன் என்னும் புலாலை யறவே ஒழித்தல் வேண்டும். புலாலையுண்பதினால் அருளற்று இருளடைந்து பாபத்தையேயநுபவிப்பாராதலினால் எக்காலமும் மேனிலையையெய்த முடியாதென்பது திண்ணம். இலதப் பெரியாரென்று கூறும் நல்ல விவேகிகளான அருளினையுடையவர்கள் புலாலைக் கருதவேமாட்டார்கள் என்பதை நாயனார் விதந்து கூறியுள்ளவைகளில் விஷய விளக்கமடைந்த பெரியோர்களின் உண்மை நிலையை விளக்கும் ஒப்பற்ற குறள்பாக்களை இவண் விளக்குதும்.

i "செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணாருயி-
ரிற் றலைப்பிரிந்த வூன்" என்றும்,

ii "அவி சொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணமை நன்று" என்றும்,

iii கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்''

என்றும் கூறியிருப்பதினால், பிற உயிர்களுக்குத் துன்பம் நிகழக்கூடியதான உயிர்க் கொலைபுரியுந் துன்பத்தை யொழித்தல் வேண்டும்.

10. தன்னுயிரைத் தனக்குரித்தானதாக வெண்ணியதனையறிந்து ஒழுகுதல் வேண்டும். இதையே தன்னைத்தானறிதல் என்டர் ஆன்றோர். இம்முறையைக்கடைப்பிடித்து ஒழுக வேண்டுவது அவசியத்திலும் அவஸ்யமாம்.

11. முக்கியமாய் ஒருவன் மேனெறியெய்தற்குத்தடையாய் நிற்பது கோபம். அந்தக் கோபத்தைத் தன்னிடத்திலிருந்து ஓட்டும் உத்தமன் எவனோ அவனே மேனெறியெய்தும் பெற்றியானவன். ஆதலால் கோபங்கடிதல் எவர்க்கும் சாலச்சிறப்புடையதாகும்.

12. எவருக்கும், மற்ற எந்த ஜீவர்களுக்கும் தீங்கினைப் புரியவே கூடாது. ஒருயிர்க்குத் தீங்கினைப்புரிய வெண்ணினாலும், புரிந்தாலும் அது நாம் எய்த வெண்ணியிருக்கும் மோக்ஷமென்னும் வீட்டின் கதவினையடைக்கும் தாள்போன்றதாகும். இதனால் உயிர்களுக்குத் துன்பஞ் செய்யலாகாது.

13. மேலே உயிர்களைக்கொன்று தின்னலாகாதெனக் கூறினோமாயினும், மீண்டும் கொல்லாமையைக் கூறத்துணிந்ததேதெனின், உலகில் ஓரறிவுமுதல் ஐயறிவுடையனவாய உயிர்களிருப்பதால் அவைகளிலெதையும் கொல்லுதல் கூடாதென்பதாம். தருமங்களில் எல்லாம் சிறப்பது எதனாலெனின் கொல்லாமையொன்றினாலேயாம். கொல்லுதலினாலேயோவெனின், பாவங்களெல்லாம் ஒருங்குகூடி மேனிலையெய்தவிடாது கெய்து விடும். ஐயறிவுயிர்களாவன:

i புல்லும் மரமும் முதலியன பரிசத்தையறி யும் உயிர்கள்.

ii இப்பியுஞ் சங்கும் முதலியன அதனோடு இரதத்தையும் அறியும் ஈரறிவுயிர்கள்.

iii கறையானும் எறும்பும் முதலியன அவ்விரண் டனோடு கந்தத்தையும் அறியும் மூவறிவுயிர் கள்.

iv தும்பியும் வண்டும் முதலியன அம்மூன்றனோடு உருவத்தையும் அறியும் நாலறிவுயிர்கள்,

v வானவரும், மக்களும், நரகரும், விலங்கும், புள்ளும் முதலியன அந்நான்கனோடு சத்தத் தையும் அறியும் ஐயறிவுயிர்கள்.

14. உலகத்தில் தோற்றும் எல்லாம் தோற்றம் என்றும், அவை நிலையற்றதென்றும் எண்ணி எதன்மீதும் பற்றுதல்வைப் பது கூடாது. பற்றுதல் ஒழியவே வீடுபேறு சித்திக் கும். ஆதலால் எல்லாம் நிலையற்றதென எண்ணவேண் டும்.


15, உலகத்தில் உண்மையானது எதுவென்னும் ஆராய்ச்சி யுடையனாய் நிலையல்லவற்றை நீக்கி உண்மையானதை யுணர்ந்து அதன் மாட்டுத் தனதுநோக்கத்தை செலுத்தி அவ்வழி நிற்றல் வேண்டும்.

16. எது எங்ஙனமாயினும் பூர்வவினையானது ஒருவனைபற்று திராது. அதை ஒழித்தற்கேது எதுவோ அதை நாடி யதனை யநுபவித்தே தீர்த்தல் வேண்டும். இன்றேல் அது மேனிலைக்குச் செல்லா வகை செய்துவிடும். அவ்வண்ணம் ஒன்றைக் கருதி தாம்பற்றியுள்ளதான நன்னெறியை விடுதல் அறிவின்மையாவதோடு. நன்மையைப்போக்கி விடும்.

மேலே நாம் கூறிவந்த நீதிகளையநுசரித்து ஒழுகிவருபவர்கள் உத்தமமான வழியில் இகத்தில் வாழ்வதோடு இந்நிலைநீத்த பின்னர், தந்நிலையாம் உயர்நிலையையே யடைவரென்பது திண்ணம்.

உலகத்தில் இதுகாறும் ஞானிகளென்றும் மஹாத்மாக்கள் என்றும் பெயர் பெற்று இருந்து லோகோபகாரம் புரிந்து வாழ்ந்த உத்தமர்கள் அநுசரித்து ஒழுகிவந்த உயரிய முறைகளாயினமையினால் இவைகளைக் கடைப்பிடித்தொழுகினால் நிர்வாணம் என்னும் ஸ்திதியை யடைந்து இந்த மன்வந்தரங்கழிந்து இனிவரும் மறு மன்வந்திரத்தில் நன்னெறி போதிப்பான் வேண்டி உத்தம மஹா ஞானியாய்ப்பிறப்பார்களென்பது திண்ணம்.

ஓம் தத் ஸத்.




76876

தறுதலை தடியன் ஓர் இனிய தமிழ் நாவல் இதன் விலை, அணா 4.

ஸ்ரீ குக ஆரூட சிந்தாமணி. இதன் விலை அணா 8.

---

உங்களுக்கு வேண்டியதும், நீங்கள் பார்க்கவேண்டுமென்று அநேக நாள் தேடிய அருமையான மர்ம நூல்.

# சரீர மர்ம சாஸ்திரம்.




சிருங்கார ரசம் ததும்பிக் கிடக்கும் இந்த நூலில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும் அவர்களது மர்ம ஸ்தானங்களின் அமைப்பும், அவைகளின் உபயோகங்களும், மாறுதல்களும். ரதி மன்மத சிங்கார ரஹஸ்யங்களும், சம்சாரசுகம், குடும்பரஹசியம், மணவாழ்க்கையின் மர்மங்கள், காதலர்காதலி சரச சல்லாப இன்பங்கள், சிறுபிராயத்தில் துஷ்டசாவசத்தினாலும், அறியாமையினாலுண்டாகும்தாதுநஷ்டம் பலவீனம் முதலியவற்றிற்குக் காரணங்களும். அவற்றுக்கு பரிகாரங்களும், சிசு உர்பத்திவிபரம், மருத்துவ சாஸ்திரம், சிசுசம்ரக்ஷணை சாஸ்திரம் ஆரோக்கிய சாஸ்திரம், முதலியவும் ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாகும் வியாதிகளும், அதைப் போக்கத்தக்க சிகிச்சைகளும் மகாரிஷிகள் மர்மமாக ஆதியில் எழுதிய இல்லற இன்பங்களும், விவாகமானவர்களுக்கும், இனிமேல் விவாகம் செய்துகொள்ளும் ஆண், பெண், சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத நூல்.

ஆயிரக்கணக்கான வித்வான்களாலும், பத்திரிகைகளாலும் புகழ் பெற்றது, 20,000 புஸ்தகங்கள் இதுவரையில் செலவழிந்திருப்பதே இப்புத்தகத்தின் அருமை பெருமைகளையும், உபயோகத்தையும் விளக்கிக்காட்டும் 8-ம் பதிப்பு.

64 அழகிய படங்களுடன் இரண்டுபாகங்கள் ஒருங்கே அமைந்த 200 பக்கங்களுடைய பெரிய புத்தகம்

## விலை ரூபா 1 தான்

# 50 ரூ முதல் 500 ரூ வரை

## மாதம் சம்பாதிக்கலாம்!

# ஏன் கவலைப்படுகிறீர்கள்?

எந்த வேலை செய்வது? எந்த விதமாகச் சம்பாதிப்பது? என்பதாக இனி கவலை வேண்டாம்! நாள் 1-க்கு குறைந்தது ரூ. 2. முதல் 10-வரை சம்பாதிப்பதற்குத் தகுந்த 'கைத்தொழில்" முறைகளும், புதிய யோசனைகளும் இந்த கைத்தொழில் வணிக இரகசிய சாஸ்திரம் மூலம் தாங்கள் கற்றுக்கொண்டுதொழில் செய்து சுகமாய் ஜீவிக்கலாம்.

இதில் பலவித வாசனை சோப்புகள் Soaps, வார்னிஷ்கள் Varnish, வர்ணதினுசுகள் Paints. மெழுகுவத்தி Candle நெருப்புகுச்சி Match பலவிதபெபர்மெண்ட் தினுசுகள் Pappermits பிஸ்கத்துகள், கேக்குகள் Biscuits & Cakes பலவித கூந்தல்வளரும் பரிமள தைலங்கள் Hair oils புஷ்ப அத்தர்கள் Scents சாம்பிராணிவத்திகள் Scented Sticks பன்னீர் Rose water பரிமளமாவு Toilet powder வாஸ்லயின் Vasline முகவசிகர மெழுகு Toilet cream பரிமளஸ்நாநதூள் Bathing powder ரோஸ் நன்னாரிஆமண்ட் முதலிய பலவித சர்பத்துகள் Syrups ஓமம் வாட்டர் Omam water பலவிதமான பல் பொடி Tooth powder டென்டல் கிரீம் Dental cream பலவித லேகிய தினுசுகள் Lagiems பலவித ஸ்தாந தைலங்கள் Bathing oils பலவிதமான இங்கி தினுசுகள் Writings Inks சாயதினுசுகள் Dyes. பூட் பாலிஷ் Boot polish முத்திரை அரக்குகள் Sealing wax சோடாலிமினேட் லைம்ஜூஸ் பவுடர்கள் Soda Lemanade & lime juice பால்பவுடர் Sweet milk powder பலவிதமருந்து தினுசுகள் Medicene கறிமசாலை பவுடர் Curry powder காகிதம் Paper பென்சல் Pencils முதலியவைகள் செய்யும் சகல முறைகளும் இன்னும் அநேக முரைகளும் இதில் நிரம்பியிருக்கிறது. அமெரிக்கா, ஜெர்மனி தொழில் சாலையில் தொழில் செய்து வரும் அருமையான அனுபவமுறைகளையும், புதையல் அகப்படுவதுபோல் ஏராளமான லாபத்தை கொடுக்கக்கூடியதாயுமுள்ள இரகசியத்தை தெரிந்துக்கொண்டு தாங்களும் தொழில் செய்து சுகமாய் ஜீவியுங்கள்?

☞ கைத்தொழில் வணிக இரகஸ்ய சாஸ்திரம்

புஸ்தகம் 1-க்கு விலை ரூபா 1-8-0.